

"கண்ணதாசனும் வேதாத்திரி மகரிசியும்"
அருள்நிதி வெண்ணிலா
ராஜம் பதிப்பகம் EBOOK PUBLISHERS

# பாமர மக்களின் தத்துவ ஞானிகள்

(கண்ணதாசனும் வேதாத்திரி மகரிசியும்)


## ஆசிரியர்கள்

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

அருள்நிதி வெண்ணிலா


ராஜம் பதிப்பகம் EBOOK PUBLISHERS

# பொருளடக்கம்

எங்களுரை

1. கண்ணதாசன் வாழ்க்கை வரலாறு
2. வேதாத்திரி மகரிசி வாழ்க்கை வரலாறு.
3. கவியரசரும் புவியரசரும்.
4. மானுடம் வென்ற கவிஞர்கள்.
5. வாழ்க்கைத் தத்துவம் தந்த தயாளர்கள்
6. கண்டவர்கள் விண்டதில்லை
7. கடிவாளம் இல்லாத குதிரை
8. உன்னையறிந்தால் உன்னையறிந்தால்
9. எல்லோருக்கும் தந்தை இறைவன்
10. முற்போக்குச் சிந்தனைகள்.
11. பற்றற்ற வாழ்க்கை
12. நீ வந்த கதையென்ன?
13. ஆண்டவன் கணக்கு
14. சமுதாயச் சிந்தனைகள்.
15. மனிதன் என்பவன் தெய்வமாகலாம்
16. மானிடர் ஆன்மா மரணமெய்தாது....
17. என்னைத் தோண்டி ஞானம் கண்டேன்.
18. ஆசையே அலைபோலே.....
19. கருணை என்னும் கண் திறந்து பார்க்க வேண்டும்.

20. விதி செய்த குற்றம்
21. இறைவன் ஒருவனே
22. மனிதன் மாறிவிட்டான்
23. இறைவன் இருப்பது எங்கே?
24. ஒருவன் மனது ஒன்பதடா
25.மயக்கமா? கலக்கமா?
26.அவன்தான் இறைவன்!
27.ஞானம் அடைவது எப்படி?
28. கவலையில்லாத மனிதன்
29. தூக்கத்தில் நிம்மதி
30. ஆறுமனமே ஆறு
31.கடைசி வரை யாரோ?
32.பாமர மக்களின் தத்துவ ஞானிகள்.
33. உலக அரசு வேண்டும்.
34. ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே!!!



அருள்நிதி மன்னார்குடி பானுகுமார் & அருள்நிதி வெண்ணிலா

ஆசிரியர்கள்

# எங்களுரை

- “ஒரு இயக்கத்திலிருந்து அலை பிறக்கிறது. அந்த அலையானது இயக்கத்திற்குத் தகுந்தவாறு மோதி அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்ற ஐந்தாகவும், அதை உணர்ந்து கொள்ளக் கூடிய மனமாகவும் இயங்கும் உண்மையைத் தெரிந்து கொண்டால், உலக தத்துவ இரகசியம் அத்தனையையும் புரிந்து கொள்ளலாம்.”

  -அருட்தந்தை வேதாத்திரி மகரிசி

வள்ளலார் வேதாத்திரியின் உடலில் புகுந்து வாழ்ந்தவராதலால், எமது வேதாத்திரிய ஒப்பாய்வு வரிசையில் முதலில் எடுத்துக் கொண்டது “வள்ளலாரும் வேதாத்திரி மகரிசியும்” என்ற நூலே ஆகும்.

இப்புத்தகத்தை மெய்ப்பு பார்த்துக் கொண்டிருந்தார் புரூப் ரீடர். அங்கே வந்த அவருடைய நண்பர் “என்னய்யா! வள்ளலார் மகாபுருஷர். அவருடன் போய் இவரை ஓப்பீடு செய்யலாமா?” என வினவினாராம்.

எம்முடைய ஒப்பாய்வு வரிசையில் “கண்ணதாசன் தத்துவங்களோடு மகரிசியின் தத்துவங்களை ஒப்பீடு செய்யும் போது, அதற்கு என்ன தலைப்பு வைக்கலாம் என்று என்னுடைய முகநூலில் பதிவு செய்திருந்தேன்.

"பாமர மக்களின் தத்துவஞானி" என்ற தலைப்பே பெரும்பாலோர் கருத்தாக அமைந்தது.

ஒரு வாசகர் மட்டும் "வேதாத்திரி மகரிசி என்ற மகானுடன் கண்ணதாசனை போய் ஒப்பிடாதீர்கள்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

அவர் கவிஞரா? இவர் கவிஞரா? அவர் ஞானியா? இவர் ஞானியா? என்ற ஆராய்ச்சியில் நான் செல்ல விரும்பவில்லை.

ஒவ்வொரு பாமரமக்களின் இல்லத்திலும் கண்ணதாசன் தத்துவங்கள் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

அது போல் மகரிசியின் மனவளக்கலை மன்றங்கள் இல்லாத ஊர்களே இல்லை என்ற நிலைமை. இது மட்டுமே எனது பார்வைக்குத் தெரிந்தது.

தமிழ்த் திரையுலகில், பணம் சம்பாதிக்கும் முயற்சியையும் மீறி, தன்னையும் அறியாமல் பொங்கி வரும் கவித்துவத்தின் மூலம் மனிதகுலம் எழுச்சியுற, ஞானமுற பல அரிய தத்துவப் பாடல்களை எழுதிய கவியரசு கண்ணதாசனையும் அவரின் ஒப்பிலா பாடல்களையும் மகரிசியின் தத்துவங்களோடு ஒப்பிடுவதே என் பணி.

வெறும் பத்து பாடல்களை எழுதி மறைந்த ஒரு பாமர கவிஞன் அல்ல. *5000* பாடல்களையும் *6000* கவிதைகளையும் படைத்த ஒரு அசுரன். அவர் எழுதிய புத்தகங்களின் எண்ணிக்கை 232

நான் மானிட ஜாதியில் ஆட்டி வைப்பேன் - அவர் மாண்டு விட்டால் அதை பாடி வைப்பேன்
நான் நிரந்தரம் ஆனவன் அழிவதில்லை
எந்த நிலையிலும் எனக்கு மரணம் இல்லை.

"கண்ணதாசன் எழுத்துக்களில் முரண்பாடு அதிகம்" என்று விமர்சித்தவர்கள் கூட அவரின் புத்துருவாக்கப் பார்வையைக் கண்டு மகிழ்ந்து புன்னகை புத்தார்கள்.

தன்னுடைய பலவீனங்களை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு, சுய வரலாறு எழுதியவர். **"வனவாசம், மனவாசம்"** இரண்டும் ஒருவன் எப்படி வாழக்கூடாது என்பதற்கான உதாரணம் என்றார்.

"முரன்பாடே வளர்ச்சியின் முதற்படி" என்ற காரல் மார்க்சின் கருத்துப்படி, பழமையிலிருந்து புதுமைக்குச் செல்லும் வளர்ச்சி என்ற கருத்துப்படி, "மாற்றம் என்பது மானிடத் தத்துவம் " என்று வாழ்ந்து காட்டியவர் கண்ணதாசன்.

"மாற்றம் எனது மானிடத் தத்துவம்

மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்

எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை

என்பதறிந்து ஏகுமென் சாலை

தலைவர் மாறுவர் தர்பார் மாறும்

தத்துவம் மட்டுமே அட்சயப் பாத்திரம்"

என்று பாடிய அவர் எது மாறினாலும் தத்துவம் மாறக் கூடாது எனக் கருதியவர்.

இறையைப் பற்றிய மகரிசியின் பார்வை முற்றிலுமான ஒரு விஞ்ஞானப் பார்வை. சொல்லால் மட்டும் நம்பாதே! சுயமாய் சிந்தித்தே தெளிவாய்! என்பது அவரது அறிவுரை.

தத்துவத்தை விஞ்ஞானமாக்கி, விஞ்ஞானத்தை தத்துவமாக்கி, இரண்டையும் இரண்டறக் கலந்து பிரம்மஞானமாக்கிய பெருமை வேதாத்திரி மகரிசியைச் சேரும். இவ்விணைப்பே, இந்நூற்றாண்டிற்கு மகரிசி தந்த ஒப்பற்ற பரிசு.

பல்வேறு தத்துவங்களின் சாரத்தை, அறிவியலோடு கலந்து மகரசி படைக்கும் ஆன்மீக விருந்தே வேதாத்திரியம்.



பலத்தை தக்க வைத்துக் கொண்டு. பலவீனத்தை அகற்றுவதே வேதாத்திரியம். கிரந்த மொழியிலும், சமஸ்கிருத மொழியிலும் உள்ள வேதவாக்கியங்களுக்கு இணையான தாரக மந்திரமாகிய “வாழ்க வைகயகம், வாழ்க வளமுடன்” என்ற வாழ்த்தலைகளை தொடர்ந்து எழுப்புவதன் மூலம் அனைத்து ஜீவராசிகளுக்கும் எல்லா நலன்களும். வளங்களும் கிடைக்க வழி காட்டியவர் வேதாத்திரி மகரிசி.

மகரீசியின் வேதாத்திரியக் கருத்துக்களை மனதிற்குள் ஆழமாக வாங்கிக் கொண்டால் மட்டுமே, தனிமனித அமைதிகிட்டும்.

அதன் மூலம் உலக அமைதிக்கு வித்திட்டது வேதாத்திரியம் என்ற உண்மை விளங்கும். உலக சமாதானமே, வேதாத்திரியத்தின் நோக்கமாகும்.

இவ்விருவரும் வாழ்ந்த காலத்தில் சமுதாய, அரசியல், பொருளாதார, சமய பிரிவினைகளே இவர்களை மக்கள் நலன் பற்றிச் சிந்திக்கத் தூண்டியது.

கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம் 10 தொகுதிகளும் பகவத்கீதையின் விளக்கமும், கிருஷ்ணகானப் பாடல்களும், தெய் தரிசனம், கடைசிப் பக்கம் போன்ற நூல்களும் ,

வேதாத்திரி மகரிசியின் ஞானக்களஞ்சியம் இரண்டு தொகுதிகளும், பிரம்மஞான விளக்கமும், மனவளக்கலை மூன்று பாகங்களும். காயகற்பப் பயிற்சி, உடற்பயிற்சி போன்ற நூல்களும் ---

என்றென்றும் மக்கள் வாழ்க்கை ஏற்றமுறுவதற்கான வழிவகைளை வகுத்துத் தருகின்ற வேதாத்திரி மகரிசியும் கவியரசர் கண்ணதாசன் “<u>**காலத்தை வென்ற கவிஞர்கள்**</u>.”

குருவின் தொண்டில்

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

அருள்நிதி வெண்ணிலா

Mail id. banukumar.v@gmail.com

செங்கற்பட்டு

14.08.2019



## 1.கண்ணதாசன் வாழ்க்கை வரலாறு (1927 - 1981)

**கண்ணதாசன்** புகழ் பெற்ற தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியரும் கவிஞரும் ஆவார்.

நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகள், ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்கள், நவீனங்கள், கட்டுரைகள் பல எழுதியவர்.

சண்டமாருதம், திருமகள், திரை ஒலி, மேதாவி, தென்றல், தென்றல்திரை, முல்லை, கண்ணதாசன் ஆகிய இதழ்களின் ஆசிரியராக இருந்தவர்.

தமிழக அரசின் அரசவைக் கவிஞராக இருந்தவர். சாகித்தய அகாதமி விருது பெற்றவர்.

கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா. தமிழ்நாடு சிறுகூடல்பட்டியில் வணிகர் மரபில் பிறந்தார்.

தாய் விசாலாட்சி ஆச்சி, தந்தை சாத்தப்பனார். இவருடன் உடன்பிறந்தோர் 8 பேர். சிறு வயதில் இவரை ஒருவர் 7000 ரூபாய்க்கு தத்து எடுத்துக்கொண்டார். அவர் வீட்டில் நாராயணன் என்ற பெயரில் வாழ்ந்தார்.



ஆரம்பக் கல்வியை சிறுகூடல்பட்டியிலும், அமராவதி புதூர் உயர்நிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை படித்தார். 1943 ஆம் ஆண்டில் திருவொற்றியூர் ஏஜாக்ஸ் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தார்.

1950ல் கண்ணதாசனின் மண வாழ்க்கை தொடங்கியது. கவிஞருக்கு மூன்று மனைவிகள்.

முதல் மனைவி பெயர் பொன்னழகி என்கிற பொன்னம்மா. இவர்களுக்கு கண்மணிசுப்பு, கலைவாணன், ராமசாமி, வெங்கடாசலம் ஆகிய 4 மகன்கள். அலமேலு, தேனம்மை, விசாலாட்சி ஆகிய 3 மகள்கள் .

இரண்டாவது மனைவி பார்வதிக்கு காந்தி கண்ணதாசன், கமல், அண்ணாதுரை, கோபால கிருஷ்ணன், சீனிவாசன் ஆகிய 5 மகன்கள். ரேவதி, கலைச்செல்வி ஆகிய 2 மகள்கள். (காந்தி கண்ணதாசன் தற்போது 'கண்ணதாசன் பதிப்பக'த்தின் அதிபர்).

**மூன்றாவது மனைவி புலவர் வள்ளியம்மைக்கு, விசாலி மனோகரன் என்ற ஒரே மகள்.**

இந்து மதத்தில் பிறந்தவராயினும் மதவேற்றுமை கருதாமல் ஏசுகாவியம் பாடியவர். கம்பரின் செய்யுளிலும், பாரதியாரின் பாடல்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவர் பாரதியாரை மானசீகக் குருவாகக் கொண்டவர்.

**அரசியல் ஈடுபாடு**

அண்ணாவின் திராவிட கழகத்தில் இருந்த கண்ணதாசன் கருத்து வேறுபாட்டால் அக்கட்சியில் இருந்து வெளியேறினார்.

மறைவு

உடல்நிலை காரணமாக 1981, ஜீ லை 24 இல் சிகாகோநகர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, அக்டோபர் 17 சனிக்கிழமை இந்தியநேரம் 10.45 மணிக்கு மறைந்தார்.

அக்டோபர் 20ல் அமெரிக்காவிலிருந்து அவரது சடலம் சென்னைக்குக்கொண்டு வரப்பட்டு, இலட்சக்கணக்கான மக்களின்

இறுதி அஞ்சலிக்குப் பிறகு அரசு மரியாதையுடன் அக்டோபர் 22ல் எரியூட்டப்பட்டது.

**மணிமண்டபம்**

தமிழ்நாடு அரசு கண்ணதாசன் நினைவைப் போற்றும் வகையில் சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம் அமைத்துள்ளது.

இங்கு கவியரசு கண்ணதாசன் மார்பளவு சிலை அமைக்கப்பட்டுள்ளது. அரங்கம் ஒன்று உள்ளது. இங்கு 2400 நூல்களுடன் ஒரு நூலகமும் இயங்கி வருகின்றது.

கவியரசு கண்ணதாசன் அவர்களின் வாழ்க்கை வரலாறு தொடர்பான புகைப்படங்கள் கண்காட்சியாக வைக்கப்பட்டுள்ளது.

**படைப்புகள்**

- இயேசு காவியம்
- அர்த்தமுள்ள இந்து மதம் (10 பாகங்கள்)
- திரைப்படப் பாடல்கள்
- மாங்கனி

## கவிதை நூல்கள்

- பொன்மழை (ஆதிசங்கரரின் கனகதாரா ஸ்தோத்திரத்தின் தமிழ்ப்பாடல் வடிவம்)
- கண்ணதாசன் கவிதைகள் - 6 பாகங்களில் * பாடிக்கொடுத்த மங்களங்கள் * கவிதாஞ்சலி * தாய்ப்பாவை* ஸ்ரீகிருஷ்ண கவசம்
- சுருதி சேராத ராகங்கள்
- முற்றுப்பெறாத காவியங்கள்
- பஜகோவிந்தம்
- கிருஷ்ண அந்தாதி, கிருஷ்ண கானம்

---

- 


## புதினங்கள்

- அவளுக்காக ஒரு பாடல்
- அவள் ஒரு இந்துப் பெண்
- சிவப்புக்கல் மூக்குத்தி
- ரத்த புஷ்பங்கள்
- சுவர்ணா சரஸ்வதி
- நடந்த கதை
- மிசா
- சுருதி சேராத ராகங்கள்
- முப்பது நாளும் பவுர்ணமி
- அரங்கமும் அந்தரங்கமும்
- ஆயிரம் தீவு அங்கயர்கண்ணி
- தெய்வத் திருமணங்கள்
- ஆயிரங்கால் மண்டபம்
- காதல் கொண்ட தென்னாடு
- அதைவிட ரகசியம்
- ஒரு கவிஞனின் கதை
- சிங்காரி பார்த்த சென்னை
- வேலங்காட்டியூர் விழா

- விளக்கு மட்டுமா சிவப்பு
- வனவாசம்
- பிருந்தாவனம்

## வாழ்க்கைச்சரிதம்

- எனது வசந்த காலங்கள்
- வனவாசம் (பிறப்பு முதல் தி.மு.க.விலிருந்து பிரியும் வரை)
- எனது சுயசரிதம் (வனவாசத்தின் விடுபட்ட பகுதிகள்)
- மனவாசம் (காங்கிரசு கட்சியில் இருந்த காலத்தின் வாழ்க்கை)

## கட்டுரைகள்

- கடைசிப்பக்கம்
- போய் வருகிறேன்
- அந்தி, சந்தி, அர்த்தஜாமம்
- நான் பார்த்த அரசியல்
- எண்ணங்கள்
- வாழ்க்கை என்னும் சோலையிலே
- குடும்பசுகம்
- ஞானாம்பிகா
- ராகமாலிகா
- இலக்கியத்தில் காதல்
- தோட்டத்து மலர்கள்
- இலக்கிய யுத்தங்கள்

## நாடகங்கள்

- அனார்கலி
- சிவகங்கைச்சீமை
- ராஜ தண்டனை

இவை தவிர கவிஞர் கண்ணதாசன் பகவத் கீதைக்கு உரை எழுதியுள்ளார், அபிராமி பட்டரின் அபிராமி அந்தாதிக்கு விளக்கவுரையும் எழுதியுள்ளார். விருதுகள்

- சாகித்ய அகாதமி விருது (*சேரமான் காதலி* படைப்பிற்காக)

2.வேதாத்திரி மகரிசி வாழ்க்கை வரலாறு(1911-2006)

எக்காலத்திலும் வாழும் மக்களின் நல்வாழ்விற்காக வேதாத்திரி மகரிசி அவர்கள், அனைத்துத் துறைகளைப் பற்றியும், உலக சமாதானம் பற்றியும் ஓருலக ஆட்சிக்கான திட்டங்களையும் தந்துள்ளார்கள்.


வேதாத்திரி மகரிஷி ஆன்மிகத்தை அடிப்படையாகக் கொண்ட சமுதாயப் பணி ஆற்றி வந்தவர்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி கூடுவாஞ்சேரி என்னும் கிராமத்தில் நெசவுத் தொழில் செய்யும் வரதப்பன், முருகம்மாள் (சின்னம்மாள்) தம்பதியர்களுக்கு எட்டாவது குழந்தையாகப் பிறந்தார்.

சிறுவயது முதலே வேதாத்திரி மகரிஷி அவரது தாயார் சின்னம்மாளிடம் நிறைய பக்தி கதைகளையும், புராணக்கதைகளையும் அறிந்து கொண்டார்.

இவரது குடும்பசூழல் இவருக்கு அதிகம் படிக்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. தன்னுடைய சொந்த ஊரில் மூன்றாவது வகுப்பு வரை படித்த இவர், பின்னர் தங்கள் குடும்ப தொழிலான தறி நெய்தலை செய்யத் தொடங்கினார்.

18வது வயதில் சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் வாய்ப்பு இவருக்கு ஏற்பட்டது.



சென்னையில் இவருக்கு ஆயுர்வேத மருத்துவர் எஸ். கிருஷ்ணாராவின் நட்பு கிடைக்க, அவர் மூலமாக தியானம், யோகா போன்றவைகளை கற்றார் மகரிஷி.

தனது வாழ்க்கையின் குறிக்கோளாகிய முழுமையை உணரும் நோக்கத்தால் உந்தப்பட்டு; சித்த, ஆயுர்வேத மற்றும் ஹோமியோபதி போன்ற மருத்துவ துறைகளைக் கற்று தேர்ச்சிப் பெற்றார்.

மேலும் இரண்டாவது உலகப் போரின் போது முதலுதவிப் பயிற்சியாளராகவும் பணிபுரிந்தார்.

பின்பு பொருளாதாரத் தன்னிறைவு பெற வேண்டும் என்று, தனது சுய முயற்சியினால் பல்லாயிரம் நபர்களுக்கு வேலை அளிக்கக்கூடிய அளவிற்கு ஒரு பெரிய நெசவுத் தொழிற்சாலையை உருவாக்கினார்.

அச்சமயத்தில் அரசாங்கத் தொழிற்கொள்கை மாற்றம் காரணமாக வியாபாரம் திடீர் சரிவு நிலையை அடைந்தது,

இருப்பினும் தன்னிடம் பணிபுரிந்த 2000 குடும்பங்களையும் காப்பாற்றுவதற்காக ஈட்டிய பொருள் அனைத்தையும் அவர்களுக்கே செலவழித்து அனைத்து பொருள் வளத்தையும் இழந்தார்.

அப்படியிருந்தும் மனத்தை தளரவிடாது மீண்டும் கடுமையாக உழைத்து படிப்படியாக பொருளாதாரத்தில் தன்னை மேம்படுத்திக் கொள்ள அரிசி வியாபாரம் போன்ற பல்வேறுபட்ட தொழில்களை செய்து தனக்கும், தன்னை சுற்றியுள்ளவர்களின் துன்பத்தை போக்கவும் பாடுபட்டவர்.

தன் இரண்டு மனைவியருடைய மனத்தையும் நன்கு புரிந்தவராய் இருவரிடமும் பிணக்கின்றி அன்புடன் வாழ்ந்து காட்டினார்.

வறுமையிலேயே வாழ அடியெடுத்து வைத்த அவரது உள்ளத்தில் வறுமை என்றால் என்ன? கடவுள் என்பது எது? அதை ஏன் காண முடியவில்லை? மனித வாழ்க்கையிலேயே ஏன் துன்பங்கள் தோன்றுகின்றன போன்ற கேள்விகள் அவ்வப்போது ஒலித்துக் கொண்டே இருந்தன.

இவற்றிற்கு காரணங்கள் கண்டு தெளிவு பெறுவதற்காக ஆராய்ச்சியிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்.

விளைவாக தனது 35வது வயதில் தன்னிலை விளக்கமாக இறைநிலையை உணர்ந்தார். அதன் அடிப்படையில் உலக மக்களுக்காக அவர் அளித்த வாழ்க்கை நெறியே மனவளக்கலை ஆகும்.

நூல்கள் இயற்றல்

இந்தப்பிரபஞ்சத்தைப் பற்றியும் மனித வாழ்க்கையைப் பற்றியும் தவநிலையில் தான் பெற்ற கருத்துக்களை பல கவிகளாகவும், கட்டுரைகளாகவும் புத்தக வடிவங்களில் இந்த உலகுக்கு மகரிஷி அவர்கள் அளித்துள்ளார்கள்.

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் கலந்த தமிழ்ப்பாடல்களை இயற்றியிருக்கிறார்.

பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எளிய தமிழில் தனது தத்துவங்களை எடுத்துரைத்தார். எல்லா மதங்களின் சாரம் ஒன்றே என்பதை மகரிஷி அவர்கள் வலியுறுத்துகிறார்.

1957ல் மகரிஷி 'உலக சமாதானம்' என்னும் நூல் ஒன்றை வெளியிட்டார். தொடர்ந்து பல்வேறு நாடுகளுக்கு செல்லும் வாய்ப்பு இவருக்கு கிட்ட அங்கெல்லாம் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

மனிதகுலம் அமைதியாக வாழ ஏற்ற கருத்துகளையும் சாதனை முறைகளையும் உலகமெங்கும் பரப்பிட 1958-ஆம் ஆண்டில் வேதாத்திரி மகரிஷி அவர்கள் நிறுவிய உலக சமுதாய சேவா சங்கம் இன்று இந்தியாவிலும், சிங்கப்பூர் மலேசியா, ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா, போன்ற நாடுகளிலும் பல கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

வேதாத்திரி மகரிஷி ஏறக்குறைய தமிழிலும் ஆங்கிலத்திலும் சேர்த்து எண்பது நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் சில:

1 வேதாத்திரியத்தின் இறைநிலை விளக்கம்
2 வாழ்வியல் விழுமியங்கள்
3 பிரம்மஞான சாரம்
4 நான் யார் ?
5 ஞானக்களஞ்சியம்

செயல் விளைவு

"ஒவ்வொரு செயலுக்கும் விளைவு உண்டு" என்ற இயற்கை நியதியை உணர்ந்து கொள்ளக்கூடிய முறையிலே உள்ள கல்விதான் இன்றைக்கு அவசியமாக உள்ளது" என்ற வார்த்தைகளில் இருந்து இயற்கை தத்துவ அறிவுக் கல்வியின் அவசியத்தை உணர்ந்து கொள்ளலாம்.

காந்தம்.

"உயிர்த் துகள்கள் மிக மிக நுண்ணியது. அவை தன்னைத் தானே சுற்றிக் கொண்டிருக்கக்கூடிய சுழல் அலைகள். அப்படி சுழலவ்வதனால் ஏற்படும் விரிவலைகள் சுழலாத இருப்பு நிலையில் உராயந்து கரைந்து விடுகிறது.

அப்போது தள்ளும் கொள்ளும் சக்தியான இரட்டை ஆற்றலாக காந்தம் என்ற பெயரில், ஜீவன்களில் ஜீவகாந்தம் என்றும், அதே இயக்கம் பிரபஞ்சத்தில் இருப்பதை வான் காந்தம் என்றும சொல்லப்படுகிறது.

மனம்

"புலன்கள் மூலமாகப் பெறும் அனுபோக அனுபவங்கள் எண்ணம் எனப்படுகிறது. எண்ணங்களின் தொகுப்பு மனம் என்றும் மனிதனில் அது ஆறாவது அறிவு என்று சிறப்பாகவும் பேசப்படுகிறது."

அலை இயக்கம்

"உடல் முழுவதும் சுழன்று கொண்ருக்கக்மகூடிய ஜீவகாந்தம் உடல் என்னும் பஞ்ச புதக்கூட்டில் திணவுறும்போது அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்று மாற்றமடைந்து அலை வடிவில் அதததற்குரிய பொறிபுலன்கள் மூலம் எப்போதும் வெளியேறிக் கொண்டுள்ளது.

அவ்வபோது வெளியேறும் போது ஏற்படும் தடைதான் உணர்வாக மலர்கிறது. மோதுதல், பிரதிபலித்தல், சிதறுதல்,

ஊடுறுவுதல், இரண்டிடையே ஓடிக் கொண்டிருத்தல் என் ஐவகை இயக்கம் ஒவ்வொரு அலைக்கும் உண்டு."

மறைவு

மகரிசி 28.03.2006ல் அவரது புத உடல் மறைந்தாலும், உலகெங்கும் உள்ள அவரால் உருவாக்கப்பட்ட ஆசிரயர்களும், பேராசிரியர்களும் தொடர்ந்து மனவளக்கலைப் பயிற்சிகளை விரும்பும் அன்பர்களுக்கு முறையாகக் கற்றுக் கொடுத்து வருகிறார்கள்.



# 3. கவியரசரும் புவியரசரும்.

கவிக்கு அரசர் கண்ணதாசன். கவியரசர் கவிதைகள் காலத்தை வென்று நிற்கின்றன. சிந்தனையைத் தூண்டுகின்றன. அறிவுச் சுடரைக் கொளுத்துகின்றன.

மனவளக்கலை மூலம் மானுடத்தை தட்டி எழுப்பிய வேதாத்திரி மகரிசி, புவிக்கு அரசராக விளங்குகிறார். சிந்தனையைத் தூண்டுகிறார். அறிவுச் சுடரைக் கொளுத்துகின்றார். ஆன்மீக உணர்வைப் பொங்கச் செய்கின்றார்.

- வேதாத்திரி மகரிசி அவதரித்து சரியாக 16 ஆண்டுகள் கழித்து கண்ணதாசன் அவதரிக்கிறார்.
- இப்புவியுலகில் கண்ணதாசன் 54 ஆண்டுகளே வாழ்ந்தார். வேதாத்திரி மகரிசி 95 ஆண்டுகள் வரை வாழ்ந்தார்.
- கண்ணதாசன் மறைந்து 25 ஆண்டுகளுக்குப் பிறகு வேதாத்திரி மகரிசி மறைந்தார்.
- உலகம் கண்ணதாசனை திரைப்பட பாடலாசிரியர் என்றே கருதிக் கொண்டிருக்கிறது. அவர் மிகச்சிறந்த ஆன்மிகவாதி என்பதோ தெய்வநிலை உணர்வு பெற்ற தத்துவ ஞானி என்பதோ பலருக்குத் தெரியாது.
- பல செய்திகளை கண்ணதாசன் முன்மொழிகிறார். மகரிசி அறிவியல் கண்ணோட்டத்துடன் அவைகளை வழி மொழிகின்றார்.
- எளிய சொற்களால் எழுச்சியூட்டும் இவர்களது கவிதை வரிகளில், மொழி வளர்ச்சிக்கும், சமுதாய மேம்பாட்டிற்கும் உரத்த சிந்தனைகள் தெரிகின்றன.

- கண்ணதாசனும் மகரிசியும் பழைய துருப்பிடித்த வார்த்தைகளைத் தள்ளி, சுறுசுறுப்புச் சொற்களுக்குச் உரமேற்றியவர்கள்!
- மொழி வளம், கற்பனை நயம், சமூகப் பார்வை, பிரக்ஞையுடன் கூடிய சீற்றம் எல்லாம் இணைந்து-இணக்கமாகி, இவர்களை ஓர் இணையற்ற தத்துவ ஞானிகளாக ஆக்கியிருக்கின்றன.
- கண்ணதாசனும், மகரிசியும் தம் கவிதைக் கைகளால் இத்தரணியைத் தட்டி எழுப்புவதைத் தலையாயக் கடமையாய்க் கொண்டிருந்தனர்.
- கண்ணதாசனும் மகரிசியும் சமய சமரசவாதிகள்.
- கண்ணதாசனும் மகரிசியும் கவிஞர்கள் வரிசையிலும், ஞானியர்கள் வரிசையிலும் வருபவர்கள்.
- கண்ணதாசனும், மகரிசியும் பழைய மூடபழக்க வழக்கங்களை மாற்றி புதிய சமுதாயத்தைப் படைக்க வந்த ஞானிகள்.
- கண்ணதாசனும் மகரிசியும் சமய சமரசவாதிகள்.
- காதலில் தொடங்கி பக்தியில் முடிக்கிறார் கண்ணதாசன். வேதாத்திரி மகரிசி ஞானத்தில் தொடங்கி ஞானத்தில் முடிக்கிறார்.
- கண்ணதாசனும் மகரிசியும் சமுதாய சீர்திருத்தவாதிகள்.
- ஒரு சமூக விழிப்பை ஏற்படுத்துவதே இவர்களது இருவரது இலக்காக இருந்திருக்கிறது. அந்த முயற்சியிலே இவர்களுக்கு வெற்றியும் கிடைத்திருக்கிறது.

இவ்வாறு பல ஒற்றுமைகளுடன் விளங்கும் இந்த தத்துவவாதிகள் ““பாமரமக்களின் தத்துவ ஞானிகளாக” போற்றப்படுகிறார்கள்.

மானுட வாழ்வியலுக்கும், மானுடத்திற்கும் உணர்வும் உரமும் ஊட்டிய தத்துவவாதிகள் பலருள், கண்ணதாசனுக்கும் வேதாத்திரி மகரிசிக்கும் உன்னத இடமுண்டு.

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர்கள் ஒவ்வொருவரும் சில தனித்தன்மைகளைத் தம் கவிதைகளில் பிரதிபலித்தனர்.

பாரதியின் பாடல்களில் அறிவின் ஆதிக்கமும், பாரதிதாசன் பாடல்களில் அழகின் ஆதிக்கமும், கவிமணியின் பாடல்களில் குறைவின் ஆதிக்கமும் விளக்குவது போல் கண்ணதாசன் பாடல்களில் ஓர் இனிமையில் ஆதிக்கமும், வேதாத்திரியின் பாடல்களில் அறிவியல் புர்வமான ஆன்மீக ஆதிக்கமும் நிலவுகிறது.

இவர்களது தனி வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவமும், சமுதாயத்தில் ஏற்பட்ட அனபவமும் இவர்களது பாடுபொருளோடு இணைந்திருந்தன. இவர்களது கவிதைகள் பாமர மக்களையும் ஈர்த்ததற்கு ஈதுவும் ஒரு காரணமாகும்.

வாழ்க்கையில் மனிதனுக்கு ஏற்படக்கூடிய இன்ப-துன்பங்கள், ஏற்ற-இறக்கங்கள், பிறப்பு முதலாய் மரணம் முடிவாய் என் பாடல்களும் கவிதைகளும் எதிரெலாலிக்க வேண்டும் “ என்று கண்ணதாசன் தன் விருப்பத்தை வெளியிட்டுள்ளார்.

மனிதனுடைய அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் இன்ப துன்பங்களை அறிந்து அவற்றைத் தன் கவிதைகளில் வடித்துக் காட்டினார்கள்.

தங்கள் காலத்தின் அவலங்களையும், பிரச்சனைகளையும் உணர்வுப் புர்வமாகத் தெளிவாகத் தெரிந்து கொண்டதால் கால உணர்வுடன் கவிதைகள் எழுதியுள்ளார்கள்.

இவ்விருவர்களும் மிகப்பெரிய சாம்ராஜ்யம். ஒரு சகாப்தம். நம் வாழ்க்கையின் அனுபவம்.

காலம் சில சிந்தனையாளர்களை நிர்ணயத்தாற் போலவே, கண்ணதாசனையும் மகரிசியையும் நிர்ணயித்திருக்கிறது.





# 4. மானுடம் வென்ற கவிஞர்கள்

மானுடத்திற்கு வழிகாட்ட முயன்ற பெரியோர்கள் பலவகையினர்.

அவர்களில் நெறிபடுத்தும் சான்றோர்கள், மக்களுக்கு உணர்த்தும் தீர்க்கதரிசிகள், முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் விஞ்ஞானிகள் என்ற வரிசையில் பலவகையினர் வருகின்றனர்.

முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும் பாலமாக விளங்குவது நமது தொன்மையான தமிழ்மொழி.

காலந்தோறும் ஆற்றல் மிகு கவிஞர்களும் புலவர்களும் எழுத்தாளர்களும் தோன்றி, தமிழின் இளமைப் பொலிவை காத்து வந்துள்ளனர்.

அவர்களில் முக்கியமான இடம் வகித்தவர்கள் இருவர். ஒருவர் கண்ணதாசன். மற்றொருவர் வேதாத்திரி மகரிசி.

வெள்ளித்திரையிலும் மெல்லிய தமிழை வாழவைக்க முடியும் என்று நிரூபித்தவர் கவியரசர் கண்ணதாசன் ‘கவியரசு’ எனப் போற்றப்பட்டவர்.

ஆன்மீக உலகில் ஆன்மீகத்திற்கு புதிய விளக்கம் கொடுத்தவர் மகரிசி. மனவளக்கலை மூலம் சமுதாயத்தில் மாபெரும் எழுச்சியை ஏற்படுத்தியவர்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட அவரது கவிதைகள் ஞானக்களஞ்சியமாக - ஞானப் பொக்கிஷமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றன.

தேசிய உணர்ச்சி பாரதியின் பாடல்களுக்கு எழுச்சி தந்தது. சுயமரியாதைக் கருத்துக்கள் பாரதிதாசன் பாடல்களுக்கு ஏற்றம் தந்தது.

அறியாமை இருள் சூழ்ந்த ஏற்றத்தாழ்வுகள் கண்ணதாசனின் பாடல்களுக்கு வித்திட்டன.

மனவளக்கலை கருத்துக்கள் வேதாத்திரி மகரிசியின் பாடல்களுக்கு ஆன்மீக உலகில் ஒரு எழுச்சியை ஏற்படுத்தியது.

அறிவையும் உணர்ச்சியையும் இணைத்துக் கவிதையின் சிகரங்களைத் தொட்டவர் கண்ணதாசன். அறிவையும் ஞானத்தையும் இணைத்து கவிதையின் சிகரங்களைத் தொட்டவர் வேதாத்திரி மகரிசி.

காட்டுக் கொள்ளைக்காரன் வால்மீகி இராமன் புகழைப் பாடவல்ல ஞானியானார். தடுமாறும் போதையிலும் கவிபாடும் மேதை என்று பாராட்டப்பெற்ற கண்ணதான் பாமர மக்களிடம் தத்துவத்தை கொண்டு சென்றார்.

காதலைப் பாடிய பைரனைப்போல், கடவுளைப் பாடிய மில்டனைப்போல், போரைப் பாடிய மயாகோஸ்கியைப்போல், புரட்சியைப் பாடிய ஷெல்லியைப் போல், விடுதலை பாடிய பாரதியைப் போல் மானுடம் பாடியவர்கள், மானுடத்திற்கு தத்துவத்தை எளிமையாகச் சொன்னவர்கள் வேதாத்திரி மகரிசிக்கும் கண்ணதாசனுக்கும் தனித்துவம் உண்டு.

கம்பர் இராமனை "மானுடம் வென்றதம்மா என்று பாடினார்.

இருபதாம் நூற்றாண்டில் மானுடத்தை வெற்றிக் கொண்ட மனிதர்கள் என்ற வகையிலும் மானுடத்தின் வெற்றிக்குச் சாட்சியாக நின்ற கவிஞர் என்ற வகையிலும், மானுடத்திற்கு தத்துவத்தை எளிமையாகச் சொன்ன தத்துவஞானிகள் என்ற வரிசையிலும் இருவரும் புகழ் பெற்றனர்..

---

கண்ணதாசன் தமக்கெனத் தனிப்பாணியை உருவாக்கிக் கொண்டவர். அரசியலிலும் ஆன்மிகத்திலும் அவர் வாழ்வில் நேர்ந்த மாற்றங்களுக்கேற்ப, அவர் சிந்தனைப் போக்கில் மாற்றங்கள் நேர்ந்தன;

அவற்றையொட்டி அவர் கவிதையும் முரண்பாடுகளைக் கண்டு வளர்ந்தது. தமிழ் வழங்கும் இடங்களில் எல்லாம் அவரைச் சிறப்பாகத் திகழ வைத்தவை அவர் எழுதிய ஆயிரக்கணக்கான திரைப்பாடல்களே..

கண்ணதாசனின் ஆளுமை என்பது, அவரது சாகாவரம் பெற்ற இலக்கியங்களில் தான் நிலைகொண்டுள்ளது.

நான்காயிரத்திற்கு மேற்பட்ட கவிதைகள், ஐயாயிரத்திற்கு மேற்பட்ட திரைப்பாடல்கள், அற்புதமான துள்ளுதமிழ் நடையுடன் கூடிய நூல்கள், கட்டுரைகள், சிறு காப்பியங்கள், நவீனங்களை எழுதியது கண்ணதாசனின் சாதனை.

தமிழில் புதிய மறுமலர்ச்சியை பாரதிக்குப் பிறகு ஏற்படுத்தியவர் கண்ணதாசனே.

உணர்ச்சிகளைச் சொல்லும்போது நேராகவும் கூராகவும் அவர் வெளிப்படுத்த தவறியதில்லை.

“நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா?”

“நான்பேச நினைப்பதெல்லாம் நீபேச வேண்டும்.”

“சொல்லென்றும் மொழியென்றும் பொருளென்றும் இல்லை”.

“சொல்லாத சொல்லுக்கு விலைஏது மில்லை.”

தத்துவத்தைத் திரைப்பாடல்களில் மனமுருகக் காட்டியவர் கண்ணதாசன்.

எறும்புத் தோலை உரித்துப் பார்க்க யானை வந்ததடா-என்

இதயத் தோலை உரித்துப் பார்க்க ஞானம் வந்ததடா.

நூற்றுக்கணக்கான பாத்திரங்களின் ஆயிரக்கணக்கான உணர்வுகளின் நுட்ப வேறுபாடுகளைக் கண்ணதாசன் சித்திரித்ததுபோல வேறொருவர் சித்திரித்ததில்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழ்த் திரையுலகின் மறக்க முடியாத பாடல்களை படைத்த கவிஞன் கண்ணதாசன். திரைப்படக் கவிஞராக புகழ்பெற்ற கண்ணதாசன் தான் இந்துவாக இருந்தாலும் மதவேற்றுமை கருதாமல் ஏசுகாவியம் பாடியவர்.

கம்பரின் செய்யுளிலும், பாரதியாரின் பாடல்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

பாரதியாரை மானசீகக் குருவாகக் கொண்டவர். பகவத் கீதைக்கு உரை எழுதியுள்ளதோடு அபிராமி பட்டரின் அபிராமி அந்தாதிக்கு விளக்கவுரையும் எழுதியுள்ளார்.

**மக்கள் மனங்களிலும் உதடுகளிலும் அன்றும் இன்றும் என்றும் அசைப்போடும் பாடல்கள்:**

“கலங்காதிரு மனமே ,உன் கனவெல்லாம் நினைவாகும் ஒரு தினமே.” என்று பாடல் எழுதி அவரது கனவை எல்லாம் நனவாக்கிய கவிஞர் அடுத்து...

“போனால் போகட்டும் போடா .

இந்த பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா ?”

“மனிதன் மாறி விட்டான்

மதத்தில் எறி விட்டான்”

“உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதென்பது”

“உள்ளம் என்பது ஆமை -அதில்

உண்மை என்பது ஊமை”

---

“பிறக்கும் போது அழுகின்றான் .”

கவலை இல்லாத மனிதன் படம் எடுத்து நஷ்டப்பட்டு கவலைப்பட்ட வரலாறும் உண்டு.

“நோட்டெழுதி வாங்கிய கடனுக்கு

பாட்டெழுதி வாங்கிய பணம் போகத் தொடங்கியது .”

என்று சொன்ன வரிகள் இன்றும் பலரின் உதடுகளில் உறவாடி வருகின்றன.

**கவிஞரின் இரங்கல் கவிதை:** மறைந்த பிரதமர் நேரு மீது மிகுந்த பற்று வைத்திருந்த கண்ணதாசன். 1964-ல் நேரு மறைந்தபோது அவர் மீது கொண்டிருந்த பக்திக்கு சான்றாக கண்ணதாசன் 'சாவே உனக்கொரு நாள் சாவு வந்து சேராதா' என்று எழுதிய இரங்கல் கவிதை விளங்குகிறது.

தத்துவஞானி வேதாத்திரி அவர்கள் இந்த உலக உயிர்களை உய்விக்க வந்த ஒரு “விடிவெள்ளி”.

இந்த அவனியில் ஆழியாற்றைத் தெரிந்து கொண்டு அண்டிவரும் அத்தனை பக்தர்களுக்கும்அருளும், ஆசியும் வழங்கி வரும் ஆற்றுப்படை நூல் என்று அவரை குறிப்பிடுகிறார்கள்.

- மகான்களின் மௌனமே மகத்துவமாய் மலர்ந்து மணம் வீசுகிறது.
- மகாவீரர் மௌனத்தால் உயிர்களுக்கெல்லாம் உயர்வு கொடுக்கப்பட்டது.
- புத்தனின் மௌத்தால் பூவுலகமே போற்றும்படியாக ஆசையை அறவே ஒழித்தல் என்ற வேதாந்தம் விண்ணை முட்டியது.
- வியாச முனிவரின் மௌனத்தால் விலைமதிக்கப்படாத பகவத்கீதை பாமர மக்களுக்குப் படைக்கப்பட்டது.

- இறைமகன் இயேசுவின் மௌனத்தால் இவ்வுலக உயிர்களுக்கு இதமளிக்கும் விவிலியம் உதயமாகியது.
- ரம்ஸான் மாதத்தில் நபிகள் மேற்கொண்ட மௌனத்தால் திருக்குரான் திரண்டெழுந்தது.
- கம்பனின் மௌனத்தல் இராமாயணம் என்ற காவியம் பிறந்தது.
- கண்ணதாசன் மௌனத்தால் காவியங்கள் பல தோன்றின. தத்துவங்கள் குடிசைக்குள்ளும் சென்றது.
- தத்துவ மேதை, தரணி போற்று தனயன், வேதாத்திரி மகரிசியின் மௌனத்தில் மலர்ந்த தாரக மந்திரமே வேதாத்திரியம்.

மனித சமுதாயத்திற்கு மகத்துவத்தை விளம்பி நின்றவைகளில் ஒன்றான வேதாத்திரியம் மொழிந்த காலம் தான் வித்தியாசமே தவிர மொழியப்பட்ட நோக்கம் ஒன்றே!

“வாழ்க வையகம்! வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!”

என்ற தாரக மந்திரத்தை மானுடத்திற்கு தந்தவர் வேதாத்திரி மகரசி.

இருபதாம் நூற்றாண்டில் தன்னுடைய பழுத்த ஆன்மீகம் என்ற நவீனக் கருவி கொண்டு, தனது தவ வலிமையால், ஞான நிஷ்டையில் அமர்ந்து, பேரூண்மைகளை மானுடத்திற்டகு வழங்கியவர் வேதாத்திரி மகரிசி.

வாழையடி வாழையாய் வள்ளுவர் முதல் வள்ளலார் வரை வந்த தமிழ்திருநாட்டில் வாழ்வுக்கு வழிகாட்டியாய் வந்தவர் வேதாத்திரி மகரிசி.

"எண்ணிறந்த மதங்கள் உண்டு மனிதருக்கு
எனினும் தெய்வம் என்பதொன்றேயாகும்
நுண்ணிய ஆராய்ந்தறிந்த அறிஞர் செய்த
நூல்கள் எல்லாம் மனிதர் தங்கள் முயற்சியாலே
எண்ணத்தைத் தியானத்தால் பண்படுத்தி
எங்கும் நிறை பூரணத்தின் தன்மைகண்டு
மண்ணுலகில் ஏழ்மை, பஞ்ச பாதகத்தை
மாற்றி உயர்வாய் வாழும் வழியைக் காட்டும்"

திருமூலர் தொடங்கி முறையாய் வாழும் முறையை பயிற்சியாக்கி மானுடத்திற்கு தந்தவர் நமது வேதாத்திரிய மகரிசியே.

கண்ணதாசனும் வேதாத்திரியும் பெரிய சமுத்திரம். அதன் நீள அகல ஆழங்களை காண்பது அரிது.


அரிய பெரியதத்துவ நுண்பொருள்கள், சித்தாந்த நுண்பொருள்கள் எவ்வளவோ அவர்களது பாடல்களில் கொட்டிக் கிடக்கின்றன. அவரவர் ஆற்றலுக்கு ஏற்றாற்போல் வாரிக் கொள்ளலாம்.

---

இந்த கண்ணதாசன் காவியங்களும் மகரசியின் ஞானக்களஞ்சியமும் ஒவ்வொருவருடைய இல்லத்திலும் இருக்க வேண்டிய அரிய பொக்கிஷங்களாகும்.

இந்த நூல்களை அடிக்கடி ஆழ்ந்து வாசிப்பதன் மூலம் வாழ்வில் அவ்வப்போது ஏற்படும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணத் தேவையான அறிவு விளக்கம் அனைவருக்கும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

இன்றைய ஞானவழிகாட்டியாக மகரிசியும் திருமூலரும் போற்றப்பட்டு வருகிறார்கள்.




"கண்ணதாசனும் வேதாத்திரி மகரிசியும்"
அருள்நிதி வெண்ணிலா
அருள்நிதி
ராஜம் பதிப்பகம்  EBOOK PUBLISHERS

# 5. வாழ்க்கைத் தத்துவம் தந்த தயாளர்கள்

குருவிற்கு வயது அதிகமாகிவிட்டது.எழுந்து நடக்க முடியாத நிலை.படுக்கையில் அன்ன ஆகாரம் இன்றி அவர் இருக்கும் நிலையறிந்த அவரது சீடர்கள் கவலையில் ஆழ்ந்தனர்.

குரு சமாதி அடைந்து விட்டால், பிறவியின் நோக்கத்தை யார் நமக்கு உணர்த்துவது?

பிறவிக்கடல் நீந்த யார் துணை புரிவது? இப்படிக், குழப்பமான நிலையிற் சீடர்கள் தங்களுக்குள் விவாதிக்கத் தொடங்கினர்.

சீடர்களின் மன நிலையைப் புரிந்துகொண்ட குரு, அனைவரையும் தனதருகில் அழைத்தார். அப்போது அவரது பிரதான சீடர்களில் ஒருவன் “குருவே! எனக்கு ஒரு உண்மை தெரிந்தாகணும், “வாழ்க்கையின் தத்துவம் என்ன?” என்று கேட்டான்.

“உங்கள் அனைவருக்கும் வாழ்கையின் தத்துவத்தை விளக்க இருக்கிறேன், சீடர்களே வாழ்கையின் தத்துவம்

இதுதான்” என்று கூறித் தனது 'பொக்கை வாயைத்' திறந்து காட்டினார்.

அனைவரும் குருவின் வாயைப் பார்த்த பின்னர் அவரது படுக்கையைச் சுற்றி அமர்ந்தனர்.

சீடர்களிற் சிலர் ”குருவிற்கு பைத்தியம்தான் பிடித்துவிட்டது. எதையோ கேட்டால் எதையோ காட்டுகிறாரே” என்று முணுமுணுத்தனர்.

ஆனால், கேள்வி கேட்ட சீடனுக்கோ ஒன்றுமே புரியவில்லை. குருவின் வாய்க்குள் அப்படி என்ன வாழ்க்கைத் தத்துவம் அடங்கியிருக்கிறது என்று குழம்பிப் போனான்.

மெதுவாகக் குருவை அணுகி அவரிடம் "குருவே! எனக்கு ஒன்றுமே புரிய வில்லையே, அப்படி என்னதான் தங்கள் வாயில் இருக்கிறது"? என்றுக் கேட்டான்.

அதற்கு அவர் "என் வாய்க்குள் என்ன தெரிந்தது?"என்று வினவினார். அவனோ "நாக்கு மட்டும்தான் தெரிந்தது" என்று கூறினான்.

'பல் இருந்ததா?' என்று கேட்டார். அவனோ 'இல்லை' என்றான். அதற்கு அவர், "அதுதான் வாழ்க்கையின் தத்துவம்.

பல் வன்மையானது. அழிந்து போனது. நாக்கு மென்மையானது அழிந்து போகவில்லை. இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறது" என்று கூறி "வன்மையானது அழியும்,மென்மையானது வாழும். இதுதான் வாழ்க்கையின் தத்துவம்" என்று விளக்கிக் கூறினார்.

ஒரு கவிஞன் வாழ்க்கைத் தத்துவம் பற்றி எழுதுகிறான்,

"விடியும் வரை தெரிவதில்லை கண்டது கனவு என்று...

வாழ்க்கையும் அப்படிதான்...

முடியும் வரை தெரிவதில்லை...

வாழ்வது எப்படி என்று...."

ஆனால் வேதாத்திரி மகரிசியும் கண்ணதாசனும் தெள்ளத் தெளிவாய் வாழ்க்கைத் தத்துவம் பற்றி விவரிக்கிறார்கள்.

"வாழ்க்கையை விளங்கிக் கொண்டு, காரணத்தையும் உணர்ந்து கொண்டு நடத்தினால் அது வெள்ளத்திற் படகு விடுவதை ஒக்கும். மாறாக அவ்விளக்கம் இல்லாமல் நடத்தினால் அது வெள்ளத்தில் அகப்பட்ட துரும்பின் நிலை போலாகும்.

வாழ்க்கையோ, இயற்கை, சமுதாயம், தான் என்ற மூன்றின் இணைப்பில் நடைபெறுகிறது. இவற்றில் சமுதாயம் என்ற தத்துவத்தை ஆராய்வதே நாம் இப்போது எடுத்துக் கொண்டுள்ள வாழ்க்கைத் தத்துவ ஆராய்ச்சியாகும்.

வாழ்க்கை வெற்றிமிக்கதாக அமைய வேண்டுமாயின், நாம் இயற்கையையும், சமுதாயத்தையும் உணர்ந்து, மதித்து வாழ வேண்டும்.

அதோடு எந்தக் காரியத்துக்காக இந்தப் பிறவியை எடுத்து வந்தோமோ, அந்த நோக்கத்திற்கு ஒத்ததாக அதாவது பிறவித் தொடரை முடித்துக் கொண்டு வீடுபேறு எய்த வேண்டும் என்ற அந்த உயரிய நோக்கத்திற்கு ஒத்ததாக வாழும்முறை அமைய வேண்டும்.

அப்போது தான் துன்பத்தைத் தோற்றுவித்துக் கொள்ளாமலும் வாழலாம். தவறுதலாக நாம் தோற்றுவித்துக் கொள்ளும் துன்பத்திலிருந்தும் மீண்டு கொள்ளலாம். பிறரால் தோற்றக்கூடிய துன்பங்களிலிருந்தும் நம்மை நாம் காத்துக் கொள்ளலாம்.

எனவே, வாழ்க்கையின் தத்துவத்தைப் பற்றிய தெளிவான விளக்கம் பெற்று அதன்படியே வாழ்ந்து வரவேண்டும்"என்கிறார்.

பிறப்பு, வாழ்வு, இறப்பு என்ற அளவோடு முடிவது விலங்கு வாழ்க்கை. இறந்த பின்னும் இருப்பவர்களால் பேசப்படும் பெருமை பெறுவது மனித வாழ்க்கை.

வளமாக வாழும் மனித வாழ்க்கையில் , ஞானம் முழுவதையும் நாட்டும் வல்லமை கொண்ட மனிதன் சில நேரங்களில் எழுகின்ற சிக்கல்களால் சோர்ந்து போகின்றனரே?

இவர்களை தெளியவைப்பது எப்படி? வாழ்க்கையில் சாரத்தை வகுத்துச் சொல்லில் அமைதியை இழந்து நலிந்தவர்களின் மனதில் நம்பிக்கை விளக்கை ஏற்றி வைக்கிறர்கள் கண்ணதாசனும் வேதாத்திரி மகரிசியும்.

"வாழ்க்கை என்பது மண்ணில் தொடங்கி

வானகம் வரைக்கும் வளர்ந்து மலர்ந்து

பார்க்கும் கண்ணிலும் பழகும் நெஞ்சிலும்

மாபெரும் புகழை வளர வைப்பதுவாம்"

என்று வாழ்க்கையைப் பற்றிய ஒரு தெளிவான சிந்தனையை ஒவ்வொரு மனிதனுக்கும் கண்ணதாசன் எடுத்துக் காட்டுகிறார்.

"வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்

வாசல்தோறும் வேதனை இருக்கும்

வந்த துன்பம் எதுவென் றாலும்

வாடி நின்றால் ஓடுவதில்லை!"

என்பதை உணர்ந்து வாழ்க்கையை நம்பிக்கையோடு எதிர்கொள்ளத் தேவையான துணிச்சலை ஊட்டுகிறார்.

கடல் அலைகள் எப்படியாவது கரையைக் கடந்துவிட வேண்டுமென்று ஆர்ப்பரிப்பது போதுத் தளராத முயற்சியும். சலியாத உழைப்பும் கொண்டு வாழ்வதே மனித வாழ்வுக்கு அழகு என்கிறார்.

## வாழ்க்கைத் தத்துவம்

வாழ்க்கையை விளங்கிக் கொண்டு, காரணத்தையும் உணர்ந்து கொண்டு நடத்தினால் அது வெள்ளத்தில் படகு விடுவதை ஒக்கும்.

மாறாக அவ்விளக்கம் இல்லாமல் நடத்தினால் அது வெள்ளத்தில் அகப்பட்ட துரும்பின் நிலையேயாகும்.

வாழ்க்கையோ, இயற்கை, சமுதாயம், தான் என்ற மூன்றின் இணைப்பில் நடைபெறுகிறது.

இவற்றில் சமுதாயம் என்ற தத்துவத்தை ஆராய்வதே நாம் இப்போது எடுத்துக் கொண்டுள்ள வாழ்க்கைத் தத்துவ ஆராய்ச்சியாகும்.

வாழ்க்கை வெற்றிமிக்கதாக அமைய வேண்டுமாயின், நாம் இயற்கையையும், சமுதாயத்தையும் உணர்ந்து, மதித்து வாழ வேண்டும்.

அதோடு எந்தக் காரியத்துக்காக இந்தப் பிறவியை எடுத்து வந்தோமோ, அந்த நோக்கத்திற்கு ஒத்ததாக அதாவது பிறவித் தொடரை முடித்துக் கொண்டு வீடுபேறு எய்த வேண்டும் என்ற அந்த உயரிய நோக்கத்திற்கு ஒத்ததாக வாழும்முறை அமைய வேண்டும்.

அப்போது தான் துன்பத்தைத் தோற்றுவித்துக் கொள்ளாமலும் வாழலாம். தவறுதலாக நாம் தோற்றுவித்துக் கொள்ளும் துன்பங்களிலிருந்தும் மீண்டு கொள்ளலாம்.

பிறரால் தோன்றக்கூடிய துன்பங்களிலிருந்தும் நம்மை நாம் காத்துக் கொள்ளலாம். எனவே, வாழ்க்கையின் தத்துவத்தைப் பற்றிய தெளிவான விளக்கம் பெற்று அதன்படியே வாழ்ந்து வரவேண்டும்.

**“பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது**
**கருடா சௌக்யமா யாரும்**
**இருக்குமிடத்தில் இருந்து கொண்டால்**
**எல்லாம் சௌக்யமே கருடன் சொன்னது**
**அதில் அர்த்தம் உள்ளது!”**

பாம்பிற்கும், கருடனுக்கும் பகை என்றபோதும், பாம்பானது பரமசிவனின் கழுத்தில் இருப்பதால் தனக்கு கருடனால் துன்பம் வராது என்று அறிந்து கருடனை சுகமா? என்று நலம் விசாரிகிறதாம்.

கருடனோ இப்போதைக்கு ஒன்றும் செய்ய முடியாது என்றெண்ணி ‘நீ இப்போது பாதுகாப்பான இடத்தில் இருக்கிறாய், அதனால் நீயும் சுகாமாத்தான் இருக்க முடியும்’ என்று கருடன் கூறுவதில் அர்த்தம் அடங்கி இருக்கிறது. இதுவே தத்துவமும் ஆகும்.

மனிதனும் இப்படித்தான், இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் பிறரின் இம்சைக்கு ஆளாகும் நிலை ஏற்படாது.

மனிதனுக்கு எது பாதுகாப்பான இடம்? அதே பரமசிவன் இருக்கும் இடம் தானே! என்று அருமையாய் விளக்கி உள்ளார் கவிஞர்.

**“சிவம் சக்தி என்பது வெளி, பரமாணுவே**

**சிவம் சக்தி சேர்க்கையே சீரைந்து பூதங்கள்**

**சிவம் சக்தி கூத்துத்தான் சிறந்த பேரண்டம்**

**சிவம் சக்தி சிறப்புத்தான் சீவ கோடிகளாகும்"**

- **வேதாத்திரி மகரிசி**

சிவம் இருப்பதோ சுத்தவெளி என்னும் பிரவாகத்தில். நாம் இருப்பதோ பேரண்டத்தின் ஒரு பகுதியான அண்டத்தில்.

இங்கிருந்து கொண்டே மனதை ஒடுக்கி, சிவத்தோடு கலப்புற்று இருந்தால் மனிதனுக்கு அதுவே பாதுகாப்பான இடமாகும்.

ஏனெனில், அந்நிலையில் இருக்கும் போது மனமானது அலைச்சுழல் குறைந்து மனமானது எழுச்சி பெறாது.

எழுச்சியுற்றால் தானே வம்பு பண்ண முடியும். அதனால் பிறரால் துன்பம் வரும்.

ஆக, பாம்பிற்கும் மட்டுமல்ல, எல்லா ஜீவன்களுக்கும் பாதுக்காப்பான இடம் சிவம் வாழும் இடமே தான் என்று விளக்கம் கூறுகிறார் மகரிஷி.

**"உயர்ந்த இடத்தில் இருக்கும் போது**
**உலகம் உன்னை மதிக்கும் உன்**
**நிலைமை கொஞ்சம் இறங்கி வந்தால்**
**நிழலும்கூட மிதிக்கும்!**
**மதியாதார் தலைவாசல் மிதிக்காதே என்று**
**மானமுள்ள மனிதனுக்கு ஔவை சொன்னது**
**அதில் அர்த்தம் உள்ளது.**

- **கண்ணதாசன்**

உயர்ந்த இடத்தில் இருக்கும்போது மனிதனுக்கும் உயர்ந்த தன்மையான எண்ணங்கள்தான் வரும். அப்போது உலக மக்களும் மதிக்கச் செய்வார்கள்.

அதே வேளையில் மனிதனாவான் தம்முடைய எண்ணங்களால் தாழ்மை கொண்டிருந்தால் அவனின் நிழல் கூட மிதிக்கும் நிலை ஏற்படும் என்று கூறுகிறார்.

மதியாதார் என்றால் யார்? யாரொருவர் மனிதனிடம் உள்ள இறைத்தன்மையை புரிந்துகொள்ள முடியாத நிலையில் உள்ளார்களோ அவரே மதியாதார் ஆவார்.

அவரிடம் நட்பு கொண்டாலோ, உறவு கொண்டாலோ எப்படி மனிதனின் மாண்பு நிலைக்கும் என்று ஔவையின் வாக்கையும் சேர்த்திணைக்கிறார் கவிஞர்.

மனிதனுடைய பண்பு உயர வேண்டுமானால் அவனுடைய எண்ணங்கள் முதலில் செம்மை பெற வேண்டும். அதற்கு சான்றாக

**"எண்ணம், சொல், செயல்களெல்லாம் ஒன்றுக்கொன்று**

**இணைந்துள்ள தன்மையைக் காணும்போது**

**எண்ணமே அனைத்துக்கும் மூலமாகும்**

**இன்பதுன்ப விருப்பு வெறுப்பு உயர்வு தாழ்வு**

**எண்ணத்தின் நாடகமே......"**

என்று மகரிசி கூறுகிறார். இப்படிப்பட்ட உயர்ந்த எண்ணங்கள் கொண்டவனைத் தான் மனிதன்

தான் உயர்ந்த மனிதன் என்றும், இப்படி இருந்தால் தான் உலகமும் மதிக்கும் என்றும் கூறுகிறார்.

மனம் இதம் படைத்தவனே மனிதன் என்றும், அந்த இதத்தை யார் புரிந்து கொண்டு இதமாக மதிக்கிறார்களோ அவர்கள் தான் மான்புடையவர்.

அப்படி மதிக்கும் இடத்தில் உறவு கொண்டால் மனிதனின் நிலை மான்புடையதாக நிலைக்கும், இல்லையேல் தம் நிழல் கூட நிந்தனை செய்யும் என்று கூறுகிறார்.

**"வண்டி ஓடச் சக்கரங்கள்**
**இரண்டு மட்டும் வேண்டும் அந்த**
**இரண்டில் ஒன்று சிறியதென்றால் எந்த வண்டி ஓடும்**
**உனைப்போல் அளவோடு உறவாட வேண்டும்**
**உயர்ந்தோறும் தாழ்ந்தோறும் உறவு கொள்வது**
**அது சிறுமை என்பது அதில் அர்த்தம் உள்ளது"**

**- கண்ணதாசன்**

வண்டியானது சுலபாக ஓடுவதற்கு இரண்டு சக்கரங்களும் ஒரே அளவில், ஒரே சீரான ஓட்டத்தில் ஓடினால் தான் அலுங்காமல், குலுங்காமல் ஓடும்.

இதில் வண்டி என்று ஒப்பிடுவது வாழ்க்கை என்ற வண்டியையும் தான். இரண்டு சக்கரங்கள் என்பது கணவனும், மனைவியும் தான்.

இவர்களுக்கு இடையில் பிணக்கு எழுந்தால் வாழ்க்கை சீர்கெட்டுப் போகும். உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற உணர்வு

கொள்வது சிறுமைக்கு இட்டுச்செல்லும் என்று அருமையான ஒப்புமை கருத்தை கூறுகிறார்.

**"அன்பு ஊற்றாம் இல்லறத்தில் ஆண்பெண் இருபெரும்**

**அவர்கள் துணைவர்களை மனம் வருந்தச் செய்தால்**

**துன்ப உணர்வலை எழும்பி தாக்கியோரைத் தாக்கும்**

**தொல்லைதரும் சாபமாம் நோய்கள் வரும் தேர்வீர்"**

**- வேதாத்திரி மகரிசி**

இல்லற வாழ்வில் உயர்வு தாழ்வு வேண்டாம். அப்படி இருந்தால் மனம் சுருங்கி வேதனைப்படும்.

அந்த வேதனையே சாப அலையாக மாறி அவர்களுக்கே துன்பமாக விளையும். அதவே குடும்பம் சிறுமை அடைவதற்கு காரணமாகிவிடும் என்று வழிகாட்டுகிறார்.

**"நீயும் நானும் சேர்ந்திருந்தோம்**
**நிலவும் வானும் போலே நான் நிலவு**
**போலத் தேய்ந்து வந்தேன் நீ வளர்ந்ததாலே**
**என் உள்ளம் என்னைப் பார்த்து கேலி செய்யும்போது**
**இல்லாதான் இல்வாழ்வில் நிம்மதியேது இது**
**கணவன் சொன்னது இதில் அர்த்தம் உள்ளது"**

கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ்க்கை நடத்தும்போது ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து போவது இயல்பான ஒன்றாக இருக்க வேண்டும்.

அப்படி விட்டுக்கொடுக்கும் நிலையை தனக்கு சாசுவதமாக ஏற்றுக்கொண்டு அதனையே பழக்கமாக்கிக் கொண்டால் இருவருக்கும் இடையே உயர்வு தாழ்வு மனப்பான்மை வந்துவிடும்.

விட்டுக்கொடுத்த வாழ்க்கையால் தான் உயர்ந்து நிற்கிறோம் என்ற எண்ணமில்லாமல் கணவனை குறைவாக நினைத்து கேலி செய்தால் நிம்மதி இருக்காது என்று கூறுகிறார்.

**"இல்லம் கொண்டு பொருள்கள்**

**ஈட்டிக் காத்துத் துணையாம்**

**நல்லாளோ டின்புற்று**

**நாட்டுக் கீகை புரிந்து**

**பல்லுயிரும் இன்புற ஆம்,**

**பரந்த நினைவில் வாழும்**

**நல்ல வாழ் வில்லறமாம்"**

**- <u>வேதாத்திரி மகரிசி</u>**

"**நெடுநிலமும் ஏற்கும் நெறி**" என்று இல்லற மேன்மையாக கூறுகிறார். நிலவும், வானும் போல இருக்க வேண்டிய உறவில் உயர்வு தாழ்வு எண்ணம் வந்துவிட்டால் அவரவர் மனமே கேலி செய்யும் நிலை வந்துவிடும்.

இதில் யாரும் விதிவிலக்கல்ல. இந்நிலை வந்தால் குடும்பத்தில் அமைதி இல்லை, இன்பம் இல்லை, நிம்மதியும் இருக்க வாய்ப்பில்லை என்று கூறுகிறார்.

உலகில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் தேவை இருக்கிறது. அந்த தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள பிறர் உதவி நாட வேண்டி இருக்கிறது.


இப்படி, ஒழுக்கம், கடமை, ஈகை என்ற அறநெறி வாழ்க்கை வாழ்தால் தான் வாழ்வின் நோக்கமாகிய முழுமைப்பேறு அடைய முடியும்.

இதற்கு, தான், சமுதாயம், இயற்கை என்ற இணைப்பை புரிந்துகொண்டு இணக்கமாக வாழ வேண்டுமாய் கூறுகிறார்.

யாரும் தாம் பாதுகாப்பான இடத்தில் இருக்கிறோம் என்ற துணிவில் மற்றவரை ஏளனமும் செய்ய வேண்டாம்.

உயர்ந்துவிட்ட காரணத்தால் பிறரை குறையாக எடை போடவும் வேண்டாமே. உயர்ந்தோர் என்றால் உயர்ந்த பண்பே வாழ்க்கையாக கொண்டு வாழ்வதேயாகும்.

இதம் படைத்த மனம் கொண்டு இனிதே வாழ்வை நடத்திடுவோம். இல்லறத்தில் இனிமையை தக்கவைத்துக் கொள்வோம்.


பாமர மக்களின் தத்துவ ஞானிகள்
YOGA FOR MODERN AGE
YOGA FOR MODERN AGE
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்
அருள்நிதி வெண்ணிலா
ராஜம் பதிப்பகம் EBOOK PUBLISHERS

# 6. கண்டவர்வர்கள் விண்டதில்லை

உலகில் உள்ள மக்கள் அனைவரும் பொய்யான கடவுளை வணங்கி அழிந்து கொண்டு இருக்கிறார்கள். உண்மைக் கடவுளை கண்டவர்கள் யாரும் இல்லை உலகுக்கு காட்டியவர்கள் யாரும் இல்லை .

கண்டவர்கள் விண்டதில்லை ,விண்டவர்கள் கண்டதில்லை என்று பொய்யான கருத்துக்களை சொல்லி ஏமாற்றிக் கொண்டு உள்ளார்கள் மக்களையும் ஏமாற்றி விட்டார்கள்

அதனால் அருட்பிரகாச வள்ளலார் அவர்கள் கடவுளை கண்ணால் காணமுடியும் - கண்டேன் – களித்தேன் - கண்டு கொண்டேன் என்கிறார். அருள் முழுமை பெற்றால்தான் கடவுளை காண முடியும் என்கிறார்.

மனிதன் இயற்கை சட்டத்தை ஏற்று ஒழுக்கமுடன் வாழ்ந்தால் அருள் என்னும் அமுதம் நம் ஆன்மாவில் இருந்து சுரக்கும்,அந்த அமுதம் தடை இல்லாமல் முழுமையாக ஊற்று எடுத்து உடம்பு முழுவதும் பரவி ,ஊன உடம்பு ஒளி உடம்பாக மாறும் போதுதான் உண்மைக் கடவுளைக் கண்ணால் காணமுடியும் அப்படிக் கண்டவர்தான் வள்ளலார்ஃ

உண்மையான கடவுளைக் கண்ணால் கண்டதால் தான் ''அருட்பெரும்ஜோதி !அருட்பெரும்ஜோதி !தனிப்பெரும் கருணை !அருட்பெரும்ஜோதி !என்று பெயர் வைத்தார்கள்.

அந்தக் கடவுள் தான் அருட்பெரும் ஜோதியாக உள்ளார் தனிப் பெரும் கருணையுடன் உலகத்தை இயக்கிக் கொண்டு உள்ளார் என்பதை உலக மக்களுக்கு தெளிவுப் படுத்தி உள்ளார்.

" விண்டவர் கண்டிலர் கண்டவர் விண்டிலர்" என்பது பழமொழி. இதனைத்தான் கவிஞர் கண்ணதாசன் கண்டவரும் சொன்னதில்லை, சொன்னவரும் கண்டதில்லை என்று சொல்லி வைத்தார்.

"உள்ளத்தில் உள்ளவன்

ஒளிவிளக்காய் நிற்பவனை

பாரேங்கும் தேடினாலும்

ஒருநாளும் கண்டதில்லை

கண்டவரும் சொன்னதில்லை

சொன்னவரும் கண்டதில்லை

காற்றைப்போல புமியிலே

கலந்திருப்பான் ஆண்வதே!

இந்த தத்துவத்தின் ஆழத்தை, பாமரனுக்கு புரியும் வகையில் " விந்தயிலும் விந்தையடா" என்று சொல்லி அவனது அறிவையும் தூண்டிவிட்டார்.

கவிஞருக்குத் தெரியும். இந்த தத்துவத்தை மானுடத்திற்குச் சொல்லி வைக்க ஒரு மகான் வருவார் என்று உணர்ந்தவர் கவியரசர்.

“கண்டவர்கள் சொன்னதில்லை

சொன்னவர்கள் கண்டதில்லை

விண்டுரைக்க எவருமில்லை

விந்தையிலும் விந்தையடா!

“இறைநிலை மீது நம்பிக்கை கொண்டவர்களுக்கு விளக்கம் தேவையில்லை. இறையாற்றல் மீது நம்பிக்கை இல்லாதவர்களுக்கு எந்த விளக்கமும் பயன் தராது” .

இதையே தான் நாம் தமிழில் “விண்டவர்கள் கண்டதில்லை, கண்டவர்கள் விண்டதில்லை” என்கின்றோம்.

தெய்வத்தின் அருளை உணர்ந்தவர்கள் தெய்வம் இருக்கின்றதா, இல்லையா என்று கேள்வி மேல் கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இருக்க மாட்டார்கள்.

காரணம் அவர்கள் கடவுளின் அருகாமையைப் பல நிகழ்வுகளில் கண்டிருப்பார்கள், அனுபவித்திருப்பார்கள்.

ஆனால் அந்த நம்பிக்கை இல்லாதவர்கள் கேள்விகளைக் கேட்பதிலேயே நேரம் போக்கிக் கொண்டு இருப்பதால் கடவுளின் அருகாமையை உணர்வது கடினமாகிவிடுகின்றது.

கவிஞர் கண்ணதாசனின் பாடல் வரிகள் எனக்கு ரொம்பப் பிடித்தவை. “தெய்வம் என்றால் அது தெய்வம், வெறும் சிலையென்றால் அது சிலைதான், உண்டென்றால் அது உண்டு, இல்லையென்றால் அது இல்லை” என்று பாடல் வரிகள்.

இந்தப் பாடல் வரிகள் மனதில் தோன்றியதும் நான் எப்பொழுதும் அபிராமி பட்டரின் வாழக்கையைத்தான் நினைத்துக் கொள்வேன்.

அமாவாசையை “பௌர்ணமி” என்று கூறிவிட்டு அரசனின் கோபத்திற்கு ஆளாகி அதை நிரூபித்துக் காட்ட வேண்டும் என அவன் ஆணையிட அபிராமி மீது அந்தாதி பாட ஆரம்பிக்கின்றார்.

“சொன்னது நானல்ல, சொல்ல வைத்தது நீதான், எப்படியும் என்னைக் காப்பாய்” என்ற நம்பிக்கையுடன் பாடினார்.

அந்தாதியின் எழுபத்தி ஒன்பதாவது பாடலின்போது அவள் தனது தாடங்கத்தை (தோடு) எடுத்து வானத்தில் வீசினார்.

வானத்தில் நிலவு தோன்றியதாகவும் - நாம் அறிவது செவி வழிச் செய்தியின் வாயிலாக அறிகிறோம்.

அரசனின் கோபத்திலிருந்து பட்டர் விடுவிக்கப்பட்டார் என்றும் பல பரிசுகள் பெற்றார் என்றும் அறிகிறோம்.

. அமாவாசையன்று எப்படி முழு நிலவு தோன்றியது, அதற்கு விஞ்ஞான பூர்வமான ஆதாரம் உண்டா என்று கேட்டால் அதற்குப் பதில் “ஏதோ அற்புதம் நிகழ்ந்திருக்கின்றது, இல்லையென்றால் அவரது தீக்குழியில் அழுத்துவதாகச் சொன்ன அரசன் எப்படி அவருக்கு வாழ்வளித்துத் தங்கமும் வைரமும் பணமும் நிலமும் பரிசாகக் கொடுத்திருக்க முடியும்?

அணுவின் கூட்டுதான் பிரபஞ்சம் - மனிதன் - மனிதனின் மனம். மனதை வலுப்படுத்தினால் ஒருமுகப்படுத்தினால் - அமாவாசையைப் பௌர்ணமியாக்கலாம், பௌர்ணமியை அமாவாசையாக்கலாம். ஞானநிஷ்டை அடைந்தவர்களுக்கு இதெல்லாம் சாத்தியமே.

அறிவு தான் இறைவன். அன்பினால் இறைவனைத் தர்சிக்கலாம் என்றும் கூறிய சித்தர்கள் "*காயமான பள்ளியில் காணலாம் இறையய்யே*" என்றும் கூறுகின்றனர்.

"*நட்ட கல்லைத் தெய்வமென்று*", "*கோயில் பள்ளி ஏதடா*" என்றும் உருவ வழிபாட்டை வெறுத் தொதுக்கிய புரட்சியாளர்கள்.

கவிஞர் கண்ணதாசன் பட்டினத்தார் பாடலை பாமரரும் புரியும் படி "*வீடு வரை உறவு ; வீதி வரை மனைவி*"என்ற நிலையாமையை விளக்கியுள்ளார்.

பாம்பாட்டிச் சித்தர் "*கண்டவர்கள் விண்டதில்லை; விண்டவர் கண்டதில்லை*" என்று இறைநிலைக் குறித்துக் கூறுகின்றார்.

ராமலிங்க அடிகளார் கூறியபடி "*தன்னை யறிந்து இன்புறவே*" என்ற கருத்துப் படி எல்லா சித்தர்களும் ஒத்துப் போகின்றனர்.

கண்டவர் ஏன் விண்டதில்லை :

"ஆதியென்ற வெளியினிலே அணு எவ்வாறு
அவதரித்தது என்றறியப் போனார் எல்லாம்
ஆதியாம் நிலையடைந்தார் அறிவு அங்கேது?
அறிவுநிலை அடைந்தபின்னர் அதை யூகிப்பார் யார்
ஆதியே அணுவான காரணத்தை
அறிஞரெலாம் விளக்காதது இதனால் என்று
ஆதிநிலை, அணுநிலை இவ்விரண்டு மாகி
அறிந்தநிலையில் விளக்கம் பெற்று விட்டேன்." -
வேதாத்திரி மகரிஷி.

வெட்டவெளியிலே அணு எவ்வாறு தோன்றியது என்று அறியும் ஆராய்ச்சியல் ஊன்றியவர்கள் அனைவரும் அந்நிலையடையும் போது, அறிவே இயக்கமற்ற நிலையடையோர் ஆனார்.

அறிவின் நிலைக்கு வந்த பின்னர்தான் முன் நிலையை யுகித்தார்.

ஆதியே அணுவாயிற்று என்தற்குக் காரணம் யாராலும் - எந்த அறிவாளியாலும் - திட்டமாகத் தெரிவிக்க முடியாமல் போனது.

இதனால்தான் தான் உணர்ந்து கொண்டதாக மகரிசி குறிப்பிடுகின்றார். மானுடத்திற்கு எடுத்தும் சொல்கிறார்.

" வெட்டவெளியே தெய்வம்" என்று உணர்ந்தவர்களால் விளக்க முடியவில்லை.

ஆனால் மகரிசி விஞ்ஞானிகளால் கூட நுட்பமாக உணரமுடியாது பிரபஞ்சத் தோற்றத்தை, உயிரினப் பரிணாமத்தை காந்தத் தத்துவனத்தின மூலம் அனைவரும் உணரும் வகையில் தெளிவு படுத்திவிட்டார்.

பிரம்ம ஞானத்தை முழுமையான விளக்கங்களுடன் உணர்த்தியதில் தனித்துவமான தத்துவ ஞானியாகி விட்டார்.

இத்தகைய உயர்ந்த ஞானத்தால் எந்த ஒரு உயிருக்கும தீங்கு தரக்கூடாது என்று நமக்கும் உணர்த்தி நம் அனைவரையும் உயர்த்தியும் விட்டார்.

ஆதிநிலை அறியும் வழி

"ஆதி நிலை அறிய என்றால், அறிவைக் கொண்டு

அணு முதலாய் அண்ட பிண்ட தோற்றம் மற்றும்,

சோதி, சப்தம், சுவைகளோடு, மணங்கள் என்று,

சொல்லும் அரூபா ரூபங்களை ஒவ்வொன்றாய்

ஊதித் தள்ளிக் கழித்து வர கடைசியாக

உளது அறிவே, அதையும் கழித்து விட்டால்

-------------------------------------------------------------------------------------------

மீதி என்ன? இருள், அகண்டம், நிர்விகற்பம்

மௌனம் எனும் புரணமே. இதுவே ஆதி.”

- வேதாத்திரி மகரிசி.


ஆதிநிலையைறிய சுலபமான கணக்கு முறை ஒன்று தருகிறேன். முதலில், ஒலி, ஒளி, சுவை, மணம் இவைகளைத் தள்ளி விட்டுப் பார். மீதி இருப்பது உருவமும் அரூபமும் தான். பின் உருவத்தைக் கழித்து விடு. அரூபமே மீதி.

அரூபமே ஆதியாகவும், அறிவாகவும் இருக்கிறது. அங்கே அறிவைக் கழித்து விடு. மீதி என்ன?

இருள், பூரணம், நிர்விகற்பம், மௌனம் ஆகும். இது தான் ஆதி என்றும் பிரம்மம் என்றும் சொல்லப்படுகிறது.

“ விண்டவர் கண்டிலர் கண்டவர் விண்டிலர்” என்பது பழமொழி. ஆனால், அதைப் பொய்யாக்கியவா வேதாத்திரி மகரிசி.

தான் உணர்ந்தததை உணர்ந்தவாறு விஞ்ஞானப்பூர்வமாகப் பாமர மக்களுக்கும் எளிதாகப் புரியும் வண்ணம் உண்மை நிலையைத் தெளிவாக விளக்கியுள்ளார் வேதாத்திரி மகரிசி.


பாமர மக்களின் தத்துவ ஞானிகள்
YOGA FOR MODERN AGE
YOGA FOR MODERN AGE
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்
அருள்நிதி வெண்ணிலா
ராஜம் பதிப்பகம் EBOOK PUBLISHERS

# 7. கடிவாளம் இல்லாத குதிரை

மனம் என்றால் என்ன? மனிதன் என்றால் என்ன? மனம் தான் மனிதன். மனிதன் தான் மனம்.

மனம் இரண்டு வினைப்பதிவுகளாலே ஆக்கப்பட்ட ஒரு தத்துவம்.

மனம் ஒரு பருப்பொருள் அல்ல. நமது உயிரிலிருந்து தொடர்ந்து வந்து கொண்டே இருக்கக்கூடிய ஓர் அலையியக்கம் தான் அது.

கடிவாளம் இல்லாத குதிரை - கண்ணதாசன்.

மனித மனத்தின் சகல காரியங்களுக்கும், இன்பத்திற்கும், துன்பத்திற்கும், நன்மைக்கும், தீமைக்கும், இருட்டுக்கும் வெளிச்சத்திற்கும், பாவத்திற்கும் புண்ணியத்திற்கும், அன்புக்கும், வெறுப்புக்கும மனமே காரணம் என்கிறார் கவிஞர்.

மனத்தின் அலைகளே உடம்பைச் செலுத்துகின்றன. பகுத்தறிவையும் மனம் ஆக்கிரமித்துக் கொண்டு வழி நடத்துகிறது.

கருணையாளனைக் கொலைக்காரனாக்குவதும் மனம் தான். கொலைக்காரனை ஞானியாக்குவதும் மனம்தான். அது நோக்கிச் செல்லும் தடங்களின் அனுபவத்தைப் பெற்று பேதலிக்கின்றது. அப்போதுதான் அறிவு வேலை செய்கிறது.

எந்த அனுபவங்களையும் கொண்டு வருவது மனம்தான். இது சரி, இது தவறு என்று எடைபோடக்கூடிய அறிவை, மனத்தின் ராகங்கள் அழித்து விடுகின்றன.

உடம்பையும், அறிவையும் மனமே ஆக்கிரமித்துக் கொள்கின்றது. உடம்பையும், அறிவையும் மனமே ஆக்கரமித்துக் கொள்வதால், மனத்தின் ஆதிக்கத்தினாலேயே மனிதன் போகிறான்.

என்ன இந்த மனது? காலையில் துடிக்கிறது. மதியம் சிரிக்கிறது. மாலையில் ஏங்குகிறது. இரவில் அழுகிறது. இன்பமோ, துக்கமோ எல்லாம் ஒன்றுதான்.

நடப்பது நடக்கட்டும் என்றிருக்க மனம் விடுவதில்லை. ஒரே சீரான உணர்ச்சிகள் இந்த மனதுக்குத் தோன்றுவதில்லை.

மனிதன் எவ்வளவு பக்குவப்பட்டாலும் மனத்தின் அலைகளாலேயே சஞ்சரிக்கிறான். கடிவாளம் இல்லாத மனக் குதிரையை வைராக்கியத்தால் மட்டுமே அடக்க முடியும் என்கிறார் கண்ணதாசன்.

## மனதை அறியலாம் அடக்க முடியாது - மகரிசி

மனம் என்ற மதிப்புக்குரிய மாபொருளை மனத்தால்தான் உணரவேண்டும். மனம் என்பது காந்த அலையாக இருக்கிறது.

மனம் காந்த அலையாக இருப்பதால் , அது இயக்கத்தின் சுழற்சி அலைகளை உடையதாக இருக்கிறது.

மனதின் சுழற்சி அலைகளை “அதிர்வு எண்” (Mental Frequency)என்று அழைக்கிறார்கள்.

மனதை புறப்பொருட்களின் வழியே செயல்படும்போது அடையும் தன்மைக்கேற்றவாறு மன அலைநிளத்தை வகுத்துக் கொள்கிறது.

ஒரு வினாடிக்கு எத்தனை அலைகைள் உருவாகிறதோ அந்த எண்ணிக்கையை அதிர்வெண் என்று சொல்வார்கள்.

தொடர்ந்து வரும் உயரமான பகுதி அல்லது பள்ளமான பகுதி, இவற்றிற்கிடையேயுள்ள தூரத்தை அலைநீளம் என்று சொல்வார்கள்.

மனித மனம் இதுவரையில் விஞ்ஞானக் கருவிகளைக் கொண்டு குறிப்பாக Electro Encephalograph (EEG) என்ற கருவியைக் கொண்டு ஆராயந்த போது அது விநாடிக்கு ஒன்று முதல் நாற்பது சுழல் வரை இயங்கி வருகிறது என்ற உண்மைய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

மனம் இயங்கு நிலையில் விஞ்ஞானமாகவும், அடக்கநிலையில் மெய்ஞானமாகவும் திகழ்கிறது.

மனித மனதை விஞ்ஞானக் கருவிக் கொண்டு ஆராய்ந்தபோது. அது விநாடிக்கு ஒன்று முதல் நாற்பது சுழல் வரையில் இயங்கி வருகிறது என்ற உண்மையை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர்.

இந்த மன அலைச்சுழல் இயக்க நியதியைப் பொதுவாக நான்கு பிரிவுகளாக உளவியல் அறிஞர்கள் பிரித்துள்ளார்கள்.

அவை 1. பீட்டா அலை (Beta Wave) 2. ஆல்பா அலை (Alpha Wave) 3. தீட்டா அலை (Theta Wave) 4. டெல்டா அலை (Delta Wave).

பீட்டா அலை - உணர்ச்சி அலை 40 - 14 சுற்றுகள் - விநாடிக்கு.

ஆல்பா அலை - அமைதி அலை - 13 - 8 சுற்றுகள் - விநாடிக்கு.

தீட்டா அலை - நுண்ணலை 7 - 4 சுற்றுகள் விநாடிக்கு.

டெல்டா அலை - அறிதுயில் அலை 3 - 1 சுற்றுகள் விநாடிக்கு.

## மன அலைச்சுழலின் செயல்பாடுகள்

பெரும்பாலும் எல்லா மனிதர்களின் மன அலைச்சுழல் பீட்டா அலையிலேதான் இயங்குகிறது.

மனித மனம் ஐம்புலன்களின் வழியாக இயங்கும்போது, மன அலைச்சுழல் விநாடிக்கு 14 முதல் 40 சுழற்சி வரையில் இயங்குகிறது.

பீட்டா அலையிலேதான் சீவகாந்தம் அதிகமாகச் செயல்படுகிறது.

இதுவே நமது உருவமாகவும், குணமாகவும் மனமாகவும் மாறுகிறது. மனம் பீட்டா அலையில் இயங்கும்போது உணர்ச்சி மயமான எண்ணங்கள் உண்டாகின்றன.

தவம் செய்யும்போதும், தூங்கும்போதும் மனம் ஆல்பா அலைக்கு வருகிறது. மன அலைச்சுழல் விநாடிக்கு 8 முதல் 13 வரையில் இருக்கிறது.

தூக்கத்தின்போது மனம் விழிப்பு நிலையில் இருக்காது. அதனால் அறிவுப் பெருக்கம் இல்லை.

தவத்தில் அதே ஆல்பா நிலையில் இருக்கும்போது தூங்காமல் இருக்கிறோம். விழிப்புடன் இருக்கிஆறாம்.

இந்த சுகத்தைத்தான் “தூங்காமல் தூங்கி சுகம் பெறுவது “ என்று சொல்லி வைத்தார்கள்.

ஆல்பா நிலையில் மனம் நுண்மையான நிலைக்கு வருகிறது. மனம் அமைதி அடைகின்றது.

ஆல்பா நிலையில் அறிவு கூர்மையாகிறது. பொருள் வயப்பட்ட ஆறு தீய குணங்களும் நற்குணங்களாக மாறிவிடுகின்றன.

நாம் தவத்தில் ஆழ்ந்து போகும்போது மன அலைச்சுழல் இன்னும் குறைந்து தீட்டா அலைக்கு அதாவது 4 - 7 சுழல் - செல்கிறது. மனம் பிரபஞ்சம் வரை விரிவடைகிறது.

தவத்தில் மேலும் ஆழ்ந்து போகும்போது மனம் டெல்டா அலைக்குப் (விநாடிக்கு 1 - 3) போய்ச் சேருகிறது. அப்போது பிரபஞ்சத்தை எல்லாம் தாண்டி சுத்தவெளி என்ற இறைநிலையோடு மனம் ஒன்றாகக் கலந்து இறைநிலையாகவே மாறிவிடுகிறது.

மனிதன் பீட்டா அலையிலேயே வாழ்கிறான். உணர்ச்சி வயப்பட்டுகிறான்.

ஆழந்து சிந்திக்கும்போது சில நேரங்களில் ஆல்பா அலைக்கு வருகின்றான்.

தீட்டா அலைக்கோ, டெல்டா அலைக்கோ சில மனிதர்களே வருகின்றார்கள். எல்லோராலும் நுண்ணிய அலைக்கு மனத்தைக் கொண்டு செல்ல முடியும்.

மகரசியின் மனவளக்கலை மன்றங்களில் மனதை பக்குபவப்படுத்தும் பல தவநிலைகள் கற்றுத்தரப்படுகின்றன. பயற்சியினால் நமது அலைச்சுழல் வெகுவாக குறைந்து வளமாக வாழலாம்.

மனம் இயங்கும் இடங்கள்.

மனம் ஐந்து நிலைகளில் இயங்குகிறது. 1. அன்னமய கோசம் 2. மனோமய கோசம். 3.பிராணமய கோசம் 5. .விஞ்ஞானமய கோசம் 6. ஆனந்தமய கோசம்

கோசம் என்றால் உறை என்று பொருள். இந்த ஐந்து உறை என்ற கோசங்களுக்கு மத்தியிலேதான் மனம் மையங் கொண்டு இயங்கிச் செயல்படுகின்றது. இதனால் பதிவுகள் ஏற்படுகின்றன.

மனம் உடல் உணர்ச்சிகளால் குறுகிய நிலையில் கட்டுண்டு ஞான கர்மேந்திரியங்கள் மூலம் உலகப் பொருட்களோடு தொடர்பு கொண்டு செயல்பட்டு இன்ப துன்பம் என்ற உணர்ச்சிகளைத் துய்க்கிறது.

உடல் தேவைகளை உணர்ந்து முடிக்கும் அளவில் இயங்குவது அன்னமயகோசம் ஆகும். அப்போது மனம் புறமனமாகி உடல் கருவிகளில் அழுத்தப் பதிவுகள் ஏற்படுகின்றன.

மனம் உடல் தொடர்பால் உணர்ச்சிவயப்பட்டு இன்ப துன்ப அனுபோக அனுபவங்களால் நிலை திரிந்து ஆசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால் கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் என்ற ஆறு குணங்களாகிய படாக்கை நிலையில் தன் தகைமையை மறந்து செயல் செய்கிறது.

அப்போது மனம் நடுமனமாகியப் பதிவுகள் மூளையிலும் பதிவாகின்றன.

இதனால் விளைந்த புலனியக்கப் பதிவுகளை நினைவலைகளாக நடுமனம் பிரதிபலித்துக் கொண்டேயிருக்கும்.

இதனால் ஏதாவது ஒரு செயலைச் செய்வதிலேயே இயங்கிக் கொண்டே இருக்கும் நிலை மனோமய கோசம் ஆகும்.

மனம் படர்க்கை நிலை ஒழிந்து உயிராற்றலில் ஒடுங்கி உயிராகத் தன்னை அறியும் நிலை நுண்மாண் நுழைபுலன் நிலையாகும்.

ஆன்மா, புலன்கள் மூலம் விரிந்து ஆற்றும் வெளிப்புறச் செயல்களை நிறுத்தித் தனக்குள்ளே தன் உணர்வாற்றலை நிலைபெறச் செய்யும்போது அது பிராணமய கோசமாகும்.

உயிர், உடல் தொடரியக்க ஒழுங்கமைப்பை உணர்ந்து, உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பையும், அதற்கும் பேரியக்க மண்டல இயக்கங்கட்கும் உள்ள தொடர்பையும், அதற்குக்

காரணமான பரமாணு முதல் பெரும் கோள்கள், நட்சத்திரங்கள் வரை அவற்றின் தெய்விக ஒழுங்கமைப்பையும் உணர்ந்து நிற்கும்.

ஆன்மாவின் இருப்பு இயக்க உண்மைகளை உணர்ந்தபின் ஒடுங்கித் தனக்கு இயக்கக் களமாக அமைந்த பேரியக்க மண்டலத் தோற்றம், விளைவுகள் ஆகியவற்றை உணரும் போது அது விஞ்ஞானமய கோசமாக விரிவு பெறுகிறது.

இயக்கங்கட்கெல்லாம் பொருள்நிலை, உயிர்நிலை ஆகிய “விண்” ணின் உண்மை நிலையையும், சுத்தவெளியாக இருக்கும் தெய்வ நிலையையும், அகம் நோக்கி அமர்ந்து உணர்ந்து தெளிந்தால் அது அடிமனமாக இருந்து வித்தில் தரப்பதிவாக ஆகிறது.

தனது இயக்கங்களை எல்லாம் ஒழித்து நிறைபேறு அடைந்து மெய்பபொருளுணர்வு பெறும்போது ஆனந்தமய கோசமாக நிறைவு பெறுகிறது.

இந்த ஐந்தும் மனத்தின் எல்லைகள் என்று சொல்லலாம்.

உடல் உணவைப் பற்றி எண்ணும்போது, மனம் அன்னமய கோசத்தில் இயங்குகிறது.

ஒரு கருத்தைப்பற்றி, எடுத்துக்காட்டாக, உடல் என்றால் என்ன? என்று எண்ணும்போது மனம் மனோமய கோசத்தில் இயங்குகிறது.

தவத்தில் அமர்ந்து மனம் உள்நோக்கி உயிரின் மீது வைக்கும்போது பிராணமய சோகமாக இயங்குகிறறது.

மனம் விரிந்து சூரியன் நட்சத்திரங்கள், பிரபஞ்சம் என்று எண்ணும்போது விஞ்ஞானமய கோசமாக இயங்குகிறது.

பிரபஞ்சத்தையும் தாண்டி, இறைநிலையான சுத்தவெளியில் மனம் ஒன்றி எண்ணும் போது ஆனந்தமய கோசமாக இயங்குகிறது.

## மனதை வளப்படுத்துவோம்.

மனதை வளப்படுத்தவேண்டியது அவசியம் தான். இதைக் கேட்கும்பொழுது எல்லோருக்கும் ஓர் எண்ணம் தோன்றுகிறது.

இந்த மனமானது ஓடிக்கொண்டே இருக்கிறதே, இதை நிறுத்திவிட்டால் நன்றாக இருக்கும் ஆனால் அது நிற்க வேண்டுமே' என்பதாகும்.

மனம் நிற்கவேண்டுமென்று எப்பொழுது நினைக்கிறார்களோ அப்பொழுது தான் அது முன்பை விட அதிவேகமாக ஓடத்தொடங்குகிறது!

“மனதை அடக்க நினைத்தால் அலையும், மனதை அறிய நினைத்தால் அடங்கும்”.

மனதை அடக்கிவிட வேண்டுமென்று நினைத்துக் கொண்டு எங்கே அடக்குவது என்று நாம் போய்க்கொண்டே இருக்கும்போது அதுவும் ஓடிக்கொண்டேதான் இருக்கும்.

ஆனால் அந்த “மனம் என்றால் என்ன” என்று மனதையே மனதைக் கொண்டு கேட்கத் தொடங்கினால் அப்பொழுதுதான் அந்த மனதிற்கு அமைதி கிட்டும்.

இந்தக் கட்டத்திலே நாம் அறிந்து உணர்ந்து கொள்ளவேண்டியது என்னவென்றால், மனத்தாலன்றி மனதை நிலை நிறுத்திவிட முடியாது என்பதே.

இந்த மனதிற்கு ஒரு பயிற்சியை அளிக்க வேண்டியது அவசியம் என்பது உணரப்படுகின்றதல்லவா? அத்தகைய உன்னதக்கலை தான் “உலக சமுதாய சேவா சங்கத்தின்” “அகத்தவ (Meditation) பயிற்சியாகிய “குண்டலினியோகமாகும்” (Simplified Kundalini Yoga)”.

## அறிவாட்சித்தரமாக (Personality) உருவாகிறது.

மனத்திற்கு இரண்டடுக்குப் பதிவுகள் உள்ளன. ஒன்று கருவமைப்பினால் பெற்றோர்களை அடிப்படையாகக் கொண்டு வந்தது. மற்றது பிறந்தது முதல் என்னென்ன நினைத்தோமோ, என்னென்ன செய்தோமோ அவை அனைத்தும் பதிவாகியுள்ளது.

இந்த இரண்டும் சேர்ந்து தான் ஒரு மனிதனுடைய தன்மையாக அறிவாட்சித்தரமாக (Personality) உருவாகிறது."

முன்பு மனதை இயக்கிப் பதிவுகளைப் பெற்று ஒரு தன்மையை நாம் கொண்டுள்ளோம்.

அதை மாற்றி மனதை நம்முடைய விருப்பப்படி நடத்தி நாம் அடைய வேண்டிய எல்லா இலட்சியங்களையும் அடைய அதற்கென முறையான ஒரு உளப்பயிற்சி (Systemic Psychic Practice) எல்லோருக்கும் அவசியம் வேண்டும். அத்தகைய உன்னதமான கலை தான் குண்டலினியோகமாகும் .

"மனித உடலிலும் அதற்கப்பாலும் நடைபெறும் இயக்க அலைகள் அனைத்தையும் புலன்கள் மூலம் ஈர்த்துச் சுருக்கி "கருமையம்" (Genetic Center) தன்னகத்தே இருப்பு வைத்துக் கொள்கிறது.

இந்த புலனியக்க, மன இயக்கப் பதிவுகளின் மொத்த தொகுப்பேதான் மனிதனின் அறிவாட்சித்தரம் (Personality) ஆகும்.

புதிதாகப் பதிவு செய்தல், உள்ள பதிவுகளை அவ்வப்போது எண்ணங்களாகவும் செயல்களாகவும் வெளிப்படுத்துதல், உள்ள பதிவுகள் எல்லாவற்றையும் கருத்தொடர் பதிவாகப் பல தலைமுறைகளுக்கும் தொடர்மாற்றம் செய்தல், இவையாவும் கருமையத்தின் தெய்வீகத் திருவிளையாடல்களேயாகும்.

"இந்தக் கருமையத்தில் திணிவு பெற்றுள்ள பேராற்றல் (Divine Power) தான் "குண்டலினி" (Life Force) என்று வழங்கப்படுகின்றது.

இந்த அறிவாட்சித் தரத்தை முறையான எண்ணச் சீரமைப்பு பயிற்சியாகிய அகத்தாய்வு பயிற்சியின் (Introspection) மூலமும், அகத்தவப் பயிற்சியாகிய குண்டலினி யோகத்தை குருவின் மூலம் முறையாகக் கற்றுக் கொண்டபின் நமது ஆக்க முறை செயல்களாலும், வேண்டாத பதிவுகளைச் (Sins and Imprints) செயலற்றதாக்கி நல்ல புதிய பதிவுகளைப் புகுத்தி மனித வளத்தைச் சீரமைப்பதே "உலக சமுதாய சேவா சங்கத்தின்" 'மனவளக்கலை' என்ற பெருநோக்கப் பயிற்சியாகிய 'குண்டலினி யோக பயிற்சி' முறை ஆகும்."

## தவத்தால் மனதை வளப்படுத்தலாம்.

**எளியமுறைக் குண்டலினி என்பது அறிவின் பதிவைக் கொண்ட உயிர்ச் சக்தியை மேலே நோக்கி எழச் செய்து அதிலே ஒன்றி நின்று இயற்கை இரகசியங்களை உணர்ந்து தன்னிலை உணரும் பயிற்சியாகும்.**

**உயரே சொல்லாமல், கீழ்நோக்கிப் போகா விட்டால் மேல்நிலை அனுபவ உணர்வு பெறுவது போய், தாழ்ந்த உணர்வுகளே தலையெடுத்து ஓங்கும் நிலை ஏற்படும். அதைத் தான் இன்று பெரும்பாலும் காண்கிறோம். அதனால் தான் சிக்கல்கள் ஏற்படுகின்றன.**

**மனிதனின் இந்தப் பழக்கத்தால் அவனின் உயிர்ச்சக்தி கீழ் நோக்கிய இடத்தில், அதாவது மூலாதாரத்தில் தேங்கிக் கிடக்கின்றது; குண்டலினிடத்து உள்ளது. இதனையே குண்டலினி சக்தி என்கிறோம்.**

**சக்தி என்ற உடன் அது உடல் எங்கும் நிலவுவதாயிற்றே என்ற எண்ணம் எழலாம்.**

**எங்கும் இயங்கும் சக்திக்கு ஒரு இயக்க மையம் வேண்டும் அல்லவா? இந்த இயக்க மையமே மூலாதாரம் எனப்படும்.**

**எனவே, இயக்க மையத்தை முறையாக உசுப்பி விடும்போது மிகச் சிறப்பாகச் செயல்படுவது இயல்பு. அதைத்தான் எளியமுறைக் குண்டலினியோகப் பயிற்சி என்கிறோம்.**

**இந்த உயிர்ச்சக்தி உடலின் மற்ற எல்லா இடத்திலும் பரவி இருப்பினும் அதற்கு ஒரு இயக்க மையம் உண்டு.**

**இரத்தம் உடல் முழுவதிலும் பரவி இருந்தாலும் இருதயத்தை இயக்க மையமாகக் கொண்டிருப்பதனைப் போல, காற்று உடல் முழுவதிலும் பரவிஇருப்பினும் நுரையீரலை இயக்க மையமாகக் கொண்டிருப்பதனைப் போல,உயிர்ச் சக்திக்கும் இயக்க மையம் இருக்கத்தானே வேண்டும்.**

**உயிருக்கு இயக்க மையங்கள் பல உள்ளன. அத்தகைய மையங்கள் உடம்பில் ஆறு இடங்களில் இருப்பதாக மெய்யுணர்வாளர்கள் உணர்ந்து உணர்த்தி உள்ளனர். அவைகளின் அடி மட்டத்தில் இருக்கும் மையம் மூலாதாரமாகும்.**

**ஒவ்வொரு மையத்திலும், உயிர்ச்சக்தியை இயக்கிவிட்டால் அதற்கேற்ற பலன் ஏற்படும்.**

**மேலும் கீழே இருந்து மேலே போகப் போக, பலன்மிகும். இவ்வாறு இயக்கிவிடப்படும் உயிர்ச்சக்தியால் உடலில் உள்ள செல்களை ஒழுங்குபடுத்திச் செயல்படுத்த இயலும்.**

**உயிர்ச் சக்தியானது உடலின் செல்களுக்கு ஒத்த முறையில் அமையவில்லையென்றால் உடல் நோய்கள்,மன நோய்கள் போன்றவை ஏற்படும்.**

**எனவே, ஆற்றல் மிக்க உயிர்ச்சக்தியைச் சேர்க்கவும், பாதுகாக்கவும் அறிந்திருக்க வேண்டும். இதனைத்தான் ஆன்மீக அறிவு என்கின்றனர்.**

**இந்தத் தெளிவையும்பயிற்சியையும் நல்குவதே எளிய முறைக் குண்டலினியோகம் என்பது. உயிர்ச் சக்தியை உணர்ந்து அதன் இயக்கத்தை நெறிப்படுத்துவதன் மூலம்,அதன் படர்க்கை நிலையான மனதையும் சீரமைத்துக் கொள்ள இயலும்.**

# 8. உன்னை அறிந்தால் உன்னை அறிந்தால்

மெய்யுணர்வு என்றால் என்ன ? தன்னையறிவதுதான் மெய்யுணர்வு. ஆன்மாவை உள்ளுணர்வால் அறிவது மெய்யுணர்வு.

ரமண மகரிஷி சொல்லுவது போல, கேள்வி கேட்கிறவனாகிய "நான் யார் " என்று தனக்குத் தானே கேட்டுத் தெளிவதே அவ்வுணர்வு. அறிவை அறிவால் அறிந்தே அறியும் அறிவு,

"தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே."

"என்னை அறிந்திலேன் இத்தனை காலமும்
என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலேன்
என்னை அறிந்திட்டு இருத்தலும் கைவிடாது
என்னையிட்டு என்னை உசாவுகின் றானே."
-- திருமந்திரம்.

என்னை என்னிலே மறந்தே இருந்த பதியும் மறந்து
தன்னையும் தானே மறந்து தனித்திருப்பது எக்காலம்?

என்னகத்துள் என்னைநான் எங்குநாடி ஓடினேன்
என்னகத்துள் என்னைநான் அறிந்திலாத தாகையால்
என்னகத்துள் என்னைநான் அறிந்துமே தெரிந்தபின்
என்னகத்துள் என்னையன்றி யாதுமொன்றும் இல்லையே சிவவாக்கியர்.

தன்னையினிதானறியார் தலமுங்காணார் !
தான் பிறந்த சரித்திர முந்தடமுங் காணார் !
- ஞான வெட்டியான்.

இப்படி தன்னையறிதலைப் பற்றிப் பாடாத ஞானிகளோ, சித்தர்களோ கிடையாது.


நான், எனது என்கிற நிலையிலிருந்து விடுபட்டு ஆன்ம உணர்வைப் பெறுவதுதான் தன்னையறிதலேயன்றி வேறொன்றும் இல்லை.

இதைத்தான் ஆத்மஞானம் என்கிறார்கள். இந்த ஆத்ம ஞானமே அமிர்தமுமாகும். இதைத்தான் சிவ வாக்கியச் சித்தர் "நாடொணாத அமிர்தம் உண்டு நானழிந்து நின்ற நாள்." என்பார்.

“உன்னை வெல்லலாம் தன்னை வென்றவன் - எவனும்

உன்னை வெல்லலாம்.”

விவேகானந்தர் தன்னை அறிந்திருந்திருந்தார். அவரை யாராலும் வெல்ல முடியவில்லை. உலக பணக்காரர்களாலும் வெல்ல முடியவில்லை.



**சுவாமி விவேகானந்தர்** அமெரிக்கா சென்றிருந்த காலத்தில், அவருடைய தேஜசிலும், உரைகளிலும் வசியமாகி, அவரைப் பின்பற்றிய மேல்நாட்டவர்கள் பலர் இருந்தனர்.

அவர்களுள் ஹென்றி போர்டும் ஒருவர். அவரைப் பற்றி செய்தியொன்றும் சொல்லப்படுவது உண்டு.



## ஹென்றி போர்டு

ஹென்றி போர்டு மிகப்பெரும் கோடீஸ்வரர்களுள் ஒருவர். அவர் சுவாமிஜியைப் பார்க்கச் சென்றார். அவருடன் அவருடைய உதவியாளர்கள் சிலரும் சென்றனர்.

அவர் சுவாமியிருந்த அறைக்குள் நுழைந்தபோது, சுவாமிஜி கடிதம் எழுதிக் கொண்டிருந்தாராம். போர்டைக் கண்டதும் அவர் வரவேற்கவோ மரியாதை செய்யவோ இல்லை.

போர்டுக்கு சுவாமிஜி தம்மை அலட்சியம் செய்கிறார் என்று படவில்லை; அதற்கு மாறாகப் பலரும் தம்மைக் கண்டதும் செய்யும் எந்த மரியாதையையும் செய்யாமல், இந்த சாதாரணச் சந்நியாசி தம் கடமையிலேயே மூழ்கியிருக்கிறாரே என்று வியந்தார்.

கடிதத்தை முடித்ததும், சுவாமிஜி நிமிர்ந்தார். போர்டை புன்சிரிப்புடன் வரவேற்றார்.

“சுவாமி! இந்த நாட்டிலே எல்லோருமே என்னைக் கண்டதும் மரியாதையோடு எழுந்து நிற்கிறார்கள். எனக்கு வணக்கம் செய்கின்றார்கள். தாங்கள் மட்டும் எவ்வித சலனமும் இல்லாமல் இருப்பது ஏன்? நான் மிகப் பெரிய கோடீஸ்வரர்களில் ஒருவன். நான்

நினைத்தால் உங்களுக்கு எவ்வளவோ உதவி செய்ய முடியும் " என்றார் போர்டு.

சுவாமிஜி மீண்டும் சிரித்தாராம். "நான், நான் என்று எல்லாம் உமக்காகவே நீர் செய்யும் போது, என்னைப்போன்ற ஆசையற்ற சந்நியாசி விரும்பிப் பாராட்டுவதற்கு என்ன இருக்கிறது?

நீர் பிறருக்காக என்ன செய்திருக்கிறீர்? உலகுக்காக என்ன உதவியிருக்கிறீர்? உம்மை எதற்காக நான் பாராட்டி மரியாதை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்?" என்றார் விவேகானந்தர்.

இரண்டொரு நாட்களில் போர்டு திரும்பவும் சுவாமிஜியை சந்தித்தார். பல கோடி ரூபாய்களைத் தர்மத்துக்கு ஒதுக்கிவைத்து, அதற்கான தஸ்தாவேஜுகளையும் பதிவு செய்துவிட்டு வந்திருந்தார் அவர். அவற்றை சுவாமிஜியிடம் காட்டி, "இப்போதாவது எனக்கு மதிப்பு உண்டா? எனக்கு நன்றி சொல்வீர்களா ? " என்றார் போர்டு.

"தரும சிந்தையை உம்மிடம் தூண்டி, உம்மை உலகெங்கும் புகழும்படியான செயலைச் செய்ய வைத்ததற்கு நீரல்லவா எனக்கு நன்றி சொல்ல வேண்டும்?" என்றார் சிரித்தபடி சுவாமிஜி!

அவருடைய நம்பிக்கையும் ஆசையின்மையும் போர்டின் உள்ளத்தை கவர்ந்தன. அவர் சுவாமிஜிக்கு மரியாதை செய்து மிகவும் மகிழ்ச்சியுடன் விடைபெற்றுச் சென்றார்.

தன்னுடைய ஆத்ம சக்தியில், தன்னிடமிருந்த தெய்வீக பலத்தில். சுவாமிஜிக்கு தெளிவு இருந்தபடியால், அவரிடம் எளிமையும் இருந்தது. அஞ்சாமையும் இருந்தது. அவர் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற நிலையில், மிக மிக உயர்ந்த நிலையிலே நின்றார். அந்த நி

லையிலே தன்னை அறிந்ததனால், அவருக்குத் தெருக்கூட்டும் ஒருவனும், கோடீஸ்வரனும், மன்னனும், எல்லோரும் ஒரே மனித ஜீவர்களாகவே, ஒரே சமமாகவே தோன்றினார்கள்!

'தன்னை அறிதல்' என்பது தன் சக்தியை அறிதல். சக்தியை வளர்த்துக் கொண்டுதான் அறிதல் வேண்டும்! தன்னை அறிந்து, தன்னை வளர்த்து, எல்லோருமே உயர்வு பெறலாம் ; பெறவும் வேண்டும்.

சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை நமக்கு உணர்த்தும் பல பாடங்களில் இதுவும் ஒன்று !

"உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால்

உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம்

உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் தலை வணங்காமல் நீ வாழலாம்"

நம் வாழ்க்கை பிறரை அறிவதிலும் ஆராய்வதிலும் இருக்கும் வேகமும் ஆர்வமும் தன்னை அறிவதில் இருப்பதில்லை.

அதனால்தான் வாழ்க்கை வாழ்வதற்கே! எனப்தை மறந்து வாழ்க்கையே போராட்டமாக இருக்கும் நிலை உள்ளது. என்பதைக் கவிஞர் சுட்டிக்காட்டுகிறார்.

தன்னை அறிந்து வாழ்ந்தால், நம் நிலை உயர்ந்து இருந்தாலும் தாழ்ந்து இருந்தாலும் தலை வணக்கி வாழும் சூழல் ஏற்படாது என்று நம் அறிவுக் கண்ணை தட்டி எழுப்புகிறார் கவிஞர்.

மகரிஷியின் மணிமொழியில்

'நான் யார்' என்ற கேள்விக்கு உள்

நாடி உண்மை விடை கண்டோர்

நான் நிறைவான பரம் என்றார்

நாவால் மட்டும் பிறருக்கு

நான் தெய்வம் என்றுரைத்து பதில்

நல்ல உணர்வை பெறுவர் பலர்

நாம் பிரம்மம் ஆம் கருத்துதறிந்த

நல்லோர் உலகுக்கு ஒளி போல்வர்"

'நீ யார்' என்று பிறரைக் கேட்டு பழக்கமான நமக்கு 'நான் யார்' என்ற கேள்வி நம்மிடமே கேட்பது சற்று புதுமையாகத்தான் இருக்கும்.

அப்படி நம்முள் கேட்டு தெளிவு பெற்றால் 'நானே பிரம்மத்தின் பின்னமாக உருவேடுத்து உள்ளேன்.'

அப்படி உணர்ந்த பின் தன்னை அறிந்து தெளிவடைவோர் உலகிற்கு விளக்கொளியாய் விளங்குவர்.

வாழ்வோம் கதாநாயகர்களாக! வளர்வோம் புகழோடு!




# 9. எல்லோருக்கும் தந்தை இறைவன்! இறைவன்!

**“பிள்ளைக்குத் தந்தை ஒருவன்
நம் எல்லோருக்கும் தந்தை இறைவன்
நீ ஒருவனை நம்பி வந்தாயோ?
இல்லை இறைவனை நம்பி வந்தாயோ?**

தந்தை என்பவன் யார்? எவன் ஒருவன் தம் பிள்ளையை கண்ணும், கருத்துமாக, அதன் தேவையை உணர்ந்து குழந்தையின் நலனுக்காக தன் உழைப்பை போடுகிறானோ அவனே தந்தை.

பொறுப்பும், கடமையும் ஒன்றாக இணைந்து அறிவைப் புகட்டி, ஆதரவு கொடுத்து, குருவை காட்டுகின்றானோ அவனே தந்தை.

பெற்ற பிள்ளைக்கு தந்தையானவன் ஒருவனாகத்தான் இருக்க முடியும். ஆனால், உலகம் பெற்றெடுத்த பிள்ளைகள் அனைவருக்கும் தந்தை இறைவனாகத்தானே இருக்க முடியும்.

யாரை நம்பி வந்தோம் என்றால் குழந்தைக்கு தெரிய வாய்ப்பில்லை. ஆனால் இதனையே பிடியாக வைத்துக்கொண்டு தந்தையானவனும் தம் குழந்தைக்கு தானே தந்தை என்று உறவு கொண்டாடுகிறான் இறைவன் இருப்பதை மறந்து.

அதனால் தான் தம் பிள்ளைக்கு சொத்து சேர்த்து வைக்கும் எண்ணமும் எழுந்துள்ளது போலும்.

இதை உணர்ந்த கவிஞர் தந்தையை நம்பி வந்தாயோ என்று கேட்காமல் ஒருவனை நம்பி வந்தாயோ என்று மறைமுகமாக கேட்கிறார்.

அதே அடுத்த வரியில் மனிதனின் சிந்தனைக்கு எட்டும் வகையில் இறைவனை நம்பி வந்தாயோ என்று கேட்கிறார்.

---

“தந்தை தாய் ஈருயிரும் ஒன்று சேர்ந்து
தழைத்தொரு உடலாகி உலகில் வந்தேன்
அந்த ஈருயிர் வினைகள் அறமோ மற்றோ
அளித்த பதிவுகளெல்லாம் ஏன் சொத்தாச்சு
இந்த அரும் பிறவியில் முன்வினையறுத்து
எல்லையில்லா மெய்ப்பொருளை அடைவதற்கு
வந்த ஒரு உதவி குரு உயிரின் சேர்க்கை
வணங்கி குரு திருவடியை வாழ்த்தி வாழ்வேன்”

**- வேதாத்திரி மகரிசி**

தாய், தந்தை வினைகள் தான் பிள்ளையாக உருவெடுத்து வந்தது. அவர்களின் நிறைவு பெறாத ஆசைகள் தான் நிறைவு பெறுவதற்கு பிள்ளையாக பிறவி எடுத்து வந்தது.

அப்படிப்பட்ட வினைகள் நன்மையோ, தீமையோ அதற்கேற்றார் போலத்தான் பிள்ளையின் வாழ்க்கை அமைகிறது.

அத்துன்பத்தில் இருந்து மீள்வதற்கும், முன் வினை அறுத்து மெய்பொருளை அடைவதற்குத் தான் தந்தையாயானவன் குருவை காட்டுகிறார். இறைவன்தான் குருவாக வருகிறார்.

குருவோ அக்குழந்தைக்கு மெய்ப்பொருள் உணர்வை கொடுத்து வழிநடத்துகிறார். அவரின் திருவடிகளை வணங்க வேண்டுமென்றும் கூறுகிறார்.

**“தாயாரைத் தந்தை மறந்தாலும்
தந்தை தானென்று சொல்லாத போதும்**

**ஏனென்று கேட்காமல் வருவான்**
**நம் எல்லோருக்கும் தந்தை இறைவன்"**

தன் இன்ப துன்பகளில் பங்கெடுத்த உறவான மனைவியை கனவன் மறந்த போதும், இல்லை, தான் தான் தந்தை என்று கூறாமல் தலை மறைவாகி இருக்கும் நிலையிலும், தந்தை கைவிட்ட நிலையில் குழந்தை தடுமாறி நிற்கும்போது தானாக வந்து கை கொடுப்பான் இறைவனான தந்தை என்று ஆறுதல் கூறுகிறார் கவியரசர்.

உலக நடை முறையில் கற்பு என்பது பெண்களுக்கு மட்டும்தான் என்னும் கருத்திற்கு மாற்றாக ஆணுக்கும் உண்டு என்றும், ஆண் கற்புநெறியோடு வாழ்ந்தால் பெண்களுக்கு கற்பிழந்து துயருரும் நிலை ஏற்படாது என்றும் பெண்மைக்கு உறுதிகரம் நீட்டி விளக்குகிறார் மகரிசி.

இப்படிப்பட்ட நிலையில் வாழும் பெண்களுக்கும் அவள் பெற்றெடுத்த குழந்தைக்கும் தந்தையாகிய இறைவன் வாழ வழி கொடுத்து காப்பான் என்றும் வழிமொழிகிறார்.

**"உள்ளோர்க்கு செல்வங்கள் சொந்தம்**
**அது இல்லார்க்கு உள்ளங்கள் சொந்தம்**
**இல்லாத இடம் தேடி வருவான்**
**நம் எல்லோருக்கும் தந்தை இறைவன்"**

வசதி வாய்ப்புகளை அமைத்து கொண்டு வாழும் மக்களுக்கு அவர்களுடைய சொத்து எவ்வளவு என்று கணக்கிட முடியும்.

ஆனால் அப்படி சொத்துக்களை சேர்க்காதவர்களுக்கோ எண்ணிலடங்கா சொத்துக்கள் அவர்களின் உள்ளத்தில் எப்போதும் புதுமை மாறா தன்மையோடு இருந்து கொண்டே இருக்கும்.

சொத்து உள்ளவர்கள் அனுபவிப்பதை விட இல்லாதவர்கள் தான் இன்பமாக வாழ்கிறார்கள். அதனால்தான் 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்' என்று கூறியிருக்கிறார்கள் பெரியோர்கள்

**"வாங்கும் கடனும், தேங்கும் பணமும் வளரவளர வாழ்வைக் கெடுக்கும்"** என்று மகரிசிகூறுகிறார்.

படாடோபமாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தால் தன்னுடைய சக்த்திக்கு மீறி கடன் படுவதும், தன் அடுத்த தலைமுறைக்கு சேர்த்து வைக்க வேண்டும் என்பதால் பணத்தை தேக்கி வைத்துக் கொள்கிறான்.

பிறகு அந்த பணத்தாலேயே இன்னல்கள் எழுகின்றன. அதைத் தீர்ப்பதற்கு இறைவனிடம் சென்று முறையிட்டுகிறான்.

அவனின் துன்பங்களை சரி செய்வதற்காக இறைவனிடம் பேரம் பேசி பரிகாரம் செய்வதும் வாடிக்கையாக ஆகிவிட்டது.

இந்த நிலை சொத்து இருப்பவர்களுக்கு இருக்கிறதே தவிர, இல்லாதவர்களுக்கு இவ்வித துன்பம் எதுவும் இல்லை என்பது நாம் அறிந்த ஒன்று தானே என்று எளிமையாக மகரிசி விளக்குகிறார்.

ஆக, மனித வாழ்க்கைக்கு பணம் ஒரு பொருட்டல்ல, மன நிறைவே முக்கியம். அதவே நிறை செல்வம், நீங்காத செல்வம், யாராலும் அழிக்க முடியாத அரிய பொக்கிஷம்.

பொறாமைக்கு இடம் கொடுக்க முடியாத நல்லறம், பயந்து வாழ வேண்டிய நிலை இல்லாத உன்னத நிலை. இதை உணர்வோம், தெளிவோம்.

மகிழ்ச்சி பெருக வாழ்வோம் நிறைவாக. இந்நிலையில் மனம் இருக்கும் இடத்தில் தான் இறைவன் நம்மிடையே

குடிகொண்டு நம்மை அவனின் அரவணைப்போடு அழைத்துச் செல்வான் அவனின் ஏகபோக இல்லத்திற்கு.

அங்கு சென்று எந்தவித பாரபட்சமில்லாமல் சமரசமாக சமத்துவ வாழ்வது போலவே இங்கும் இந்த பூலோக வாழ்க்கையிலும் நாம் வாழப் பழகிக் கொள்வதே இறைவனான தந்தைக்கு நாம் செலுத்தும் கடமையாகும்.

# 10. முற்போக்குச் சிந்தனைகள்.

இருபதாம் நூற்றாண்டில் மக்களின் மனங்களைக் கவர்ந்த தத்துவஞானிகளுள் அருட்தந்தை வேதாத்திரி மகரிசியும் கண்ணதாசனும் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

தன்னலம் கருதாது பொது நலவணர்வுடன் மனித இனம் மேம்படுதற்குரிய விழிப்புணர்வுக் கருத்துக்களை கூறியுள்ளனர்.

சமுதாய முன்னேற்றமே தம் வாழ்நாளின் குறிக்கோளாகக் கருதிப் பாடுபட்ட கண்ணதாசனும் காலம், இடம், இனம், மதம், மொழி கடந்த பொதுவில் அமைந்த உலக சமுதாயம் காண விழைந்த மகரிசியும் தத்தமது பார்வையில் கண்ட கொள்கை, கோட்பாடுகள் அனைத்தும் பொதுமையுடையனவாகவே அமைகின்றன.

மேலோட்டமாகப் பார்க்கும் பொழுது இவர்களது சிந்தனைகள் வேறுபாடுடையனவாகக் காணப்பட்டாலும் முடிவில் சொல்லப்பட்டுள்ள தீர்வுகளின் வாயிலாக மனித வாழ்வை வளமாக்க உதவும் அடிப்படைக் கொள்கைளில் இருந்து விலகிச் செல்லாமல் பெருமளவு ஒற்றுமையுடையனவாகவே அமைகின்றன.

அந்த வகையில் பொதுவுடைமை, கல்வி, வறுமை எனும் பொருள்களில் இவ்விருவருடைய கருத்தோட்டம் முற்போக்கு உணர்வுடன் வெளிப்பட்டுள்ள பாங்கினைப் பார்ப்போம்.

## இல்லாமை இல்லாத நிலை வேண்டும்.

தனியொருவனுக்கு உணவில்லை என்றால் ஜகத்தினை அழித்திடுவோம் வாருங்கள் என்ற முழக்கம் அன்றைக்கு எட்டயப்புரத்திலிருந்து புறப்பட்டது.

இன்று சிறுகூடல்பட்டியிலிருந்தும் கூடுவாஞ்சேரியிலிருந்தும் சமதர்ம சமுதாயத்திற்கு வடிவம் தரப்பட்டுள்ளது.

மானுடம் முழுவதையும் ஒன்றுபடுத்தும் நோக்கத்தை,

"உலகம் யாவும் மானிடர் வீடு

உரிமை காப்போம் உறவையும் காப்போம்

ஒன்றாய் இணைந்து என்றும் வாழ்வோம்

சமத்துவம் காக்கும் உலகினைச் சமைப்போம்"

என்ற கண்ணதாசனின் பரந்துபட்ட மனசு தெரிகிறது.

"இருவேறு வர்க்கம் இனிமேல் கிடையாது

ஏழைக்கு வாழ்வு! எல்லோர்க்கும் ஒருவீடு!

ஆளுக்கு இவ்வளவு ஆதிக்கம் எனும்படிக்கு
மாறிவரும் காலம் மாறத்தான் வேண்டும் - இதில்
சாவுவரம் என்றாலும் சமுதாயம் துணிந்துவரும்”

என்று பாடிச் சமத்துவப் பொருளாதாரத்தை நோக்கி மனித சமுதாயத்தைத் திரண்டெழுந்து நடைபோட வைக்கிறார்.

குடிசையும் கோபுரமும் ஒன்றாக்கப்பட வேண்டும். எல்லாரும் ஓர்நிலை என்றாக்கப்பட வேண்டும் என்பதற்கு ஓர் அழைப்பும் தருகிறார் கண்ணதாசன்.

“ஓட்டைக் குடிசைக்குள் கூட்டுக் குடும்பங்கள்
வாட்டி வதைவதை மாற்றி - அதை
மாளிகை மஞ்சத்தில் ஏற்றி - இந்த
நாட்டுப்பொருள் எங்கள் வீட்டுப்பொருள் என்று
நாட்டிடுவோம் படைகூட்டி - விழி
காட்டிடுவோம் கனல் ஊட்டி”

என்று முழக்கமிடுகிறார். பொருளாதார சமத்துவத்தை எய்த வேண்டுமென்பதே அவரது இலட்சியமாக இருந்தது.

சமுதாயததில் காணும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை “மேடும் பள்ளமும் “என்ற கவிதையால் கவியரசு உணர்த்துகின்றார்.

“அங்கம் பருத்துவிட்டால் அழகுக் கலைகளுக்கே பங்கம் வருவதுபோல் பணமும் ஒருபக்கம் சேர்ந்து கொண்டே போனால் சீரான சமுதாயம் அழகிழந்து போகும்.”

என்று எச்சரிக்கை செய்கிறார். இந்தப் பொருளாதார ஏற்றத்தாழ்வை சமப்படுத்த உலகெங்கும் சமதர்மம் தழைக்கச் செய்ய வேண்டுமென்ற வழியைக் காட்டுகின்றார்.

"நூறுவேலி மிராசுதாரும் நோய்பிடித்த உழவர்மாரும்
சோறுக்கென்று சண்டைபோடும் உலகமெங்கும் - அந்த
சோஷலிசம் கொண்டுவந்தால் உயிர்கள் தங்கும்"

என்பதை வலியுறுத்துகின்றார்.

"பொதுவுடமை மலரத் தனிமனிதச் சொத்துரிமை ஒழிய வேண்டும். உலகத்திலுள்ள் எல்லாச் சொத்தும் உலகத்திலுள்ள எல்லோருக்கும் சொந்தமாக்கப்பட வேண்டும் என்கிறார் தந்தை பெரியார்.

அச்சொத்துக்கள் எவையெவை என்று பட்டியல் தருகின்றார் வேதாத்திரி மகரிசி.

"உணவு, தொழில், உடை, வீடு, குழந்தை எல்லாம் உலகப் பொது ஆட்சியின் கீழ் பொதுவாய்ச் செய்து" என்பது மகரிசியின் வாக்காய் அமைகின்றது.

நிலத்தையும், இருப்பிடத்தையும். தொழிலையும் பொதுவில் வைப்பதோடு குழந்தைகளையும் பொதுவில் வைக்க வேண்டும் என்கிறார் மகரிசி.

"பணம் என்ற நச்சை முறித்தென்றும் எங்கும்
பாசபந்தம் அற்ற சமுதாயம் காண்போம்"

"பொருள்கள் பெற, அனுபவிக்க, உலகோர்க்கெல்லாம்

பொறுப்பான பொதுத்திட்டம் அமைத்துக் கொள்வோம்."

என்ற மகரிசி, "அரசாங்கத்தை விட நமக்கு நாமே உருவாக்கிக் கொள்ளும் அமைப்பு முறையில் பொதுவுடமையை எளிதாக அமுல் படுத்தலாம் என்கிறார்.

## பொதுவுடமைப் பொருளாதாரம்.

"வாழ்வில் அனைவரும் சம சுதந்திரம் என்னும் பெரும் நன்மை மக்ளுக்குக் கிடைக்க வேண்டுமானால் தொழிற்சாலைகள், வீடுகள், நிலம் இவைகள் தனி மனிதர்களின் உரிமைப் பிடியிலிருந்து சமூகப் பொது உடைமையாக மாறியே ஆக வேண்டும்.

இந்த மாறுதல் பலத்தாகாரமும் இன்றி உயர்வான முறையில் செல்வந்தர்களுக்கு இன்னலும் நஷ்டமும் ஏற்படாத வழியில் நடைபெற வேண்டும் என மகரிசி கூறுகின்றார்.

"தேவைக்கேற்ற உழைப்பு, உழைப்புக்கேற்ற ஊதியம்" என்ற நிலை உருவாக, செல்வக் குவிப்பு, செல்வச்சரிவு என்ற முரண் மறைய வேண்டுமென்கிறார் கண்ணதாசன்.

"பாடுபடும் உழவருக்குப்
    பணமும் உண்டு உணவும் உண்டு
நாடுபெறும் லாபத்திலே
    பயனும் உண்டு-எல்லாம்
நமது என்று எண்ணுகின்ற

நினைவும் உண்டு!”
என்று உழைப்பாளிகளின் ஏக்கச்ந திரப் பாடுபடுகின்றார்.

உழைப்பவர்களின் வறுமையை போக்க வேண்டுமெனில் ஒவ்வொரு மனிதனின் மனமும் இச் சிந்தனையை ஏற்க வேண்டுமென்பதை உணர்ந்த கண்ணதாசன்,

“தொழில் வளர்த்து வறுமை நீக்கித்
துயர் துடைக்க எழுகவே
தோன்றும் செல்வம் பொதுமையாக்கத்
தோள்கள் தட்டி எழுகவே!”

என்று கூறி, ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மறைந்திருக்கின்ற உணர்வுகளைத் தட்டியெழுப்பி ஏற்றங்காண வைக்கிறார்.

“ஓட்டைக் குடிசைக்குள் கூட்டுக் குடும்பங்கள்
வாட்டி வதைவதை மாற்றி-அதை
மாளிகை மஞ்சத்தில் ஏற்றி-இந்த
நாட்டுப் பொருள் எங்கள் வீட்டுப் பொருளென்று
நாட்டிடுவோம் படை கூட்டி-விழி
காட்டிடுவோம் கனல் ஊட்டி”

ஏழைகளின் இன்னல்களைத் தீர்க்கப் பொருள்கள் அனைத்தையும் பொதுவுடமையாக்கி, அனைவரும் துய்த்ததற்குரிய நிலையை ஒருங்கிணைத்து நிலைப்படுத்த வேண்டும் என்ற சிந்தனையை விதைக்கிறார்.

## கல்விச் சிந்தனை.

தற்போதைய கல்விக் கொள்கையின் சீரற்ற போக்கை எண்ணி வருந்தும் கவிஞர் அதனை.....

"மக்கள் தொகையும் பெருகி வாழ வழிகாட்டாத கல்வி முறையும் இப்படிப் பெருகிக் கொண்டே போனால் இந்தியாவைக் கடவுள் கூடக் காப்பாற்ற முடியாது" என்று ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார்.

"கல்விஇல் லாதவர்
கடமைஇல் லாதவர்
இல்லையென் றாக்குவோம்
இனியதோர் உலகிலே"

என்று அனைவருக்கும் கல்வி புகட்ட வேண்டும் என்கிறார். முறையான கல்வி கற்கும் வாய்ப்புக் கிட்டும் குழந்தைகள் எதையும் சாதிக்கும் திறமை பெறுவார்கள் என்பதை,

"கல்விக் கடலில் மூழ்கிட வைத்தால்
காலத்தை வென்று விடும்."

என்று குறிப்பிடுகிறார்.

"கல்வியெனில் எழுத்து, தொழில், ஒழுக்கம், ஞானம்
கற்பதும் பின் வழுவாது நிற்பதும்ஆம்."

என்று கல்வி அமைய வேண்டும் என்கிறார் மகரிசி.

"வெயில், மழை, காற்று, பனி, நெருப்பு என்றமைந்துள்ள ஐம்புதங்களினால் உண்டாகும் துன்பங்களையும் கோள்களின் இயகத்தினால் உடலில் ஏற்படும் மாற்றங்களையும் துன்பங்களையும் எப்படிச் சமாளிப்பதது என்பதனைச் சொல்லித் தரும் வண்ணம் நம் கல்வி அமைய வேண்டும்" என்கிறார் மகரிசி.

## தொழிற்கல்வியின் தேவை.

பல்வகைத் தொழில்களில் ஈடுபட்டுப் பணிசெய்ய விரும்புவோர் அவரவர் திறமைக்கேறபத் தரம் பிரித்துத் தக்க கல்வியை நல்க வேண்டும் என்பதற்கான கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் எனகிறார் கவிஞர்.

தொழிற் கல்வியைப் பரவலாக்குவதன் மூலம்,

- தாம் மேற்கொள்ள வேண்டடிய பணித் தொடர்பான செய்திகளை, கருத்துக்களை, வழிமுறைகளைத் தெளிவாக அறிந்து கொள்ளல்-
- மொழி - இலக்கியக் கல்வி கற்றோர்க்கும் தொழில் கல்வி நல்குவதால் பரந்துபட்ட அறிவு பெருகுதல்-
- தொழிலறிவு படைத்தோர் எண்ணிக்கை பெருகுவதால் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைத்தல்-

என்ற பயன்களைப் பெறலாம் என்று பரிந்துரைக்கிறார்.

கல்வியறிவேர்டு செயல் புரியும்போது தொழில்கள் சிறந்து கலை மேம்படப் பகையொழிந்து அன்பு நிறைந்ததோர் உலகைப் படைக்க முடியும். அத்தகு புதிய உலகைப் பற்றிக் கவிஞர்,

"எங்கணும் தொழில்மயம்

எங்கணும் கலைமயம்
பொங்குமோர் சுகம்வரும்
பதியதோர் உலகிலே!
இனப்பகை மொழிப்பகை
எப்பகை யாயினும்
நினைப்பவர் தம்மையே
நெருப்பிலே விழ்த்துவோம்."

என்று விருப்பப்படுகிறார்.

- "ஐந்து வயதிலிருந்து பத்து வயதிற்குள் குழந்தைகளின் எழுத்துக் கல்வி முற்றுப் பெற வேண்டும். அதன் பிறகு இருபது வயது வரைக்கும் தொழிற் கல்விதனைக் கற்றுத்தர வேண்டும். தொழில் கல்வி கற்கும் காலங்களில் உலக நாடுகள் பலவற்றிற்கும் சுற்றுப் பயணம் மேற்கொள்ளச் செய்து ஆங்காங்குள்ள தொழிலையும் கற்றுத் தேறுவதற்கு உரிய வழிககைகைளைச் செய்ய வேண்டும்" என்று உணர்த்துகின்றார் மகரிசி.

"எவரெவர்க்கு எக்கலையில் திறமை ஆர்வம்
இயற்கையாய் அமைந்துள்ளதோ அதையும் கண்டு
நவ உலக வாழ்க்கையினை இனியதாக்க
நாம்வகுக்கும் தொழில்கல்வி அமைய வேண்டும்."

என்பது மகரிசியின் தொழில் கல்வி குறித்த எண்ணமாகும்.

தற்போதுள்ள நடைமுறையில் உள்ள கல்விமுறை முற்றிலுமாக மாற்றப்பட வேண்டும்.

படிக்கும் போதே தொழில் கற்க வேண்டும். மேல் நாட்டில் கல்வியோடு தொழிலையும் கற்றுக் கொடுப்பது போல நம் நாட்டிலும் கல்வியில் மாறுதல் செய்யப்பட வேண்டும்.

- தொழில் கல்விக்கே முக்கியத்துவம் கொடுத்து எழுத்துக் கோப்பது, கொல்லன் வேலை, தச்சு வேலை , கார் ஓட்டுவது. இயந்திரங்களைக் கையாளும் வேலை முதலியவைகளைப் பிள்ளைகளின் 12வது வயது முதற்கொண்டே திருத்தவும் அவர்கள் கற்ற் கல்வி உலகுக்கு பயன்படவும் இத்தகைய தொழிற்கல்வி முறையே சரியான கல்வி முறையாகும் என்பது மகரிசியின் கருத்தாகும்.

கல்வி கற்பது எப்படி அவசியமோ அதுபோல் எத்தகைய கல்வி முறையினை கற்க வேண்டும் என்பதனையும் அக் கல்வியினையும் எந்த வயதிற்குள் கற்று முடிக்க வேண்டும் என்பதைனையும் இருபெரும் அறிஞர்களும் தத்தமது நோக்கில் கூறியிருந்தாலும் அக்கருத்துக்கள் பெரும்பாலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையனவாகவே அமைகின்றன.

பொதுவுடமை, கல்வி என்ற பொதுநலம் கருதிய சிந்தகைளைத் தம் பேச்சாலும் எழுத்தாலும் கவியாலும் சமுதாயத்திற்கு உணர்த்தியுள்ள மகரிசியும் கவிஞரும் மேலும் பல்வேறு சீர்திருத்த உணர்வுகளையும் உலக நலம் கருதிச் சிந்தித்துள்ளனர்.

சாதி, மதம் போன்றவற்றில் குறுகிய மனப்பான்மையுட்ன் உருவாகும் வேறுபாடுகள் ஆகியவனவற்றை இவ்விருவரும் வாய்ப்பு நேரம் சந்தர்ப்பங்களிளெல்லாம் தவறாமல் எடுத்துரைக்கிறார்கள்.

# 11.பற்றற்ற வாழ்க்கை.

வேலைக்காரி தான் வேலை செய்யும் வீட்டையும் தன் வீடு என்று கூறிக்கொள்வாள். ஆனால் உண்மையில் தன்னுடைய வீடு அதுவல்ல, வேறு இடத்தில் இருக்கிறது என்பது எப்போதும் அவள் நினைவில் இருக்கும்.

அந்த வேலைக்காரி போலவே பற்று வைக்காமல் கடமைகளைச் செய்யுங்கள் என்கிறார் ராமகிருஷ்ணர்.

## பற்றற்ற நிலை - கண்ணதாசன்.

மண்ணாசை வளர்ந்துவிட்டால், கொலை விழுகிறது. பொன்னாசை வளர்ந்துவிட்டால் களவு நடக்கிறது. பெண்ணாசை வளர்ந்துவிட்டால் பாவம் நிகழ்கிறது.

இந்த மூன்றில் ஒரு ஆசைகூட இல்லாத மனிதரர்கள் மிகவும் குறைவு. எனவேதான் பற்றற்ற வாழ்க்கையை இந்து மதம் போதித்தது. பற்றற்று வாழ்வதென்றால் எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடிப்போய் சன்னியாசி ஆவதல்ல.

இருப்பது போதும், வருவது வரட்டும், போவது போகட்டும், மிஞ்சுவது மிஞ்சட்டும் என்று சலனங்களுக்கு ஆட்படாமலிருப்பதே பற்றற்ற வாழ்க்கையாகும்.

ஆசைகளை அறவே ஒழிக்க வேண்டியதில்லை. அப்படி ஒழித்து விட்டால் என்ன சுகம்? அதனால் தாமரை இலைத் தண்ணீர் போல் என்று போதித்தது இந்து மதம்.

நேரிய வழியில் ஆசைகள் வளரலாம் ஆனால் அதில் லாபமும் குறைவு. பாவமும் குறைவு.

ஆயிரம் ரூபாய் மட்டும் கிடைத்தால் அந்த ஐநூறு உனக்குப் பணமாகத் தெரியாது. இருநூறு ரூபாய் எதிர்பார்த்து உனக்கு ஐநூறு கிடைத்தால் நிம்மதி வந்துவிடுகிறது.

எதிர்பார்ப்பதைக் குறைத்துக் கொள். வருவது மனதை நிறைய வைக்கிறது.

லட்சக்கணக்கான ரூபாய் சொத்துகளைப் பெற்றவன் மேலும் ஒரு ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது என்றால் ஓடுகிறான், ஏன்? அது ஆசை போட்ட சாலை. அவன் பயணம் அவன் கையில் இல்லை. ஆசையின் கையில் இருக்கிறது.

போன வேகத்தில் அடி விழுந்தால் நின்று யோகிக்கிறான். அப்போது அவனுக்கு தெய்வம் ஞாபகம் வருகிறது என்கிறார் கவிஞர்.

அன்பும், பற்றற்ற நிலையும் வாழ்கை துணை நிலையில் எவ்வாறு இணையாக அமையும்? என்ற கேள்வி எழலாம்.

ஆழ்ந்த விருப்பு நிலை,பற்றற்ற நிலை இவை இரண்டுமே தேவையானவை. சாதரணமாக நாம்,” ஆழ்ந்த விருப்பம் இருக்கும்

போது எவ்வாறு பற்றற்று இருக்க முடியும்?அது போலவே பற்றற்ற நிலையில் எப்படி எதையும் ஆழ்ந்து விரும்ப முடியும்?" என்று எண்ணுவோம்.

இதுதான் உலகில் மக்களிடையே நிலவி வரும் கருத்து. ஆனால் அவ்வாறு அல்ல.மூச்சு எடுப்பது போன்றது ஆழ் விருப்பம், மூச்சு விடுவது போன்றது பற்றற்ற நிலை. இவை இரண்டிற்கும் இடையே உள்ள நிலை தான் கருணை நிலை.இவை மூன்றுமே மிக அவசியம்.

## பற்றற்ற நிலை - மகரிசி.

தேவையுணர்வாலும், தொடர்ந்து வந்த பழக்கத்தாலும் கிடைத்துள்ள சந்தர்ப்ப சூழ்நிலைகளாலும் அறிவின் வளர்ச்சிக்கேற்றவாறு, தேசம், மதம், ஜாதி, மொழி, இனம், பொருட்கள், பந்துக்கள், என்றவைகள் மீது மனிதன் தன் உரிமை கொண்டாடுகிறான்.

அந்தந்த எல்லையில் குறுகியும் நிற்கிறான். இத்தகைய ஞாபக நிலையை (அறிவின் நிலையை) பற்று என்று சொல்லுகிறோம்.

இவ்வகையான பற்றுதல் என்ற ஞாபக நிலையால், சமுதாயத்தில வாழ்ந்து வருகின்ற மக்கள் அனைவரும், ஒவ்வொரு வகையால் ஒவ்வொரு வரும் வேறுபட்டிருப்பதாகத் தோன்றுகிறது.

இந்தக் கற்பயையினால் மனிதரிடம் கர்வம், பொறாமை, பயம், வறுமை பஞ்சமகா பாதகங்கள் முதலியன தோன்றுகின்றன. பலவிதமான துன்பங்களும் விளைகின்றன.

மனிதனின் அனுபோக அனுபவ ஆராய்சிகளினால் அறிவு வளர்ச்சி பெற்று தன்னிலை விளக்கம் பெறுகின்ற போது, உருவ அளவிலே மனிதர்கள் வேறுபட்டிருந்தாலும் உயிர் என்ற நிலையில் ஒன்றுபட்டே, ஏகமாகவே இருப்பது அறிவுக்குத் தெளிவாக விளங்கி விடுகிறது.

அவனுடைய ஞாபக எல்லை அகண்ட நிலையை அடைகின்றது. அப்போது பிரபஞ்சத்தில் உள்ள சில பொருட்களை மாத்திரம் தனதென்று எண்ணிக் கொள்ளுகின்ற பற்றுதல்கள் தானாகவே விடுபட்டுப் போகின்றன.

இவ்விதமாக உயர் நிலையை அறிந்து கொண்ட பேரறிவின் சிகரமே பற்றற்ற நிலையாகும்.

“நெற்றி உச்சியில் ஞாபகமாயிரு,

உற்றுற்றுப் பார்த்திடு உன்னை உலகை பின்,

கற்றபடி நட கருத்து விழிப்புடன்,

பற்றற்று வாழும் பழக்கம் உண்டாகிடும்.”

என்று பற்றற்ற வாழ்வு வாழ வழிகாட்டுகிறார் மகரிசி.

பெரிய பணக்காரன் ஒருவன், ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் ஆயிரம் பொற்காசுகளை அன்பளிப்பாக அளிக்க விரும்பினான்.

பரமஹம்சர் வாங்க மறுத்தார். பணக்காரனோ விடாமல் வற்புறுத்தினான். **“சரி, உன் மன நிம்மதிக்காக பெற்றுக் கொள்கிறேன். இனி, நான் விரும்பியபடி இதைச் செலவழிக்கத் தடையில்லையே?”** என்று கேட்டார் பரமஹம்சர். **“ஒரு தடையும் இல்லை!”** என்றான் செல்வந்தன்.

**“இந்த ஆயிரம் பொற்காசுகளையும் கொண்டு போய் கங்கையில் எறிந்துவிட்டு வா!”** என்றார் அந்த மகான்.

பணக்காரன் அதிர்ந்து போனான். ஆனாலும் அவருடைய கட்டளைப்படி கங்கைக் கரைக்குச் சென்றவன் மிகுந்த துயரத்துடன் ஒவ்வொரு பொற்காசாக எடுத்து நீரில் எறிந்தபடி நின்றான்.

அரை மணி நேரம் கடந்தும் அவன் திரும்பாததால் ராமகிருஷ்ணர் கரைக்குச் சென்று பார்த்தார்.

ஒவ்வொறு பொற்காசாக நீரில் எறிந்து கொண்டிருந்தவனிடம், “**என்ன முட்டாள்தனம் இது? ஒரேடியாக ஒரு கணப்பொழுதில் வீசியெறிந்துவிட்டு, விரைவாக திரும்பாமல் ஏன் ஒவ்வொன்றாக எண்ணி எறிகிறாய்?**” என்று கேட்டார்.


“**ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றாக நான் சேமித்த நாணயங்களை ஒரே கணத்தில் வீசி எறிந்துவிட மனம் வரவில்லை**”. அதனால்தான் ஒவ்வொன்றாக நீரில் எறிந்தபடி நிற்கிறேன் என்றான் செல்வந்தன்.

அவனைப் பார்த்துப் பரிதாபப்பட்ட பரமஹம்சர், “**இழப்பதற்கு முடிவெடுத்து விட்டால், ஒரே கணத்தில் இழந்துவிட வேண்டும்**” என்றார்.

நம்மால் அந்தப் பணக்காரனைப் போல் ஒவ்வொன்றாக இழப்பதற்குக்கூட முடிவதில்லை.

மனிதன் அனுபோக அனுபவ ஆராய்சிகளினனால் அறிவு வளர்ச்சி பெற்று தன்னிலை விளக்கம் பெறும்போது உருவ அளவிலே மனிதர்கள் வேறுபட்டிருந்தாலும் உயிர் என்ற நிலையில் ஒன்றுபட்டே ஏகமாகவே இருப்பது அறிவிற்கும் தெளிவாக விளங்கி விடுகிறது.

அப்போது பிரஞ்சத்தில் உள்ள சில பொருட்களை மாத்திரம் தனதென்று எண்ணிக் கொள்ளும் பற்றுதல்கள் தானாகவே விடுபட்டுப்போகின்றன என்கிறார் மகரிசி.



# 12. நீ வந்தக் கதையென்ன

கவிஞர் ஒரு பாடலிலே பல தத்துவங்களை சொல்லி விடுவார். எனக்கு மிகவும் பிடித்த தத்துவப் பாடல்களில் இந்த பாடலும் ஒன்று.

**"தெய்வம் தந்த வீடு வீதி இருக்கு**

**இந்த ஊர் என்ன? சொந்த வீடென்ன? ஞானப் பெண்ணே!**

**வாழ்வின் பொருள் என்ன? நீ வந்த கதை என்ன?"**

தெய்வம் என்றால் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. அப்போ தெய்வத்திற்கு இது தான் வீடு என்று குறிப்பிட்டு கூற முடியாதே !

வீட்டிலும், வீதியிலும் எங்கும் இருப்பது தெய்வம் என்றால், அந்த தெய்வத்தின் பின்னமாகிய (fraction) நமக்குள்ளும் இருந்து ஆட்சி செய்து கொண்டு தானே இருக்க முடியும்.

எந்த ஊராகினும், வீடாகினும், ஆணாகினும், பெண்ணாகினும், வாழ்வாகினும், பொருளாகினும் அனைத்திற்குள்ளும் இருப்பது சிவம் அன்றி வேறில்லை என்பதைத்தான் கவிஞர் விளக்கியுள்ளார்.

இதனை தெய்வம் என்பது சுத்தவெளி தான் என்று வேதாத்திரி மகரிசி கூறுகிறார்.

அணுக்களுக்கு உள்ளாகவும், மத்தியிலும், அணுக்களுக்கு வெளியிலும், இடையிலும் இருக்கிறது. அணுக்களால் ஆன பொருட்கள் தானே அத்தனை தோற்றப் பொருட்களும்.

அப்படி அனைத்திற்குள்ளும் நிறைந்திருக்கும் இறைத்தன்மை பெருள் வேறு, தோற்றம் வேறு, வீடு வேறு, மக்கள் வேறு, அறிவு வேறு, ஞானம் வேறு அல்ல. அனைத்தும் ஒன்றிலிருந்து வந்ததுதான் என்று விஞ்ஞானதோடு விளக்கமளிக்கிறார்.

## நீ வந்த கதை என்ன? மகரிசி விடைதருகிறார்.

இந்த பிரபஞ்ச சரித்திரத்தில் இறுதியாக வந்தவன்தான் மனிதன். இறைநிலையே மனிதனாக தன்மாற்றம் பெற்றது. எப்படி?

1. இறைநிலை தன்னிறுக்கத்தால் நொறுங்கி இறைத்துகள் ஆயிற்று.
2. இறைத்துகள்களின் தொகுப்பே விண்
3. விண்களின் தொகுப்பு மூலகம்.

4. விண், காற்று. நெருப்பு, நீர். நிலம் என்று ஐந்து பௌதிகப் பிரிவுகளாகியது.
5. உயிரற்ற பொருட்களாக மாறியது.
6. ஓரறிவு முதல் ஆறறிவு உள்ள உயிரனங்களாகத் தோன்றியது.
7. முடிவில் மனிதனாக வந்தது.

**"நான் கேட்டு தாய் தந்தை படைத்தானா? இல்லை**

**என் பிள்ளை எனைக்கேட்டு பிறந்தானா?**

**தெய்வம் செய்த பாவம் இது போடி தங்கச்சி,**

**கொன்றால் பாவம், தின்றால் போச்சு இதுதான் ஏன் கட்சி**

**ஆதி வீடு, அந்தம் காடு,**

**இதில் நீ என்ன? அடியே நான் என்ன? ஞானப்பெண்ணே?**

**வாழ்வின் பொருள் என்ன நீ வந்த கதை என்ன?"**

பிறக்க வேண்டும் என்றெண்ணி யாரும் பிறப்பெடுப்பதில்லை. தானே பிறந்து விட்டோம். தரணியில் வாழுகின்றோம்.

இயற்கையின் சக்தியால் இயல்பாய் இருப்பது காதல். அந்த இயற்கையின் வேகத்தால் சூழப்பட்ட நாம் அதோனோடு இசைந்து தானே போக முடியும்.

முரண்பட்டால் துன்பமே தான் மிஞ்சும். ஆக, தெய்வம் செய்வது அனைத்தும் நலமே பயக்குமேத் தவிர பாவத்திற்கு ஏது இடம்!

எங்கிருந்து வந்தோமோ அதுவே ஆதி வீடு நம் அனைவருக்கும் அதேபோல போகும் இடமும் ஒன்றே தான். இதில் எந்த பாரபட்ச்சமும் இல்லை.

இறைவனின் ஆட்சியில், அரசனாக இருந்தாலும், ஆண்டியாக இருந்தாலும் அனைவவருக்கும் ஒரே சட்டம், ஒரே நீதி தான் என்பதை வெகு அழகாக கூறியுள்ளார் கவிப்பேரரசர்.

**"தகப்பனுடைய ஒரு கழிவை தாயார் ஏற்று**

**தன கழிவை அதனோடு சேர்த்து சேர்த்து**

**மிகப்புனித மெனும் இந்த உடலை ஈந்தால்**

**மீண்டும் அவள் உடல் கழிவைப் பாலாய் உண்டோம்**

**சுகப்பிணைப்பின் அடையாளமாக இந்தச்**

**சுக்கில சுரோணிதம் சேர்ந்து உருவாய் வந்த**

**முகப்பினையே உடல் வளர்ச்சி பெற்ற பின்னர்**

**முன் நினைவால் நாடுவதே மோகமாகும்"**

**- மகரிசி**

இயற்கையில் உண்டான உயிரானது தாயும் தந்தையும் ஒன்று சேர்ந்து பிள்ளைப் பெறுவது இயல்பான ஒன்று தான். அவர்களின் முன்னோர்களின் எண்ணம் தான் கருத்தொடராக தொடர்ந்து வந்துள்ளது.

அதேபோல நாமும் நம்முடைய பிள்ளைகளும் உடலில் தனித்தனியாக இருக்கும்போது கழிவாக இருந்தது.

தாயும் தந்தையும் ஒன்று சேர்ந்து புனிதம் பெற்ற உடலாக கட்டி பிள்ளையாக பிறக்கிறது. அதனால் யாரும், யாரையும் கேட்டுப் பிறப்பெடுப்பதில்லை.

இதுவே தெய்வத்தின் விளையாட்டு. இந்த விளையாட்டில் பாவம் என்பது இல்லை. இது இயற்கை தான்.

ஆதி வீடான சுத்தவெளி தன் இறைவனின் இருப்பான இடம். மற்ற அனைத்தும் இறைவனின் இயக்க இடம். இந்த இயக்க இடத்தில்தான் நாம் இருக்கிறோம்.

ஆனால், முடிவில் சேரும் இடமோ அதே சுத்தவெளியில் தான் சேர வேண்டும். அப்போதுதான் பிறவியின் நோக்கம் பூர்த்தியாகும். யாரும் விதிவிலக்கல்ல.

அவரவர் வினைகளுக்கேற்ப காலம் வேண்டுமானால் மாறலாமே தவிர கருத்து அனைவருக்கும் சமமான ஒன்றே தான் என்று சமரச விளக்கத்தைக் கூறுகிறார் மகரிஷி.

**"வெறும் கோவில் இதிலென்ன அபிஷேகம்?**

**உன் மனமென்னும் திருக்கூத்து பகல் வேஷம்.**

**கள்ளிக்கென்ன முள்ளில் வேலை போடி தங்கச்சி**

**காற்றுக்கேது தோட்டக்காரன் இதுதான் ஏன் கட்சி!**

**கொண்டதென்ன? கொடுப்பதென்ன?**

**இதில் தாய் என்ன? மணந்த தாரம் என்ன?**

**வாழ்வின் பொருள் என்ன? நீ வந்த கதை என்ன?"**

கோவில் என்றால் தெய்வம் வாழும் இடம் என்பது சராசரி மனிதர்களின் கருத்தாகும்.

அந்த இடத்தில் நிறுவப்பட்டிருக்கும் சிலைக்கு அபிஷேக ஆராதனை செய்வது மனித மனத்திற்குத் தான் திருப்தியே தவிர இறைவன் இப்படி எல்லாம் செய்யச் சொல்லவில்லையே!

இதனை பகல் வேஷம் என்று சாடுகிறார் கவிஞர். கள்ளியும், முள்ளும் ஒன்றே தான் என்றாக இருக்கும்போது எது இருந்தால் என்ன? கள்ளியும், முள்ளும் இணைவதற்கு அவசியம் இல்லை என்பதைத்தான் குறிப்பிடுகிறார்.

இவைகளுக்கு தேவை கொடி தானே தவிர முள் இல்லை. இரண்டு முட்கள் உரசிக்கொண்டால் அங்கே நெருடல்கள் தான் உண்டாகும்.

உதவி செய்வதோ, தோள் கொடுப்பதோ உறுதுணையாக இருக்கவோ வாய்ப்பில்லை என்பதைக் கண்டறிந்த கவிஞர் அருமையாக கள்ளியையும், முல்லையும் உதாரணம் காட்டியுள்ளார்.

காற்றை அளக்கவும் முடியாது, அடக்கவும் முடியாது. முடியாத ஒன்றுக்கு எதற்கு காவல்காரன்? அது தன்னையே பாதுகாத்துக் கொள்ளும் பக்குவம் தானாகவே இருக்கும் தானே!

இதில் கொள்வதற்கும், கொடுப்பதற்கும் என்ன தேவை இருக்கிறது. இதனையே உவமையாக தாயையும், தாரத்தையும் ஒன்று சேர்த்து பாடியுள்ளார்.

## மகரிஷியின் கருத்தாய்வில்;

கோவில் என்பது ஆலயம் எனப்படும். **ஆலயம் என்றால் ஆ + லயம்.** **'ஆ'** என்றால் **ஆன்மா.** ஆன்மா லயமாகும் இடமே ஆலயம்.

ஆன்மா எங்கே லயமாக முடியும்? ஆன்மாவிலேயே லயமானால் தானே ஆன்மாவைப் பற்றி அறிந்து கொள்ள முடியும்.

அப்படி ஆன்மாவில் லயமாகும் போது அபிஷேகம் எதற்கு என்று கேட்கிறார்? சிலை வழிபாடு சிறுபிள்ளை விளையாட்டு என்பதை

**"கடவுள் தான் அனைத்துமே படைத்தான் என்றேன்**

**கண்காது மூக்குவைத்து கதைகள் சொன்னேன்**

**கடவுள் என்ற கற்சிலையை அறையில் வைத்துக்**

**கதவடைத்து பூட்டியும் வைத்தேன் பின் அந்த**

**கடவுளுக்கு பசிதீர்க்க பால் நெய் தேங்காய்**

**கனிவகைகள் கற்சிலைமுன் படைத்தேன் ஆனால்**

---

**கடவுள் நிலை அறிந்தபோதென் செய்கை எல்லாம்**

**கண்டுவிட்டேன் சிறுபிள்ளை விளையாட்டாக"**

**- மகரிசி**

கடவுளை அறையிலிட்டு பூட்டி வைப்பதும், உணவளிப்பதும், மனம் போடும் வேஷமன்றி வேறில்லை என்கிறார்.

கல்லிலும், முள்ளிலும்,இருப்பது அனுக்கூட்டே என்றாலும்கூட ஒத்த ஆற்றல் இணையாது. இரு வேறுபட்ட ஆற்றல் தானே இணையும். .அதனால்தான் கள்ளிக்கு முள்ளிடம் வேலை இல்லை என்பது இப்போது தெரிய வருகிறது தானே!

காற்று வெளியானது எங்கும் பரவி அனைத்தினூடும் ஊடுருவும் ஆற்றல் இருப்பதால் அதை தடுக்கவோ, காவல் படுத்தவோ முடியாது. சொந்தம் கொண்டாடவும் முடியாது. அள்ளிக் கொடுக்கவும் முடியாது. அனுபவிக்க மட்டுமே மடியும்.

தாயும் தாரமும் பெண் என்ற அடிப்படையில் வைவதால் இதில் பேதமில்லை. இருவருமே அன்பிற்கு அடிபணிந்து போகும் ஆற்றல் நிரம்பியவர்கள் தான் என்பதை விளக்கிக் காட்டுகிறார் மகரிஷி.

**"தெளிவாக தெரிந்தாலே சித்தாந்தம் - அது**

**தெரியாமல் போனாலே வேதாந்தம்**

**மண்ணைத் தேடி தண்ணீர் தேடும் அன்புத் தங்கச்சி**

**என்னைத் தோண்டி ஞானம் கண்டேன் இதுதான் ஏன் கட்சி**

**உண்மை என்ன? பொய்மை என்ன?**

**இதில் தேன் என்ன? கடிக்கும் தேள் என்ன? ஞானப்பெண்ணே!**

**வாழ்வில் பொருள் என்ன? நீ வந்த கதை என்ன?"**

இன்னதற்கு இன்னது தான் என்ற விடை தெரிந்து விட்டால் தேடல் இருக்காது.

உடலுக்குள் உயிர் இருக்கிறதை நம்மால் உணர முடிகிறது. இது சித்தாந்தம்.

அந்த உயிர் எவ்வாறு? எப்படி? எங்கு? செயல்படுகிறது? என்பதை சராசரி மனிதன் ஆய்வு செய்வதில்லை. அதனால் அவன் முன்னோர்கள் என்ன கூறியுள்ளார்களோ அதை அப்படியே கருத்தில் கொண்டு செயல்படுகிறான்.

அதைப்பற்றி விளக்கம் கேட்டல் இப்படித்தான் வேதாந்தத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது என்று தப்பித்து செல்கிறான்.

ஆனால் சிந்திக்கும் ஆற்றல் பெற்ற மனிதனுக்கு சித்தாந்தத்திற்கும், வேதாந்தத்திற்கும் விளக்கம் கூற முடியும்.

எப்படி என்றால் ஞானிகள் கூறியுள்ளதை ஆராய்ந்துப் பார்க்கிறான், தெளிவடைகிறான். அதனால்தான் அடுத்த வரியில் 'என்னைத் தோண்டி ஞானம் கண்டேன்' என்று கவி பாடி இருக்கிறார் கவிஞர்.

எந்த ஒரு கேள்வியும் தனக்குள்ளாக கேட்டு தெளிவடையும்போது அதில் எந்த சந்தேகமும் இருக்காது, தடுமாற்றமும் இருக்காது.

எது உண்மை எது பொய்மை என்று தீர்க்கமாக தெரியும் தீர்க்கதரிசியாக இருக்க முடியும்.

இப்படிப்பட்ட நிலை வந்த பிறகு ஒரு மனிதனுக்கு தேனும், தேளும் ஒன்றாகத் தானே தெரியும். யார் ஏசினாலும், பேசினாலும், புகழ்ந்தாலும், இகழ்ந்தாலும் எதற்கும் அடிமையாகாத நிலையே ஞான நிலை.

இது தான் வாழ்வின் பொருள் என்றும் நாம் வந்த கதை என்றும் வெகு அருமையாக நம் சிந்தனைக்கு ஊற்றாக விடை கொடுத்து இருக்கிறார்.

**சித்தாந்தம் என்றால் சித் + ஆ + அந்தம்.**

'**சித்**' என்றால் '**உயிர்**'. '**ஆ**' என்றால் '**ஆன்மா**'. '**அந்தம்**' என்றால் '**முடிவான நிலை**'.

உயிரையும் ஆன்மாவையும் தெளிவாக உணர்ந்து விட்டால் அந்தத்தின் நிலை தானாக வந்துபோகும். உயிர் என்றால் இயங்கும் நிலை. உயிர் இயங்கும்போது உயிரே மனமாக செயல்படுகிறது.

உடலுக்குள்ளாக சுற்றோட்டமாக சுழலும்போது அதுவே உயிர் எனப்படுகிறது.

அந்த உயிரானது புலன்களின் மூலம் வெளியேறும்போது தடைபடும் பொருட்களில் பட்டு இது இன்னது என்று அறிவது உயிர்

தான் என்பதை ‘உயிரின் படர்க்கை நிலையே மனம்’ என்று கூறுகிறார்.

இந்த உயிரின் சுழற்ச்சியில் வெளியாகும் அலைக்கு சீவகாந்தம் எனப் பெயரிடுகிறார்.

இவை அனைத்தையும் உணர்ந்து கொண்டால் சித்தாந்தம். ஏட்டில் பதிவிட்டால் வேதாந்தம்.

இதனை உணர்வதற்கு ஏட்டில் படிப்பது மட்டும் ஒருவனை சித்தாந்தி ஆக்கவும் முடியாது. வேதாந்தியாகவும் ஆகவும் முடியாது.

ஒவ்வொருவரும் தனக்குள் இறங்கி தேடலைத் தொடங்கினால் ஆதியையும் அறியலாம். அந்தத்தையும் அடையலாம். இதுவே சரியான தேடலின் பாதையாகும்.

இந்தப் பாதையில் சென்று தெளிந்தால் தான் உண்மை எது, பொய்மை எது என்று கண்டறிய முடியும். உண்மை என்றால் எப்போதும் அழியாத, மாறாத தன்மையுடன் தான் இருக்க முடியும்.


பொய்மை என்றால் மாறிக்கொண்டே இருக்கும். எது உண்மை என்று தெரிந்து கொண்டால் அவனே ஞானியாகிறான். ஞானியானப் பின் எந்தப் பாகுபாடும் இல்லை.

‘ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்’. இத்தன்மை தானாக வந்துபோகும். இதுவே ஞான நிலை. இந்த நிலை அடைவதற்குத் தான் நாம் பிறவி எடுத்து வந்துள்ளோம்.

இதுவே வாழ்வின் நோக்கமும் ஆகும். இந்த நோக்கத்திற்கு தான் நாம் எங்கிருந்து வந்தோம் என்று நம் முன்னோக்கிய

பாதையை தெரிந்து கொள்ளத்தான் **“நான் யார்”** என்ற சுய ஆராய்ச்சி பாதையை காட்டுகிறார் மகரிஷி அவர்கள்.

கடந்து வந்த பாதையை ஒரு கண்ணூட்டம் இட்டு, வலம் வருவோம். ஞானியாக திளைப்போம். அனைவரையும் இதே நிலைக்கு இட்டுச்செல்லும் அறிஞனாக நம்மை ஆக்கிக் கொள்வோம்.



# 13. ஆண்டவன் கணக்கு:

ஒவ்வொரு செயலுக்கும் ஏற்ற விளைவு அச்செயலிலே தொக்கி நிற்கிறது என்பது இயற்கை நியதி.

விளைவு இலா வினையில்லை . வினையினூடே விளைவு பல தொக்கி நிற்கும் இயற்கை நீதி என்பார் மகரிசி.

“ஆண்டவனைக் கேட்டு எதுவும் வாங்கிவிட முடியாது. அவன் ஏமாந்தவன் அல்லன். நீங்கள் என்ன செய்தீர்களோ அந்தச் செயலின் விளைவாக, நல்லதையே கெட்டதையோ உங்கள் நோகத்திற்குத் தக்கவாறு, அவன் விளைவைத் தருவான் என்பது மகரிசி வாக்கு. இதைத்தான் கண்ணதாசன் பாடலில்,

“அடுத்தவன் வாழ்வினைக்

கெடுத்தவன் ஒருநாள்

படுத்தபின் எழமாட்டான்

அவனது கணக்கை

ஐந்தொகை போட்டு

ஆண்டவன் விடமாட்டான்!

பலருக்கு சிலகாலம் - எதுவும்

சிலருக்குப் பலகாலம்

எவருக்கும் ஒருகாலம் - உண்மை

வெளிவரும் எதிர்காலம்!

## ஆண்டவன் கணக்கு:

ஆண்டவனைக் கேட்டு இனிமேல் எதுவும் வாங்கிட முடியும் என்று கணக்குப் போட்டால் அவன் ஏமாந்தவன் அல்ல.

நீங்கள் செய்து விட்டு கணக்குப் பார்த்து, எனக்கு இவ்வளவு கூலி கொடுக்க வேண்டும் என்று கேட்டாலும் கூட கணக்கு சரியாக வராது.

முன்பு, பின்பு செய்திருந்தால் கூட செயல் பாக்கி இருந்தால் பிடித்துக் கொள்வான்.

## அவனிடம் ஒரு நியதி இருக்கிறது.

நீங்கள் என்ன செய்தீர்களோ அந்தச் செயலின் விளைவாக, நல்லதையோ, கெட்டதையோ உங்கள் நோக்கத்திற்கு தக்கவாறு, செய்யும் திறனுக்குத் தக்கவாறு, அவன் செயல் விளைவாக தருவான்.

நீங்கள் நல்ல நோக்கத்தோடு நல்ல முறையில் செய்தால், செய்த செயலின் விளைவு எல்லாம் நல்ல விளைவாகவே இருக்கும்.

அது தான் அவன் கொடுக்கக் கூடிய வரம் என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.

நல்ல செயலையே செய்தோமானால் எல்லாமே நலம் விளையும்.

நல்லதையே ஒவ்வொரு செயலிலும் செய்து கொண்டே வந்தால் இறைவனுடைய ஆற்றலை நாம் காணக்கூடிய அளவுக்கு ஒரு விழிப்பு நிலை வந்துவிடுகிறது.

பிறகு நாம் இறைவனைத் தேடிக் கொண்டோ அல்லது போற்றிக் கொண்டோ இருக்க வேண்டியதில்லை.

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு செயலிலும், ஒவ்வொரு இயக்கத்திலும் அவனுடைய இருப்பைக் கண்டுகொள்ளலாம்என்பார் மகரிசி.

செயலில்லாத விளைவு இல்லை. விளைவில்லாத செயலும் இல்லை, என்பார் மகரசி.

ஒவ்வொரு செயலிலும் அதன் விளைவு ஒட்டிக் கொண்டுதான் இருக்கிறது.

அதைச் சந்திக்க தமக்குச் சிறிது காலமாகலாம். இந்தச் செயலுக்கு இந்த விளைவு என்ற நியதி தான் தெய்வ ஒழுங்கு.

“செயலிலே விளைவாகத் தெய்வ ஒழுங்கு அமைப்பிருக்க

பயனென்ன தவறிழைத்துப் பரமனைப் பின் வேண்டுவதால்”

நமது வினைகளின் விளைவுகளுக்கு நாம்தான் பொறுப்பேற்க வேண்டும். விளைவுகளை உணர்ந்து, விளைவறிந்த விழிப்பு நிலையில் செயலாற்றும் போது, நாம் துன்பத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

மாறாக விளைவைக் கருத்தில் கொள்ளாது, வினைகள் புரியும் போது, விளைவு வரும்போது விசனப்படுகிறோம்.

ஒரு வினையைச் செய்வதா கூடாதா என்று தீமானிக்க நமக்கு அதிகாரம் இருக்கிறது.

ஆனால் அந்த வினைக்கு விளைவு இப்படித்தான். இருக்க வேண்டுமென்று தீர்மானிக்கும் அதிகாரம் நம்மிடம் இல்லை. அதைத் தீர்மானிப்பது இயற்கை நீதி.

“கர்மன் ஏவ அதிகாரஸ்து

ந பலே ஷீஉறீ ம கதாசனா”

என்பது பகவத்கீதையின் சுலோகம். கர்மாவைச் செய்வதற்குத் தான் உனக்கு அதிகாரம் உள்ளது. அதன் பலன் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று சொல்ல உனக்கு அதிகாரமில்லை.

நாம் எதிர்பார்த்த விளைவிற்கும், இயற்கையின் நியதிப்படி நிகழ்கிற விளைவுக்கும், இடைவெளியிருக்கும் போது நாம் ஏமாற்றம் அடைகிறோம்.

இந்த ஏமாற்றத்தால் துன்பம் அடையும் போது, துன்பம் வேண்டாமென்று பலப் பல கோயில்களுக்குச் சென்று வழிபடுவதாகச் சொல்லி முறையிடகிறோம்.

“தப்புக் கணக்கிட்டுத் தான் ஒன்றை எதிர்பார்த்தால்

ஒப்புமோ இயற்கை விதி, ஒழுங்கமைப்பிற்கு ஏற்றபடி

அப்போதைக் கப்போது அளிக்கும் சரிவிளைவை

எப்போதும் துயருற்று இடர்ப்படுவார் இதை உணரார்.”

கண்ணதாசன் சொன்ன ஐந்தொகைக் கணக்கும் மகரிசியின் செயல்விளைவுத் தத்துவமும் ஒன்றே.

# 14. சமுதாயச் சிந்தனைகள்.

"அரிது அரிது மானிடராய்ப் பிறப்பது அரிது" என்றார் ஔவையார். " மனிதப்பிறவி" என்பது கிடைப்பதற்கரிய பேறு.

மனிதனாகப் பிறந்தவன் அதன் மகத்துவத்தைப் போற்றி வாழத் தெரியாமல், பலவகைச் சிக்கல்களைத் தனக்கும், மற்றவர்களுக்கும் ஏற்படுத்தி உழன்று கொண்டிருக்கின்றான்.

மனிதப் பண்புகளை மறந்து, இயற்கையோடு இயைந்த வாழ்வைப் புறக்கணித்துக் குறிக்கோளில்லாமல் அலைந்து கொண்டிருக்கின்றான்.

"முறையற்ற வாழ்க்கை நெறியற்றுப் போகும்" என்பதை உணராமல் தான் தோன்றித்தனமாய்த் திரியும் மனிதன் நெறிபட்டு வாழ - மனிதகுலம் மேம்பட - உலகம் இன்புற வேதாத்திரி மகரிசியும் கவியரசர் கண்ணதாசனும் உலகளாவிய நிலையில் ஆய்ந்து. அனைத்துலகம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் பொருத்தமான முடிவுகளைத் தந்துள்ளார்கள்.

இந்த விரிந்த சமுதாயமானது, இனம், மொழி, சாதி, சமயம் ஆகியவற்றையெல்லாம் கடந்து, பரந்த நோக்கத்தோடும், நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டு உணர்வோடும் ஒருவரையொருவர் சார்ந்து சகோதரப் பிணைப்போடும் திகழ வேண்டுமென்பது இருவர்களது ஆழமான விசாலமான சமுதாயப் பார்வையாகும்.

## எண்ணம் என்றொரு நற்சிந்தனை

"எண்ணம் இனிதானல் எல்லாம் இனிதாகும்" என்பது ஆன்றோர் மொழி.

மனிதன் எண்ணுகின்ற நல்லதொரு எண்ணங்களில்தான் இவ்வகையகம் நல்படியாக இயங்குகின்றது.

அவ் எண்ணம் குறித்த மகரிசியின் சிந்தனையும் கவிஞரின் சிந்தனையும் பல முற்போக்கு எண்ணங்களுக்கு வழி வகுக்குகின்றது.

எண்ணம், சொல், செயல் ஆகியன ஒன்றுக்கொன்று சங்கிலித் தொடர் போல அமைகின்றன.

மனிதனின் அனைத்துவித நடவடிக்கைகளுக்கும் எண்ணமே மூலதாரமாக அமைகின்றது என்கின்றார் மகரிசி.

அன்றாட வாழ்வில் மனிதனுக்கு ஏற்படுகின்ற இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு, உயர்வு, தாழ்வு ஆகியன யாவும் எண்ணத்தின் விளைவால் ஏற்படுகின்ற நாடக நிகழ்வாகும் என்கின்றார்.

“எண்ணம் இல்லையெனில் எதுவுமேயில்லை. எண்ணத்துக்கு அப்பாலும் வேறொன்றுமில்லை” என்பது மகரசியின் வேதவாக்காக அமைகின்றது.

“எண்ணம், சொல் செயல்களெல்லாம் ஒன்றுக்கொன்று

இணைந்துள்ள தன்மையதைக் காணும்போது

எண்ணமே அனைத்துக்கும் மூலமாகும்

இன்பதுன்பம் விருப்பு வெறுப்பு உயர்வு தாழ்வு

எண்ணத்தின் நாடகமே. பிரபஞ்சத்தின்

இரகசியங்கள் அனைத்துக்கும் ஈதே பெட்டி
எண்ணமே இல்லையெனில் ஏதுமில்லை
எண்ணத்துக் கப்பாலும் ஒன்றுமில்லை"

வெள்ளம் பெருகிப் பெருகி நீரின் மட்டம் உயரும்போதுதான் மலரின் தண்டும் பெரிதாக, உயரமாக வளரும்.

அதைப்போலத்தான் உள்ளத்தின் உயர்வுக்கொப்பவே வாழ்க்கையின உயர்வும் இருக்கும் என்று கூறும் திருக்குறளுக்கேற்ப கவிஞரின் பாடலும் ஒலிக்கிறது.

"பூமியில் இருப்பதும் வானத்தில் பறப்பதும்
அவரவர் எண்ணங்களே இருக்குமிடம் எதுவோ?
நினைக்குமிடம் பெரிது போய்வரும் உயரமும்
புதுப்புது உலகமும் அவரவர் உள்ளங்களே"

இத்தகைய விழுமிய, மானுடத்திற்கு வேண்டிய கருத்துக்கள் பூக்கும் இடம் விரிந்த இயதமாகத்தானே இருக்க முடியும். அதுதான் இவ்விருவர்களது சமுதாயப் பார்வை.

## சாதி வேற்றுமை நீங்கிய சமத்துவ சிந்தனை

பிறப்பினால் ஒருவன் தாழ்வடைவதில்லை. அவன் செய்த, செய்கின்ற தொழில் அடிப்படையில்தான் சாதிகள் தோற்றம் கண்டன.

அந்தணன், அரசன், வாணிகன், வேளாளன் என்ற முறையில் பின்னாளில் அதுவே நால்வகை சாதிகளாகத் தோற்றம் கண்டன.

இவ்வாறு தொடர்ந்த அந்தந்த தொழில் செய்பவர்களின் பரம்பரையினருக்கு எற்றிச் செல்லப்பட்டன.

இந்நிகழ்வினை மறந்து மனதுக்குள்ளே சாதி,மத தேச. மொழி இன வேறுபாடுகளை மனத்துள் தேக்கி போதித்துக் கொண்டு வெறுத்துப் பேசும் நீதிக்குப் புறம்பான செயலை, உணர்ந்த பண்பாடேன்று உரத்துப் பேசும் குரலினை நம் சகோதாரர்களிடமே வழிவழியாய்க் காண்கின்றோம்.

இவர்களுக்கு உணர்த்தும் முகமாகவே மகரிசி நல்லவகைச் சாதிகளின் தோற்றத்தை

"வாழ்க்கைத் தேவைப் பொருளை உடல் வலுவைக் கொண்டு
வழிவழியாய்ப் பரம்பரையாய்ச் செய்து வந்தோரெல்லாம்
வாழ்க்கைத் தேவை முதலாய் அமைந்த காரணத்தால்
வழங்கப் பெற்றார்கள் சூத்திரர் என்ற சொல்லால்
வாழ்க்கைத் தேவை பொருளைப் பண்டமாற்றம் தொழிலோர்
வைசியர், நாடாள்வோர் சத்திரியர், அறிவில்
வாழ்க்கையில் உடல் அறிவு உயிர் தெய்வ உறவின்
வகையுணர்ந்து வாழவைத்தோர் பிராமணர் என்றானார்."

என்று சொல்லியுள்ளார்.

நீதமுறை தவறாமல் உழைத்து அன்பால் ஒன்றுபட்டு வாழ்ந்த நாட்டில் சாதி, மொழி, நாடு இவற்றின் வெறியால் பேதப்பட்டு

வாழ்கின்ற பித்துப் பிடித்த நிலை பெருங்களங்கமாகவே அமையும் என்அறிவுறுத்திய மகரிசி......

- "வரும் நாளில் கல்வியோடு பொருளாதாரம் வளர்ச்சி பெற்றால் ஜாதியெல்லாம் ஒழிந்திடாதோ"

என்று ஏக்கப் பெருமூச்சு விடுகிறார்.

விஞ்ஞானம், இயந்திரங்கள் பெருகிய பின்பும் சாதி வேற்றுமைகள் நீடித்து வாழக்கூடிய மனித வாழ்வில் தீமை என்பது வேறு எவ்வகையிலும் இருந்துவரப்போவதில்லை என்றும் அறிவு கொளுத்துகின்றார்.

"ஆம்பளை பொம்பளை இருஜாதி

ஆசையில் மட்டும் ஒரு ஜாதி."

என்ற கண்ணதாசன் கருத்தைக் காணும்போது நமக்கு ஔவையாரின் நினைவுதான் வருகிறது.

"சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்

நீதி வழுவா நெறிமுறையின் மேதினியில்

இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர்

பட்டாங்கில் உள்ளபடி"

இயற்கையில் ஆண்சாதி பெண்சாதி" என்பது மறுப்பதற்கில்லைதான். ஔவை கூறுவதும் கண்ணதாசன் கூறுவதும் இந்த ஒரே உண்மையைத்தான்.

"கொடுப்பவன் தானே மேல் ஜாதி

கொடுக்கதாவனே கீழ் ஜாதி"

இதை மேலும் விளக்கமாக

"கொடுப்பவர் எல்லாம் மேலாவார்-கையில்

கொள்பவர் எல்லாம் கீழாவார்"

என்று கவிஞர் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார்.

கொடுக்கிற "கை" எப்போதுமே மேலே இருக்கும். கொள்கின்ற "கை" எப்பேதுமே கீழேதான் இருக்கும்.

கொடையுள்ளம் கொண்டவன் மேல்சாதி என்றும், கொடுக்க மனமில்லாதவன் கீழ் சாதியாவான் என்றும் கவிஞர் தெளிவாகக் கூறுகிறார்.

"கண்ணுக்கு குலமேது-கண்ணா

கருணைக்கு இனமேது?"

இனத்தைப் பார்த்தா அன்பும் கருணையும் பிறக்கிறது. கருணைக்கும் குலத்திற்கும் தொடர்பில்லை.

"ஒன்று எங்கள் ஜாதியே

ஒன்று எங்கள் நீதியே

உழைக்கும் மக்கள் யாவரும்

ஒருவர் பெற்ற மக்களே!"

உழைப்பவனே உயர்சாதி என்றும் சமுதாயம் வாழ, உலகம் உய்ய உழைப்பவன் உழைப்பே வேண்டும் என்கிறார்.

"ஆலயம் ஆலயம் ஆலயம் கோயில் என்பதும் ஆலயமே

குடும்பம் என்பதும் ஆலயமே நாணயம் என்பதும் ஆலயமே

நன்றியும் இறைவன் ஆலயமே…"

சமுதாயத்தின் அடிப்படை அமைப்பான குடும்பம், சமுதாயத்தின் அடித்தளப் பண்புகளான நாணயம், நன்றியுணர்வு. உழைப்பு, அன்பு, ஈகை, கருணை, கல்வி ஆகிய அனைத்தையுமே தெய்வம் என்றும், ஆலயம் என்று சமூக நோக்கோடு கவிஞர் வணங்குகிறார்.

"குடும்பத்துக்குள்ளேயே அனைத்து ஞானங்களையும் பெறலாம்" என்பார் மகரிசி. குடும்ப அமைதியே சமுதாய அமைதி என்றும் வலியுறுத்துகிறார் மகரிசி.

## வறுமை - பசி.

கண்ணதாசனின், "**ஒரு பானையின் கதை**" என்ற கவிதையில், ஓர் ஏழைக் குடும்பத்தின் வறுமை நிலையைச் சோற்றுப் பானையே கதையாய்ச் சொல்கிறது. அருமையான வறுமை ஓவியம் இது. கவிதையின் இறுதியில்

*இப்படியே பசிநீளும் என்றால் இது*
*என்ன சுதந்திர பூமி? - ஏன்*
*இத்தனை ஆயிரம் சாமி? - ஒரு*
*கைப்பிடியில் பலபூட்டை உடைத்து இன்று*
*காத்திடுவோம் எங்கள் வீட்டை - பழி*
*தீர்த்திடுவோம் இந்த நாட்டை!*

என்று கொதிக்கிறது பானை. வறுமை பொறுமையை மீறச் செய்கிறது. புரட்சியை எழுப்பிடும் சித்தாந்தக் குரலாக ஒலிக்கிறது.

**நெருப்பின் மக்களே** என்ற கவிதையில் இந்தக் குரல் போர் முழக்கமாக ஒலிக்கிறது.

*நெஞ்சை நிமிர்த்துங்கள் தோழர்களே - இனி*
*நேருக்கு நேர்நின்று பார்ப்போம் - சம*
*நீதிக்குப் போர்ப்படை சேர்ப்போம்*

சமஉடைமைப் புரட்சித் தத்துவம் பேசுகிறது. வீரச்சுவை பொங்குகிறது.

இயற்கை ஒழுங்கமைப்பையும், உழைப்பின் பெருமையையும் உணராதோர், கடமை பிறழ்வதே வறுமையாக மலர்கின்றது என்கின்றார் மகரிசி.

1. தெய்வநிலை, உயர்நிலை, அறிவு உழைப்பு இரண்டின் மதிப்பு, இவற்றை உணாந்து மனிதன் வாழ்ந்தால், மகிழச்சியோடும் அமைதியொடும் எல்லோரும் வாழலாம்.
2. சிலர் உணா்ந்து கடமை செய்தும், பலர் உணராமல் கடமை பிறழந்தும் வாழ்வதே, உலகில் உள்ள வறுமைக்கும் துன்பங்கள் அனைத்துக்கும் காரணம்.

என்றெல்லாம் குறிப்பிட்டு வறுமையைப் போக்க வழிகளையும் குறிப்பிடுகின்றார்.

"பண்டங்கள் உடல் வெப்பதட்பம் காக்க
பசிதீர்க்க அவசியமே மனிதர்கட்கு
பண்டங்கள் இல்லாமை வறுமை மேலும்
பலபண்டம் அனுபவித்தும்; பழக்கத் தாலே
பண்டங்கள் தேவை மிகுந்ததனால் பாரில்
பலர் வறுமைக் குள்ளானார் அறிவின் தாழ்வால்
பண்டங்கள் தமை அளவுமுறை யில்லாமல்
பதுக்குவதால் வேறு வறுமை கண்டோம்."

என்கின்றார். மனிதன் இயற்கை வளத்தைத் தனது உழைப்பையும், அறிவுத் திறனையம் கொண்டு உருமாற்றி இன்புற்று வாழக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார்.

வறுமைக்கு மகரிசி அவரது வாழ்வில் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளையே அவர் தம்முடைய பல நூல்களில் எடுத்துக் காட்டுகின்றார்.

இவ்விருவர் காட்டும் செவ்விய நெறியில் மனித சமுதாயம் மாண்போடு நடந்துசென்றால் மனித வாழ்க்கை இன்புறும். மனித நேயம் தழைக்கும். மனித சமுதாயத்தின் சாதனை விண்ணைத் தொடும்.

## 15. மனிதன் என்பவன் தெய்வமாகாலாம்.

ஒரு முழுமையான ஆற்றலுடன் எல்லாம் வல்ல இறைவன் நம்மைப் படைத்திருக்கிறான்.

பக்தமானாக இருந்தாலும் சரி, ஞானவானாக இருந்தாலும் சரி, நாம் அனைவரும் இறைவனுடைய பிரதிநிதிகளேயாவோம்.

நாம் எல்லோரும் அவனுடைய பகுதியாகவே இருக்கிறோம்.

இறைவனின் பேராற்றல் நம்முள் அடங்கியுள்ளது. இதனைக் கொண்டு நமக்கு என்னென்ன நலன்களை கொள்ள வேண்டுமோ அவைகளை நாமே விளைவித்துக் கொள்ள வேண்டும்.

நம்முடைய உதவி பிறருக்கு தேவைான இடத்தில் அவர்களுக்கு உதவி செய்தும், அவர்களுடைய உதவியை தேயைான சமயத்தில் நாமும் பெறுவோம் என்ற அளவிலே - கடமை உணர்வோர் செயலாற்றி- நமக்கு உதவுபவர்களுக்கு எல்லாம், நாம் பதில் உதவி செய்து கொண்டே இருக்க வேண்டும்.

அத்தகைய அளவில் வாழும்போது ஒரு மிகப் பெரிய சக்தி வாய்ந்த ஆற்றல் நம்முள் பெருகுவதை உணரலாம்.

தினந்தோறும் நம்முடைய வாழ்க்கையில் அதனைப் பயன்படுத்த வேண்டும்.

நாம் ஒரு பெரிய அதிகாரியாக இருக்கலாம். நம் அதிகாரத்தின் கீழ் பல மக்கள் துன்பப்பட்டுக் கொண்டு இருக்கக்கூடும்.

நாம் அவர்கள் பக்கம் திரும்பி நம்மால் அவர்களுக்கு என்ன நன்மை செய்ய முடியும் என்று எண்ணிவிட்டால் போதும், அவ்வளவு மனிதர்களின் தேவைகளும் நமக்கு நேரடியாகத் தெரியத் தொடங்கும்.

அவைகளை ஒவ்வொன்றாகச் செய்ய ஆரம்பித்தோமானால், ஒரு இன்ப ஊற்று தானாக நம் மனதில் ஊற்றெடுக்கும்.

தெய்வத்தோடு தெய்வமாகவே நாமும் நிற்கின்ற ஒரு அற்புதமான காட்சி நமது உள்ளத்தில் ஒளிவிடும்.

மகரிசியின் இந்த விளக்கத்தை கண்ணதாசன் தனது பாடலிலே மிகவும் எளிமையாக தருகிறார்.

“ஆசை கோபம், களவு கொள்பவன்

பேசத் தெரிந்த மிருகம்

அன்பு, நன்றி, கருணை கொண்டவன்

மனித வடிவில் தெய்வம் - இதில்

மிருகம் என்பது கள்ளமனம் - உயர்

தெய்வம் என்பது பிள்ளை மனம் - இந்த

ஆறு கட்டளை அறிந்த மனது

ஆண்டவன் வாழும் வெள்ளைமனம்!

மனித வடிவில் தெய்வங்களை நடமாடும் தெய்வங்களைாகக் கண்ட திருமூலரைப் போல் கண்ணதாசனும் பார்க்கிறார்.

மனிதனை மனிதன் நேசிக்க வேண்டும்; மதித்து நடக்க வேண்டும். கூடுமானவரை ஒருவரை ஒருவர் எப்போதும் வாழ்க! வாழ்க! என்று வாழ்த்திக் கொண்டே இருக்கவேண்டும்.

அப்போது தான் நேசம் வளரும்; வெறுப்பு நீங்கும்; நன்மை ஏற்படும்." இது அருட்தந்தையின் அருளமுதம்.

"மனிதன் என்பவன் தெய்வமாகலாம்"

மனிதன் எப்போது தெய்வமாக முடியும்?
என்ற கேள்விக்கு பதில் கூறும் முன், மனிதன் முதலில் மனிதனாக இருக்கிறானா? என்று சிந்திப்போமா?

மனிதன் = மனம் + இதம் = மனிதம் = மனிதன் = மனம் இதம் படைத்தவன் மனிதன்.

காலால் நடப்பவைகள் கால்நடைகள்,
மனதால் நடப்பவர்கள் மனிதர்கள்.

அதனால் தான் மனிதனைப் பார்த்து

"கண் போன போக்கிலே கால் போகலாமா? கால் போன போக்கிலே மனம் போகலாமா? மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா? மனிதன் சென்ற பாதையை மறந்து போகலாமா?"

என்று கேட்கிறார் கவிஞர்.

கண், கால், மனம், போன போக்கிலே மனிதன் போகலாமா? என்று கேட்கும் கவிஞர் கடைசியில் மனிதன் போன பாதையை மறந்து போகலாமா? என்று கேட்கிறார்.

இதிலிருந்து கவிஞர் நமக்கு கூற வருவது யாதெனில், அப்படி மனம் போக்கில் சென்றால், அதனால் அவன் அடைந்த துன்பங்களை எண்ணி செயல்படு மானிடா.....!!! என்றல்லவா அறிவுறுத்துகிறார்.

மனிதன் என்பவன் பல மிருகங்களை ஒன்றாக தொகுக்கபபட்ட குணம் படைத்தவன் தான் மனிதன்.

நாயை எடுத்துக்கொண்டால், தனக்கு அறிமுகம் இல்லாதவரைக் கண்டால் குரைக்கும், தனக்கு வேண்டப்பட்டவர்களைக் கண்டால் வாலை ஆட்டும்.

இதைத்தவிர நாயிடம் தந்திரத் தனம் வேறு எதுவும் இல்லை. அதேப்போல் தான் உலகில் வாழும் அத்தனை உயிரினங்களும் தனக்கு துன்பம் நேரும்போது, யாரால் துன்பம் வந்ததோ அவர்களுக்கு துன்பம் கொடுக்கும்.

நாய் - குரைக்கும், பாம்பு - சீரும், மாடு முட்டும், கழுதை உதைக்கும்...... இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

ஆனால் மனிதனிடம் மட்டும் தான் இத்தனை குணாதிசயங்களும் ஒரு சேரக் கொண்டு தேவைக்கு ஏற்ப அந்தந்த ரூபத்தை எடுத்துக் கொண்டு செயலாற்றும் பக்குவத்தை பெற்று கொள்ளும் வாய்ப்பு மனிதனுக்கு மட்டுமே உண்டு.

காலாலும், கையாலும், வாயாலும், பல்லாலும், அறிவாலும் (சூழ்ச்சியாலும்), ஆயுதம் கொண்டு தாக்க முடியும் தானே?

இப்படி இருக்கும் தருவாயிலும் மனிதன் மனிதனாக

---

வாழாமல் விலங்கினத் தன்மைகளோடு தானே இருக்கிறான்.

மனம் எங்கே இதமாக இருக்க முடியும். மனம் இதமாக இருப்பதென்றால், மனிதன் தோற்றத்தைப் பற்றியும், நோக்கத்தைப் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும் ?. அதை அழகாக விளக்க வருகிறார், பாமர மக்களின் பகுத்தறிவு படைத்த பரம ஞானி வேதாத்திரியார்.

மனம் அறிவாகிய மனிதனும் தெய்வமே"- மகரிஷி.

"அறிவின் நிலைகள் ஐந்துக்கும் அப்பால்
அறிவின் உயர்வாம் ஆறாம் நிலையில்
வந்து பிறந்து வாழ்வதே மனிதன்
சிந்தனை அறிவின் சிறப்பே மனிதன்."

விலங்கினம் வரை ஐயுறிவு. ஆறாவது அறிவு மனித இனத்தை தோற்றம்.

அந்த ஆறாம் அறிவின் உயர்நிலையில் மனதை செம்மைப்படுத்தி சிந்தித்து செயல் படுவதே மனிதனின் நிலையாக இருக்க வேண்டும்.

இந்த நிலையில் இருந்து தான் அடுத்த கட்டமாகிய தெய்வம் என்ற வட்டதிற்குள் அடி எடுத்து வைக்க முடியும்.

"The peak of Evolution is Human Mind" - Magarishi.
பரிணாமத்தின் உயர்ந்த நிலை மனித மனம் - மகரிஷி.



இந்த நிலையை அறிந்து செயல்பட்டால் "மனிதன்

என்பவன் தெய்வமாகலாம் தானே". மனித வடிவில் தெய்வமாக வாழலாமே?

"வாரி வாரி வழங்கும்போது வள்ளல் ஆகலாம்" யார் வள்ளல்?

யாரொருவர் 'தான், தனது' என்ற குறுகிய வட்டத்திற்குள் சிக்கிக் கொள்ளாமல் அனைத்தும் அனைவருக்கும் சொந்தம் உண்டு

எண்ணுகிறறோமோ அவரை வள்ளல் என்று கூறலாம் தானே!

"உலகம் என்ற மண்மீது அனைவரும் பிறந்தோம்
உயிர்காக்கும் காற்று ஒன்றே மூச்சு விடுவதற்கு
உலகெங்கும் ஒளி வீசும் சூரியனும் ஒன்றே
உள்ள கடல் ஒன்றே நீர் ஆவியாகிப் பொழிய
உலகில் உள்ளோர் எவரும் இதில் ஒன்றும் செய்ததில்லை"

என்றும்,

"உணவு விளைநிலம் அற்ற நாட்டில் வாழ்வோர்
உற்பத்திசெய் பொருளை வேற்று நாட்டார்
உணவு கொடுத்தும் பதிலாய்க் கொள்ளாவிட்டால்
உயிர் வாழ்வதெவ்விதம் உற்றாராவீர்!

என்று மகரிஷி கூறுகிறார்.

வள்ளல் குணம் என்பதை நமது கடமை அறமாக இருக்க வேண்டுமே என்றும் கூறுவதோடு மட்டுமல்லாமல் கடமைக்கு அழகாகவே விளக்கமும் கூறுகிறார் பாருங்கள்.

*"கடமை = கடன் + மை Duty = Due to the society" வள்ளல் குணம் என்பது* மனிதனுக்கே உரிய கடமையாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்திற்கு கடன் பட்டுத்தானே இருக்கிறோம். அந்த கடனை அடைப்பது மனிதனின் பொறுப்பு தானே என்றும் கேட்கிறார்.

அந்த கடனை அடைக்கும் ஒரு வழி மடையாக வள்ளல் குணம் கொண்டவராக இருப்பதும் மனிதனுக்கு அவசியமான ஒன்று தானே!

"வாழைப் போலத் தந்து தியாகி ஆகலாம்" வாழை மரத்தில் உள்ள அத்தனை உறுப்புகளும் மனிதனுக்கு பயன்படும்படி தன்னை அர்ப்பணித்துக் காட்டுவது மனிதனுக்கு வழி காட்டவே அன்றி வேறென்ன காரணமாக இருக்க முடியும்.

வாழைப் போல, மனிதனும் தன் உழைப்பையும், செல்வத்தையும், அறிவையும் பிறருக்கு கொடுத்து வாழ முடியும்

.

"உறுதியோடு மெழுகைப் போல ஒளியை வீசலாம்" மெழுகுவர்த்தியானது தன்னை அழித்து பிறருக்கு வெளிச்சத்தைத் தருவதாக இருக்கும் பட்சத்திலும், தன் உறுதி தன்மையில் இருந்து மாறுவதில்லை.

"ஐயோ இப்படி மனிதனுக்காக நாம் அழிந்து கொண்டு இருக்கிறோமே என்று எண்ணுவதில்லையே!

மனிதனுக்கு மெழுகுவர்த்தி உணர்த்தும் செய்தி என்னவென்றால், "பிறர்க்கு உதவியாக இருக்கும் நிலையில் நான் அழிந்து போகிறேன், ஆனால் மானிடா நீ அழிய மாட்டாய், பிறருடைய மனதில் வாழும் பக்குவமும், வாழ்த்துகளும் தானே உனக்கு பரிசாக கிடைக்கும்!

அதனால் உன் வாழ்வு வளர்ந்து செழிப்படையுமே தவிர உனக்கு நஷ்டம் ஏதுமில்லையே!, நீ உயிருடன் இருக்கும் வரையில் மட்டுமே உன்னால் உதவி செய்ய முடியும்.

எனவே காலம் தாழ்த்தாதே, துணிந்து களத்தில் இறங்கு, அதனால நீ வாழ்வாயேத் தவிர வீழ மாட்டாயப்பா!" என்றல்லவா உரைக்கிறது.

"ஊருக்கென்று வாழ்ந்த நெஞ்சம் சிலைகள் ஆகலாம்"

"யூகம், யுக்தி யோசனையோடு
வேகம் நுட்பம் விளைவதற்குரிய
அறிவின் நிலையே ஆறாம் நிலையம்
அவ்வித அறிவின் ஆட்சியே மனிதன்" - மகரிஷி.

மனிதனின் சிறப்பாகிய யூகம், யுக்தியின் துணை கொண்டு விளைவின் நுட்பத்தை அறிந்து செயல்பட்டு ஆறாம் அறிவின் சிறப்பை உணர்ந்த நிலையல்லவா சிறந்த மனிதன்.

தனக்கென வாழாது, ஊரின் நலனுக்காக வாழும் மனிதனுக்குத் தான் பலருடைய நெஞ்சங்களில் வாழக்கூடிய பாக்கியம் கிடைக்கும். அப்படிப்பட்ட சிறப்புடைய மனிதனுக்குத் தானே சிலை வைக்க முடியும்.

"உறவுக்கென்று விரிந்த உள்ளம் மலர்கள் ஆகலாம்"
உறவு என்றால் என்ன? எது உறவு?

உறவு கொண்டாடுவதற்கு அங்கே நட்பு தழைத்தோங்கி இருக்க வேண்டும் தானே!

எந்தவொரு உறவிலும் நட்புறவு இருந்தால் மட்டுமே அந்த உறவு நிலைத்த, நீடித்த உறவாக இருக்க முடியும். உறவு என்றால் நம்முடைய இரத்த சொந்தமோ, அல்லது சாதி, மதம்

சார்ந்த சொந்தமோ இல்லை.

உலகத்தில் இருக்கும் அத்தனை தோற்றப் பொருட்களோடும், அத்தனை ஜீவன்களோடும் காந்தம் (இறைநிலை) என்ற இறைசக்தியால் இணைந்துள்ளோம் என்பதையும் மறக்கவும், மறுக்கவும் முடியாது தானே!

அப்படிப்பட்ட அனைத்து உறவுகளுக்காகவும் நம் மனம் விரிவடைந்து செயல்படும். மலரும் மலர் போல அல்லவா மலர்கிறோம்.

ஒரு மலர் விரிந்து எப்படி தன் நறுமணத்தை நல்லவர், தீயவர் என்றோ சிறியவர் பெரியவர் என்றோ பாரபட்சம் பாராமல் மணம் வீசுகிறதோ, அதுபோல அனைத்து உறவுகளுக்காகவும் நாம் பரந்து விரிந்தால் நம்மிடம் இருக்கும் அன்பெனும் வாசனை அனைவருக்கும் பகிரப்படும் என்பதில் எள்ளவும் ஐயமில்லையே....!!!

"யாருக்கென்று அழுத போதும் தலைவன் ஆகலாம்!"

தலைவன் என்பவன் அனைத்து உயிர்களையும் ஒன்றாக சமமாக அன்பு பாராட்டும் உள்ளம் படைத்தவனாக இருக்கும்போது யாருக்கு துன்பம் வந்தாலும் உடனே செயல்படும் திறனுடைய மனிதனே தலைவன் எனப்படுவான். அப்படிப்பட்ட மனம் கொண்டவனே கடவுளுக்குச் சமமானவனாகிறான்.

"மனம் மனம் அது கோவில் ஆகலாம்"
"மனமது இயற்கையின் மாபெரும் நிதியலோ" – மகரிஷி

அப்படிப்பட்ட இயற்கையின் மாபெரும் நிதியாகிய மனதைக் கொண்ட மனிதனின் உள்ளன் தான் தெய்வமாகவும், அவனின் உடலே கோயிலாகவும் இருக்கும் தானே..!

இதைத் தான் திருமூலரும் "உள்ளமே பெருங்கோவில், ஊனுடம்பே ஆலயமாகும்" என்றும் எடுத்துரைக்கிறார்.

"மனம் இருந்தால் பறவைக் கூட்டில் மான்கள் வாழலாம்"

"மனம் உயர் வெளியினில் மருவித் தோய்ந்திட
மனம் விரிந்தறிவென்னும் மாபதம் எய்திடும்" -மகரிஷி.

மனம் இருந்தால் தானே மார்க்கம் உண்டு என்பதற்கேற்ப......!
பறவைக்கு தான் வேறு மான்கள் வேறு அல்ல "எல்லாம் இறைநிலையே" என்று கூறும் மகரிஷியின் வாக்கிக்கிற்கு இனங்க பறவைகளும் மான்களும் ஒரே கூட்டில் வாழமுடியும் தானே என்பதை அழகாகவும், எளிமையாகவும் எடுத்துக் காட்டிய விதம் அற்புதத்திலும் அற்புதமே...!!!

"வழி இருந்தால் கடுகுக்குள்ளே மலையைக் காணலாம்"

கடுகு சிறுத்தாலும் காரம் குறைவதில்லை என்பதும், உறவு கண்டு எள்ளாமை வேண்டும் என்பதும் நாம் அறிந்தது தானே!

மலையில் உள்ள மண்ணின் தன்மை என்னவென்றால் தன் மேல் விழுந்த எதையும் அது வளரவிடாமல் இருப்பதில்லை. "தன் மேல் விழுந்த விதையை பாரமென்று நினைத்ததா நிலம்"

அவ்வளவு வேகத்தையும், வீரியத்தையும் தன்னுள்ளே வைத்துக்கொண்டு அடக்கமாக இருந்து தன் கடமையை செயலாற்றுவது போல, கடுகுக்குள்ளே இருக்கும் வேகம், வெளிப்படும் போது தானே தெரியும்.

அப்படிப்பட்ட வேகம் நிறைந்த கடுகுக்குள்ளே கடலும் அடங்கும் தன்மையைக் காணுவதற்கு, மனதில் வழி இருந்தால் மட்டுமே சாத்தியம் என்று வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக நமக்கு வழிகாட்டுகிறார் கவிஞர்......!!!



# 16 மானிடர் ஆன்மா மரணமெய்தாது

**மரணம்** என்பது உயிரினங்களை வரையறுக்கும் உயிரியற் செயற்பாடுகள் நிரந்தரமாக நின்றுவிடுவதைக் குறிக்கும்.

நவீன அறிவியலின்படி இந் நிகழ்வு அவ்வுயிரினத்தின் முடிவு ஆகும்.

பல மதங்களும், அவை சார்ந்த மெய்யியலும்; உயிரும், உடலும் வெவ்வேறானவை என்றும் வாழும் உயிரினத்தின் உடலுக்குள் இருக்கும் உயிர் உடலைவிட்டு நீங்கும் போது **மரணம்** என்பது உயிரினங்களை வரையறுக்கும் உயிரியற் செயற்பாடுகள் நிரந்தரமாக நின்றுவிடுவதைக் குறிக்கும்.

மரணம் என்றால் என்ன? விடையாக வருகிறார் வேதாத்திரி மகரிசி.

வாழ்வு என்பது உடலும் உயிரும் சேர்ந்திருப்பது. ஆயின், மரணம் என்பது உடலை விட்டு உயிர் பிரிந்து போவது.

உயிர் அவ்விதம் பிரிந்து விடாமல் காக்க வேண்டுமாயின், அந்த உயிரினது நிலைக்களமான வித்துவை (விந்து அல்லது நாதம்) பத்திரமாக வைத்திருக்க வேண்டும்.

ஏனெனில் உயிரானது உடல் முழுவதும் பரவியியங்கினாலும், அங்கெல்லாம் அது மென்மையான அளவிலே தான் இருக்கும்.

ஆனால், வித்தில் - அளவிலும் சரி அழுத்தத்திலும் சரி - கூடுதலாக இருக்க முடியும்.

அவ்வாறு எந்த அளவுக்கு வித்தினது தரம் கூடுகிறதோ, அந்த அளவுக்கு உயிர் அங்கே செறிந்து, தேங்கி நிலை கொள்ளும். அந்த அளவிலே தான், நோயும் வராது. மரணமும் தள்ளிப் போகும்.

**உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதென்பது**

**வல்லவன் வகுத்ததடா கர்ணா**

**வருவதை எதிர்கொள்ளடா**

**தாய்க்கு நீ மகனில்லை**

**தம்பிக்கு அண்ணனில்லை**

**ஊர்பழி ஏற்றாயடா**

**நானும் உன் பழி கொண்டேனடா"**

**- கண்ணதாசன்**

உள்ளத்தில் இருப்பது நல்லது மட்டுமே. ஏனெனில் அது உள்ளிருப்பது. உள்ளிருக்கும் ஆத்மாவாக இருப்பது.

ஆத்மாவில் நிலை கொண்டிருக்கும் அன்பாக இருப்பது. அது வலிமையானது. எதனையும் ஏற்று துணிவுடன் செயல்படுவது.

அப்படிப்பட்ட நல்ல உள்ளம் கொண்ட கர்ணனின் ஆன்மா என்ன பாடுபடுகிறது என்பதை மனம் கசிந்துருகும் வகையில் எடுத்துக் கூறுகிறார் கவியரசர்.

ஆன்மாவாகிய கர்ணன் உடலால் தான் கர்ணனே தவிர ஆன்மாவால் இறைவன்.

அப்படி இறைவனாக இருக்கும்போது எப்படி தாய்க்கு மகனாகவும், தம்பிக்கு அண்ணனாகவும் இருக்க முடியும் என்றும், ஊர் பழி ஏற்று அந்த இறைவனும் அந்த பழியை கொண்டான் என்பதைத்தான் அருமையாக விவரிக்கிறார் கவிஞர்.

ஆத்மா வாழ்வதற்கு உடல் அவசியமாகிகறது. மரணத்திற்கு பின் ஆத்மாவே மிஞ்சுகிறது என்கிறது வேதம்.

குடத்திற்குள் இருக்கும் காற்றுக்கு வடிவம் இருக்கிறது. குடம் உடைந்த பின் குடத்திற்கு வெளியில் உள்ள காற்றில் கலக்கும் பொழுது அது தன் வடிவத்தை இழந்து எங்கும் நிறைந்த தன்மையை அடைகிறது.

அது போன்றே ஆன்மாவும் இறைவெளியில் மனித வடிவத்தை விட்டு தன் தூய்மைக்கு ஏற்ப நிற்கிறது.

இறக்கும் முன் மரண இரகசியத்தை அறியாத ஆன்மா மீண்டும் பிறவி செய்கிறது என்கிறது வேதம்.

## வேதாத்ரியின் ஆன்ம விளக்கம்;

உயிர் என்பது பரமாணு. அந்த பரமாணு உடல் முழுதும் சுற்றி சுற்றி உணர்வாய் இயங்கும்.

உயிர் மிதமாக இயங்க வெப்பம், நீர், காற்று அளவாய் வேண்டும். இந்த மூன்றில் ஒன்று முறை மாறினால் உடலை விட்டு பிரிந்து விண்வெளியில் சேரும்.

உயிர் என்ற ஆற்றலுக்கு மரணமில்லை என்று அந்த உயிரானது உள்ளிருப்பாக கொண்டிருப்பது உள்ளம் ஆகும்.

உயிருக்கு அழிவு இல்லை என்னும்போது உள்ளத்திற்கு மட்டும் அழிவு உண்டாகும்!

உடலாக கட்டி வந்த பின் தான் அதை வேறுபடுத்தி பார்க்க முடியும். உயிராக இருக்கும்போது ஆண் என்றோ, பெண் என்றோ, நல்லது என்றோ, தீயது என்றோ வேறுபாடுகள் இல்லை.

அப்படி வேறுபாடுகளே இல்லாதபோது எப்படி மகனாகவும், சகோதரனாகவும் இருக்க முடியும் என்றும், பழி சுமத்தவோ, அல்லது ஏற்கவோ முடியும் என்றும் கேட்கிறார்.

உயிராக இருப்பது பிரம்மமே என்னும் தெளிவு வரும் வரை பேதங்களும், வாதங்களும் தொடரும் என்றும், உணர்ந்த பின் இவைகள் எதுவும் எழாது என்கிறார்.

**“மன்னவர் பணியேற்கும்**

**கண்ணனும் பணி செய்ய**

**உன்னடி பணிவானடா கர்ணா**

**மன்னித்து அருள்வாயடா கர்ணா**

**மன்னித்து அருள்வாயடா”**

கர்ணனின் உன்னத தனமையைக் கண்டு நாட்டை ஆளும் மன்னனும் பணி செய்வான், உலகை ஆளும் கண்ணனும் பணி செய்வான்.

அப்படி இரு பெரும் அரசர்களும் கர்ணனனுக்கு பணி செய்யும்போது தானும் பணி செய்வதைவிட வேறு என்ன பணி இருக்கிறது.




இப்படிப்பட்ட உன்னத தன்மையை இதுவரை புரிந்து கொள்ளமால் இருந்ததற்கு மன்னிப்பும் கோருவதாக தம்முடைய தன்மையை மிகவும் அழகாக பாடல் வரிகளில் அமைத்து விட்டார் கவிஞர்.

**“கடமை உணர்ந்து அதை செயலில் காட்டுபவன் தியாகியாம்**

**கடவுளே மனிதனான கருத்தறிந்தோன் ஞானியாம்”**

- வேதாத்திரி மகரிசி

ஒருவனுடைய பணி என்பது அவரவர் கடமை என்றே குறிப்பிடுகிறார். கடமைக்கும் மகரிஷி கூறும் விளக்கம் மிக மிக அற்புதமானது.

**கடன் + மை = கடமை.** நாம் அனைவரும் சமுதாயத்திற்கும், அந்த சமுதாயத்தின் அங்கமாகிய மனித குலத்திருக்கும் கடன் பட்டு உள்ளோம்.

எப்படி என்றால் ‘ஒரு பிடி உணவில் உலக ஒற்றுமையைக் கண்டேன்’ என்று ஒரே வரியில் நம் அறிவுப் பட்டையை தீட்டுகிறார்.

யார் எது கேட்டாலும் இல்லை என்று கூறாமல் இருந்த வள்ளல் குணம் படைத்த கர்ணனை எல்லோரும் கர்ணனை போற்றிப்பாடி தம் கடமை உணர்வை வெளிபடுத்தியே ஆவார்கள்.

அரசனாக இருந்தாலும் சரி, ஆண்டியாக இருந்தாலும் சரி, ஈன்றெடுத்த தாயாக இருந்தாலும் சரி, சக உதிரம் கொண்ட தனையனாக இருந்தாலும் சரி. இப்படி அனைவரும் உனக்கு கடமை ஏற்று செய்யும்போது அந்த கடமையில் அனைவருக்கும் பங்குண்டு என்பது போலத்தானே இருக்கிறது.

**“செஞ்சோற்றுக் கடன் தீர்க்க**

**சேராத இடம் சேர்ந்து**

**வஞ்சத்தில் வீழுந்தாயடா கர்ணா**

**வஞ்சகன் கண்ணனடா கர்ணா**

**வஞ்சகன் கண்ணனடா”**



கர்ணன் மிக்க நல்ல குணம் கொண்டபோதிலும், வலிமை உடையவன் ஆனபோதிலும், வள்ளலாக இருந்தபோதும் அவனின் நிலை செஞ்சோற்றுக் கடன் தீர்பதற்காக தீயவர்களின் கடமைக்கு பாத்திரமாகி விட்டான்.

கடமை உணர்வின் கண்ணியத்தை போற்றிக் காப்பதில் தன் தாயென்றோ, சகோதரர் என்றோ கொள்ளாமல் கடமையை கர்மயோகமாக கொண்டான் கர்ணன்.

அப்படி சூழ்ச்சிக்காரர்கள் என்று தெரிந்த போதும் கடமை உணர்வு மட்டுமே மேலோங்கியே நிலையில் தம் கடமையை செய்தே உலகிற்கு கடமையறத்தை கற்றுக்கொடுத்துவிட்டான் கர்ணன்.

இந்த சூழ்ச்சி அனைத்தும் அறிந்த கண்ணனும் கடமை உணர்வின் வெளிப்பாடாக கர்ணன் விளங்க வேண்டும் என்பதில் நோக்கமாக இருந்ததால் கண்ணனையும் சூழ்ச்சிக் காரனாகவே தெரிகிறான்.

மேலோட்டமாக பார்க்கும் மக்களுக்கு என்றும், கண்ணனும் வஞ்சகன் ஆகிவிட்டான் என்று மொழிகிறார் கவிஞர்.

**"கடவுளை உணர்ந்தோர் கடவுளை நாடுவார்**

**கடவுளை அறிந்தோர் கடமையில் வாழுவார்"**

- வேதாத்திரி மகரிசி

கடவுளாக இருப்பதும், கடமையாக இருப்பதும் கடவுள் அன்றி வேறில்லை.

கடமையைச் செய்யும்போது கருத்தோடு உற்றுப்பார்த்தால் கடவுளே கடமையாய் உணரும் நிலை ஏற்படும்.

அப்படி கடமையை கடவுளாகவும், கடவுளை கடமையாகவும் கொண்ட மானுடனுக்கு நல்லவர் என்ன? தீயவர் என்ன?. எல்லாம் ஒன்று தானே.

இந்த நிலையில் தானே கர்ணனும் செயாலாற்றி இருக்கிறான். இதில் சூழ்ச்சி எங்கே? பகைமை எங்கே? வஞ்சம் எங்கே? வேற்றுமை எங்கே?

பிரம்மமே அனைத்துமாக இருக்கும்போது கடமையும் பிரம்மமே, சூழ்ச்சியும் பிரமமே, கர்ணனும் பிரமமே, கண்ணனும் பிரமமே, நானும் பிரமமே, இதைப் படிக்கும் நீங்களும் பிரமமே தானே!

ஆக, கர்ணன் என்ற உடலுக்கு அழிவு வந்த போதும், அவன் உயிருக்கு அழிவு இல்லாததால் தானே இத்தனை வருடங்கள்

ஆகியும் நம்மிடையே இன்னும் வள்ளலாகவே வாழ்ந்து கொண்டு இருக்கிறான் கர்ணன்.

இன்னும் வரவிருக்கும் கோடானுகோடி சந்ததியினரும் கர்ணனின் புகழ் பாடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை தானே!

மரணத்தை நாம் நேசிக்க வேண்டும். இராமகிருஷ்ணர், விவேகானந்தர், கண்ணதாசன், மகரிசி போன்றவர்கள் தங்கள் மரணத்தை நேசித்தார்கள். தங்கள் மரணத்தை அறிந்திருந்தார்கள்.

## கண்ணதாசனின் ஆசையும் மறைவும்:

கண்ணதாசன் பொது நிகழ்ச்சிகள், பொதுக்கூட்டங்களில் பேசி வந்தார். அப்போதெல்லாம் அவர் தனது இறுதி நாட்கள் பற்றியும், மரணத்தைப் பற்றியும் குறிப்பிடலானார்.

தன்னுடைய மரணம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை அவரே உணரலானார். 'மரணத்தை ரகசியமாக இறைவன் வைத்துள்ளதால்தான் மனிதன் ஓரளவுக்காவது மனிதாபிமானத்துடன் நடக்கிறான்' என்று ஒரு நிகழ்ச்சியில் குறிப்பிட்டிருக்கிறார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில், 'காமராஜர் போல, மறைந்த பட அதிபர் சின்னஅண்ணாமலை போல மரணம் திடீர் என்று வரவேண்டும்.

என் கண்ணனிடம் எனது கடைசி ஆசையாக இதைத்தான் கேட்டு வருகிறேன்' என்று கூறிவந்த கவிஞர் வெள்ளித்திரையில் ஒரு முடிசூடா மன்னராகத் திகழ்ந்தவர்.

யாருமே நினைக்காத நேரத்தில் உடல்நிலை காரணமாக 1981, ஜூலை 24 இல் சிகாகோ நகர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு, அக்டோபர் 17 சனிக்கிழமை இந்தியநேரப்படி 10.45 கண்ணதாசன் மறைந்தார்.

மானுடர் ஆன்மா மரணம் எய்தாது. ஆன்மாவை புனிதப்படுத்துவோம். அதன் களங்கங்களை அகற்றுவோம்.

அப்படிப்பட்ட புனித ஆன்மைவைக் கொண்டு நாமும் நமது கடமையில் தேர்ந்து வாழ்வாங்கு வாழ முனைவோம்!



# 17 என்னைத் தோண்டி ஞானம் கண்டேன்

பட்டிணத்தாரைப் போன்றும் அருணகிரிநாதர் போன்றும் பத்திரகிரியார் போன்றும் புலம்புகிறார் கண்ணதாசனும்.

கெட்டபின்பு ஞானம் என்பது அந்த காலம். இன்று கெட்டுப் போவதற்கு முன் ஞானம் வரும் வழியை வகுத்து தந்துள்ளார் வேதாத்திரி மகரிசி.

ஞானம் என்றால் என்ன ?

ஞானம் என்றால் மனஇயக்க இயல்பறிந்து
நான் என்ற இயற்கைத் தத்துவம்உணர்ந்து
மோனமென்ற ஒன்றாயும், மோகமாதி
மூவிரண்டு குணங்களாய்ப் பரிணாமத்தால்
ஆனா பொருளனைத்திலும் தான் அறிந்து நிற்கும்
அளவாயும் அமையும் அறிவெல்லை கண்டு

மானம், மரியாதை, உடல் ஒழுக்கம் காத்து,
மனிதரிடை மனிதராய் வாழ்தல் ஆகும். – வேதாத்திரி மகரிஷி

**“போனால் போகட்டும் போடா; இந்த**
**பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா?**
**போனால் போகட்டும் போடா”**

எது போகும்? எது இடையில் வந்ததோ அது தானே போக முடியும். எது இடையில் வந்தது?

தந்தை கொடுத்த உயிர், தாய் கொடுத்த உடல், அவர்கள் நமக்கு இட்ட பெயர், அதன பின் பெற்ற புகழ், அதை தக்க வைக்க வேண்டி எழுந்த அதிகாரம், அதன் மேல் உள்ள ஈர்ப்பால் வந்த பற்று இவைகள் யாவும் ஒரு நாள் நம்மை விட்டு போகும்.

இதை தடுக்கவோ, மாற்றியமைகவோ முடியாது தானே! ஏனெனில் எதுவும் பூமியில் நிலைத்திருப்பதில்லை. இதை உணர்ந்து கொண்டால் போவதைப் பற்றி கவலை எழாது.

இவைகள் எல்லாம் அடங்கியது தான் வாழ்க்கை என்ற மாயை. அந்த மாயையில் இருப்பது வருத்தத்தைத் தவிர ஒன்றும் மிஞ்சாது, என்று உணர்ந்த கவிஞர் அழகாய் பாடியுள்ளார்.

## வேதாத்ரியின் விவேக சிந்தனையில்;

**“வந்தததுதான் போகுமே அல்லாது**

**வருமுன்னே இருந்த ஒன்று போவதுண்டோ?”**

இந்த உண்மை எண்ணி எண்ணி உணர்ந்து கொண்டால் எவருக்கும் எப்போதும் நஷ்டமேது? ”வரும்முன்னே இருந்தது எது?

அண்டத்தில் அணுவாக இருந்தது, பிண்டத்தில் வந்த பிறகு அதுவே உயிரானது. மனிதனால் அணுவை அழிக்க முடியுமா? இல்லை உருவாக்கத்தான் முடியுமா? முடியாதே!

பிறகு என் உயிர் என்று சொல்வதற்கு ஏது உரிமை? அப்படி பிண்டத்தில் வந்த அணு, பிண்டத்தை விட்டு பிரிந்த பிறகு மீண்டும் அணுவாகத் தானே ஆக முடியும்.

நிலையாய் இருப்பது அணுவென்ற இறைசக்தி தான். அதை உணர்ந்து கொண்டால் வருத்தம் தேவை இல்லை என்று விளக்கமளிக்கிறார் வேதாத்ரியார்.

**"வந்தது தெரியும் போவது எங்கே**
**வாசல் நமக்கே தெரியாது!**
**வந்தவரெல்லாம் தங்கிவிட்டால் இந்த**
**மண்ணில் நமக்கே இடமேது?"**

தாயின் வயிற்றிலிருந்து பிறந்த பிறகு தான் நாம் உலகிற்குள் வாசம் செய்ய வந்து விட்டோம் என்பது உலகோர் கருத்து. அதனால் வந்தது தெரியும் என்கிறார்கள்.

போவது எங்கே என்று தெரிந்து விட்டால் வாழ்வில் சுவாரசியம் இருக்காது என்பதால் தான் போகும் இடத்தை மறைத்து வைத்து வாழ்க்கை என்னும் விளையாட்டை இயற்கை புதிராகவே வைத்திருக்கிறது போலும்.

வந்தவர்க்கெல்லாம் போவதற்கு விருப்பம் இல்லை என்றாலும் போவதே நீதி என்ற அமைப்பை வைத்திருக்கிறது.

இது எதனால் என்றால் இன்னும் பிறப்பெடுக்க உள்ள உயிர்களுக்கு இடமளிக்க வேண்டுமாதலால். ஆக, வாழும் போது வாழவும், போகும் போது போகவும் நம்மை தயார் படுத்த வேண்டுமாய் கூறுகிறார் கவியரசர்.

**மகரிஷியின் கண்ணோட்டத்தில்;**

---

**"நான் எனும் எழுச்சியை நாடி ஆராய்ந்திட**

**நான் முதலில் மனமாக பிடிபடும்**

**நான் மனத்தின் மூலம் நாட அங்குயிராகி**

**நான் உயிர் மூலத்தில் நற்சிவமாய் விடும்"**

நாம் எங்கிருந்து வந்தோம் என்று ஆராய்ந்து பார்க்கும் போது சிவம் என்னும் சுத்தவெளியில் இருந்து என்ற பதில் தான் சரியான பதிலாக இருக்கிறது.

அப்படி சிவமாய் இருந்தது சீவனாய் ஆன பின், மீண்டும் சிவனாக அக வேண்டும் என்பதே இறைநீதி. வந்த வாசல் சிவம் என்றால், போகும் வாசலும் சிவத்தின் வாசல் அன்றி வேறு எங்கு போக முடியும்.

போவதற்கும் வேறு இடமும் இல்லை என்பதே நிதர்த்சனமான உண்மையன்றோ. நாம் நம்மைப் பற்றி ஆராயும்போது முதலில் மனமாக செயல்படும், அதுவே பின் உயிரில் ஒடுங்கும் போது சிவத்தில் நிலைக்கும்.

அதுவே மூலமும், முடிவும் ஆகும். வந்தது என்றால் போகத்தான் வேண்டும். இருப்பது என்றால் இருந்து தானே ஆக வேண்டும் என்று ஆராய்ந்து தெளிய வைக்கிறார் மகான். .

**"வாழ்க்கை என்பது வியாபாரம்; வரும்**
**ஜனனம் என்பது வரவாகும்; அதில்**
**மரணம் என்பது செலவாகும்**
**போனால் போகட்டும் போடா."**

வாழ்வதற்காக வந்த நாம் வாழ்க்கையை வாழ்வதற்கு பதில் அதை வியாபார சந்தையாக மாற்றி லாப நஷ்ட கணக்கை சரி பார்க்கும் அவல நிலைக்கு தள்ளப்பட்டு விட்டோம்.

வியாபாரம் என்றால் கொடுக்கல் வாங்கல் தான். எதைக் கொடுப்பது? எதை வாங்குவது?

எது பொருள் நிலையில் உள்ளதோ அதைத்தான் கொடுக்கவும் வாங்கவும் முடியுமே தவிர பொருள் தன்மையற்ற அன்பை எப்படி கொடுக்க முடியும், இல்லை வாங்க முடியும்?

பகிர்தலே அன்பு என்றாகும்போது அது வியாபாரம் ஆகாதே. இதை ஏனோ மனிதன் மறந்து விட்டான்!

அடே! மனிதா! ஜெனனம் என்பது வரவு என்றால் மரணம் என்பது செலவு என்பதைக் ஏற்றுக்கொண்டு தானே ஆக வேண்டும்.

அதை மட்டும் ஏன் உன் கணக்கில் வாரா கணக்காக்கி விட்டாய்? என்று ஆச்சிரியப் படுகிறார் கவியின் நாயகன்.

## வேதாத்திரியின் கணக்குப் பட்டியலில்;

வினைப்பயனால் வந்த நாம், வினையை முடிப்பதே நமது கடமை என்று தெரியாமல், இன்னும் வினைகளைக் பெருக்கிக்கொண்டு தானே இருக்கிறோம்.

நாம் பிறவி எடுத்து வந்ததே கடனை அடைப்பதற்குத்தான். கடனையும், அடைக்காமல், மேலும் கடனை பெருக்கி அடுத்து நம் சந்ததியினருக்கு கடனையே பரிசாக வழங்கும் வியாபாரமும் தேவை தானா? என்று சிந்திக்க வைக்கிறார்.

**"பிறந்து விட்டோம், வாழ்கின்றோம், அனுபவித்தோம்;**

**பெற்றபலன் இன்பதுன்பம் இரெண்டே யாகும்.**

**இறந்துவிடப் போகின்றோம் என்றோ ஒருநாள்.**

**இதற்குள்ளே அமைதிபெற, உலக வாழ்வைத்**

**துறந்துவிட முடியாது! தொல்லை நீங்கிச்**

**சுகமாக மனிதஇனம் வாழ்வதற் கேற்ப,**

**சிறந்தபடி சூழ்நிலைகள் அமைக்க வேண்டும்,**

**சிந்தனையில் உயர்விலுள்ளோர் கடமை ஈது"**

என்று கடமையை கர்மயோக நெறியாக விளக்குகிறார் மகரிஷி.

**"இரவல் தந்தவன் கேட்கின்றான் ; அதை**
**இல்லை என்றால் அவன் விடுவானா?**
**உறவைச் சொல்லி அழுவதனாலே**
**உயிரை மீண்டும் தருவானா?"**

உயிரை கடன் கொடுத்து, உடலை வாடகை வீடாக்கி கடன் கொடுத்த இறைவன் கடனைத் திருப்பிக் கேட்கும் போது உறவுகளைக் காரணம் காட்டி தவணை கேட்பது சரியோ!

அந்த உறவுகளோடு வாழ்ந்த காலத்தில் இணக்கமாக வாழ முடியாத நிலை இருந்தபோது, மரணத்தின் தருவாயில் மட்டும் உறவுகளின் பிணைப்பு தேவைப் படுகிறதோ!

அப்படி உறவைச் சொல்லி அழுதால் மட்டும் மீண்டும் தருவானா? மாட்டானே! ஏன் என்றால் அவனுக்கு தெரியும், உறவுகளால் நிறைவையோ, அமைதியையோ அளிக்க முடியாது என்பது.

அதனால் இன்னும் காலம் தாழ்த்தி உன்னை நீயே ஏமாற்றிக்கொள்ள வேண்டாம் என்று இறைவன் கூறுவதாக கவிஞர் கூறுகிறார்.

## <u>மகரிஷியின் கருத்தாய்வில்;</u>

இறைவன் கடனாக கொடுத்த உயிரை நாம் அவன் கடனை அடைப்பது தான் நம் கடமை யன்றோ. கடமை என்பதற்கு விளக்கம் கடன் + மை. (Due to the society = Duty) என்று அழகாக விளக்குகிறார்.

நம் உயிரும் கடன், உடலும் கடன், உடலை வளர்க்க உதவிய அனைத்தும் கடன், இப்படி கடன் மட்டுமே நமது வாழ்க்கையான போது கடன் கொடுத்தவன் கேட்டால் மட்டும் நமக்கு கடனை அடைக்க மனம் வருவதில்லை.

கடமையை நன்கு உணர்ந்தால் கடமை கடனாக இருக்கும் நிலை மாறி கர்மயோகமாக மாறுமப்பா என்று கூறுகிறார்.

**“கூக்குரலாலே கிடைக்காது; இது**
**கோர்ட்டுக்கு போனால் ஜெயிக்காது; அந்த**
**கோட்டையில் நுழைந்தால் திரும்பாது**
**போனால் போகட்டும் போடா.”**

என்னதான் கூக்குரலிட்டாலும் வாங்கி வந்த கடனை கொடுத்துத் தான் ஆக வேண்டும். அதை மாற்றியமைக்க எந்த நீதிமன்றத்திலும் சட்டம் இல்லை.

மரணம் என்ற கோட்டைக்குள் நுழைந்தால் மீண்டும் உயிர் திரும்ப முடியாது. ஏனெனில் நம்முடைய கடன் தீர்ந்துவிட்ட நிலையில் எது பிறப்பு?

அதனால் உயிர் போவதைப் பொறுத்து கவலை பட வேண்டாம் ‘போனால் போகட்டும் போடா’ என்று கூக்குரலிடுகிறார் கவிப்பேரரசர்.

**மகரிஷியின் மனக் கோட்டையில்;**

**“துவக்கமுண்டு முடிவுண்டு பரு உடற்கு**

**துவகுண்டு முடிவில்லை உயிர் ஆற்றற்கு**

**துவக்கமில்லை முடிவில்லை பரநிலைக்கு**

**துவக்கம் இயக்கம் முடிவு உண்மை தேர்வீர்”**

பரு உடலுக்கு துவக்கமும் உண்டு, முடிவும் உண்டு. உயிருக்கு துவக்கம் உண்டு, ஆனால் முடிவில்லை. பரநிலை என்ற இறைசக்திக்கு துவக்கமும் இல்லை, முடிவும் இல்லை.

ஆக, நாம் என்பது உடலா? உயிரா? என்ற தெளிவு கண்டுணர்ந்தால் கவலைப்பட அவசியம் இல்லை தானே!.





உயிராக இருக்கும் பரநிலையே தான் நானாக இருக்கிறேன் என்று தெளிந்து எதைப்பற்றியும் கவலை கொள்ளாமல், வாழும்போது வாழ்வோம் போகும்போது போவோம் நிறைவாக

.

# 18. ஆசையே அலைபோலே

ஆசை என்பது ஒரு எண்ணம். ஆசை என்ற எண்ணத்தை விருப்பம் - அவா-பற்று-இச்சை-வேட்கை-காமம்-காமியம-வேண்டுதல் எனப் பலவாறாக அழைக்கிறார்கள்.

ஆசை அளவோடு இருக்கலாம். பேராசைத்தான் கூடாது. பேராசைக்கு உதாரணம் துரியோதனனும், இராவணனும்.

"ஆசையே அலை போலே,

நாமெல்லாம் அதன் மேலே

ஓடம் போலே ஆடிடுவோமே வாழ்நாளிலே"

உலக வாழ்கையில் பொருட்களோடும், மக்களோடும், தொடர்பு கொள்ள வேண்டுமென்ற அழுத்தமான எண்ணமே தான் ஆசை என்றும் சொல்லலாம்.

அந்த ஆசையை ஒரு நிலையில் கொள்ளாமல் அலை போல ஆர்பரித்துக் கொண்டு இருக்கும் நிலையை தான் அலையோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளார் கவிஞர்.

நீரின் அடர்த்தி குறைந்திருக்கும் இடத்ததில் காற்றின் வேகம் நீரைத் தாக்கும்போது நீரானது அதற்கேற்றவாறு எழுச்சி பெறுவதே அலை.

அதேப்போல மனித வாழ்க்கை என்ற கடலில் ஆசைகள் என்ற காற்று அடிக்கும்போது ஆசையே அலைகளாக எழுச்சி பெறுவது இயல்பு தானே!

ஆழ்கடலில் அலைகள் இருப்பதில்லை, நடுக்கடலில் அலைகள் பிறப்பதில்லை.

அதுபோல நாமும் நம் மேல் மனத்தைக் கடந்து ஆழ்மனதில் நிலை கொண்டால் ஆர்பரிக்கும் அலைக்கு ஏது பிறப்பிடம்?

நடுக்கடலில் நீரின் அடர்த்தி அதிகமாக இருப்பதால் காற்றின் வேகம் நடுக்கடலின் நீரை பாதிப்பதில்லையே!

அலையில் சிக்கி அவதிப் படாமல் ஆழ்நிலையில் நிலை கொள்ள வேதாத்ரியாரின் விளக்கத்தில்குள் நுழைவோம்.

“இச்சை எழும்போதே காரணம் கண்டிடு

இச்சை முடித்திட சூழ்நிலை பார்த்திடு,

இச்சை முடிந்தால் எழும் விளைவை யூகி

இச்சை முறையாய் இயங்கும் அமைதியில்”

ஒரு ஆசை மனதில் தொடரும் போதே இது ஏன்?, அவசியாமா? என்று ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று விளக்கம் கூறுகிறார் மகரிஷியார்.

அப்படி அவசியம்தான் என்று கண்டறிந்த பின் அந்த ஆசையை நிறைவு செய்ய உடல், மன, பொருளாதார வசதி உள்ளதா? அனைத்திற்கும் ஆம் என்ற பதில் வந்தால் மட்டுமே தொடர வேண்டும்.

பிறகு தான் அந்த ஆசைக்கு அடுத்த கட்டமாகிய விளைவைக் கணிக்க சொல்கிறார் நன்மையா? தீமையா? என்று. நன்மை என்றால் முயற்சி செய்ய வேண்டுமென்றும், தீமை என்றால் கைவிட வேண்டும் என்றும் விளக்குகிறார்.

இப்படி ஆசையை ஒழிக்காமல் சீரமைத்தால் ஆசையே நம் வாழ்க்கைக்கு சிறப்புறும், அமைதியுறும். ஆழ்கடல் போல என்றும் உயரிய கருத்தை எளிய முறையில் விளக்கிக் காட்டுவதில் இருவரும் வல்லவர்களே!

அந்த அலைகளின் மேல் நாம் பயணம் செய்யும் போது வாழ்க்கை என்னும் படகு ஓடம் போல ஆட்டம் போடும்.

அலை இல்லாமல் நிலைகொண்ட வாழ்க்கையாக இருந்தால் வாழ்க்கை பயணத்தில் சுமை இல்லை, சோகம் இல்லை, சோர்வும் இல்லை மிஞ்சுவது சுகம் மட்டுமே என்று அருமையாக எடுத்துக் கூறுகிறார்கள் இருவரும்.

"பருவம் என்ற காற்றிலே

பறக்கும் காதல் தேரிலே

ஆணும் பெண்ணும் மகிழ்வார்

சுகம் பெறுவார் அதிசயம் காண்பார்

நாளைய உலகின் பாதையை இன்றே யார் காணுவார்?"

பருவம் என்பது எப்போதும் அலை வீசும் தென்றல் போன்றது. உடலுக்கு பருவத்தின் காலத்தைக் கணிக்க முடியும்.

ஆனால் உள்ளத்தில் எழும் பருவத்திற்கு வரம்புகள் இல்லை தானே! உடலுக்கு பருவ நிலை மாற்றம் வந்ததால் உள்ளம் பருவப் பட்டதா?

இல்லை உள்ளத்தில் பருவம் வந்ததால் உடல் தயாரானதா? என்ற வினாவிற்கு அவரவர் மனதில் எழும் எண்ணத்தால் மட்டுமே நிர்ணயிக்க முடியும்.

மகரிஷியின் கூற்றுப்படி இயற்கையின் வேகமே, இச்சையின் வேகமாகியது என்பதை காயகல்பம் என்னும் அற்புத கலையை அழகாய் விளக்கியுள்ளார்.

உருவமில்லாத உயிருக்கு உடலெடுத்து வந்து வளர்வது இயற்கையின் வேகத்தால் தான் என்றும், அப்படி வளரும்போது மனதாலும், உடலாலும் ஏற்படும் உணர்வுகளை அடக்குதல் கூடாது.

அதை சமன் படுத்த வேண்டுமென்றும் ஐந்தில் அளவுமுறை என்ற பட்டியலில் அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.

உடலால் பருவம் அடைந்தபோது காணும் சுகத்தை அதிசயமாக உணரும் உள்ளம், நிறைவு பெற்றபின் பருவத்தையும் தாண்டி, பக்குவப்பட்டு நாளைய உலகின் நிலையை உணர்ந்து செயல்படும் அளவிற்கு நம்மை இட்டு செல்லும் என்பதையே தான் மகரிஷியும், கவியரசரும் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள்.

““வாழ்கை எல்லாம் தீர்ந்த்ததே

வடிவம் மட்டும் வாழ்வதேன்

இளமை மீண்டும் வருமா? மணம் பெறுமா?

முதுமையே சுகமா!

காலம் போகும் பாதையை இங்கே யார் காணுவார்?”

வாழ்க்கை எப்படி தீரும்? தீராதே! நினைவுகள் அடங்கியப் பெட்டகம் தானே வாழ்க்கை!

உடல் வடிவம் மாறலாம் ஆனால் உள்ளத்திற்கோ வடிவம் இல்லையே! இருந்தால் தானே மாற முடியும்.

உள்ளதிலிருக்கும், அதில் உள்ள நினைவுகளுக்கும் வடிவம் இல்லாததால் மாறுவதும் இல்லை, மறைவதும் இல்லையே!

அதனால் முதுமையிலும் இளமைக் கனவுகளைக் காணும்போது முதுமை என்ற பள்ளத்தாக்கில் விழாமல் இளமை என்னும் மலை முகட்டில் நிற்க முடியுமே!

இளமையை தக்க வைத்துக் கொள்ளவும், முதுமையையும், மரணத்தையும் தள்ளிப்போட மனிதனால் முடியும் என்று அறுதியிட்டு கூறிகிறார் மகரிஷி.

"காயகற்ப யோகமென்னும் உயர் சஞ்சீவி

கருத்துடனே செய்து வந்தால் வித்து கட்டும்

தூயமுறை நரம்பூக்கம், ஓஜஸ் மூச்சு

தொடர்ந்திரண்டும் குரு வழியே செய்ய செய்ய

போயபிழைகள் போகும்! பிணிகள் நீங்கும்

புத்துணர்வும் இறையருளும் ஊற்றெடுக்கும்

மரணமில்லா பெருவாழ்வு சக்தியாகும்"

என்று தெள்ளத்தெளிவாக விளக்குகிறார். இச்சா சக்தியை கிரியா சக்தியாக மாற்றியமைக்கும் பேருண்மையை பாமரரும்

விளங்கும்படி பாகுபாடில்லாமல் பக்குவமாய் தன கவியில் மொழிந்துள்ளாரே!

இதை முயற்சி செய்து பயிற்சி கொண்டால் காலம் என்னும் கண்ணாடியில் நமது பிம்பம் இளமையாக பிரதிபலிக்கும் என்பதில் ஐயமில்லை தானே!

“சூறைக்காற்று மோதினால்

தோணி ஓட்டம் மேவுமோ!

வாழ்வில் துன்பம் வரவு சுகம் செலவு இருப்பது களவு

காலம் வகுத்த கணக்கை இங்கே யார் காணுவார்?”

இதமாக வீசும் தென்றல் காற்று உடலுக்கும், உள்ளத்திற்கும் இனிமை நல்கும். அதுவே வேகம் கொண்டு சூராவளியானால் உடல் என்னும் தோணி ஆட்டம் போடத்தானே செய்யும்!

அந்த ஆட்டத்தின் விளைவாக வரும் சுகமோ துன்பமாகவே இருக்கும். அதனால் அது களவு போல தோன்றும்.

கனவாக வாழ்வதைவிட நினைவாக வாழ வேண்டும் என்று நம்மேல் அக்கறை கொண்ட கவிஞரின் ஆசைக்கு நாம் தென்றலாக வாழ்வதே சிறப்பான வாழ்க்கை என்ற திண்ணமாக எண்ணம் கொண்டு செயல்படுவோமா!

இதனையே மகரிஷியின் கண்னோட்டத்தில் ஆராய்ந்தால்

“மாயமெனும் காந்தம் உயிர் வித்துக்குள்

மறைந்துள்ள இரகசியங்கள் விளங்கி வாழ்ந்தால்

தீய வினைகள் ஒழிய உலகுக்கென்றும்

தெளிவான அருள் ஒளியாய் நிலைக்கும் ஆன்மா”

காந்தமென்ற சக்தியே உயிராகவும் அந்த உயிருக்கு மூலமாகவும் வித்து சக்தியில் மறைந்துள்ள இரகசியங்களை கற்றுணர்ந்து அதன் வழியில் வாழ்ந்தால், தீய வினைகள் ஒழிந்து அருள் ஒளி கிட்டும்.

இதனால் ஆன்மா என்றும் அமைதியில் நிலைபெறும் என்று திட்டவட்டமாக எடுத்துக்கூறிய விதமே அற்புதத்திலும் அற்புதமாகும்.

இப்படி வாழும்போது காலமும், நேரமும் நம் கணக்கை வகுக்க முடியாது. நம் விதியை மதி கொண்டு நம்மால் மாற்றியமைக்க முடியும் !



## 19. கருணை என்னும் கண்திறந்து காட்டவேண்டும்.

அகத்தின் பண்பே அன்பு. அன்பின் வழிச் செயலே கருணை. ஒவ்வொரு மனிதனின் அடித்தளத்தில் இருப்பது அன்பும் கருணையும் தான்.

இறையாற்றல் அன்பும் கருணையும் நிறைந்தது. இறை சரித்திரத்தில் இறுதியாக வந்த மனிதனிடம் அந்த அன்பும் கருணையும் இருப்பது இயற்கைதானே!

இணைந்துள்ள மற்றொன்றுக்குத் தனது ஆற்றலைத் தொடர்ந்து அளித்து அதனைக் காத்து வருவது கருணை.

மரமானது பூ, பிஞ்சு, காய், கனியைத் தன்னகத்தே பிடித்து வைத்திருத்தல் அன்பு ஆகும். அவைகளுக்கு வேண்டிய சத்து நீரை (வேர் மூலம் உறிஞ்சி) பரவ விடுதல் கருணையாகும்.

“ கருணை என்னும் கண்திறந்து காட்டவேண்டும்

காவல் என்னும் கண்திறந்து காட்டவேண்டும்

கனிமழலைக் குரல்கொடுத்துப் பாடவேண்டும்

கண்மறைந்த தாயும் அதைக் கேட்கவேண்டும்

கவலைகளை உன்னித்தில் தந்தேன் கண்ணா!

கருணையே அருள் செய்ய வருவாய் கண்ணா!

கருணை என்னும் அறிவுக் கண்ணை திறக்க, கண்ணனிடம் கண்திறந்து பார்கவேண்டும். காவலாய் என்றும் எப்போதும் இருக்க வேண்டும்.

மழலையின் குரலாய் ஒழிக்க வேண்டும். அதைக் கேட்கும் உணர்வாய் இருப்பதும் நீ தான்.

தன்னுடைய கவலைகள் அனைத்தையும் கண்ணனிடத்திலே கொட்டி விட்டதால், கருணையே வடிவான கண்ணனிடம் அனைத்திலும் கண்ணனின் உயிராக வர வேண்டுமாய் கேட்கிறார் கவியரசர்.

**“அறிவின் உயர்நிலையில் அன்பும் கருணையுமாய்**

**நெறியில் சிறந்தபோது நீங்காத இன்ப ஊற்றாய்”**

**- வேதாத்திரி மகரிசி**

என்று அறிவின் உயர்நிலையே கருணை என்றும், அந்த கருணை யாரிடத்தில் உள்ளதோ அவரே உயர்ந்தவர் என்றும் கூறுகிறார்.

அப்படி உயர்ந்த தன்மை ஒருவரிடம் இருக்கும்போது அவரவருக்கு அவரவரே காவலாகவும், மழலையின் குரோலோசையாகவும், அதைக் கண்டு மகிழும் தாயுணர்வாகவும் இருப்பது சாத்தியம் தானே!

இருப்பது ஒன்றே தான். அந்த ஒன்று தான் தன்னில் தன்மாற்றம் அடைந்து வெவ்வேறு நிலைகளில் உணரப் பெறுகிறது. அந்த ஒன்று தான் காந்தம். இதை உணர்ந்து கொள்வது தான் ஆறாவது அறிவின் முழுமை என்று கூறுகிறார்.

இயற்கையை ஆராயந்து பார்த்தால் அன்பும் கருணையும்தான் எங்கும் எதிலும் அமைந்திருப்பதைக் காணலாம்.

**“கல்லிருக்கும் தேரைக் கொல்லாம்**

**கருணை தந்த தெய்வம்**

**கனியிலிருக்கும் வண்டுக் கெல்லாம்**

துணையிருந்த தெய்வம்......

நெல்லுக்குள்ளே மணியை

நெருப்பினிலே ஒளியை

உள்ளுக்குள்ளே வைத்த தெய்வம்

உனக்கு இல்லையா- தம்பி

நமக்கு இல்லையா?"

**இறையின் கருணைதான் எத்தனை ஆழமானது. தாயின் வய்ற்றில் நாம் ஒரு அணுவாக உருவானபோது, தாயின் அசைவினால், அந்த அணு சிறிதும் சிதைந்து விடாமல் இருக்கட, அங்கே ஒரு தண்ணீர்க் குடம் அமைத்த அந்தப் பேரறிவின் கருணையை என்னவென்று சொல்ல?**

கல்லே கடினமானது, அந்த கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவளிக்கும் இறைவன், பூலோக வாசிகளான மனிதனுக்கு மட்டும் கொடுக்க மாட்டானா?

கனியோ மிகவும் மென்மையானது. அந்த மென்மையான கனி உருவாகும் முன் பூவாக இருந்த போதே உள்ளே போன வண்டுக்கு பழுக்கும் வரையிலும், அதற்குப் பிறகும் அதை காத்துக் கொண்டிருக்கும் இறைத்தன்மை துணை இருக்க நாம் சொல்லியா கொடுக்க வேண்டுமென கேள்வி ஞானத்தைக் கொடுத்து நம்மை சிந்திக்க வைக்கிறார் கவிஞர்.

நெல்லுக்குள் இருக்கும் நெல்மணியை வைத்தது யார்?, நெல் மணியாய் இருப்பது யார்?, அதை உண்பது யார்? ருசிப்பது யார்? நெருப்பாக இருப்பது யார்? அந்த நெருப்பில் இருக்கும் உஷ்ணமாய் இருப்பது யார்? அனைத்தும் இறைசக்தி ஒன்று தானே.

இப்படி அனைத்தும் ஒன்றாக இருக்கும்போது யாருக்கு இல்லாமல் போகும் என்று நம் சிந்தனையை தட்டி எழுப்பிவிட்டார் கவியரசர்.

அறிவின் உயர்நிலை அடைந்து, அன்பும் கருணையும் நம்மில் மேலோங்கச் செய்வதற்கான உபாயங்களே மகரிசியின் அகத்தவமும், அகத்தாய்வும்.

அகத்தாய்வு செய்து பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால் கவர்ச்சி. உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் என்ற அழுக்குகளை நீக்கி அறுகுணச் சீரமைப்புப் பெறும் போது அகத்தில் பண்பு பெருக, நம்மிடம் அன்பு வெளிப்படுகின்றது.

அறுகுண சீரமைப்பு பெற்று அடைந்திருக்கும் அழுக்குகளை நீக்கும்போது நம்மிடம் உள்ள அன்பும் கருணையும் பீறிட்டு மேலோங்குகின்றன.

பலரது அன்பும் கருணையும் தான் ஒரு மனிதனின் வாழ்க்கை. தாயின் கருணைதான் நமது உடல். தந்தையின் கருணைதான் நமது கல்வி. ஆசானின் கருணைதான் நமது ஞானம். இறையின் கருணைதான் நமது வாழ்க்கை.

**_“அவனின் இயக்கம் அணுவாற்றல்**

**அணுவின் கூட்டு பக்குவம் நீ**

**அவனில் தான் நீ உன்னில் அவன்**

**அவன் யார் நீ யார் பிரிவேது?**

**அவனை மறந்தால் நீ சிறியோன்**

**அவனை அறிந்தால் நீ பெரியோன்**

**அவன் நீ ஒன்றாய் அறிந்த இடம்**

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

## அறிவு முழுமை_அது முக்தி”

**- <u>வேதாத்திரி மகரிசி</u>**

கல்லாக இருப்பதும் அணுக்கூட்டே. கல்லுக்குள் இருக்கும் தேரையாக இருபதும் அணுக்கூட்டே. பழமாக இருப்பதும் அனுக்கூட்டே.

பழத்திற்குள் இருக்கும் வண்டாக இருப்பதும் அனுக்கூட்டே. நெற்பயிராக வளர்வதும் அணுவின் சேர்க்கையே.

அதை ருசியாக மாற்றியமைத்து மனிதனுக்கு உணவாக பசி தீர்ப்பதும் அவனே தான் என்றும், நெருப்பாக இருப்பதும் அணுவின் சேர்க்கையே.

அதில் வெளிப்படும் உஷ்ணத் தன்மையும் அணுவின் வெளிப்பாடே. இப்படி அனைதிலும் ஊடுருவி ஒன்றாய் இருக்கும் இறைவன் எப்படி தனித்து இருக்க முடியும்.

தனித்து இருந்தால் தானே காவலுக்கு துணை வர வேண்டும் என்று உள்ளதை வெளிப்படையாக கூறுகிறார்.

அகத்தாய்வினால், அன்பும் கருணையும் மேலோங்கும்போது மனிதன் தெய்வீகமாகிறான். அவ்வாறு அவன் மேலோங்காத வரை அவன் பேசத் தெரிந்த மிருகமே!

“உங்கள் எண்ணம், சொல், செயல்களில் அன்பு ஊடுருவி நிறைந்திருந்தால், அதுதான் நீங்கள் இறைவனுக்குச் செய்யக் கூடிய கடமை. எல்லோரிடத்திலும் அன்பைக் காட்டுங்கள்” என்பதுவே மகரிசி நமக்குத் தரும் பாடம்.

இந்த இறைநீதியை நன்குணர்ந்து தெளிவு பெற்றால் வெளியில் கடவுளை தேடித் திரியும் தேடலும் இல்லை,

நானே பிரம்மம் என்ற தெளிவும் கிடைக்கும் என்பதில் ஐயமுண்டோ! இறைநீதியை உணர்ந்து வாழும் முறை கண்டு வாழ்ந்திடுவோம், வளர்ந்திடுவோம்.




# 20. விதிசெய்த குற்றம்

---

இராமன் "மன்னவன் பணியென்றாலும் நின்பணி மறுப்பனோ? என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ?" என்று கூறிக் கானகம் புறப்படுகிறான்.

ஆனால் அண்ணனுக்கு முடி இல்லை என்றதும் தம்பி இலக்குவன் சீற்றம் கொள்கிறான். சிங்கத்துக்கு இடவேண்டிய உணவை ஒரு நாய்க்கு இடலாமோ? என்று கேள்வி கேட்கிறான்.

இராமனோ 'நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை" என்று கூறி தம்பியின் சினம் தவிர்க்க முயல்கிறான்.

"நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை அற்றே
பதியின் பிழையன்று பயந்து நமைப்புரந்தான்
மதியின் பிழையன்று, மகன்பிழையன்று மைந்த
விதியின் பிழைஇதற்கு என்கொல் வெகுண்ட தென்றான்."

அதாவது நதியில் நீர் இல்லாமல் போவது நதியின் குற்றம் இல்லை. இதில் யாரும் பிழை செய்யவில்லை, எல்லாம் விதியின் பிழை எனும் கம்பன் கருத்தைக் கண்ணதாசன் கையாள்கிறார். அதே உவமையை அப்படியே எடுத்து,

"நதிவெள்ளம் காய்ந்துவிட்டால் நதிசெய்த குற்றமில்லை,

விதிசெய்த குற்றம் அன்றி வேறு ஏதம்மா?"

என்று கவியரசர் எழுதும்போது நம்கண்முன் கம்பன் வரிகள் வந்து நிற்கின்றன.

கம்பனில் கவியரசர் திளைத்து ரசித்த பகுதிகள் ஏராளம் விதி பற்றிய பாடல் ஒன்றை கவிஞர் மிகவும் ரசித்திருப்பதை தியாகம் படத்தில் வரும் இந்தப்பாடல் சொல்கிறது.

"நதி வெள்ளம் காய்ந்துவிட்டால்
நதி செய்த குற்றமில்லை
*விதி செய்த குற்றம் அன்றி வேறு யாரம்மா"*

என்று விதியின் குற்றத்தை சொல்கிறார் கவிஞர்

## விதி என்பது - கவிஞர்

ஒருவன் வந்த வழியைப் பார்த்துத்தான், கந்தன் வரப்போகும் வழியைத் திறந்து விடுகிறான்.

ராஜாங்கம் கட்டி ஆண்டவனுங்கூட, நேர்மை தவறி நடந்தால் நிம்மதி இல்லாமல் துடிக்கிறான். இறைவனின் தராசு எடையை சரியாகவே போடுகிறது.

குளத்தில் ஒரு ரூபாய் நாணத்தை கை தவறி போட்டு விட்டால், குளம் வற்றியதும் அது நேர்மையாகச் சம்பாதித்த பணமாக இருந்தால், அது உன் கைக்கே கிடைக்கிறது.

ஒரு நடைபாதையில் நீ கண்ணாடித் துண்டைப் போட்டால், நீ திரும்பி வரும்போது. அது உன் காலிலேயே குத்துகிறது.

குளிக்கும் அறையில் நான் எச்சிலைத் துப்பி விட்டேன். ஒரு மணி நேரம் கழித்து நான் உள்ளே சென்றபோது அது என் காலையே வழுக்கி விட்டது. எனவே விதி என்பது இறைவன் வித்ததது மட்முல்ல, நீயே வித்த்ததுமாகம்..

## விதியின் கோடுகள் - கவிஞர்

உனக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கையே "விதி" என்று கூறப்படுகிறது. உனது வாழ்க்கை எந்தச் சாலையில் போனாலும் அது இறைவன் விதித்ததே.

ஜனனம் உலகம் எங்கும் ஒரே மாதிரி இருக்கிறது. 10-வது மாதம் ஜனனம் என்பது நிரந்தரமானது.

ஆனால் வாழ்க்கை ஏன் பல கோணங்களில் போகிறது? மரணம் ஏன் பல வழிகளில் நிகழ்கிறது?

நீ கருப்பையில் இருக்கும்போதே. நீ போகப்போகிற பாதைகளும், சாகப்போகிற இடமும், நேரமமும், உன் மண்டை ஓட்டுக்குள் திணிக்கப்டுகின்றன.

நீ எங்கே போனாலும், எபபடி வாழ்ந்தாலும் அது இறைவன் விதித்தது.

மனத்தின் சிந்தனைப் போக்கு எப்படி வேண்டுமானாலும் போகலாம். ஆனால் அது நடப்பதும் நடக்காததும் உன் விதிக் கோடுககளில்அடஙகி இருக்கிறது.

## விதி என்பது - கவிஞர்

ஒருவன் வந்த வழியைப் பார்த்துத்தான், கந்தன் வரப்போகும் வழியைத் திறந்து விடுகிறான்.

ராஜாங்கம் கட்டி ஆண்டவனுங்கூட, நேர்மை தவறி நடந்தால் நிம்மதி இல்லாமல் துடிக்கிறான். இறைவனின் தராசு எடையை சரியாகவே போடுகிறது.

குளத்தில் ஒரு ரூபாய் நாணத்தை கை தவறி போட்டு விட்டால், குளம் வற்றியதும் அது நேர்மையாகச் சம்பாதித்த பணமாக இருந்தால், அது உன் கைக்கே கிடைக்கிறது.

ஒரு நடைபாதையில் நீ கண்ணாடித் துண்டைப் போட்டால், நீ திரும்பி வரும்போது. அது உன் காலிலேயே குத்துகிறது.

குளிக்கும் அறையில் நான் எச்சிலைத் துப்பி விட்டேன். ஒரு மணி நேரம் கழித்து நான் உள்ளே சென்றபோது அது என் காலையே

வழுக்கி விட்டது. எனவே விதி என்பது இறைவன் வித்ததது மட்டுமுல்ல, நீயே வித்த்ததுமாகும்.

இந்த உருவத்தில் இந்த இடத்தில் பிறக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கவில்லை. உங்களைப் பிறக்க வைத்தது விதியின் பிரவாகம்.

இப்படித்தான் வாழ வேண்டும் என்று நீங்கள் திட்டமிடுகிறீர்கள். அப்படி வாழவிடாமல் செய்வது விதியின் பிரவாகம்.

எப்போது நீங்கள் நினைத்தது நடக்கவில்லையோ அப்போது உங்கள் நினைவுக்கு மேல் இன்னொன்று இருக்கிறது என்று அர்த்தம்.

அதற்கு நம் மூதாதையர் சூட்டிய பெயரே “விதி”. அந்த விதி சூனியத்தில் நிர்ணயிக்கப்படுகிறது. ஜனனத்தில் தொடங்குகிறது.

தான் நினைத்தபடி எல்லாம் வாழ்க்கையை நடத்தி முடித்தவர்கள் எத்தனை பேர்?

வீரன் வெற்றி பெற்றால், அது வீரத்தால் வந்தது. கோழை தோல்வியுற்றால். அது கோழைத்தனத்தால் கிடைத்தது.

ஆனால் வீரன் தோல்வி அடைந்தாலோ, கோழை வெற்றி பெற்றாலோ, அவை விதியால் நிர்ணயிக்கபட்டடவை.

வரலாற்று நதியை தனி மனிதனால் சாகசங்கள் இழுத்துச் செல்வதில்லை. விதியே அழைத்துச் சென்றிருக்கின்றது.

நம் உருவமே விதி ---நம் நிழலே மதி--- கவிஞர் -

பிறப்புக்கு முன்பும், மரணத்திற்குப் பின்பும், நாம் எங்கிருந்தோம், எங்கு போகிறொம் என்று தெரியும்வரை நமக்கு அப்பாற்பட்டது ஒன்று இருக்கிறது.

இடைப்பட்ட வாழ்க்கையை அது நடத்துகிறது.

காலை வெயிலில் நமது நிழல் நம் உயரத்தை விட பன்மடங்கு உயரமாக இருக்கிறது. மதியத்தில் நம்மை விட அது கூனிக் குறுகிக் காலடிக்குள் ஒண்டிக் கொள்கிறது.

மாலையில் மீண்டும்அது உயராமாகி விடுகிறது. ஆனால் நம் உருவம் என்ன்? ஒரே மாத்ரி தானே இருக்கிறது.

நம் உருவமே விதி, நம் நிழலே மதி.

துறவிகாளவதும், சம்சாரிகளாவதும் நமது விருப்பதால் மட்டுமே விளைந்தவவை அல்ல என்று உணரவேண்டும்.

முயற்சி கால் பங்கு… விதியின் ஒத்துழைப்பு முக்கால் பங்கு - கவிஞர்.

நீ எண்ணியது நடந்தாலும், நடக்காவிட்டாலும், எண்ணாதது நடந்தாலும் எல்லாம் உன் விதி ரேகைகளின் விளைவே. முயற்சி கால் பங்கு….விதியின; ஒத்துழைப்பு முக்கால் பங்கு.

எல்லாவற்றிற்கும் கால நேரம் வர வேண்டும் என்கிறார்களே. அது ஏன் தெரியுமா?

“இன்ன காரியங்கள், உனக்கு இன்ன காலங்களில் நடக்கும்?” என்று விதிக்கப்பட்டிருக்கிறது….அவ்வளவுதான்.

நினைவுகளின் மயக்கத்தை விதி ஒழுங்குபடுத்கிறது. நினைபவன்தான் நீ . முடிப்பவன் அவன்.

எந்த மனிதனின் பாதையையும் விதி திசை திருப்பி விடும்.

ஐயோ! எவ்வளவோ ஆசை வைத்திருந்தேனே, இப்படி ஆகிவிட்டதே என்று நீ பிரலாபித்துப் பயனில்லை. அப்படித் தான் ஆகும் என்று நீ பிறக்கும்போது எழுதப்பட்டிருக்கிறது.

## மதியை விதிதான் ஆட்சி செய்கிறது - கவிஞர்.

கடவுளே இல்லை என்று வாதிடுவோரும் நீண்ட காலம் வாழ வேண்டும் என்று இறைவன் ஏன் விதித்திருக்கிறான் தெரியுமா?

அவர்கள், தங்கள் கொள்கைகள், தங்கள் கண் முன்னாலேயே தோல்வி அடைவதைக் கண்டு சாக வேண்டும் என்பதற்காகத்தான்.

அப்படி என்றால், உண்மையான பக்தி உள்ள சிலருக்கு ஆண்டவன் ஏன் நீண்ட ஆயுளைத் தருகிறான் என்று நீங்கள் கேட்கலாம். அது ஏன் தெரியுமா?

தாங்கள் பக்தி செலுத்தியது நியாயமே என்று அவாகளும், அவர்களைப் பார்த்து பிறரும் உணர்வதற்காகத்தான்.

இறைவன் விதியை ஒரு வேடிக்கைக் கருவியாக வைத்திருக்கிறான். சக்தியும் சிவனும் புமியில் பல வேடங்களில் பிறந்ததாக இந்த மதக் கதைகள் கூறுவது, இறைவன், தானும் விதிக்கு ஆட்பட்டு. அதன் சுவையை அனுபவிக்கிறான் என்பதைக் காட்டுவதற்காகத்தான்.

அந்தக் கதைகளை வெறும் கதைகளாக நோக்காமல் இறைவன் தத்துவங்களாக நோக்கினால், மானிட தத்துவத்தை எப்படி இறைவன் வகுத்திருக்கிறான் என்பதை அறிய முடியும்.

விதி - மதி ஆராய்ச்சியில் மதியையே விதிதான் ஆட்சி செய்கிறது.

## விதி - மதி - மகரிசி

அணுவில் அமைந்த சட்டங்கள் விதியாகும். இயற்கையின் நிகழ்ச்சிகள் அனைத்தும் விதியே. பஞ்சு, இரும்பு, பருப்பு என்றால் அது விதி.

இவற்றை அறிந்து அனுபவிக்கும் அறிவின் செயல் வகையையே மதி என்கிறோம். பஞ்சு ஆடையானால் அது மதி. இரும்பு ஆயுதமானால் அது மதி. பருப்பு வடையானல் அது மதி.

மதியின் மூலநிலையும் விதியே ஆகும். நித்திய நிர்மல நிலையை விதி என்கின்றோம். நினைக்கும் ரசிக்கும் நிலையை மதி என்கிறோம்.

“அணுவில் அமைந்துள்ள சட்டங்கள் விதியாகும்,

அறிவாய் அனுபவிக்கும் ஆற்றலே மதியாகும்.”

விதி தலையெழுத்து என்றெல்லம் சொல்லுகிறார்களா? அதன் விளக்கம் என்ன? மகரிசி விடை தருகிறார்.

“துன்பம் தரக்கூடிய செயலைச் செய்தவருக்குத் துன்பம் வரும். இன்பம் தரக்கூடிய செயலைச் செய்பவருக்கு இன்பம் வரும்” என்பது செயல்விளைவுத் தத்துவம்.

இது இயற்கையினுடைய - இறைவனுடைய நியதி (நீதி). இதுவே விதி.

தலை என்றால் பிரதானம், முக்கியம் என்று அர்த்தம், “தலைமகன்”, “தலைவர்” என்ற சொற்களில் அந்த அர்த்தத்தில் தான் “தலை” என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

“எழுத்து” என்பதை இயற்கைச் சட்டம் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். இயற்கையில் அநேகச் சட்டங்கள் இருந்தாலும் மேலே சொன்ன “விதி அல்லது செயல் விளைவுத் தத்துவம் தான் விதி முக்கிய மானது” என்று விளங்கிக் கொள்ள வேண்டும். விளக்க வழி வாழவும் வேண்டும்.

“இயற்கை சக்தி விதி,

இதை யறிந்த அளவே மதி.”

விதியை மதியால் வெல்ல முடியுமா என்ற கேள்வி காலம் காலமாக இருந்து வருகிறது.

அப்படி வெல்ல முடிந்தால் விதி என்ற ஒன்றே பொய் என ஆகி விடாதா என்று சிலர் கேட்கிறார்கள்.

இது நியாயமான கேள்விதான். ஆனால் இதில் உள்ள சூட்சுமம் தெரியாமல் இப்படிப் பேசுகிறார்கள். இதை ஒரு எளிமையான உதாரணத்தின் மூலம் அறியலாம்.

மழை வருவது இயற்கை. அது விதி. அதை நாம் தடுத்து நிறுத்த இயலாது. ஆனால் அதன் தாக்கத்திலிருந்து தப்பிக்க குடை பிடித்து கொள்கிறோம். மழை கோட்டு, அணிந்து செல்கிறோம்.

அதுபோல நமக்கு வருகின்ற துன்பங்களில் இருந்து தப்பிக்க இறைவன் என்ற மாபெரும் குடையின் அனுக்கிரகத்தை பெறவேண்டும்.



மாற்ற முடியாத விஷயங்களை அப்படியே ஏற்றுக் கொள்வது, மாற்றுவதற்கான சாத்தியங்களை ஆராய்ந்து செயல்படுவது என்ற இரண்டு வகைகளில் எடுத்துக் கொள்வதன் மூலம் வாழ்க்கையை மகிழ்ச்சியானதாக மாற்றி விட முடியும்.

வாழ்க்கை மீது விதிக்கப்பட்டிருக்கும் சில எதார்த்தங்களை ஒப்புக் கொள்ள மறுக்காதீர்கள்.

நம் முன்னோர் அப்படியான எதார்த்த நிகழ்வுகளை “விதி” என்று வகைப்படுத்தினார்கள்.

அதை மாற்ற முடியாது என்பதாலேதான் “விதியை மாற்ற முடியும்” எனச் சொல்லாமல் “விதியை மதியால் வெல்லலாம்” எனச் சொல்லித் தந்தனர்..

இஸ்லாமியக் கலிபாக்களில் ஒருவரான ஹஜ்ரத் அலியைச் சந்தித்த யூத இளைஞன் விதிக்கும், பகுத்தறிவுக்கும் உள்ள வித்தியாசத்தைச் சொல்ல முடியுமா? என்று கேட்டான்.

ஹஜ்ரத் அலி அவனிடம், “உன் வலதுகாலைத் தூக்கு” என்றார். அவனும் தனது வலது காலைத் தூக்கியபடி நின்றான்.


“சரி.....இப்போது உன் வலது காலைக் கீழிறக்காமலேயே இடது காலையும் தூக்கு” என்றார்.

“அது எப்படி முடியும்?” என்றான் இளைஞன்.

“ஒற்றைக் காலை மட்டும் தூக்கு என்றதும் உன்னால் முடியும் என நினைத்துச் செய்தாய் அல்லவா? அதுதான் பகுத்தறிவு.

இன்னொரு காலையும் தூக்கச் சொன்னபோது அது முடியாது என உணர்ந்தாய் அல்லவா? அதுதான் விதி” என்றார். அந்த வித்தியாசத்தை உணர்ந்தாலே போதும்.

விதியை மதியால் வெல்லுங்கள். வாழ்வு வசப்படும். மகிழ்ச்சி உங்களைத் தேடி வரும்.




# 21. இறைவன் ஒருவனே

இறைவன் ஒருவனே என்றால் அவனுக்கு இத்தனை உருவங்கள் இருப்பது ஏன்? என்று கேட்ட ஒருவருக்கு இராமகிருஷ்ண பரமகம்சர் பதிலளித்தாக அமைத்த கவிதையில்

“நீங்கள் ஒருவர். நிச்சயம் ஒருவரே!

ஆனால் நீங்கள் அனனைக்குப் பிள்ளை,

பிள்ளைக்குத் தந்தை. பேரர்க்குப் பாட்டன்,

மாமிக்கு மருமகன், மனைவிக்குக் கணவன்.

தம்பிக்கு அண்ணன். தங்ககைக்கும் அப்படி!

இந்த உமக்கே இத்தனை வடிவம்

இறைவனுக் கேனையா இருக்கக் கூடாது?"

என்று பாடியதிலிருந்து பல உருவங்களில் இறைவன் இருப்பதற்கான காரணத்தைக் கண்ணதாசன் விளக்குகிறார்.

இறைவனது இயல்வு

இறைவன் உலகத்தோடு ஒன்றாகியும் வேறாகியும் இருப்பதோடு உலகத்துக்கு உதவும் பொருட்டு உடனாகியும் இருக்கின்றான் என்பது சித்தாந்த உண்மையாகும்.

"சின்னஞ்சிறு சக்கரத்தில்

சீவன்களைச் சுற்ற வைத்து

தழுவிக் கொண்டால் அவன்தான் இறைவன்!"

என்று மறைந்திருக்கும் பரம்பொருளாய் உள்ள இறைவனின் இயல்பைப் பற்றிறக் கண்ணதாசன் கூறியுள்ளார்.

அறிவே தெய்வம்.அறிவின்ல் தெய்வத்தை உணர வேண்டும் என்ற கருத்தை

"இறந்தபின் உயிர்கள் எல்லாம்

எவ்வழி ஏகும் என்றே

அறிந்தவன் எவனும் இல்லை.

ஆண்டவன் ரகசி யத்தைத்

தெரிந்தவன் அவனே யன்றித்

திறமுள விஞ்ஞா னங்கள்

அறிந்தன ஏதும் இல்லை.

அவனே தான் வாழ்வின் எல்லை!"

சித்தர்களும் , சமயக் குரவர்களும் இடர்பட்டுத் தேடுகின்ற இறைவனைக் கண்ணதாசன் மிக எளிமையாக பாடியுள்ளார்.

"அனுபவித்தே தான் அறிவது வாழ்வெனில்

ஆண்டவனே நீஏன் எனக் கேட்டேன்

ஆண்டவன் சற்றே அருகு நெருங்கி

"அனுபவம் என்பதே நான்தான்" என்றான்!"

என்று தன் ஐயத்தையும், அதற்கு இறைவன் கூறிய விடையையும் பற்றிப் பாடியுள்ள சிறப்பு போற்றத்தக்கது.

கடலும் அதன் அலையும் போன்றதே பரம்மமாகிய வெளியும் உயிர்களும் என்பதை மகரிசி தனது வேதாத்திரியத்தில்,

"ஆதியென்ற பிரம்மமது கடல் போல் ஒன்று

அதிலெழுந்த ஜீவனெல்லாம் அலைபோல் ஆகும்

---

பேதமுடன் அலைகளவை விரிந்த போதும்

பிரியாது கடலைவிட்டுக் கடல் ஒன்றேனும்”

என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

“பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்” என்று திருவள்ளுவரும்

“காக்கை குருவி எங்கள் ஜாதி” என்று பாரதியாரும்

“ஒன்றாகக் காண்பதே காட்சி என்று அவ்வையாரும்

“யாதும் ஊரே யாவரும் கேளீர்” என்று கணியன் பூங்குன்றனாரும்

குரல் கொடுத்தனர். இவர்கள் தந்த அத்வைதக் குரல்களின் குவியலே வேதாத்திரியம்.

பல மதங்களில் பலவாறாகக் காட்டப்பட்ட மூலத்தை தூய தமிழில் சுத்தவெளி, இறைவா, ஆதி, அநாதி, தெய்வம், சிவம், ஏகம், பிரம்மம், கிராவிட்டி என்று அழைக்கிறார் மகரிசி.

தெய்வம் பலப்பல சொல்லிப்

பகைத்தீயை வளர்ப்பவர் மூடர்

உய்வதனைத்திலும் ஒன்றாய்

எங்கும் ஓர் பொருளானது தெய்வம்”

என்ற பாரதியில் ஆதங்கத்தைப் பாமர மக்களும் உணரக்கூடிய வல்லமையை அவனுக்குத் தந்தவர்கள் கண்ணதாசனும் மகரிசியும்.

இணையாது இருந்த விஞ்ஞானத்தையும் மெய்ஞ்ஞானத்தையும் இணைத்தவர் மகரிசி.

இறைவன் ஒருவனே என்ற அத்வைதக் கொள்கையை மகரிசி வலியுறுத்துகிறார்.

“அத்வைதம்” என்பது எல்லாம் வல்ல ஆதிநிலையான பிரம்மமே பரிணாமத்தில் எல்லாமாகி எல்லா இடங்களிலும், எல்லாப் பொருட்களிலும் ஊடுருவி வந்துள்ளான்.

இறைவெளியே எழுந்து வந்த நிலையில் பஞ்ச புதங்களாகி அவை இணைந்து ஓரறிவு முதல் ஆறறிவான உயிர்களாகி நானுமாகியுள்ளான்.

என்னுள் அவனே மனமாக, அறிவாக இயங்கிக் கொண்டுள்ளான். அவன் வேறு தான் வேறு இல்லை என்று உணர்வதாகும்.

உதாரணமாக, பிறந்ததில் இருந்து இதுவரை உண்ட டன் கணக்கான உணவு எங்கே என்று பார்த்தால் உணவு என்பது எங்கும் தனித்து இல்லை. அது நம் உடலாகவே மாறியுள்ளதைப் போல என்கிறார் மகரிசி.

ஒன்றே பலவானது என்று வேத காலத்திலிருந்து ஓதி வந்தாலும், அந்த ஒன்று சுத்தவெளியே என்று உலகத்தவர்க்கு ஆணித்தரமாக உரைத்தவர் மகரிசியே.

அந்த ஒன்று எப்படி பலவானது என்று என்பதை விளக்கி காட்டியதும் வேதாத்திரியமே!

“ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்” என்று சொன்ன பாரதிக்கு துணையாக இருக்கிறார்கள் கண்ணதாசனும் மகரிசியும்.





நூல் ஆசிரியர்கள்

# 22. மனிதன் மாறிவிட்டான்

**உலகில் உள்ள எல்லாத் தோற்றங்களிலும் எல்லா உயிர்களிலும் சிற்நத மேலான ஒரு இயக்க நிலை மனிதஉருவம்.**

**மனம், இதன், மனிதன். இதன் என்றால் அன்பும் கருணையுமாக ஒத்தும் உதவியும் இருப்பது என்று பொருள்.**

**இவ்வளவு சிறப்பு பெற்ற மனிதன் மாறி விட்டானே என்று ஆதங்கப்படுகிறார் கண்ணதாசன்.**



**ஆணவம், கன்மம், மாயை இந்த மூன்றினுடைய மூட்டைதான் "மனிதன்" என்ற பிரகிருதி. மனிதன் படுகின்ற துன்பங்கள் அத்தனைகும் உற்பத்தி ஸ்தானம் இம்மூன்றே.**

"மனிதன் மாறிவிட்டான்

மதத்தில் ஏறிவிட்டான்

**"வந்த நாள் முதல்,**

**இந்த நாள் வரை,**

**வானம் மாறவில்லை**

**வான் மதியும், மீனும், கடல்க் காற்றும்,**

**மலரும், மண்ணும், கொடியும், சோலையும், நிதியும் மாறவில்லை**

**மனிதன் மாறிவிட்டான்"**

வந்த நாள் என்றால் நாம் உருவான நாள் என்று எடுத்துக் கொள்வோமா!

உலகில் தோன்றிய அத்தனை தோற்றப் பொருட்களும் உருவான காலத்தில் இருந்து இன்று வரை தன்னுடைய தன்மை மாறாமல் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பரிணாமத்தின் கடைசி தோற்றமாகிய மனிதன் மட்டும் ஏனோ தன் தன்மை மாறி தடம் மாறி தடுமாறி இருக்கிறான் என்று ஆதங்கத்தோடு கேட்கிறார் கவிஞர்.

சுத்தவெளியின் முதல் தோற்றமான இறைத்துகள் முதல் விண்ணாகி, அதன் கூட்டமைப்பால் பஞ்சபூதங்களாகி, அதனைத் தொடர்ந்து ஓர் அறிவு முதல் ஐயறிவு விலங்கினம் வரை அதனதன் தன்மையில் இருந்து மாறுபட வில்லை.

அவை எல்லாம் நிர்ணயிக்கப்பட்ட உண்மையில் நிலையில் இருந்து செயலாற்றும்போது சுத்தவெளியில் இருந்து உருவான மனிதன் மட்டும் ஏன் மாறிக்கொண்டே இருக்கிறான் என்று வேதாத்ரியும் ஆச்சரியப்படுகிறார்.

**"நிலை மாறினால் குணம் மாறுவான் - பொய்**

**நீதியும் நேர்மையும் பேசுவான் - தினம்**

**ஜாதியும் பேதமும் கூறுவான் - அது**

**வேதம் விதி என்று ஓதுவான்"**

மனிதன் குழந்தையாக பிறப்பெடுக்கும் போது எந்தவிதமான சூதுவாதும் தெரிவதில்லை. அக்குழந்தை வளரவளர பெற்றோர்களின் வளர்ப்பில் தான் நிலை மாறுகிறது.

குழந்தையிடம் "தான்" 'ஆண்' என்றும் 'பெண்' என்றும் பாகுப்பட்டில் தொடங்கி கல்வி, பணி, பதவி, திருமணம், வசதி வாய்ப்பு, சாதி பேதம்........ இப்படி பலப்பல பிரிவினைகளை பிஞ்சு மனதிலேயே விதைத்துவிடுகிறோம்.

அதுவே காலப்போக்கில் விஷ விருட்சங்களாகி சமுதாயத்தின் சீர்கேட்டிற்கு விதையாக வேரூன்றி விடுகின்றன.

விஷ விருட்சங்களாகி விட்ட நிலையைத் தான் நிலை மாறிய மனிதன் என்று குறிப்பிடுகிறார் கவிஞர்.

**<u>மனிதனின் வேறுபாட்டிற்கு காரணம் ;</u>**

**"கருவமைப்பு, உணவு வகை, காலம், தேசம்,**

**கல்வி, தொழில் அரசாங்கம், கலை, முயற்சி,**

**பருவம், நட்பு, சந்தர்ப்பம், பல ஆராய்ச்சி,**

**பழக்கம், வழக்கம், ஒழுக்கம் இவற்றிற்கேற்ப**

**உறுவமைப்பு, குணம், அறிவின் உயர்வு, கீர்த்தி,**

**உடல்வலிவு, சுகம், செல்வம், மனிதர்கட்கு**

**வரும் வகையும் அவற்றின் தரம் அளவுக்கேற்ப**

**வாழ்க்கைநிலை பேதமுடன் தோன்றக் கண்டேன்"**

என்று வகைப்படுத்தி, மகரிசி காட்டுகிறார்.

மேலும் தன்முனைப்பின் காரணமாக பஞ்ச மகா பாவங்களாக விளையும் 'பொய், களவு, கொலை, சூது, கற்பழிப்பு போன்ற பழிச்செயல்கள் ஏற்படுகிறது.

ஆனால் இவை எல்லாம் தவறு என்று தெரிந்தாலும் ஏற்றுக்கொள்ள முடியாமல் தவிக்கும் அவல நிலையில் இருக்கும் மனிதர்களைப் பார்த்து மகரிஷியும் வேதனைப் படுகிறார்.

**"பறவையில் கண்டான் விமானம் படைத்தான்**

**பாயும் மீன்களின் படகினைக் கண்டான்**

**எதிரொலி கேட்டான் வானொலி படத்தான்**

**எதனைக் கண்டான் பணம் படைத்தான்?"**

அர்த்தமுள்ள இந்துமதத்தில் கவிஞர் அழகாக எடுத்துக்கூறி இருக்கும் பாங்கினை பார்ப்போமா!

'ஆதி மனிதன் கடலைக் கண்டு பயந்தான். அடுத்த மனிதன் கடலுக்குள் கொஞ்ச தூரம் நடந்து பார்த்தான். அவனுக்கு அடுத்தவன் நீந்திப் பார்த்தான்.

இன்னொருவன் கட்டையைப் பிடித்துக்கொண்டு பயணம் செய்தான். கட்டை படகாயிற்று. படகு கப்பலாயிற்று. பயணம் சுலபமாயிற்று.

கடலும் கடக்கக்கூடியதே என்ற நம்பிக்கை வந்தது. உலகம் உருண்டை என்ற உண்மையும் தெரிந்தது.

பறவையைக் கண்ட மனிதன் விமானத்தைப் படைத்தான்.

விமானத்தின் பறக்கும் உயரத்தையும் வேகத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக அதிகப்படுத்திக்கொண்டே போன மனிதன் சந்திர மண்டலம் வரை பயணம் போகலாம் என்ற நம்பிக்கை கொண்டான் அது வீண் போகவில்லை.

இப்படியாக உணர்த்து தெளிந்த மனிதன் எதைக் கண்டு பணத்தை படைத்திருப்பான்?

என்று சிந்தனை ஆற்றல் பெற்ற கவிஞரே தடுமாற வைத்த பணத்தின் படுத்துதலைப் பார்க்கும்போது சற்று விந்தையாகத்தானே இருக்கிறது.

பறவையைக் கண்ட மனிதனின் அறிவு வேலை செய்ய ஆரம்பித்தது.

பறவைக்கு இரண்டு பக்கமும் சிறகுகள் இருப்பதால் தான் பறக்க முடிகிறது என்று கண்டறிந்து சிறகு போல இறக்கை இருந்தால் தான் பறக்கும் தன்மை வரும் என்றும், அந்த இறக்கைகள் இருந்ப்பதால் தான் மீன்களானது நீரில் நீந்துகிறது என்று கண்டான்.

தன்னை சூழ்ந்துள்ள நீராகட்டும், காற்றாகட்டும் தள்ளும் விசை கொண்டு விலக்கினால் முன்னோக்கி நகர் முடியும் என்பதையும் கண்டு கொண்டான்.

காற்றலையில் காந்தம் தான் செயலாற்றுகிறது என்று கண்ட மனிதன், அந்த காற்றானது வான்வெளியில் ஓடிக்கொண்டிருக்கிறது.

இப்படி ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றலை உட்புகுத்தி திணிவு பெறச் செய்து வானொலியை கண்டு பிடித்தான் மனிதன்.

அனால் இவ்வளவு நுணுக்கங்களைக் கண்டறிந்த மனிதனையும் மடக்கி பொடிகிறது பணம் என்னும் பற்று வலை.

அந்தப் பணத்தை எதைக்கொண்டு படைத்திருப்பான் என்று சிந்திக்கும்போது எட்டாத பதிலாகத் தான் இருக்கிறது.

இருப்பினும் பணத்திற்கு மகரிஷி கூறும் விளக்கம் **'Money is the token of labour"** பணம் மனித வாழ்வின் முதலீடு என்று கூறுகிறார். நாம் செய்யக்கூடிய வேலையின் தரத்தை குறிக்கும் சாதனம் என்பதே சரியான விளக்கமாக இருக்கும்.

**"இன்பமும், காதலும், இயற்கையின் நீதி**

**ஏற்றத்தாழ்வுகள் மனிதனின் ஜாதி**

**பாரில் இயற்கை படைத்ததை எல்லாம்**

**பாவி மனிதன் பிரித்து வைத்தானே!"**

இயற்கையில் இருக்கும் அனைத்து பொருட்களுக்குள்ளும் இயல்பாக இயங்குவது இன்பமும், காதலும் தான்.

அதனால் தான் மனிதனைத் தவிர எந்த ஒரு பொருளுக்கோ, உயிருக்கோ பேதங்கள் இல்லை.

இந்த ஏற்றத்தாழ்வுகள் மனிதனிடம் மட்டுமே உண்டு. இது இயற்கையால் உண்டாக்கப்படவில்லை, மனிதனால் உண்டாக்கியது என்பதால்தான் மனிதனை பாவி என்று சாடுகிறார் கவிஞர.

அணைத்து உயிர்களுக்கும் அடிப்படையாக விளங்குவது அன்பும், கருணையும் தான்.

அந்த அன்பும் கருணையும் மனிதனிடத்தில் இருந்தாலும் தன்முனைப்பாலும், மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயையினால் சிக்குண்டு இருக்கும் நிலைதான் பேதங்களுக்கு காரணம் என்று மகரிசி விவரிக்கிறார்.

இதெற்கெல்லாம் தீர்வு ஒவ்வொரு மனிதனும் தான் யாரென்று உணர்ந்து விட்டால் அதேபோல் தான் அனைத்து உயிர்களும் என்ற உணர்வு நிலை வரும்.

வந்த பிறகு மிஞ்சுவது அன்பும் கருணையும் மட்டுமே தான். யாருக்கும் யாரும் பாவியாக இருக்கும் நிலை மாறுமப்பா என்று நம்மை வழிநடத்தி செல்கிறார் மகான் அவர்கள்.

மகான் வகுத்துக் கொடுத்த வழியில் மனிதனாவான் சென்றால் பிரிவினை என்னும் மதத்தில் ஏற வேண்டாம்.

அன்பு என்ற ரதத்தில் ஏறி இன்புறலாம். அன்பால் நிறைந்து அன்பால் திளைப்போம். மனிதன் என்ற தன்மைக்கும் சான்றாக விளங்குவோம்!

# 23. இறைவன் இருப்பது எங்கே?

நம் முன்னோர்கள் பார்த்த கடவுளை நம்மால் ஏன் பார்க்க முடியவில்லை ?

அந்தக் கடவுள் எங்கேதான் இருக்கிறார் ?

நீங்களும் கடவுளைப் பார்க்கலாம். பார்க்க முடியாது என்று யார் சொன்னது ?

இராமகிருஷ்ண பரமகம்சர் கடவுளைப் பார்த்தார். விவேகானந்தருக்கும் கடவுளைக் காட்டினார்.

முன்னோர்கள் பார்த்தார்கள் என்றால், எப்படி, எந்நிலையில் பார்த்தார்கள் ?

அதாவது கடவுள் எங்கே இருக்கிறார் என்று தேடுவோரும், கடவுள் இல்லாத இடமே இல்லை என்று சொல்லும் சான்றோரும், அந்தக் கடவுளே இல்லை என்று சொல்வோரும் இவர்கள் அனைவருமே இடைவிடாது அவரைப் பற்றியே சிந்தித்து விடை காண முயற்சி செய்கின்றனர்.

இலட்சக் கணக்கான ஆண்டுகளாக இந்த முயற்சி நடந்து கொண்டேயிருக்கிறது.

ஆனால், அவரைக் கண்டவருமில்லை, விண்டவருமில்லை என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.

நான் கடவுளைக் கண்டிருக்கிறேன் என்று சில பெரியோர்கள் சொல்லி இருந்தாலும், அதைத் தான் காண இயலாத காரணத்தால் யாரும் நம்புவதில்லை.

பரந்து விரிந்து எங்கும் நீக்கமற நிறைந்து விளங்குகிறார் கடவுள் என்றால், அவரை புறத்தே தேடாதே, கடந்து உள்ளே செல் கடவுளைக் காணலாம் என்றுச் சொல்வதென்ன ?

புறத்தேயும் கடவுள் நீக்கமற நிரம்பியிருக்கிறார்தானே ? இப்படியெல்லாம் பல்லாயிரம் கேள்விகள், தேடல்கள் நடந்து கொண்டேயிருக்கின்றன.

கடவுளே இல்லை என்று சொல்வோரைப் பற்றி நமக்குக் கவலையில்லை. அது கடவுள் பாடு, அவர்கள் பாடு.

ஆனால், கடவுள் இல்லாத இடமே இல்லை, கடவுள் ஒருவனே, அவனே நித்திமானவன், அதியந்தம் இல்லாதவன். அவனே பரம்பொருள் என்றெல்லாம் ஆன்றோர்களும், சான்றோர்களும் கூறினாலும், கடவுள் இன்ன இடத்தில் இருக்கிறார் என்று பேசுவதும், குறிப்பிட்ட ஒரு இடத்தில் தேடுவதும் அறியாமையே அன்றி வேறொன்றுமில்லை.

இத்தகைய மாபெருங் குழப்பங்களுக்கு இடையே நம்மில் பலபேர் கடவுள் இருந்தால் நமக்கென்ன, இல்லாவிட்டால் நமக்கென்ன என்கிற ரீதியில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இது இவையனைத்தையும் விட மிகப் பரிதாபமான நிலையாகும்.

எங்கிருந்து வந்தோம், எதை நோக்கி செல்கிறோம் என்று எந்த விதத் தெளிவும் இல்லாமல், பிறப்பின், வாழ்வின் இலட்சிம்தான் என்ன என்று சிந்திக்காமல், கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்பவர் நிலை நடைபிணத்திற்கு ஒப்பானது.

இந்த அண்டசராசரங்கள், இவ்வளவு பெரிய உலகம் இவை யாவும் திடீரென்று தானே தோன்றியிருக்க முடியாது.

அதை நிச்சயமாக நம்மைப் போல ஒரு மனிதனும் படைத்திருக்க முடியாது.

அப்படி என்றால் ஏதோ ஒரு முதன்மையான பொருளில் இருந்துதான் இந்த உலகம் தோன்றியிருக்க வேண்டும்.

எனவே அந்தத் தனி முதன்மையான பொருள்தான் பிரம்மம் என்றுதான் வேதம் சொல்கிறது.

அதிலிருந்து தோன்றி, அதற்கு உள்ளேயே நிலைபெற்று, அதிலேயே அனைத்தும் ஒடுங்குகின்றன என்பது கோட்பாடு.

எனவே அது இல்லாத இடம் இல்லவே இல்லை என்பது முடிபு. ஓரிடத்தில் இருந்து ஓரிடத்தில் இல்லை என்றால் பரம்பொருள் என்ற தத்துவமே பொய்யாகி விடும்.

கடவுள் இன்ன இடத்தில் இருக்கிறார் என்று சொன்னால், அந்த இடம் அல்லது தேசம் ஆதாரமாகவும் (தாங்குவது), கடவுள் ஆதேயமாகவும்(தாங்கப்படுவது) ஆகி விடும்.

ஆதாரம், ஆதேயத்தை விட மேலானதாகக் கருதப்படும். உதாரணமாக அலையை ஆதேயமாகக் கொண்டால் கடல் அதன் அதற்கு ஆதாரம்.

கடலை விடப் பெரியதாகவோ, கடலுக்கு முந்தியதாகவோ அல்லது கடலை விட்டு அன்னியமானதாகவோ அலை இருக்க முடியாது.

அலை என்றும் கடலுக்கு நிகரானது அல்ல. ஆனாலும், அலையும் கடலும் வேறு வேறு அல்ல.

இந்த மாளிகையில் ஒரு மனிதன் குடியிருக்கிறான் என்று சொல்லும் பொழுதே, அந்த மனிதனை விட மாளிகைப் பெரியது என்பது யாரும் சொல்லாமலேயே விளங்கி விடுகின்றது.

அது போல கைலாசம், வைகுண்டம், சொர்க்கம் போன்ற இடத்தில்தான் கடவுள் வாசம் செய்கிறார் என்று சொன்னால் அந்த இடங்களெல்லாம் கடவுளுக்கும் முன்னரே இருந்தவை என்றாகி விடும்.

எனவே கடவுள் எங்கே இருக்கிறார் என்ற கேள்வியும், தேடலும் யுக்திக்கு ஒவ்வாதது. இடம் அல்லது தேசம் என்பது மனதால் கற்பிக்கப்படுவது. மனம் ஒடுங்கும் பொழுது இடமும் ஒடுங்கி விடும்.

ஏனெனில் மனம், இடம், காலம் இவையனைத்தையும் தம்மிடத்தில் வைத்து அவற்றை ஆதாரமாகத் தாங்குபவர் பரம்பொருளே.

எனவே மனம் அவரிடத்தில் ஒடுங்கும் பொழுது கற்பிதங்கள் அனைத்தும் ஒடுங்கி விடுகின்றன.

மனமானது புறத்தே ஜட விஷயங்களை நுகரும் அளவில் மேலும் மேலும் கற்பிதங்களை வளர்த்துக் கொண்டு அதுவும் ஜட நிலையை எய்தி விடுகிறது.

பரம்பொருளோ அதி சூக்குமமானவர். அவரை உணரும் அளவு நம் மனமும் சூக்கும நிலையை அடைய வேண்டும்.

எனவேதான் புறத்தை அலையும் மனதை அடக்கி, அகத்தே செலுத்து ! கடந்து உள்ளே போ ! பரம்பொருளைக் காணலாம் ! கடந்து உள்ளே சென்று காணத் தகுந்தவராக உள்ளதால் அவர் கட உள். இருக்கும் இடத்தைவிட்டு

இல்லாத இடம் தேடி

எங்கெங்கோ அலைகின்றார்

ஞானத்தங்கமே! - அவர்

ஏதமறியாரடி ஞானத்தங்கமே!....

இரமணரிடம் மேல் நாட்டு அறிஞர் ஒருவர் இரமணரைப் பார்த்துக் கேட்டார்.

What is God?

அன்று இரமணர் சற்று நிதானமாக கூறினார்...

What is, is God

இருப்பதெல்லாம் இறைநிலை. இதைத்தான் கண்ணதாசன் இருக்கும் இடத்தை விட்டு எங்கெல்லாம் போய் தேடும் மனிதர்களைப் பார்த்து சிரிக்கிறார்.

What is God? இதற்கு " எந்த ஒன்றால் இப்பிரபஞ்சம் ஆக்கப்பட்டிருக்கிறதோ அதுவே கடவுள்" என்றார் ஓஷோ.



எந்த ஒன்று நிலையாக இருக்கிறதோ, எந்த ஒன்று ஞானமயமாக, அனந்தமாக இருக்கிறதோ, அதுவே தெய்வம் என்கிறது நமது உபநிடதம்.

"அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி - - - - -" என்றார் தாயமானவர்.

"அகரமுதல் எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு"

எந்த ஒன்றிலிருந்து உலகம் வருகிறதோ அல்லது எந்த ஒன்றிலிருந்து உலகமாக மாறியிருக்கிறதோ அதுவே ஆதிபகவன் என்றார் திருவள்ளுவர்.

"வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலமெனும்

வளம்நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியெ தெய்வமாம்!"

என்றார் வேதாத்திரி மகரிசி.

இந்த மகான்கள் சொல்வதெல்லலாம், தெய்வத்திற்கு பிறப்பு இறப்பு இல்லை. உடலும் இல்லை. குடலும் இல்லை.

இங்கு இருப்பதெல்லாம் தெய்வமேயாதலால் இங்கு தெய்வத்தைத் தவிர வேறான்றும் இல்லை. மனிதரென்றும் தெய்வமென்றம் பிரவினையும் இந்த மகான்களிடம் இல்லை.

“அவன் நீ ஒன்றாய் அறிந்த இடம் அதுவே

அறிவின் முழுமை அது முக்தி.”

என்பது வேதாத்திரியம்.

நமக்குள் இருக்கும் இறைவனை நாள்தோறும் வணங்கி ஆனந்தமாக வாழ்வோம்.

# 24. ஒருவன் மனது ஒன்பதடா

**மனம், இயற்கை, சமுதாயம் என்ற முக்கோணத்துக்குள்தான் மனிதன் வாழ்ந்தாக வேண்டும்.**

**மனித மனம்ஒரு மறைபொருள். புலன்களுக்கு எட்டாதது. அது இல்லை என்று யாராலும் கூறமுடியாத ஒரு பேருண்மை.**

**மன இதன் என்ற இரண்டு வார்த்தை சேர்ந்ததுதான் மனிதன். மனததை இதமாக வைத்துக் கொள்ள வேண்டும். முரண்பாடாக இல்லாமல் வைத்துக் கொள்ள வேண்டும்.**

மனதிற்கு எண்ணற்ற அறிஞர்கள் பலவிதமான விளக்கங்கள் கொடுத்து இருந்தாலும், எனக்கு சுலபமாக புரிய வைத்தது அருள்தந்தை வேதாத்ரி மகரிஷியின் விளக்கம் தான்.

அருள் தந்தை வேதாத்ரி மகரிஷி “மனம்” ஒரு காந்தம் என்கிறார்.

நமது உடல் இயக்கங்களின் போதும் ஏற்படும் மின் ஆற்றலால் ஒரிடத்தில் குவிந்து அது இந்த பிரபஞ்சவெளியோடு தொடர்பு கொண்டு மனம் என்ற நிலையை உருவாக்குகிறது.

அதாவது மனம் என்பது உடல் சார்ந்த விஷயம் மட்டுமல்ல, அது பிரபஞ்சவெளியோடு இந்த உடலை இணைக்கும் ஆற்றல். எவ்வளவு அழகான அருமையான விளக்கம்.

நான் சிந்தனை செய்வது, நான் எண்ணுவது என்னுள் மட்டும் ஏற்படும் செயல் அல்ல, அது இந்த பிரபஞ்ச வெளியோடும் தொடர்புடையது.

அதாவது நான் மன்னார்குடி என்று ஒரு ஊரை நினைக்கிறேன் எனில் என் மனம் அதிவிரைவாக கடந்த முறை மன்னார்குடியை தரிசித்த நினைவுகளை கொண்டு வருவதோடு, இப்போதும் மன்னார்குடி வரை பயணித்து அங்கு மோதி பிரதிபலித்து திரும்புகிறது.

இது ஒரு வினாடியில் நிகழ்ந்து விடுகிறது. ஒரு இடத்தை மட்டுமல்ல, நீங்கள் விரும்பும், நினைக்கும் எதன் மீதும் இதுதான் நிகழ்கிறது.

ஆனால் நாம் என்ன செய்கிறோம்....நம் மனதை குப்பைக் கூளங்களால் நிரப்பிக் கொண்டிருக்கிறோம்.

அது ஒர் அழகிய பூங்கா. அங்கே அழகான அற்புதமான பெண்ணின் சிலை. பக்கத்தில் கம்பீரமான ஆண் சிலை.

ஒருநாள் அந்தப் பூங்கா பக்கம் வந்த காதல் கடவுளான மன்மதனுக்கு அந்த சிலைகளின் மீது ஒரு இரக்கம் ஏற்பட்டது.

"எத்தனை காலங்களுக்குத்தான் மற்றவர்கள் காதல் செய்வதை நீங்கள் சிலைகளாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பீர்கள்?

அதனால் ஒரு பத்து நிமிடம் உங்கள் இருவருக்கும் உயிர் தருகிறேன். இந்த நேரத்தை உங்கள் விருப்பத்ததுக்கு ஏற்றவாறு ஆனந்தமாக அனுபவித்துக் கொள்ளலாம்" என்றான் மன்மதன்.

சிலைகளுக்கோ தாங்க முடியாத ஆனந்தம். மன்மதன் தன் இரண்டு கைகளாலும் அந்தச் சிலைகளை வருடிக் கொடுக்க, அவை உயிருள்ள் மனிதர்களாக மாறிப் பக்கத்தில் இருந்த புதருக்குள் ஒரே ஓட்டமாக ஓடின.

கொஞ்ச நேரம் அந்த புதலில் இருந்த செடிகள் குலுங்கின. மன்மதனுக்கே வெட்கம் வந்து விட்டது.

சிறிது நேரத்தில் அந்த காதலர் ஜோடி புதரை விட்டு வெளியே வந்தது.

இப்போது அவர்கள் கையில் ஒரு புறா இருந்தது. "இன்னும் உங்களுக்கு ஐந்து நிமிடம் இருக்கிறது!" என்றான் மன்மதன்.

"அப்படியா" என்ற அந்த சிலை மனிதன் தன் காதல் ஜோடியைப் பார்த்து, "சரி…இப்போது நீ இந்த புறாவை கெட்டியாகப் பிடித்துக்கொள். நான் அதன் தலை மீது அசுத்தம் செய்கிறேன்" என்றானாம்.

தங்கள் தலையில் எச்சம் இட்ட புறாவைப் பழி தீர்த்துக் கொள்ளவா இந்த அரிய நேரத்தை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்? என்ன முட்டாள்தனம் பாருங்கள்!

நம் நேரத்தை ஆனந்தமாகவும் பயனுள்ளதாகவம் கழிக்க நமக்குக் கூட ஆயிரம் வழிகள் தெரியும். என்றாலும், அடுத்தவர் மீது வெறுப்பைக் காட்டத்தான் நாம் நம் நேரத்தில் பெரும் பங்கைப் பயன்படுத்துகிறோம்.

தேவையில்லாத ஓட்டை உடைசல்களை வெளியே தூக்கி எறிய மனமில்லாமல் விட்டைக் குப்பையாக வைத்திருக்கும் நபர்களைப் போல, தேவை இல்லாத வெறுப்புகளையும் பழிவாங்கும் எண்ணங்களையும் குரோதத்தையும் நாம் மனதில் குப்பையாகச் சோர்த்து வைத்திருக்கிறோம்.

**மனம் ஒரு குரங்கு. குரங்கு போல் அலைந்து கொண்டே இருக்கும். அதனால்தான் கண்ணதாசன் "ஒருவன் மனது ஒன்பதடா" என்று பாடுகிறார்.**

மனம் ஒரு குரங்கு என்றால் பெருமைப்படவேண்டிய விஷயம் தான்.

குரங்கு மரத்திற்கு மரம் தாவுவது போல் மனம் ஒரீடத்தில் இருப்புக்கொள்ளாமல் அலைவதை குறிப்பிட இவ்வாறு மனம் ஒரு குரங்கு என்று சொல்வழக்கு வந்திருக்கலாம்.

ஆனால் உண்மையில் மரத்திற்கு மரம் தாவுவது தானே குரங்கின் இயல்பு. அது எதற்காக அவ்வாறு தாவுகிறது.

இருப்பிடம்,உணவு, பாதுகாப்பு மற்றும் உடலின் சுறுசுறுப்பை தக்கவைத்துகொள்ள நோக்கமுடன் தாவும் குரங்கை மனிதனோட ஒப்பிட முடியுமா?

குரங்கின் மனதை போல மனிதனின் மனமும் இவ்வாறான

மேம்பாட நோக்கதுடனா இருக்கிறது.?



**“ஒருவன் மனது ஒன்பதடா – அதில்
ஒளிந்து கிடப்பது எண்பதடா!
உருவத்தைப் பார்ப்பவன் மனிதனடா! – அதில்
உள்ளத்தைக் காண்பவன் இறைவனடா!
ஏறும்போது எரிகின்றான்!
இறங்கும்போது சிரிக்கின்றான்!
வாழும் நேரத்தில் வருகின்றான்!
வறுமை வந்தால் பிரிகின்றான்!**

**தாயின் பெருமை மறக்கின்றான்!
தன்னலச் சேற்றில் விழுகின்றான்!
பேய்போல் பணத்தைக் காக்கின்றான்!**

**பெரியவர் தம்மைப் பழிக்கின்றான்!**
**பட்டம் பதவி பெற்றவர் மட்டும்**
**பண்புடையோராய் ஆவாரா?**
**பள்ளிப்படிப்பு இல்லாத மனிதர்**
**பகுத்தறிவின்றிப் போவாரா?"**

நாம் கண்ட இப்பாடலில் உள்ள எந்தக் கருத்தைத் தவறென்பது?

'ஒருவன் மனதில் ஒளிந்து கிடக்கும் எண்ணங்கள் எத்தனையோ? அவை எண்பதையும் தாண்டுமே?

உருவத்தைப் பார்த்தே எடைபோடும் மனிதர் உலகில்; எவனொருவன் உள்ளத்தைப் பார்த்து எடைபோடுகிறானோ அவன் இறைவன்தானே!'

ஒருவனது உயர்வைக் கண்டு எரிச்சலும்; தாழ்வைக் கண்டு மகிழ்ச்சியும் காணும் மனித சமுதாயத்தை இன்றளவும் காண்கின்றோமே!

வசதியாக வாழும்போது சொந்தம் கொண்டாடிட தூரத்தவரும் வருகின்றாரே! வறுமை வந்துவிட்டால் பக்கத்துச் சொந்தமும் பாராமுகமாய்ப் பிரிந்து போவதைப் பார்க்கின்றோமே!

பெற்ற தாயையும் மறந்து, தன் பெருமை பேசும் சுயநலவாதிகள்! பேயைப் போல் பணத்தைக் காக்கும் திமிங்கலங்கள்! பெரியோர் தம்மைப் பழித்துப் பேசும் பண்பற்றவர்! எல்லோரையுந்தான் எங்கும் பார்க்கின்றோமே!

பட்டம் பதவிகள் பெற்றவர் எல்லோரும் பண்புடையோராய் இருக்கின்றார்களா?

அவர்கள்தானே இலஞ்சலாவண்யக் காரியங்களின் கதை மாந்தர்களாய் உலவுகின்றனர்!

பள்ளிப்படிப்பு இல்லாத பாமர மக்கள் தானே சேற்றிலே கால் பதித்து, பாரிலுள்ளோர் சோற்றுக்கு வழிவகுத்து, பண்போடு நடக்கும் பகுத்தறிவு மனிதர்களாய் வாழுகின்றனர்!'

அப்படி அமையும்போது அப்பாடல் ஆன்றோர் அவையிலும், பாமரர் நாவிலும் அற்புதமாய் நடமாடத்தானே செய்யும்!

இதோ.......பார்ப்போமே!

## மனம் தூய்மை அடைய மகரிசி வழிகாட்டுகிறார்.

மனமானது நம்மைப் பல்வேறு கோணங்களில் அதன் போக்கிற்கு இழுத்துச் சென்று விடுகிறது.

இதற்குக் காரணம் மனமானது பல்லாயிரக் கணக்கான விஷயங்களைக் குப்பைகளாக தன் ஆழத்தில் மலைபோலக் குவித்து வைத்திருக்கிறது.

எனவே நாம் ஒன்று நினைக்கும் போது அது, அதன் தொடர்புள்ள வேறு ஏதாவது ஒன்றைக் குறித்த சிந்தனைக்கு நம் அறிவை மடை மாற்றி விட்டு விடுகிறது.

எனவே நம் இலக்கும் நோக்கமும் தடம் மாறி விடுகின்றது. இப்படிப்பட்ட சூழலில் வாழந்து கொண்டிருக்கிற நாம் மனதை ஒரு நிலைப்படுத்துவது எவ்வாறு சாத்திமாகும் ?

எனவே, புதிய வீட்டிற்குள் குடி புகுவதற்கு முன் அதில் உள்ள குப்பைகள், தூசு, ஒட்டடைகளை அகற்றி சுத்தம் செய்து, சுத்தமாகக் கழுவ வேண்டும்.

ஹோமம் முதலியவற்றைச் செய்து பழைய நாற்றத்தைப் போக்கி, அதற்குப் பிறகே குடியேறுவது போல, நாமும் நம் மனதில் மலைபோலக் குவிந்துள்ள நாற்றமடித்த பழைய குப்பைகள் ஒத்த எண்ணங்களின் சம்ஸ்காரங்களை அடியோடு அழிக்க வேண்டியது அவசியமாகிறது.

அப்போதுதான் மனம் தூய்மை அடைந்து ஒருநிலைப்படுவது சாத்தியமாகும்.

சரி, வீடு தூய்மையடைந்து விட்டால் மட்டும் போதுமா ? உடனே குடி புகுந்து விட முடியுமா ? என்று கேட்டால், முடியாது.

ஏனென்றால் அங்கு நாம் வாழ்வதற்குத் தேவையான புதிய நல்ல பொருட்களை கொண்டு வந்து, அந்தந்த இடத்தில் வைக்க வேண்டுமல்லவா ?

தீய எண்ணங்களை அகற்றி அதிகளவில் நல்ல எண்ணங்களை மனதில் நிரப்ப வேண்டும்.

"எண்ணமே எக்காலத்திற்கும் வாழ்க்கையின் சிற்பி

எண்ணி எண்ணிட இனிதே பயக்கும்."

அது போல நம் மனதில் நன்மைகளை நிரப்ப வேண்டும். நன்மைகளை நிரப்புவதற்காகவே தீமைகளை அழிக்க வேண்டும்.

நன்மைகள் நிரம்பிய மனதில் தீமைகள் மறுபடியும் நுழைய முடியாமல் போய் விடுகிறது. ஆனால், கொஞ்சம் தீமை ஒட்டிக் கொண்டிருந்தாலும் அது மீண்டும் உள்ளே நுழைந்து விடும். வியாதி,.

கடன், தீ இந்த மூன்றையும் சுத்தமாக அழித்து விட வேண்டும். இல்லை என்றால் மீண்டும் பற்றிக் கொள்ளும்.

இதில் தீ என்பதைத் தீமை என்றும் கொள்ளலாம். இப்படி தீமைகளே இல்லாமல் தூய்மையடைந்த உள்ளத்தில்தான் தெய்வீகப் பேராற்றல் வந்து நிரம்புகிறது. இத்தகைய இலட்சித்தை அடைவதே ஆன்மிகம் எனப்படுகிறது.

மனத் தூய்மை என்பது படிப்படியாக நடக்கக் கூடியது. அதற்கான முயற்சிகள் செய்பவர்களுக்கு ஒவ்வொரு கட்டமாக மாற்றங்கள் நிகழ்ந்து வரும்.

-----

எல்லாவற்றையும் வெறுத்துத், துறந்து துறவறத்தை மேற்கொண்டாலும் மனத்தூய்மை என்பது அடையும் வரை ஆன்ம தரிசனம் என்பது வாய்க்காது.

புத்தர், பட்டினத்தார், பத்ரகிரியார் போன்ற ஞானிகளின் வரலாற்றினை படித்துப் பார்க்கும் போது இதைப் புரிந்து கொள்ளலாம்.






ஒருவருக்கு ஞானம் என்பது வாய்த்து விட்டால் அவர் இறைவனை அடைவதையே விரும்புவார். அதற்குப் பிறகு அவர் உலகாய வாழ்வை விரும்ப மாட்டார்.

துரியம், துரியாதீதம் என்பதெல்லாம் ஒரு அடையாளச் சொற்களே. ஒருவர் துரிய நிலைக்குப் போய் விட்டார் என்றால் ஞானத்தை அடைய அதன் வாசலை நெருங்கி விட்டார் என்றுதான் கொள்ள வேண்டும்.

ஆன்ம ஒளி மனதில் படும் போதுதான் அறிவு செயலுக்கு வருகிறது. தூய்மையற்ற மனதில் படும் போது தீய எண்ணங்களாகவும், பின் தீய செயல்களாகவும் ஆகி விடுகிறது.

தீய என்று சொல்வதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். ஆன்ம இயல்புக்கு மாறான, ஆன்மாவிலிருந்து ஜீவனை பிரித்து, விலக்கி வைக்கின்ற யாவும் தீயவையே. இதற்குக் காரணம் புறப் பார்வை, புற நோக்கு, புலன் இச்சை போன்றவைகளாகும்.

நம் முன்னோர்கள் சொல்வது என்னவென்றால் இந்த பிரபஞ்சமாகிய ஜகத் என்பதே நம் மனதின் பிரதிபலிப்புதான் என்கிறார்கள்.

அதாவது " மனோமாத்ரம் ஜகத்" என்பது வாக்கு. ஆகையினால், தூய்மையடைந்த மனம் கொண்டவருடைய இந்த பிரபஞ்சம் குறித்த பிரதிபலிப்பும் தூய்மையானதாகவே இருக்கும் என்பதை சொல்லத் தேவையில்லை.

எனவேதான் மனதைத் தூய்மைப்படுத்துவது மட்டுமே அனைத்து யோகங்களிலும் மையக் கருத்தாக உள்ளது.

நம் உணர்வுகளையும், எண்ணங்களையும் பதிவு செய்து வைத்திருப்பதுதான் மனம்.

இதில் எண்ணமானது செயல்படத் தூண்டும் போது, அந்தச் செயல் மனதில் புதிய வடிவங்களை உருவாக்குகிறது.

இப்படி மனம், புத்தி, சித்தம், அஹங்காரம், எண்ணம் எல்லாம் ஒரு வட்டமாக இருந்து புலன் வழியாக புறப் பொருள்களை நுகர்ந்து புதுப்புது பதிவுகளை உண்டாக்கிக் கொண்டே இருக்கிறது.

பிறகு புதுப்புது செயல்களாக மலர்கிறது. இந்தப் புறப் பதிவுகள் அனைத்தும் ஆன்மிக மேம்பாட்டிற்குத் தடையை ஏற்படுத்தக் கூடியவைகளே.

யோகமானது இந்தத் தீய வட்டச் சுழற்சியின் அடிப்படையையே அழித்து விடுகிறது. எனவே மனம் அமைதி அடைகின்றது.

அவ்வப்போது எழும் எண்ணங்களையும் சோதித்து, அடக்கி, வேரிலேயே கிள்ளி விடுவதால் யோகியின் சுய அறிவு வேலை செய்கிறது.

அதாவது தன் சுய அறிவில் ஆன்மாவின் ஒளி பிரகாசிப்பதே ஆன்மிக ஞானம். வேறொன்றுமில்லை.

நன்றாகக் கவனித்துப் பார்த்தால் புறவுலகப் பொருள்கள் மேல் கொள்ளும் பற்றுதான் நமது மனதின் இந்த தீய வட்டச் சுழற்சிக்குக் காரணமாக இருக்கிறது.

பற்று எனும் கயிறை அறுத்தால்தான் படகை செலுத்தி இந்த சாஹரத்தைக் கடக்க முடியும்.

நண்பர்கள் நான்கு பேர் பரிசலில் ஏறி ஆற்றின் அக்கரையில் நடந்து கொண்டிருக்கும் திருவிழாவைக் காணச் சென்றனர்.

அங்கு சென்றதும் நன்றாகக் குடித்து விட்டு போதை தலைக்கேற தங்கள் ஊர் செல்வதற்காக ஆற்றங்கரைக்கு வந்தனர்.

அங்கிருந்த பரிசலில் ஏறி அமர்ந்து கொண்டு துடுப்பு வலிக்க ஆரம்பித்தனர். விடிய விடிய துடுப்பு வலித்தும் ஊர் வரவேயில்லை.

பொழுதும் விடிந்தது, அவர்கள் போதையும் தெளிந்தது. அப்போதுதான் பார்த்தார்கள் பரிசல் அவர்கள் ஏறிய இடத்திலேயே சுற்றிக் கொண்டே இருந்தது.

ஏனென்றால், அவர்கள் பரிசலைக் கரையில் கட்டியிருந்த கயிற்றை அவிழ்க்கவே இல்லை.

இதுதான் நம் நிலையும். சுயஞானம் பெறாத எந்த மனிதனும் மயக்கத்தில் இருக்கிறான். பற்று எனும் கயிற்றை அறுத்தால்தான் சுயஞானம் ஏற்படும்.

சுயஞானம் பெற்றவனே ஆன்மிக ஞானத்தைப் பெற முடியும். கீதை சொல்வது என்னவென்றால், ஞானத்தைப் போல தூய்மை தரும் பொருள் இவ்வுலகில் வேறெதுவுமில்லை என்பதுதான். அத்தகைய ஞானத்தைப் பெற்றுத் தருவது மனத் தூய்மையே.

# 25. மயக்கமா? கலக்காமா?

நம்மைப் பற்றி நாமே எதிர்மறையாக அல்லது தாழ்வாக நினைப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

ஏதாவது தவறாக சென்றாலும் அதை பற்றி கவலைப்பட வேண்டாம். ஏனென்றால் இதோடு உலகம் முடிவதில்லை. எப்போதும் உங்களை உயர்வாகவே எண்ணுங்கள். வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்.

**"மயக்கமா? கலக்கமா?**

**மனதிலே குழப்பமா?**

**வாழ்கையில் நடுக்கமா?"**

**வாழ்க்கை என்றிருந்தால் பிரச்சனையும் இருக்கும் என்பதை முதலில் மனப்புர்வமாக ஒப்புக் கொண்டாக வேண்டும்.**

**"பிரச்சனையே இல்லாத வாழ்க்கைதான், குழப்பமே இல்லாத வாழ்க்கைத்தான் எனக்கு நிம்மதி தரும் என்று நீங்கள் தீர்மானித்திருந்தால், மன்னிக்கவும்…உங்கள் மனசு நிம்மதி பெற வழியே இல்லை.**

மயக்கமும் கலக்கமும் இருந்தால் வாழ்வில் குழப்பம்தான் தான் வரும். அதன் விளைவால் வாழ்க்கையில் எதைக் கண்டாலும் நடுக்கமாகத்தான் இருக்கும்.

அதற்கு ஒரே தீர்வு, எதில் மயக்கம்? எதனால் கலக்கம்? ஏன் குழப்பமும் நடுக்கமும் என்று நமக்குள் நாமே கேள்வி கேட்டால் தான் சரியான பதில் கிடைக்கும் என்று வலியுறுத்துகிறார் கவிஞர்.

மயக்கம் என்றால் மாயை என்றும், மாணா மனநிலை என்றும் குறிப்பிடுகிறார்.

எது உண்மை என்று தெரியாத நிலையும், அல்லது, தெரிந்த பிறகும் புறம் தள்ளும் மனநிலையைத் தான் மாயை என்கிறார் வேதாத்திரி மகரிசி.

இதனால் அறிவானது எழுச்சி பெறாமல் மயங்கிய நிலையில் இருக்கும்போது கலக்கமும், குழப்பமும், நடுக்கமும் இருக்கத்தான் செய்யும்.

இந்த மாய வலையில் இருந்து மீள்வதற்கு என்ன வழி? என சிந்திக்கத் தொடர்வோமா?

**“வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்**

**வாசல் தோறும் வேதனை இருக்கும்**

**வந்த துன்பம் எதுவென்றாலும் - வாடி நின்றால் ஓடுவதில்லை**

**எதையும் தாங்கும் இதயம் இருந்தால்**

**இறுதி வரைக்கும் அமைதி இருக்கும்”**

வாழ்க்கை என்பது தனிப்பட்ட ஒருவனை மட்டும் சார்ந்தது அல்லவே.

சுற்றமும் நட்பும் சூழ்ந்திருப்பது தானே வாழ்க்கை. அப்படிப்பட்ட பல்வேறு உறவுகளோடு நட்பு பாராட்டி வாழ்வதே வாழ்க்கையின் வேதமாகும்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு தன்மையில் இருக்கும்போது விளைவுகளும் வெவ்வேறாகத் தானே இருக்க முடியும். அவைகள் இன்பமாகவோ, துன்பமாகவோ இருக்கலாம்.

எதுவாக இருந்தாலும் அதே தன்மை என்றும் நீடிப்பதில்லையே. மாறிக்கொண்டே இருப்பது தானே வாழ்க்கை. இதப் புரிந்து கொண்டால் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவம் வரும்.

அப்போது அமைதி என்பது தானாக நிலைக்கும் என்பதை கவிஞர் உறுதிபட எடுத்துரைக்கிறார்.

## வேதாத்ரியின் வாழ்க்கைப் பாடத் திட்டத்தில்;

வாழ்க்கை என்பது உறவுகளால் சூழப்பட்ட சக்கரம். அது எப்போதும் சுழன்று கொண்டே இருக்கும்.

தான், குடும்பம், சுற்றம், ஊர், உலகம் இப்படி அனைவர்களோடும் இணைந்து தானே உள்ளோம்.

ஒவ்வொரு உயிருக்கும் ஒவ்வொரு தேவைகளும், ஆசைகளும் இருக்கும்போது அவைகள் எல்லோருக்கும் பொருத்தமுள்ளதாக இருக்க முடியாது. !

குழந்தைகளுக்கு கரடி பொம்மை பிடிக்கும் என்றால், குழந்தையின் தந்தைக்கோ நிஜ கரடியோடு விளையாடப் பிடிக்கும், தாய்க்கோ கரடியைக் கண்டாலே பயம்.

இப்படி அவர்களின் ஆசைகள் அவர்களுக்கு இன்பத்தைத் தரும். ஆனால் மற்றவர்களுக்கு அது வேதனை என்று கூறுவது சரியாகுமா?

யாருக்கு எது மகிழ்ச்சியைத் தருகிறதோ அதைக் கண்டு மற்றவர்கள் ரசிக்கலாம், இல்லையேல் விட்டுவிடலாம். இதில் வேதனைப் படுவதற்கு என்ன இருக்கிறது.

காலம் மாறும்போது எல்லாம் மாறிப்போகும். எதுவும் நிரந்திரமாக நிலைக்கப் போவதில்லை என்ற கணிப்பு தெயரியாததால் தான் மனதில் அமைதி இல்லாமல் போகிறது.

இல்லறத்தை இன்ப அறமாக நோக்குவதும், இம்சை அறமாக நோக்குவதும் மனம் தான் காரணமாக இருக்கமே தவிர வேறு எதுவும் இல்லை.

மனதைப் பற்றி தெரிந்து கொண்டால் மணம் வீசும் வாழ்க்கையாக வாழலாம் என்று மனதைப் பற்றிய அனைத்து நுணுக்கங்களையும் அலசி ஆராய்ந்து கொடுத்து இருக்கிறார் மகரிஷி அவர்கள்.

வாருங்கள் மனதிற்குள்ளாக நுழைந்து மனதைக் கண்டு மணம் பரப்புவோம்.

**“ஏழை மனதை மாளிகையாக்கி**

**இரவும் பகலும் காவியம் பாடு**

**நாளைய பொழுதை இறைவனுக்கு அளித்து**

**நடக்கும் வாழ்வில் அமைதியைத் தேடு**

**உனக்கும் கீழே உள்ளவர் கோடி**

**நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு”**

**உனக்கும் கீழே உள்ளவர் கோடி**

**நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு”**

மனத்தால் மட்டுமே எப்படி வேண்டுமானாலும் இருக்க முடியும். ஒரு ஏழை பணக்காரனாகவும், பணக்காரன் ஏழையாகவும் எண்ணிக் கொள்ள முடியும்.

மனத்தால் என்னும்பொது சுகமாக இருக்கும் பட்ச்சத்தில் ஏனோ மனதிற்கு பிடித்தவாறு எண்ணுவதற்கு மனதினால் முடிவதில்லை.

இப்படி மனதைக் கொண்டு மகிழ்வாக இருக்கும் எண்ணங்களோடு வாழ்ந்தால் மனம் எப்போதும் காவியம் இசைத்துக்கொண்டே தானே இருக்கும்.

**‘நேற்று என்பது உடைந்த பானை,**

**இன்று என்பது கையில் இருக்கும் வீணை’**

நாளை என்பது இறைவனின் ஆணை’

என்று ஒரு ஞானி கூறியிருப்பது போல, இன்று இந்த ஷனத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் நிகழ்வோடு ஒன்றி நின்றால் மயக்கம் எது? கலக்கம் தான் எது? இன்று நம்முடைய எண்ணமே நாளைய செயலாகிறது.

ஆக, மனத்தைக் கொண்டு நல்லதையே நினைத்தால் நாளை விளைவாக வருவது அமைதியைக் கொடுக்கத் தானே செய்யும்.

இங்கு இருப்பது நான் என்ற ஒரு தனிப்பட்ட மனித உருவம் மட்டுமல்ல. இன்னும் எத்தனை ஆயிரம் கோடி பேர் வாழ உள்ளார்கள், நமக்கு முன் வாழ்ந்திருப்பார்கள்.

அவற்றை எல்லாம் நினைத்துப் பார்த்தால் நாம் எவ்வளவு மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை உணர முடியும் என்பதை தெள்ளத் தெளிவாக விளக்கியுள்ளார் கவியரசர் அவர்கள்.

நிம்மதி என்பது எங்கோ எட்டடாத தூரத்திலோ, உயரத்திலோ இல்லை, நம்முடைய மனதிற்குள் தான் இருக்கிறது என்பதால் மனமதை செம்மை படுத்தி நிம்மத்தியோடு வாழ வகுத்து விட்டார் கவிஞர்.

## <u>மகரிஷியின் பார்வையில் மனதின் ஓட்டங்கள்;</u>

**“மனம் புலன் உணர்வினில் மயங்கிட மாயை ஆம்**

**மனம் உயிர் வெளியினில் மருவித் தோயிந்திட**

**மனம் விரிதரிவினும் மாபதம் எய்திடும்**

**மனம் அறிவாகிய மனிதனும் தெய்வமே.**

**மனம் மாய என்பார்கள் மனநிலை மாற்றத்தை**

**மனம் மாய்வதே இல்லை மனம் மெய்ப்பொருளாகி**

**மனமே அறிவாக மறுபிறப்பு எய்திடும்**

**மனம் அறிவான பின் மரணமில்லா நிலை.**

**மனமது இயற்கையின் மாபெரும் நிதியலோ**

**மனமதைத் தாழ்த்தினால் மயக்கத்தால் துன்பமே**

**மனமதை உயர்த்தினால் மட்டில்லா இன்பமாம்**

**மனத்தில் உளஎல்லாம் மற்றெங்கு தேடுவீர்?"**

மனதைக் கொண்டு எந்நிலைக்கும் போகலாம். எந்நிலையையும் அடையலாம் என்பதற்கு இந்தப் பாடல் ஒன்றே சாட்சியாகவும், உறுதுணையாகவும் இருக்கிறது!

உடலுக்கு அழிவு உண்டு, ஆனால் மனத்திற்கோ அதில் எழும் எண்ணத்திற்கோ அழிவு இல்லை.

அழியாத நிலை வரும்போது அதுவே அறிவாகி நிறைபதமான மரணமில்லா இறைத்தன்மையோடு நிலைக்க முடியும்.

மனதால் மட்டுமே தாழவும் முடியும், உயரவும் முடியும். தாழ்த்தவும் முடியும், உயர்த்தவும் முடியும். தாழ்ந்து போகவும் முடியும், உயர்ந்து நிற்கவும் முடியும்.

இது இயற்கையால் வழங்கப்பட்ட வரம். மனம் மகிழ்ச்சியுற்று இருந்தால் அமைதி தானாக உணர் முடியும் தானே! நடந்து முடிந்ததை நினைத்துப் பார்த்தால் சலிப்பு வருகிறது,

ஆனாலும் அதையே நாடுகிறது பழக்கத்தின் வழியால். இதனால் மேலும் சலிப்பு கூடுமேதவிர மகிழ்ச்சிக்கு இடமேது? சிந்திப்போம்.

நாளை நடக்கவிருக்கும் செயல்களில் மனம் ஈடுபட்டால் பயம் உண்டாகிறது.

ஏனெனில் தற்போது நாம் மனமாக இல்லை என்பதால் தான். அந்தந்த நேரத்தில், அந்தந்த தன்மையோடு இணைந்திருக்க பழகிக் கொண்டால் சலிப்பும், பயமும் பறந்து போகும்.

அமைதி மட்டுமே ஆட்கொள்ளும் நம்மை என்று மகரிஷி தன் ஆய்வில் மேற்கொண்டு விளக்கியுள்ளார்.

மனதை செம்மை படுத்தி மனதிற்குள்ளாக மறைந்திருக்கும் மகிழ்ச்சியின் வாசற் கதவை திறப்போம். அங்கே நிம்மதி என்ற உறவுகளோடு நட்பு கொண்டாடி அமைதி என்னும் அருட் கடலில் ஆழ்ந்திருப்போம்!

# 26. **“அவன் தான் இறைவன்”**

**“பூஜ்ஜியத்திற்குள் ஒரு ராஜ்ஜியம் கொண்டு புரியாமல் இருப்பான் ஒருவன்**

**அவனை புரிந்து கொண்டால் அவன் தான் இறைவன்....!!!**

இதுவரை நாம் பூஜியத்தைப் பற்றி நாம் அறிந்த உண்மை என்னவென்றால் ஒன்றுமில்லாதது என்றும், சூன்யம் என்றும் தான் அனுபவத்தில் கண்டறிந்துள்ளோம்.

ஆனால் சிந்தாவாதிகள் கூறும் விளக்கம் நமக்கு புதிதான புதிராக இருப்பது போலத் தோன்றும். வாருங்கள் பூஜ்ஜியத்திற்குள் நாமும் நுழைந்து பார்ப்போம். என்ன தான் இருக்கிறதென்று.

**பூஜ்யம்** ; எந்த ஒன்றும் ஒரு புள்ளியில் தானே ஆரம்பிக்கும். அப்படி ஒரு புள்ளியில் ஆரமபித்து அந்த புள்ளியிலேயே வந்து முடிந்தால் அதுவே பூஜ்யத்தின் சிறப்பு எனலாம். அதனையே முழுமை என்றும், பூரணம் என்றும் கூறலாம் தானே!

## "பூரணத்திலிருந்து வெளிப்படுவது பூர்ணம்" - **ஆதி சங்கரர்.**

பூஜ்ஜியத்திற்குள் ஒரு ராஜ்ஜியம் இருப்பதை உணராத வரையில் குழப்பமும், தடுமாற்றமும் தான் நிலவும். புரிந்து கொண்டால் அந்த வாழ்க்கை பூஜ்ஜியம் என்றும் பூரணம் குணம் என்றும் நமக்கு தெரிய வரும்.

அந்நிலையை உணரும்போது தான் உணர்ந்தவர் இறைவன் ஆகிறார் என்று கவிஞர் நமக்கு எடுத்துரைக்கிறார்.

பூரணத்தில் இருந்து தான் எதுவானாலும் தோன்ற முடியும். அப்படி தோண்டியதால் தான் நாமும் பூரணத்தை புரிந்து கொள்ள முடியும். அந்நிலையை அடைய முடியும் என்று வேதாத்திரி மகரிசிவிளக்கம் அளிக்கிறார்.

**"வெள்ளாவிக்குள் இருந்து, மேலிருந்து கீழ் விழுந்து**

**உள்ளுறை சுத்தம் செய்வான் ஒருவன்**

**அவனை உணர்ந்து கொண்டால்**

**அவன் தான் இறைவன்"**

துணியில் கரை பட்டுவிட்டால் வெள்ளாவியில் வைத்தால் போய்விடும்.

ஆனால் மனதில் கரை பட்டால் எந்த வெள்ளாவி வைத்து கரை போக்க முடியும் என்று சிந்தித்து தெளிந்தவனுக்கு மேலும் கரை பட வாய்ப்பில்லை தானே!

மனதில் கரை ஏற்படுவதற்கு மூன்று காரணங்கள் தான் என்று கூறுகிறார் மகரிஷி. அவை

'ஆணவம், கன்மம், மாயை' என்று. ஆணவம் என்றால் தான், என்ற அதிகாரப் பற்று, தனது என்ற பொருள் பற்று என்றும்

கன்மம் என்றால் பழி வாங்கும் முயற்சி என்றும்,

மாயை என்றால் எது உண்மை என்று கண்டறிய முடியாத மயக்க நிலை என்றும் வகுத்துக் காட்டுகிறார்.

**"வான வெளிப் பட்டணத்தில் வட்ட மதி சக்கரத்தில்**

**ஞான ரதம் ஓட்டி வரும் ஒருவன் - அவனை**

**நாடி விட்டால் அவன் தான் இறைவன்"**

வான வெளியில் உள்ள இரகசியங்களை அறிந்து கொள்ளல் கூடிய வாய்ப்பு மனிதனுக்கு மட்டுமே உண்டு.

அப்படி அறிந்து வான்வெளி என்ற பட்டணத்தில் வலம் வந்தால் ஞானம் எனும் ரதம் கைகூடி வரும் என்று ஞான வாசலை திறந்து வைக்கிறார் கவிஞர்.

## மகரிஷியோ

"வெட்டவெளி என்ற பானைக்குள்ளே

வேகுது பார் ஆண்ட கோடி எனும் அரிசி"

என்று வெட்டவெளியை பெறும் பானை என்றும், அண்டங்கள் அணைத்தும் பானைக்குள் வேகும் அரிசி என்றும் அந்த அரிசியால் செய்த பொங்கல் தான் ஞானப்பொங்கல் என்று மெட்டு கட்டி நம்மை ஞானத் தேரில் பயணிக்க வைக்கிறார்.,

**"அஞ்சு மலர்க் காட்டுக்குள்ளே, ஆசை மலர் பூத்திருந்தால்**

**நெஞ்ச மலர் நீக்கிவிடும் ஒருவன் - அவனை**

**நினைத்துக் கொண்டால் அவன் தான் இறைவன்"**

ஐந்து புலன்களைக் கொண்டு தான் வாழ்வை ரசிக்க முடியும். அதனால் தான் அவைகளை ஐந்து வகையான மலர்களைக் கொண்ட காடு என்றும், அதில் ஆசை என்ற தன்மை தான் ஆறாவது தன்மையாக மனிதனிடத்தில் அமைந்திருக்கும் மனம் என்றும் கூறுகிறாரோ கவிஞர்.

ஆறாவது மலராக மலர்ந்திருப்பது மனித மனம் அந்த மனதைக் கொண்டு மலர்வனத்தில் வலம் வந்தால் ஆசிய மலர் நீங்கி அறிவு மலர் மலரும் என்றும், இந்த அறிவு மலர் மலர்ந்திருப்பதை உணர்ந்தவர்கள் தான் இறைவன் என்கிறார்கள் இருவரும்.

**"தென்னை இளநீருக்குள்ளே தேங்கியுள்ள ஓட்டுக்குள்ளே**

**தேங்காயைப் போல் இருப்பான் ஒருவன் - அவனை**

**தெரிந்து கொண்டால் அவன் தான் இறைவன்"**

தென்னை மரமாகவும், இளநீராகவும், அந்த இளநீருக்குள்ளே இருக்கும் சுவையாகவும் இருப்பது இறைத்தன்மையைத் தவிர வேறில்லை. என்பதையே அழகாக விளக்குகிறார்.

வெறும் தண்ணீரை மட்டும் உள்வாங்கிக்கொண்டு அந்த நீர் எப்படிப் பட்டதாக இருப்பினும் (தூமையான நீராக இருந்தாலும் சரி, அசுத்தமான நீராக இருந்தாலும் சரி) அதைத் தான் உள்வாங்கிக் கொண்டு சுமார் முப்பது அடி உயரத்திற்கு கொண்டு சென்று பதங்கமடைந்து சுவையும், சக்தியும் நிறைந்த இளநீராக மாற்றும் சக்தி இறைசக்தியைத் தவிர எந்த சக்தியால் மாற்ற முடியும்?

சிந்தித்துப் பார்த்தால் இறைசக்தியின் பேராற்றலையும், பேரறிவையும் உணர முடிகிறது தானே!

**"முற்றும் கசந்ததென்று பற்றற்று வந்தவர்க்கு**

**சுற்றமாக நின்றிருப்பான் ஒருவன் - அவனை**

**தொடர்ந்து சென்றால் அவன் தான் இறைவன்"**

மனிதனானவன் மனித உறவு தான் பலம் என்று கருதி காலப்போக்கில் அந்த உறவுகளால் அவன் அடையும் பலப்பல இன்னல்களை அனுபவித்த பின்பு தான் அந்த உறவுகளில் இருந்து பற்றற்று விடுவதே சாலச்சிறந்தது எனக் கருதிவிட்டு விலகிப்போகும் போதுதான் அவனே இறைவன் ஆகிறான் என்று கவியரசர் சுட்டிக்காட்டுகிறார்.

## மகரிஷியோ

"உறவிலே கண்ட உண்மை நிலை தெளிவு துறவு" என்று புதுமையான கருத்தைக் கொடுத்து நம்மை சிந்திக்க வைக்கிறார்.

மனித வாழ்க்கைக்கு உறவுகள் அவசியம் தான். உறவுகள் இல்லையேல் வாழ்க்கையே இல்லை.

ஆனால் அந்த உறவுகளில் துன்பம் ஏற்படாமல் இருக்க உறவோடும் துறவோடும் இருக்கும் வழியை அழகாக காட்டுகிறார்.

உறவு என்றால் அதில் சிக்கி துன்பப் பட வேண்டாம். உறவில் இருந்து கொண்டே துறவோடு வாழ முடியும்.

இதனால் உறவும் நீடிக்கும். துறவால் துன்பமில்லை என்பதையும் அருமையாக விளக்குகிறார்.

ஆனால் சாதாரண மனித வாழ்க்கையில் உறவு என்றால் எப்போதும் உறவாடிக் கொண்டே இருக்க வேண்டும் என்றும், துறவு என்றால் உறவை விட்டு விலகிச் செல்வது என்பது தான் உலக அனுபவமாக இருக்கிறது.

இந்த நிலையை மாற்றியமைத்து உறவைப் பேணிக்காப்பத்தில் இவர்களைப்போல் உள்ள சமுதாய சீர்திருத்த வாதிகளால் மட்டுமே முடியும் என்பது சத்தியமான உண்மையாகும்.

**"கற்றவருக்கு கண் கொடுப்பான், அற்றவருக்கு கை கொடுப்பான்**

**பெற்றவரைப் பெற்றெடுத்த ஒருவன் - அவனை**

**பின் தொடர்ந்தால் அவன் தான் இறைவன்"**

கற்றவர்க்கு கண் என்பதை ஞானக் கண்ணைத் தான் குறிப்பிடுகிறார்கள். துணையற்றவற்கு துணையாக வந்து கை கொடுக்கும் துணை இறைவன் தான் என்ற விளக்கம் கூறுகிறார்.

பெற்றவரைப் பெற்றெடுத்த இறைவன் என்றால், இறைவனே ஆதியும், அந்தமும் ஆவான்.

அந்த ஆதிக்கு ஆதி இல்லை என்பதால் அதுவே அநாதி என்றும், அந்த அநாதி நிலையை உணர்த்து கொண்டு அவ்வழியைப் பின்பற்றி சென்றால் நாமும் அனாதியோடு ஐக்கியமாகி இறைநிலையுடன் ஒன்றுபடலாம் என்று வழி காட்டுகிறார் மகரிஷி.

**"பஞ்சு படு பாடும் நெஞ்சு படும் பாடறிந்து**

**அன்ச்சுதளைத் தீர்த்து வைப்பன் ஒருவன் - அவன் தான்**

**ஆறுதலை தந்தருளும் இறைவன்"**

மனிதனானவன் உலக வாழ்வில் ஈடுபட்டு அவன் துயருற்ற நிலைக் கண்ட கவிஞர் ஆடிக் காற்றில் அலையும் பஞ்சு போல் அல்லாடுகிற நிலையைக் கண்டு அஞ்சி, நடுங்கி, ஒடுங்கி இருக்கும்

மனிதனின் அவல நிலையைக் கண்ட கவிஞர் ஆறுதல் கொடுக்க இறைவனானவன் வந்தே தீருவான்.

இறைவன் வடிவில்வந்து ஆறுதல் கூறும் விதம் ஆறுதலாகவே இருக்கும் என்று உறுதிபட உறைகிறார் கவியரசர்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் அன்பே இறையாட்சி நடத்திக்கொண்டு இருக்கிறது. அந்த அன்பை உணர மனதில் அமைதி வேண்டும்.

அந்த அமைதிக்கு மனம் அமைதி பெற வேண்டும், மனம் அமைதி பெறுவதற்கு தவமும், தற்சோதனையும் வேண்டும் என்று வழிகாட்டி அன்பு வழிக்கு இட்டுச் செல்கிறார் மகரிஷியார்.

**“கல்லில் இருக்கும் தேரை கண்டு, கருவிலிருக்கும் பிள்ளை கண்டு**

**உள்ளிருந்து ஊட்டுவிப்பான் ஒருவன் - அதை**

**உண்டு களிப்போருக்கு அவனே இறைவன்”**

கல்லிற்குள் இருக்கும் தேரைக்கு எங்கிருந்து உணவு, மற்றும் காற்று கிடைகிறது என்று ஆராய்ந்து பார்த்தால் வியப்பாகத் தானே இருக்கிறது.

மேலும், கருவில் இருக்கும் குழந்தைக்கு உணவாகவும், காற்றாகவும், போதிய வெப்பத்தைக் கொடுக்கும் சக்தி எதுவாக இருக்கும் என்று ஆராய்ந்தால் வியப்பிலும் வியப்பாக அல்லவா இருக்கிறது.

இந்த வியப்பிற்கு பதிலாக வருது யாதெனில், கல்லிருகுள்ளும்,கருவிற்குள்ளும் சக்தியாக இயங்கிக் கொண்டிருப்பது இறை சக்தியைத் தவிர வேறு எதுவாக இருக்க முடியும்?

அந்த சக்தியின் சக்தியை உணர்ந்து கொண்டால் அவனே இறைவன் ஆகிறான் என்பதை ஆழ்ந்த உண்மையை அழகாக வெளிப்படுத்துகிறார்கள் இருவரும்.

**"முதலினுக்கு மேல் இருப்பான் முடிவினுக்கு கீழ் இருப்பான்**

**உதவிக்கு ஓடி வரும் இறைவன் - அவனை**

**உணர்ந்து கொண்டால் அவன் தான் இறைவன்"**

முதல் என்றால் அது மேல் நிலையில் தான் இருக்க முடியும், முடிவு என்றால் அது கீழ் நிலையின் கடைசி நிலை தான் என்றும்,

ஆதியும் அந்தத்தையும் உள்ளடக்கமாக கொண்டுள்ள இறைவன் நாம் எந்நிலையில் இருந்தாலும் நம்மை கை கொடுத்து காப்பான் இறைவன் என்று உறுதிபட உறைகிறார் கவிஞர்.

கடவுள் எனப்படுபவனே மனிதனான் - அவன்

கருத்தியங்கி கருத்தறிந்தான்

கடவுளாய் அனைத்துமே கண்டு விட்டான்

காண்பவனே ஆதி அந்தமாகி நின்றான்" என்றும்

உதவிக்கு பிறரை நாடுவது அவசியமில்லையப்பா , அனைத்தும் உனக்கு இறைவனால் வழங்கப்பட்டுள்ளது என்று இன்னும் நம்மை மேன்மை படுத்துகிறார் மகரிஷி.

**““நெருப்பினில் சூடு வைத்தான், நீரினில் குளிர்ச்சி வைத்தான்**

**கறுப்பிலும் வெண்மை வைத்தான் ஒருவன் - உள்ளம்**

**கனிந்து கண்டால் அவன் தான் இறைவன்”**

நெருப்பு என்றால் உஷ்ணம் என்ற தன்மையும், நீர் என்றால் குளிர்ச்சி என்ற தனமையும் தான் அதனுள் இருக்கும் இறைதன்மை என்றும், கறுப்பில் வெண்மை மறைந்திருக்கிறது அதுவே இறைத்தன்மை என்றும் விவரிக்கிறார்.

ஆக, நெருப்போ, நீரோ, வண்ணமோ ஒரு பொருள் அல்ல அதன் அகத்தன்மையைத் தான் குறிக்கும்.

அது போல இறைவன் என்பது உருவமோ அல்லது பொருளோ இல்லை, இவை அணைத்தும் காந்தத்தன் தன்மையின் தன்மாற்றம் தான் என்ற விஞ்ஞான உண்மையையும், மெய்ஞானத்தின் தன்மையையும் எளிமையாக விளக்குகிறார். இந்த உண்மையை உணர்ந்து கொண்டால் அவனே இறைவன் என்று கூறுகிறார்கள் இருவரும்.

**“உள்ளத்தில் உள்ளொடுங்கி உள்ளுக்குள்ளே அடக்கி**

**உள்ளொன்று காட்டி வைப்பன் ஒருவன் -**

**உருவமில்லா அவன் தான் இறைவன்”**

உள்ளம் = உள் + அம். உள் என்றால் உள்ளிருப்பது. அம் என்றால் உள்ளிருக்கும் சக்தியைக் குறிக்கும்.

அப்படி உள்ளிருக்கும் சக்தியை உணர்ந்து அதற்குள்ளே அடங்கி இருந்தால் உருவமில்லாத இறைவனை அடைய முடியும்.

---

அப்படி உள்ளொடுங்கி இருக்கவே சுயநிலையை அறிய கருதவமே போதுமென்று சாந்தி தவம் என்ற சமத்துவ தவத்தை அறிமுகப்படுத்தி சமாதானத்தை நிலைக்கச் செய்த பெருமை மகரிஷியையே சாரும்.

**“ஒன்பது ஓட்டைக்குள்ளே ஒரு துளி காற்றை வைத்து**

**சந்தையிலே விற்றுவிட்டான் ஒருவன் - அவன்**

**தடம் தெரிந்தால் அவன் தான் இறைவன்”**

உடலில் இருப்பதோ ஒன்பது ஓட்டைகள். அவை கண்களில் இரண்டும், காதுகளில் இரெண்டும், நாசிகளில் இரெண்டும், வாயில் ஒன்றும், பால்குறியில் ஒன்றும், குதத்தில் ஒன்றாகவும் அமைந்திருப்பது உடல்.

ஒன்பது ஓட்டைகள் இருந்தாலும், உடலில் இருக்கும் காற்று துவாரங்களின் வழியாக போதிய அளவு மட்டுமே வெளியேறி மீதமுள்ள காற்றை உடலுக்குள்ளேயே சுற்ற வைக்கும் விந்தையை எண்ணிப் பார்த்தல் விந்தையிலும் விந்தையன்றோ!!!

அந்த விந்தையான் உண்மையை அறிந்து தெளிவு பெற ஒன்பது மைய தவம் கொடுத்து ஞானப் பாதையில் வலி நடத்திச் செல்கிறார் மகரிஷி.

**“கோழிக்குள் முட்டை வைத்து, முட்டைக்குள் கோழி வைத்து**

**வாழைக்கும் கன்று வைத்தான் இறைவன் - அந்த**

**ஏழையின் பேருலகில் இறவன்”**

கோழியில் இருந்து முட்டை வந்ததா? இல்லை முட்டையில் இருந்து கோழி வந்ததா? என்ற கேள்விக்கும்,

வாழைக்குள் கன்றா? இல்லை கன்றால் வாழையா? போன்ற கேள்விகள் காலங்காலமாக கேள்வியாகவே இருந்து கொண்டு தானே இருக்கிறது.

இந்த கேள்விக்கு விடை தருகிறார் வேதாத்திரி

முட்டை தான் முதலில் வந்தது என்று பரிணாமத் தத்துவத்தை கூறிகிறார்.

பஞ்ச பூதங்களில் கூட்டினைப்பால் தாவரம் உண்டானது. அந்த தாவரத்தின் அடுத்த பரிணாமம் முட்டை என்று பிரபஞ்ச தன்மாற்ற விளக்கமும், உயிரினத் தன்மாற்ற விளக்கமும் கொடுத்து நமக்குள் இருக்கும் அஞ்ஞான இருளை போக்குகிறார்.

**"சின்னஞ்சிறு சக்கரத்தின் ஜீவன்களை சுற்ற வைத்து**

**தன்னை மறந்தே இருக்கும் ஒருவன் - அவனைத்**

**தழுவிக் கொண்டால் அவன்தான் இறைவன்"**

சின்னஞ்சிறு சக்கரம் என்றால் உயிரின் சுழற்சி. அந்த உயிரின் சுழற்சிக்கு மையமாக ஒன்பது ஆதாரங்கள் உள்ளன.

ஆதாரமாக விளங்கும் உயிரின் நிலையாக மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிப்பூரகம், அனாகதம்,விசுக்தி, ஆக்கினை, துரியம் என்ற ஏழு சக்கரங்களை சுட்டிக் காட்டுகிறார் மகரிஷி.

அந்த சக்கரங்களின் மீது கவனம் செலுத்தினால் அங்குள்ள தேக்கமோ, குறைபாடுகளோ களைந்து நிறைவால் என்றும் இறைநிலையை உணர அதுவே வழியாகும்.

நம்மை தன்னை மறந்த நிலைக்கு இட்டுச் சென்று இறைவனை உணர வைக்கும் பாங்கு இத்தன்மையை உணர்ந்தவர்களால் மட்டுமே உணர்த்த வைக்க முடியும் என்பதில் எள்ளளவேனும் ஐயளில்லையே.

**“தான் பெரிய வீரனென்று தலை நிமிர்ந்து வாழ்வோருக்கும்**

**நாள் குறித்துக் கூட்டிச் செல்லும் ஒருவன் - அவன்தான்**

**நாடகத்தை ஆட்டு வைத்த இறைவன்”**

தலை நிமிர்ந்து வாழ்பவருக்கும் ‘தான்’ தானென்று கர்வம் கொண்டு பேரோடும், புகலோடும் வாழும் மனிதனுக்கு நரையைக் கொடுத்தும், பல்லை விழச் செய்வதும் நம் மரணத்திற்கு இறைவனால் அனுப்பப்படும் ஞாபகக் கடிதங்கள் என்பது மறந்து விடுகிறான்.

மரணம் நேரிடும் நாளே இறைநிலையின் வாசல். நாம் உலகமென்ற மேடையில் நடிக்க வந்த நடிகர்கள் என்பதை மறக்க வேண்டாம். நாடகமும் முடியும், நடிப்பும் முடியும் என்று ஞாபகத்தைக் கொடுக்கிறார் கவிஞர்.

இறப்பிற்கு பின் உயிரின் நிலை நான்கு பிரிவுகளாக **மகரிஷி** குறிப்பிடுகிறார்.

அவை சாலோக்கியம், சாமீபியம், சாருபியம், சாயுட்சியம் என்று. ஒருவன் இறக்கும் போது அவனுடைய கருமையத்தில் தேங்கி இருக்கும் நிறைவு பெறாமல் இருக்கும் ஆசைகளின் அழுத்தத்திற்கேற்ப உயிரின் நிலை அந்ததந்த நிலையில் இருந்து செயல்படும்.

ஆசைகள் பூர்த்தியான பின் இறைநிலையை அடைய முடியும் என்றும் குறிப்பிடுகிறார்.

ஆசைகளை நிறைவேற்ற அவர்களின் மூலமாகவோ அல்லது ஒத்த கருத்துடைய நபரோடோ தொடர்பு கொண்டு உயிரானது நிறைவடையும் என்று விளக்கம் தருகிறார்.

ஆக, மனிதனாக பிறந்து வாழும் வாழ்கையில் ஆசையை தேக்கி வைக்காமல், முறையான ஆசைக்கு வலிமை கொடுத்து தேவையற்ற ஆசையை விளக்கி வாழ்ந்தால் நம் நடிப்பு முடியும் தருணத்தில் இறைவனோடு ஒன்றி கலந்துவிடும் வாய்ப்பு உள்ளது என்று தெளிவாக விளக்குகிறார் மகரிஷி.

இந்நிலையை உணர்ந்து பின்பற்றி வாழ்பவர் இறைவன் தான் என்பதில் ஐயமில்லை!



# 27. ஞானத்தின் அடையாளம்.

சிந்தையும் செயலும் இணைந்ததே மனிதன். சிந்தைக்கு வேண்டியது இறையுணர்வு. செயலுக்கு வேண்டியது அறநெறி.

சிந்தை, மூலத்தை நினைக்க வேண்டும். செயல், ஞாலத்தை உயர்த்த வேண்டும்.

மூலத்தைப் பற்றிய முழுமையான அறிவு சிந்தனையில் இல்லையேல், ஞாலத்தைப் பற்றிய ஞானம் கிடைத்தல் அரிது. ஞானமில்லாத வாழ்வு இருட்டறையில் நடப்பது போன்று.

## ஞானத்தின் அடையாளம் - கவிஞர்

சிலர் நாக்கிலும், உடம்பிலும் ஊசியைக் குத்திக் கொள்கிறார்கள். சிலர் கூர்மையான ஆணிகளின் மீது படுத்துப் புருளுகிறார்கள். ஒரு சிலர் கண்ணாடித் துண்டுகளை விழுங்கிக் காட்டுகிறார்கள்.

இந்த யோகங்கள் எல்லாம் சரீரத்தின் புறத் தோன்றங்கள். பதப்படுத்தப்பட்டு. பக்குவம் பெற்று விட்டதைக் குறிக்கின்றன.

கடுந்துன்பங்களைத் தாங்கிக் கொள்வதன் மூலம் சரீரம் யோகம் செய்வது போல், பிறர் நமக்குக் கொடுக்கும் துன்பங்களைத் தாங்கிக் கொள்வதன் மூலம் உள்ளம் தவம் செய்கிறது.

தொடக்க கட்டத்தில் சிறிய துன்பங்கூட பெரிதாகத் தெரியும். அது வளர வளர உள்ளம் மரத்துக் கொண்டே வரும்.

ஒரு கட்டத்தில் எதையும் தாங்கிக் கொள்கிற சக்தி வந்துவிடும். துன்பங்களின் மூலம் உலகத்தைக் கற்றுக் கொண்வன், ஒரு ஞானியைவிட சிறந்த மேதையாகி விடுகிறன்.

ஒரளவு துன்பம் வந்தால் அழுகை வருகிறது. தொடர்ந்து துன்பங்கள் வந்து கொண்டே இருந்தல், கடையில் அழுவதற்குக் கூட சக்தி இல்லாமல் போய் வெறுப்பும் விரக்தியும் கலந்த சிரிப்பு வருகிறது.

ஒரு கட்டத்தில் எந்தத் துயரம் வந்தாலும் சிரிப்பது பழக்கமாகி விடுகிறது. அதுவே ஞானம் வந்து விட்டதற்கான அடையாளம்.

“சட்டி சுட்டதடா கை விட்டதடா

புத்தி கெட்டதடா நெஞ்சைத் தொட்டதடா

நாலும் நடந்து முடிந்த பின்னால் நல்லது கெட்டது தெரிந்ததடா

பாதி மனதில் தெய்வம் இருந்து பார்த்துக் கொண்டதடா

மீதி மனதில் மிருகம் இன்று ஆட்டி வைத்ததடா

ஆட்டி வைத்த மிருகம் இன்று அடங்கி விட்டதடா

அமைதி தெய்வம் முழு மனதில் கோயில் கொண்டதடா

ஆரவாரப் பேய்களெல்லாம் ஓடி விட்டதடா

---

ஆலயமணி ஓசை நெஞ்சில் கூடிவிட்டதடா

தர்ம தேவன் கோவிலிலே ஒளி துலங்குதடா

தர்ம தேவன் கோவிலிலே ஒளி துலங்குதடா - மனம்

சாந்தி சாந்தி சாந்தி என்று ஓய்வு கண்டதடா

எறும்புத் தோலை உரித்துப் பார்க்க ஞானம் வந்ததடா

பிறக்கும் முன்னே இருந்த உள்ளம் இன்று வந்ததடா

இறந்த பின்னே வரும் அமைதி வந்து விட்டதடா

இறந்த பின்னே வரும் அமைதி வந்து விட்டதடா

மனம்சாந்தி சாந்தி சாந்தி என்று ஓய்வு கண்டதடா ".

எறும்பின் தோலை உரித்துப் பார்த்ததில் அதன் உள் இருந்து யானை வந்ததாம். (அதைப்போல) அவருடைய இதயத்தின் தோலை உரித்துப் பார்த்ததில் அவருக்கு ஞானம் வந்ததாம். இது ஒரு தத்துவர்த்தமான வரி.





## ஞானம் ஆணவம் - .கண்ணதாசன்.

"நம்மிடம் ஏதுமில்லை" என்று நினைப்பது ஞானம். "நம்மைத் தவிர ஏதுமில்லை" என நினைப்பது ஆணவம்.

ஞானம் பணிந்து பணிந்து வெற்றிமேல் வெற்றியாகப் பெறுகிறது. ஆனால் ஆணவம் நிமிர்ந்து அடி வாங்குகிறது.

நான் என்னும் எண்ணம் ஒருவனுக்கு தோன்றுகின்றதென்றால், அவன் தோல்விகளைச் சந்திக்கத் தயாராகிக் கொண்டிருக்கிறான் என்று பொருள்.

அறிவு குறைவானவர்களுக்கே ஆணவம் வருகிறது. நிறை குடங்களுக்கு அது வருவதில்லை.

வெற்றி மயக்கம் ஏற, ஏற அறிவு தடுமாறி முட்டாள் தனமான தைரியம் தோன்றி, "எல்லாம் நாம்" என்ற எண்ணம் பிறந்து. தடுமாறிக் காரியம் செய்யத் தொடங்கியதும் ஒவ்வொரு தோல்வியாக தொடர்ந்து வந்து ஆணவக்காரனை கூனிக் குறுகச் செய்கின்றன.

ஆணவத்தில் மூலம் வெற்றியோ லாபமோ கிடைப்பதில்லை. அடிதான் பலமாக விழுகிறது. எதற்கும் தான் காரணமல்ல, ஏதோ சக்திதான் காரணம் என்ற எண்ணுகிறவன் ஆணவத்திற்கு அடிமையாவதில்லை. அடக்கத்தில் இருக்கும் சுகம், ஆணவத்தில் இல்லை.

## ஞானநிலைகள் - மகரிசி

"அஞ்ஞானம் அறிவினது ஆரம்ப நிலையாகும்,

விஞ்ஞானமோ அறிவின் வேகநிலை,

மெய்ஞ்ஞானம் அறிவதனின் புரணமாம்,

இஞ்ஞானம் மூன்றும் இயற்கையின் எண்ண நிலை."

என்று ஞானத்தின் நிலைகளை மூன்றாக காட்டுகிறார் மகரிசி

ஞாலத்தின் மூலத்தினை உணர்ந்து அதன் தன்மைகளை ஆராய்ந்தறிவது ஞானத்தின் முதல்நிலை.

அத் தன்மைகளுடைய மூலம் எவ்வாறு ஞாலமாகிறது எனும் "தன்மாற்றச் சரித்திரத்தைத்" தெளிந்துணர்வது ஞானத்தின் இரண்டாம் நிலை.

ஞானத்தின் இருநிலைகளையும் கடந்து, எள்துனையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல் பாவித்து அனைத்துயிருக்கும் ஒத்தும் உதவியும் வாழ்கின்ற பக்குவத்தைப் பெறுதல் ஞானத்தின் மூன்றாம் நிலை.

ஞானத்தின் மூன்றாவது நிலையில் மனித அறிவு முழுமையடைகிறது. "அறிவின் முழுமை அது முகத்தி" என்பார் மகரிசி.

முக்தியின் வெளிப்பாடு அன்பு. அறிவின் முழுமையாகிய முக்தி என்பது நாம் முயன்று முயன்று அடையவேண்டிய நிலை.

# 28.கவலை கவலையில்லாத மனிதன்”

ஆசை தடைபடுத்தும் பொருள்மீது, நபர்மீது ஏற்படும் பொருத்தமில்லா உணர்ச்சி சினம். சினம் செல்லாத விடத்து ஏற்படும்ஓர் கற்பனை வலையாகிய எண்ணமே கவலை.

நினைப்புக்கும் நடப்புக்கும் இடையே வித்தியாசம் வரும்போது இருக்கும் மனநிலையை கவலை என்கிறோம்.

“கவலையில்லாத மனிதன்

உலகத்தை அறிந்தவன் துணிந்தவன் - அவனே

கவலையில்லாத மனிதன்”

இயற்கை ஒட்டிய எண்ணத்தை விட்டு கற்பனையான எண்ணத்தை ஒட்டிச் செல்லும்போது கவலை ஏற்படுகிறது.

கவலை வரக் காரணம் என்ன?

1. உடலிலே நோய் (செயல் விளைவு)
2. உள்ளத்திலே களங்கம் (அச்சம் - திறமையின்மை)
3. வாழ்க்கையில் சிக்கல் (அறிவுக் குறைபாடு)

“பிறக்கும் போதும் அழுகின்றான்

இறக்கும் போதும் அழுகின்றான்

ஒரு நாளேனும் கவலை யில்லாமல்

சிரிக்க மறந்தாய் மானிடனே!......

"பிறக்கும் போதும் அழுகின்றாய்"
ஏன்?
வினை தீர்க்கவே பிறந்தோம்.

ஆனால் உலகியல் வாழ்க்கையில் ஈடுபட்டு, அதிலேயே சுழன்று, மனம் மயங்கி, மாயைக்குள் ஆட்பட்டு, வந்த வினைகளை மறக்காமல் இருக்க வேண்டுமே இறைவா! என்ற மன எச்சரிக்கையின் அறிகுறியாக இருக்குமோ இந்த அழுகை?

"இறக்கும் போதும் அழுகின்றாய்"
ஏன்?
வந்த வினை முடிக்காமல் கடனாளியாக போகின்றோமே! என்ற காரணத்தால் இருக்கலாமோ இந்த கதறல்......!!!

இறப்பு என்பது நம்மைச் சுற்றி இருப்பவர்களுக்கு தான் அதிக துன்பமாக இருக்கிறது. ஏனெனில், இறந்து போனவருக்கு எந்தப் பொறுப்பும், கவலையும் இல்லை. ஆன்மா விடுதலை பெற்றுவிட்டது. நமக்கு என்நாள் விடுதலை கிடைக்குமோ என்ற ஏக்கத்தாலும் இருக்கலாமோ இந்த கதறல்....!!!

"வினைப்பதிவாம் சுமை விடுத்து தூய்மை பெறவே,
நினைவாய் உடலெடுத்தேன் நிலம் மீது விழுந்த பின்னே,
வந்த வினை மறந்தேன், எனை மறந்தேன், உனையும் மறந்தேனே,
இறைவா என்னுள் நீ இருந்து எனை மீட்டு"

"ஒரு நாள் ஏனும் கவலை இல்லாமல் சிரிக்க மறந்தாய் மானிடனே!"

---

கவலை என்னும் வலை - கவிஞர்

தூக்கமே இல்லாத சந்நியசிகள் கூட தூக்கத்தைப் பற்றி சிந்திக்கிறார்கள்.

மரணமே இல்லாத பரமாத்மா கூட மரணத்தைப் பற்றி பேசுகிறது. எங்கே எது இல்லை? காட்டில் மட்டுமதானா முள் இருக்கிறது? அது ரோட்டிலும் இருக்கிறது. பார்த்து நடப்பவன் காட்டில்கூட நடந்துவிட முடியும். பாராமல் நடப்பவன் ரோட்டில்கூட நடக்க முடியாது.

கவலை என்பது ஒரு வலை. தனக்குத்தானே அதை வீசிக் கொள்பவர்கள் உண்டு. பல நேரங்களில் ஆண்டவனும் அதை வீசுவது உண்டு.

மரணத்துக்குத் தப்பிய மீன்கள், நீர்வற்றி விட்டால், மரணத்துக்குத் தப்புவது இல்லை. காலம் தான் வித்தியாசம். சில முந்திக் கொள்கின்றன. சில பிந்திக் கொள்கின்றன.

ஒவ்வொருவன் கண்ணுக்கும், அடுத்தவன் சந்தோஷமாக இருப்பது போலவே தெரிகறது. அவன் பார்க்கும் கண்ணாடி நல்ல கண்ணாடியாக இருந்தால்தானே, அவன் முகத்தைக் காட்டும்.

வண்டியின் மீது மற்றவர்கள் பாரத்தை ஏற்றுகிறார்கள். வண்டி தானாக ஏற்றிக் கொள்வதில்லை. ஏற்றிய சுமையை எளிமைப்படுத்த வழிஎன்ன? ஞானம் என்னும் தண்ணீரை நிறையக் குடிக்க வேண்டும்.

".இயற்கையை அறிந்து ஒத்து எண்ணுபவர் எண்ணம்

எப்போதும் எவ்விடத்தும் கவலையாய் மாறாது."

என்பது வேதாத்திரியம்.

கவலை என்பது என்ன? எவ்வாறு அதை வளப்படுத்தி போக்கிக் கொள்வது? என்ற முறையை எல்லாம் வகத்துக் கொடுக்கின்ற பயிற்சியே கவலை ஒழித்தல் பயிற்சியாகும். இது மனவளக்கலை மன்றங்களில் சொல்லித் தரப்படுகிறது.

இதனால் மனம் மிகவும் இலசாகி விடுகின்றது. அயிரம் ஆயிரம் ஆசைகளை உருவாக்க அவற்றையெல்லம் அடக்கி வைத்துக் கொண்டு உள்பாரம் கொண்டிருந்த நிலை இப்பயிற்சியினால் மாறி, அந்தப் பளு இல்லாததினாலே மனம்அமைதியாக இருக்கும்.

கவலைகளை நான்கு வகையாகப் பிரித்து ஒழித்து விடலாம் என்று வழிகாட்டுகிறார் வேதாத்திரி மகரிசி.

1. அனுபவித்தே தீர்க்க வேண்டியவை (தீடீர் மரணம் - நோய் -புயல் - வெள்ளம்.
2. தள்ளிப்போட வேண்டியவை (மகன் வேலை - மகள் திருமணம்)
3. அலட்சியப்படுத்த வேண்டியவை (பிறருடைய பொறாமை - வீட்டுப் பெரியவர்களின் அர்த்தமற்ற குற்றச்சாட்டுகள்)
4. உடனடியாகசத தீர்க்க வேண்டியவை (அறுவைசிகிச்சை - கடன் -பாகப்பிரிவினை)

கவலை ஒழிப்பு பழகுங்கள். அச்சமின்மை - மெய்யுணர்வு - உடல்நலம் - மனநிறைவு இவையுண்டாகும்.

கவலையில்லாது சதந்திரமாக இருக்கக்கூடிய மனம்தான் மேல்நிலையைப் பற்றிச் சிந்திக்க முடியும். இறைநிலையை அடையவும் முடியும்.

மன்னர் கிருஷ்ண தேவராயரும், மதியூகி அப்பாஜியும் அடிக்கடி நகர்வலம் செல்வர். அப்போது மாறுவேடம் அணிந்தே செல்வர்.

ஒருநாள் காலை வேளையில் இருவரும் வீதி வழிச் சென்று கொண்டிருந்தபோது, பள்ளிச் சிறுவர்கள் சிலர் வீதியில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

அவர்கள், "சடுகுடு' விளையாட்டில் தீவிரமாக அக்கறை காட்டிக் கொண்டிருந்த போது, கோவில் யானை ஒன்று அந்த வழியாக வந்து கொண்டிருந்தது.

அது பழக்கப்பட்ட யானையானதால் அங்கு விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகள் யாருமே பயப்படமாட்டார்கள்.

அன்று அந்தப் பிள்ளைகள் சடுகுடு விளையாடிக் கொண்டிருந்தபோது, அந்த யானை அவர்களுடைய விளையாட்டினூடே வேண்டுமென்றே புகுந்து வந்தது.

ஆகவே, மற்றப் பிள்ளைகள் அனைவரும் ஒதுங்கி வழிவிட்டு நிற்கவும், ஒரு சிறுவன் மட்டும் அதைப் போக விடாமல், அதன் தந்தம் இரண்டையும் பிடித்து உந்தித்தள்ளி அதைப் பின்புறமாகத் தள்ளிக் கொண்டே சென்றான்.

அந்த யானை என்னதான் முயன்றும் அது வெற்றி பெற முடியவில்லை. ஆம், அது தோல்வியே அடைந்தது. ஆகவே, வேறு வழியின்றி ஓரமாகச் சென்றது.

இவ்விதம் வீரமுடன் அந்த யானையை எதிர்த்து நின்று வெற்றி கண்ட அச்சிறுவனைப் பலர் பார்த்து மகிழ்ந்ததைப் போல, மன்னர் கிருஷ்ண தேவராயரும், அப்பாஜியும் பார்த்து மகிழ்ச்சியடைந்தனர்.

மன்னர், அப்பாஜியிடம், ""பார்த்தீர்களா அப்பாஜி அவன் எவ்வளவு துணிகரமாக நின்று வெற்றி பெற்று விட்டான்! அது பழகிய யானையாக இருந்தாலும் கூட அது வெற்றி பெறுவதற்கு எவ்வளவோ முயன்றது. ஆனால், அந்த யானையால் வெற்றி பெற முடியவில்லையே!" என்றார்.

""உண்மைதான் அரசே, அவன் வெற்றி பெறுவதற்கு அவனிடமுள்ள துணிவுதான் முதல்காரணம்; இரண்டாவது காரணம் அவனுடைய ஆற்றல். வெறும் துணிவு மட்டும் இருந்தால், அவனால் வெற்றி பெற முடியாது. ஆற்றலும் வேண்டும்," என்றார்.

அந்தச் சிறுவன் பார்ப்பதற்கு மிகவும் எளிமையாகத் தான் காணப்பட்டான். அவனுடைய உடையும், தோற்றமும் வறுமை நிலையிலுள்ளவன் என்பதையே காட்டின.

""இவ்வளவு வறுமை நிலையில் இருந்தாலும் எவ்வளவு பலசாலியாக இருக்கிறான் பாருங்கள். உண்மையில் அவனைப் பாராட்டத்தான் வேண்டும்," என்றார் மன்னர்.

அதைக் கேட்ட அப்பாஜி புன்னகையுடன், ""மன்னர் அவர்களே, இன்னும் ஒரே வாரத்தில் இவனுடைய இந்த ஆற்றலை இல்லாமல் செய்து விடட்டுமா?" என்று கேட்டார்.

""என்ன செய்யப் போகிறீர்கள்? எவ்விதம் அவனுடைய ஆற்றலை ஒரு வாரத்திற்குள் அழிக்க முடியும்?" என்று கேட்டார் மன்னர்.

""இன்னும் ஒருவாரம் பொறுத்துப் பாருங்களேன். இதே கோவில் யானை இவனைப் தூக்கிப் பந்தாடப் போகிறது பாருங்கள்," என்றார் அப்பாஜி சிரித்த வண்ணம்.

அன்று மாலையே அப்பாஜி அந்தப் பையனுடைய இருப்பிடத்தையறிந்து அங்கு சென்றார். அவனுடைய ஏழைத்தாயாரைக் கண்டு பேசினார்.

"“தாயே, உன் மகன் என்ன செய்கிறான், படித்துக் கொண்டிருக்கிறானா? எந்த வகுப்பில் படிக்கிறான்?" என்று கேட்டார்.

"“அவனைப் படிக்க வைக்க வேண்டும் என்பது தான் எனது ஆசை. எவ்விதம் அய்யா முடிகிறது. நாலு வீடுகளில் வேலை செய்து அவனுக்குச் சோறு போடுகிறேன். அப்பன் இல்லாத பிள்ளையாயிற்றே, இன்னும் கொஞ்சம் வளர்ந்து விட்டால், ஏதாவது வேலை செய்ய அனுப்பிடலாம்," என்றாள்.

"“அம்மா சொல்லுகிறேன் என்று தப்பாக எண்ணாதே, இந்த வயதில் நீ இவ்வளவு கஷ்டப்பட்டு அவனுக்குக் கஞ்சி ஊற்ற வேண்டாம். இந்தப் பருவத்திலேயே அவனுக்குத் தன்னுடைய பொறுப்பை, கடமையை உணர்த்த வேண்டும். நாலுகாசு சம்பாதிக்கும் ஆர்வத்தையும் இப்போதே உண்டு பண்ண வேண்டும். அப்போதுதான் அவன் கொஞ்சம் வளர்ந்த பின்னர் சிறப்புடன் திகழ்வான். இப்போது அவனுக்குக் கொடுக்கப்படும் பயிற்சி அவனுக்குப் பெரிதும் உதவும்," என்றார்.

"“ஆமா ஐயா... நீங்கள் சொல்வது சரிதான். அப்போது தான் அவனுக்குப் பொறுப்பு வரும் என்பது உண்மைதான்," என்றாள் அந்த விதவைத் தாயார்.

அன்று அவன் மத்தியான வேளையில் வந்து சேர்ந்தான். என்றும் அவனுக்கு என்று எடுத்து வைக்கப்படும் உணவை அவன் தாயார் எடுத்து வைக்கவில்லை.

"“என்னம்மா, இன்று எனக்குக் கஞ்சி எதுவும் இல்லையா அம்மா?" என்று கேட்டான்.

"“இல்லையேயப்பா. எத்தனை நாளைக்குத் தான் நான் கஷ்டப்படுவது? என்னால் இன்று எங்கும் செல்ல முடியவில்லை.

நாளையிலிருந்து நீ ஏதாவது வேலைக்குச் சென்று காசு கொண்டு வந்தால்தான் கஞ்சி வைக்க முடியும். உன் வயதுப் பிள்ளைகள் எல்லாரும் வேலைக்குப் போய் தானே அவர்களுடைய அம்மா, அப்பாமார்களைக் காப்பாற்றுகின்றனர். நீயும் எங்காவது சென்று வேலை செய்து கொஞ்சமாவது காசு கொண்டுவா. என்னால் முடியவில்லை, அதனால்தான் உன்னிடம் சொல்லுகிறேன்," என்றாள் அந்தத் தாயார்.

அவன் அவ்விதமே உட்கார்ந்துவிட்டான். அதுவரை அவன் வேலை பற்றி எண்ணியே பார்த்ததில்லை. வயதான தாயாரின் உழைப்பில் எதையோ சாப்பிட்டு ஊரைச் சுற்றிக் கொண்டிருந்தான்.

எங்கெங்கோ சுற்றினான். நினைத்தவுடன் வேலை கிடைக்கவா செய்யும்?

மண் வெட்டியுடன் சிலர் கழனிகளில் வேலை செய்யச் சென்றனர். அவ்விதம் சென்று வேலை செய்வதற்கு அவனிடம் மண் வெட்டியும் கிடையாது.

மண் வெட்டியை இரவலாகப் பெற்றுச் சென்றாலும் அவன் அதுவரை மண் வெட்டி பிடித்து, வேலை செய்து பழகவுமில்லை. என்ன செய்வான் பாவம்!

மாலை வேளையில் சோர்ந்து போய் வந்தான். இருந்த உணவைத் தன் மகனுக்குக் கொடுத்துவிட்டு, அவள் பட்டினியாக இருந்தாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை பள்ளிப் பிள்ளைகள் வீதியில் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களுடன் அந்தப் பையனும் வந்து விளையாடிக் கொண்டிருந்தான்.

அன்று அரசரையும் அழைத்துக்கொண்டு மாறுவேடத்தில் அங்கு நின்று கொண்டிருந்தார் அப்பாஜி. கோயில் யானை வரும் நேரம்.

மன்னரிடம் அந்தப் பையனைப் பற்றிக் கூறி, அவனுடைய செயலைப் பற்றியும் கூறி, அவனைக் கவனிக்கச் சொன்னார்.

---

கோவில்யானை தலையை ஆட்டிய வண்ணம் வந்து கொண்டிருந்தது. சாதாரணமாக அந்த யானையின் தந்தங்களைப் பற்றிப் பிடித்துப் பின்னால் தள்ளி விளையாடும் அவன் அன்றும் ஆவலுடன் சென்று அதனை தள்ள முயன்றான்.

"அது அவனைச் சட்டை செய்யாமல் அவனைத் தள்ளிக் கொண்டு சென்று விட்டது. உடன் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் கைகொட்டி அவனைக் கேலி செய்தனர்.

அதுவரை அந்த யானையை அடக்கி வந்த அவனால் அன்று, வெற்றி கொள்ள முடிய வில்லையே...' என்ற கவலையால் அவ்விதமே இருந்துவிட்டான்.

இவைகளையெல்லாம் மாறுவேடத்தில் பார்த்துக் கொண்டு இருந்த மன்னர், அப்பாஜியின் கரங்களைப் பற்றி, ""நீங்கள் சொன்னது போன்று செய்து விட்டீர்களே, என்ன மாயம் செய்தீர்?" என்று கேட்டார்.

""ஒரு மாயமும் செய்யவில்லை," என்று கூறிய அப்பாஜி, அந்தப் பையனுடைய விதவைத் தாயாரிடம் சென்று கூறிய விஷயத்தைச் சொன்னார். தாயார் தன் மகனிடம் கூறிய வண்ணம் "தனக்கு ஒரு வேலை கிடைக்க வில்லையே...' என்ற கவலைதான் அவனுடைய ஆற்றல் அழியக் காரணம்," என்றும் கூறினார்.

""உண்மைதான் அப்பாஜி, நாம் அவனிடம் முன்னர் கண்ட கட்டான உடலமைப்பு இப்போது இல்லை. ஆனால், நீங்கள் சொன்னபடிக் கவலைதான் அவனுடைய ஆற்றல் முழுவதையும் அழித்துவிட்டது.

இத்தகையவர்களை நாம் அழைத்து வந்து வாய்ப்புக் கொடுத்தால், நமக்கு உதவியாக இருப்பர்," என்றார் மன்னர்.

அப்பாஜியும் அதை ஒப்புக் கொண்டார். அன்று மாலையே சேவகன் ஒருவனை அழைத்து அந்தப் பையனுடைய இருப்பிடம் பற்றிக் கூறி அம்மாவையும், மகனையும் அழைத்து வரச் செய்தார் மன்னர்.

அந்தப் பையனுக்குத் தங்கள் படைப் பிரிவில் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப் பட்டது. பயிற்சியின் போது ஓரளவு ஊதியமும் கொடுக்கப்பட்டது.

வயதான அந்தத் தாயார், அவர்கள் இருவரையும் கையெடுத்துக் கும்பிட்டு ஆனந்தக் கண்ணீர் வடித்து நின்றாள். அந்தப் பையனும் நல்ல உண்மையான வீரனாகத் திகழ்ந்து வந்தான்.

# 29. தூக்கத்தில் நிம்மதி

படுத்தவுடன் தூங்குவன் தான் உலகிலேயே பெரிய பணக்காரன்.

மாத்திரைப் போட்டு தூங்குபவன் உலகில் மிகப் பெரிய ஏழை.

தூக்கத்தைப் பற்றி அர்த்தமுள்ள இந்த மதத்தில் கண்ணதாசன் அருமையான கட்டுரையைப் பதிவு செய்திருப்பார்.

“தூக்கம் உன் கண்களைத் தழுவட்டுமே

அமைதி உன்நெஞ்சில் நிலவட்டுமே - அந்தத்

தூக்கமும் அமைதியும் நானானால்.....,"

என்றொரு பாடலைக் கேட்டடிருப்பீர்கள்.

இது ஷேக்ஸ்பியர் வரிகளின் தமிழாக்கம், பேராமியோ ஜீலியட்டில். . . . .



shutterstock.com • 88123624



"Sleep Swell upon this Eyes

Peace in The Breast,

Would I Were Sleep and Peace.

So Sweet to Rest !

"தூங்குவது போலும் சாக்காடு - தூங்கி

விழிப்பது போலும் பிறப்பு"

என்றான் வள்ளுவன்.

தூக்கத்தில் கிடைக்கும் மயான அமைதி வேறு எதிலே கிடைக்கப் போகிறது! அது கவலைகளை மூடி வைக்கிறது.

கண்ணீரை ஒத்தி வைக்கிறது. நாளையப் பொழுது பற்றிய கேள்விக்குறிகள நிறுத்தி வைக்கிறது.

“தூக்கம் கெட்டுப் போன சில ஆண்களின் உடம்பைப் பரிசோதனை பண்ணிப் பார்த்தாங்களாம்.

அவங்களுடைய எதிர்ப்புச் சக்தி 320 சதவிகிதம் குறைச்சலா இருந்ததாம். எதிர்ப்புச் சக்தி குறைஞ்சா தும்மல்லேயிருந்து தொடங்கி எல்லாத் தொந்தரவும் வந்து சேரும்.”

மானிட தர்மத்தை ஒழுங்காக நிறைவேற்றலே மனிதன் அடிக்கடி தூங்கித் தூங்கி விழித்து எழுகிறான்.

நோயாளியைக் கேள்வி கேட்கும் டாக்டர் “தூக்கம் வருகிறதா? பசி எடுக்கிறதா? என்ற இரண்டு கேள்விகளைத் தானே கேட்கிறார். உறக்கம் கெட்டவன் வாழ்ககையே நரகம்.

தலையணைக்கு கிழே துயரங்களைப் புதைத்து வைத்துக் கொண்டு திரும்பிப் படுப்பவனுக்கு வேறு எந்த வகையிலே நிம்மதி?

மாத்திரை சாப்பிட்டுத் தூங்ககிறவன் கவலைகள் சாகடிக்கவில்லை.

மரணம் இறுதியாக வரும்வரை வாழ்ககையில் , மூன்றின் ஒரு பகுதி தூக்கமாக இருக்க வேண்டும்.

அதற்கென்ன வழி?

“வீடுவரை உறவு வீதி வரை மனைவி

காடுவரை பிள்ளை கடைசிவரை யாரு….?”

...பாடு, தூங்கிவிடு.

செத்துப் போனல் யாரும் கூட வரப் போவதில்லை. இருக்கிற காலத்தில் துடிபென்ன? திகைப்பென்ன?

"நடப்பது நடக்கட்டும். நாளை பார்த்துக் கொள்ளலாம்" என்று நினைத்து விடு. நிம்மதியான தூக்கம் வரும்.

அர்ச்சுணனுக்கு குடாகேசன் அல்லது தூக்கத்தை வென்றவன் என்பது ஒரு பெயர். நிதைத்தபடி நினைத்தபொழுது தூங்கவோ அல்லது தூங்காதிருக்கவோ அவனுக்கு இயலும்.



மனதை வென்றவனுக்கே இது இயலும். மனதை வென்றவன் எதற்கும் கலங்கான்.



மாவீரன் நெப்போலியன் நினைத்தபோது தூங்கிவிடுவான். குதிரையில் அமர்ந்து கொண்டே ஓரிரு நிமிடங்கள் தூங்குவதும் நெப்போலியன் இயல்பு.

ஒரு நாட்டை வென்றவவுடன் அடுத்த நாட்டிற்குச் செல்லும் வழியல் குதிரையில் அமர்ந்து கொண்டே இரண்டு மணிநேரம் மட்டும் ஆழ்ந்து தூங்குவதும் உண்டு. இந்த இரகசியம் பற்றி நெப்போலியனே சொல்கிறான்.

“எனது மூளைப்பகுதியில் பல கூண்டுகள் போன்று, பல அறைகள் உள்ளன. ஒவ்வொரு வேலையை நினைக்கும் பொழுது அதற்குரிய அறைக் கதவு திறந்து வேலையைச் செய்யும். நான் தூங்க வேண்டுமாயின் எல்லா அறைகளையும் மூடிவிடுவேன். தூக்கம் தானாக வந்து விடும்.”

தூக்கத்திற்கு விஞ்ஞான விளக்கம் தருகிறார் மகரிசி.



தூக்கத்தைப் பற்றியும் நாம் அனைவரும் அறிந்து கொள்வது அவசியமாகும்.

நமது உடலில் உற்பதிதயாகும் சீவகாந்த ஆற்றல் உடலியக்கம் மற்றும் மனஇயக்கம் என்னும் இருண்டு வகையிலும் செலவாகிக் கொண்டிருக்கிறது.

சீவகாந்தமாக இருக்கும் அலைநிலையே, அவ்வப்போது அந்த அலையின் திணிவு வேறுபாடு உண்டாவது இயல்பு.

மனஇயக்கம், உடலியக்கம் இரண்டிலுமே சீவகாந்தம் செலவாகின்றது.

இந்த இரண்டு இயக்கங்களும் ஒரே நேரத்தில் இயங்க வேண்டுமெனில் சீவகாந்த அலைக்கு ஓரளவிற்குக் கூடுதலான அழுத்தம் தேவை.

சிறிது நேரம் தொடர்ந்து உடல், மனம் என்னும் இருவகையிலும் இயக்கங்கள் நடைபெறுவதால் சீவகாந்த அலையின் அழுத்தம் மிகவும் குறைந்து விடும்.

உடலில் உள்ள உயிர்ச் சக்தியின் அளவுக்கேற்பத்தான் சீவகாந்தம் உற்பத்தியாக முடியும்.

இரண்டு இயக்கங்களும் நடைபெறும்போது. அந்த இரண்டு வகை இயக்கங்களுக்கும் போதுமான காந்த ஆற்றல் கிடைப்பதில்லை.

இருப்பினும், உடலில்பரு உடலின் வெளிஉறுப்புக்களின் இயக்கமும்,உள்ளுறுப்புகளான நுரையீரல், இரைப்பை, இதயம், இரத்த ஓட்டம் முதலியவற்றின் இயக்கமும் வேண்டி உள்ளது.

இதனால் ,சீவகாந்த இருப்பு உடலில் குறையும்போது, பருவடல் இயக்கங்களுக்கு மாத்திரம் சீவகாந்தம் எடுத்துக் கொள்ளப்படும்.

மனஇயக்கப் பிரிவுக்கு ஆற்றல் பற்றாமையனால் அது சோர்வடையும்.

அந்த நேரத்தில் புலன் இயக்கம் நடைபெறுவதோ, தன்னவிருப்பப்படி உடல் உறுப்புகளை இயக்குவதோ சார்தியமாவதில்லை. அந்த நேரத்தில் ஏற்படும் சோர்வுதான் தூக்கமாக மாறுகிறது.

குறிப்பிட்ட நேரம் தூங்கிவிட்டால் மன இயக்கத்துக்கான செலவு நின்று போகவே, தானாகவே சீவகாந்த ஆற்றல் சிறிது சேமிக்கப்பட்டு சீவகாந்த அலை இயக்கம் மன இயக்கத்தில்அழுத்தம் அதிகரிக்கும்.

அந்த நேரத்தில் மன இயக்கம் தூண்டப்பெற்றுதூக்கம் நீங்கி, விழிப்பு உண்டாகி, உடலியக்கம், மன இயக்கம் இரண்டுமே செயல்படத் தொடங்கிவிடும்.

தூக்கம் என்பது கண்களுக்கு மட்டுமல்ல. உடல், மனம் அனைத்திற்கும் சம்பந்தப்பட்டது.

கண்கள் விழித்திருந்தால் காணும் காட்சியில் மனம் சிக்குண்டு அதைக் கணிப்பதிலேயே காலம் சென்றுவிடும் என்பதால் கவியரசர் தூக்கம் கண்களை தழுவட்டும் என்று கண்ணதாசன் கூறியிருக்கிறார்.

அமைதி இருந்தால் மட்டுமே ஒருவனால் தூங்க முடியும். மனம் அமைதி நிலையில் இல்லையென்றால் தூங்கினாலும் தூக்கத்தால் விளையும் பயனை அனுபவிக்க முடியாது என்பதைத் தான் அமைதியையும் தூக்கத்தையும் ஒன்றாக இணைத்து காட்டிவிட்டார் கவியரசர்.

மனித உடலில் இரத்த ஓட்டம், வெப்ப ஓட்டம் காற்றோட்டம், காந்த ஓட்டம் உயிரோட்டம், மின்சார ஓட்டம் இப்படி பல ஓட்டங்கள் ஓடிக்கொண்டு இருக்கிறது.

இதில் மின்சார ஓட்டத்தில் குறைவு ஏற்படும்போது பசி உணர்வும், தூக்க உணர்வும் ஏற்படுத்தி சமன் செய்கிறது.

உணவைக் கொண்டு பசி உணர்வு சமன்பாடு ஆனபின் அந்த உணவை சீரணிக்க உடலுக்கும், மனதிற்கும் ஓய்வு தேவைப்படுகிறது.

அப்போது தூக்கம் என்ற உணர்வைக் கொடுத்து உடலை செப்பனிடும் நேரமாக ஆக்கிக்கொண்டு செயல்படுகிறது.

உடல் அமைதி அடைய படுத்துக் கொள்வதும், மனம் அமைதி பெற கண்களை மூடிக்கொண்டும் செயலாற்றுகிறது. ஆக, கண் அயர்ந்தால் தான் மனம் அமைதி நிலையை அடையும், அப்போது தூக்கம் தானாக வரும்.

உடல் போதிய ஆற்றல் பெற்ற பின் தானாக விழிப்பு கொள்ளும் நிலையே தூக்கம் போகும் நிலையாகும்.

தூக்கத்திற்கு அடிப்படை செயல் கண்கள் அயர வேண்டும் என்பதே என்பதை மகரிஷியும் எடுத்துக் கூறுகிறார்.

**“காலையில் நானோர் கனவு கண்டேன் – அதைக்**

**கண்களில் இங்கே எடுத்து வந்தேன்**

**எடுத்ததிலேதும் குறைந்துவிடாமல்**

**கொடுத்துவிட்டேன் உன் கண்களிலே”**



தூக்கத்தில் கிடைக்கும் மயான அமைதி வேறு எதிலே கிடைக்கப் போகிறது!

அது கவலைகளை மூடி வைக்கிறது. கண்ணீரை ஒத்தி வைக்கிறது. நாளையப் பொழுது பற்றிய கேள்விக்குறிகளை நிறுத்தி வைக்கிறது.

இதுவே கனவாக தூக்கத்தில் சங்கமிக்கிறது. கனவில் வருவது இன்ப நிகழ்ச்சி என்றால் ஏற்றுக்கொள்ளும் மனது, துன்ப நிகழ்ச்சி என்றால் மறுப்பதும், துன்புறுவதும் ஏனோ!

இன்ப கனவாக இருந்தாலும், துன்ப கனவாக இருந்தாலும், கனவில் வரும் அத்தனை தோற்றங்களும் நாமே அன்றி வேறில்லையே என்பதை **தமிழ்வாணன்** அவர்கள் "**கீதை காட்டும் பாதை**" என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

**"நான் ஒரு புலியைக் கொன்றால் என்ன?**

**புலி என்னைக் கொன்றால் என்ன?"**

**'ஒரு பெண்ணை தழுவுவதும் - நானே!**

**என்னைத் தழுவிய அந்தப் பெண்ணும் - நானே!**

**என் மனைவியால் திட்டப்படவனும் - நானே!**

**என்னை திட்டிய மனைவியும் நானே!**

**பாம்பால் கடிக்கப்படவனும் - நானே!**

**அந்த பாம்பை அடித்த நண்பரும் - நானே!**

**உடம்பில் நெருப்பு பற்றி எறிவதும் - நானே!**

**அந்த நெருப்பும் - நானே!**

**ஆற்று வெள்ளத்தில் குதித்தவனும் - நானே!**

**அந்த ஆற்று வெள்ளமும் - நானே!'**

இதை உணர்வு நிலையில் உணர்ந்தால் இன்ப கனவுகளில் மகிழ்ச்சி அடையவும் மாட்டோம், துன்பக் கனவுகளால் வருத்தம் அடையவும் மாட்டோம்.

இப்படி கண்காளால் கண்ட மகிழ்ச்சியுற்ற கனவை கலைக்காமல் கொண்டு வந்து தமது கனவிற்கு காரணமானவரிடம் கண்களைக் கொண்டே கண்களுக்கு பரிசளிக்க கண்ணையே தம் பெயரில் கொண்டிருக்கும் கண்ணதாசனால் மட்டுமே முடியும். ;

விழித்திருக்கும்போது வருவது எண்ணங்கள் என்றும். உறங்கும்போது எழும் எண்ணங்களின் மின் கசிவு அல்லது எண்ணங்களின் கசிவே கனவு என்பதாகும் என்ற விஞ்ஞான விளக்கம் கொடுக்கிறார் மகரிசி..

கனவுக் காட்சிகள் அத்தனைக்கும் நிலைகளனாக விளங்குவது நம்முடைய ஆன்மாவே அன்றி வேறில்லை.

கனவில் காணும் அத்தனை காட்ச்சிகளும் பிரமமே தான் காட்சியாகிறது.

விழித்திருக்கும் போது உண்ட உணவு கனவில் பசியைத் தீர்ப்பதில்லை. அதுபோல கனவில் உண்ட விருந்து கண் விழித்தப்பின் பசியை தீர்ப்பதில்லை.

எனவே கனவென்னும் நினைவில் அனுபவிப்பதோடு நிறுத்திக் கொண்டு அதை நினைவில் கொண்டு அல்லல் பட வேண்டாம் என்றும் கூறுகிறார்.

**“மனமெனும் மாளிகை திறந்திருக்க**

**மையிட்ட கண்கள் சிவந்திருக்க**

**இருகரம் நீட்டி திருமுகம் காட்டி**

**தவழ்ந்து வந்தேன் நான் உன்னிடமே”**

மனம் என்பது ஏகபோக மாளிகை. அதில் அனைத்தும் உண்டு. அப்படிப்பட்ட மாளிகை திறக்கும்போது மிகமிக நுண்ணிய செயல்களைக் கூட நம்மால் கணிக்க முடியும்.

ஏனெனில் கனவில் தோன்றுவது உணர்வு என்பதால். உணர்வை வெளிப்படுத்தவும், அதைக் கண்டு உணரவும், உணர்வான மனதால் மட்டுமே முடியும்.

அப்படி உணர்வால் உணர்ந்த உணர்வை, உணர்வைக் கொண்டே உணர்த்துகிறார் கவியரசர்.

“**மனமது இயற்கையின் மாபெரும் நிதியலோ**” என்று **மகரிஷி** குறிப்பிடுகிறார்.

மனமே இயற்கையின் சிகரம் என்றும், அம்மனதைக் கொண்டு தம்முடைய எண்ணங்களால் கொண்ட வாழ்க்கையை உயர்த்தவும் முடியும் தாழ்த்தவும் முடியும் என்று அறுதியிட்டு கூறுகிறார்.

எனவே மனதைக் கொண்டே மனம் என்னும் மாளிகையில் மணம் கமழும் மாண்புமிக்க வாழ்வை வாழ்ந்து காட்டுவோம் மகிழ்சியாகவே!

# 30. ஆறு மனமே ஆறு

மனமே கலங்காதே! ஆற்றுப் படுத்திக்கொள். ஆண்டவன் வகுத்த ஆறு கட்டளைகளின் படி வாழ்வது ஒன்றும் சிரமம் இல்லை. அதற்கு தேவை மனம் மட்டுமே, என்று கூறி ஆறுதல் கூறி தெளிய வைக்கிறார் கவியரசர்.

மனம் என்றால் என்ன? அது இயங்கும் விதத்தை பற்றிய தெளிவு இருந்தால் மனதை ஆற்றுப் படுத்துவது சுலபம்!

மனம் என்ற விளை நிலத்தை எண்ணம் என்ற ஏர் கொண்டு உழுது பார்த்தல் அதில் அடங்கியுள்ள தன்மைகள் மேலும் கீழுமாக புரளும். அப்போது கண்டு கொள்ளலாம் மனதின் மந்திரத்தை.

மகரிஷி - “மனம் என்ற தத்துவம் இறைநிலையின் நிழல் போன்றது.”

“மனம் இல்லாத மனிதரும் இல்லை, மனதை முழுமையாக உணர்ந்த மனிதரும் இல்லை.”

வாருங்கள் அன்பர்களே மனம் என்னும் நிலத்தை உழத்தொடங்குவோம்.

மனம் என்றால் என்ன ? மகரிஷி கூறும் விளக்கங்கள்.

1. "உயிரின் படர்க்கை நிலையே மனம்."

உயிருக்கு கவசமாக இருப்பது மனித உடல். பல்லாயிரக்கணக்கான உயிர்த் துகள்கள் உடல் முழுவதும் சுற்றோட்டமாக சுழலும் போது புலன்களாகிய கண், காது, மூக்கு, நாக்கு, தோல் ஆகியவற்றின் வழியாக நம்முடைய உயிர் தான் படர்க்கை நிலையில் செயல்பட்டு உணரப் பெறுகிறது என்ற பேருண்மையை எடுத்துக் கூறுகிறார் மகரிஷி.

2. "சீவகாந்த அலையே மனம்"

அப்படி உயிர்த் துகளானது உடல் முழுவதும் சுற்றும் போது அதிலிருந்து வெளியேறும் அலை தான் சீவகாந்தம் எனவும், அந்த அலை தான் மனம் என்றும் குறிப்பிடுகிறார்.

3. "எண்ணங்களின் தொகுப்பே மனம்."

"எண்ணமே இயற்கையதன் சிகரமாகும்

இயற்கையே எண்ணத்தில் அடங்கிப் போகும்......."

"எண்ணம் இல்லையெனில் ஏதுமில்லை

எண்ணத்திற்கு அப்பால் ஒன்றுமில்லை..."

என்று எண்ணமே தனித்து வந்தால் அது எண்ணம் என்றும், தொடர்ச்சியாக வந்தால் அது மனம் என்றும் விளக்குகிறார்.

எப்படி கதம்பம் என்ற ஒரு மலர் இல்லை, ஆனால் பல மலர்களை தொடுத்துக் கட்டினால் அது கதம்பமோ அதுபோல, மனம் என்ற ஒன்று தனித்து இல்லை பல எண்ணங்களின் கோர்வையே மனமாகும்.

மனதைப் பற்றி தெரிந்து கொண்டோம், இனி அதை எப்படி ஆற்றுப் படுத்துவது சுலபம் தானே! தொடங்குவோமா...!!!

“அந்த ஆண்டவன் கட்டளை ஆறு “

யார் ஆண்டவன்? ஆண்டவன் என்றால் ஆள்பவன் என்ற பொருளும் சரிதானே! மனதை ஆள்பவன். ஆக, மனதை யாரெல்லாம் தம் வசத்தில் வைத்து ஆண்டு கொண்டு இருக்கிறோமோ அவனே ஆண்டவன்.

- “சேர்ந்து மனிதன் வாழும் வகைக்கு தெய்வத்தின் கட்டளை ஆறு”

மனிதனால் தான் குடும்பமாகவும், சமுதாயமாகவும் சேர்ந்து வாழ முடியும். அப்படி வாழும் மனிதனுக்கு தான் தெய்வத்தின் ஆறு கட்டளையும் பொருந்தும்.

## குடும்பத்திற்கு மகரிஷி கூறும் விளக்கம்.

“பிறவிப் பெருங்கடல் நீந்துதல் என்னும் உயரிய நோக்கத்தை அடைவதற்கு தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதற்கு குடும்பமும், குடும்ப அமைதியும் இன்றியமையாதவை.

குடும்பம் என்பது வாழ்க்கை துணைவர், பெற்றோர், குழந்தைகள், இவர்களின் கூட்டமைப்பாகும். மேலும் இல்லற நன்மைக்காக

“இல்லம் கொண்டு பொருள்கள்
ஈட்டிக் காத்து துணையாம்
நல்லாளோடு (மனைவி) இன்புற்று
நாட்டுக்கு ஈகை புரிந்து
பல்லுயிரும் இன்புற ஆம்
பரந்த நிலையில் வாழும்
நல்ல வாழ்வில் அறமாம்
நாடு நிலமும் ஏற்கும் நெறி”

என்று வகுத்துக் கட்டுகிறார் இல்லறத்தில் மேன்மை கண்ட மகா ஞானி.

- “ஒன்றே சொல்வார் ஒன்றே செய்வார் உள்ளத்தில் உள்ளது அமைதி”

நம்முடைய சொல்லில் எப்போதும் ஒரே கருத்து, அது திடமாகவும், மாறுதலுக்கு உட்படாமலும் இருக்க வேண்டும்.

அப்படி சொன்ன சொல்லில் இருந்து மாறாமல் செயல்படுத்தும் உள்ளம் கொண்டவர் மனதில் தான் அமைதி நிலை கொள்ளும் என்று கவிஞர் அழகாக கூறுகிறார்.

எப்போது சொல்லும், செயலும் ஒன்றாக இருக்க முடியுமோ என்பதற்கு மகரிஷி, தனி மனிதன் மனதில் அமைதியும் கடமை உணர்வும் இருந்தால் மட்டும் தான் மாறுபடாமல் இருக்க முடியும். அதற்கு வாழ்க்கை நல சங்கல்பமாக

“உடல்நலம், அறிவு, உயர்புகழ், செல்வம், கடமை இவற்றில் யான் கருத்தோடு உயர்வேன்

வாழ்வேன் வளமுடன் வாழ்நாள் வரைக்கும்

வாழப் பிறரையும் வாழ்த்தி வாழ்ந்திடுவேன்”

என்று அன்றாடம் உரைக்கும் பட்சத்தில் மனித மனம் உறுதியும் தெளிவும், பெற முடியும்.

அப்போது அவன் மனம் அமைதி அடைந்து தடுமாறாமல், தான் என்ன செய்கிறானோ அதை செய்து முடிக்கும் வல்லமை தானாக வந்து போகும் என்று உறுதி படக் கூறிகிறார்.

- “ இன்பத்தில் துன்பம், துன்பத்தில் இன்பம் இறைவன் வகுத்த நீதி”

வாழ்க்கை என்பதே இன்ப, துன்ப சக்கரம் தானே! இன்பமே ஒருவருக்கு இருப்பாக இருப்பதில்லை.

துன்பமே ஒருவருக்கு துணையாக நிலைப்பதில்லையே! வெறும் இன்பம் மட்டும் இருந்தால் வாழ்க்கை சலித்துப்போகும்.

துன்பம் மட்டும் நிலவினால் வாழ்க்கை நிர்கதியாகிவிடும் என்பதால் தானோ என்னவோ இயற்கை இரெண்டையும் மாறி மாறி கொடுத்து மனிதனை செப்பனிட்டும், உற்சாகப் படுத்தியும், முயற்சியை பெருக்கியும் வாழச் செய்கிறது.

## இன்ப துன்பத்திற்கு மகரிஷி அளிக்கும் விளக்கம்.

“இன்பமென்று தனியாக ஏதுமில்லை, இன்பத்தின் அளவு முறை மீறும்போது, இன்பத்தின் மறு பெயரே துன்பமேயாகும்” என்றும்

---

"துன்பம் கழிகிற இடம் தான் இன்பம்" என்றும் கூருகிறார். உதாரணத்திற்கு பசி உணர்வு துன்பமாக இருக்கிறது. பசிக்கு உணவு உண்பது இன்பம், ருசிக்காக அதிக உணவை உண்பது துன்பம்.

அங்கே அளவுமுறை மீறும்போது எது இன்பமாக இருந்ததோ அதுவே துன்பமாக விளைகிறதல்லவா! உடல் கழிவு முறையாக வெளியேற்றப் பட வேண்டும்.

அப்படி வெளியேற்றப் படும்போது ஒரு வித இன்பம், வெளியேற்றப் படாமல் தேங்கினால் துன்பம். அத்துன்பம் வெளியேறும்போது துன்பமே இன்பமாக மாறுகிறது!

"சொல்லுக்கு செய்கை பொன்னாகும்"

"சொல்லுதல் யாருக்கும் எளிய அரியவாம்

சொல்லிய வண்ணம் செயல்" - குறள்

என்பதுபோல அப்படி சொன்ன சொல்லை செய்வதே பொன்னுக்கு ஒப்பாக கவிஞர் எடுத்துரைக்கிறார்.

சொல்லுதல் பற்றி மகரிஷி.

"கல்லும், மரமும், மௌன நிலையில் நின்று

கடமை தவறாது பயனாகும்போது

சொல்லும் கருத்தும் உடைய மனிதன் ஏனோ

சுகங்கெட்டு சமுகத்தை மறக்க வீண்டும்?

என்று கேட்கிறார். கல்லும் மரமும் சொல் வண்ணம் இல்லாத போதும் தம் கடமையில் இருந்து தவருவதில்லையப்பா!

ஆனால் சொல் வண்ணம் செவ்வனே படைத்த மனிதன் ஏன் கடமையில் இருந்து தவறுகிறான் என்பதற்கு விடையாக அடுத்த வரியில்

“அல்லும் பகலும் ஆசையை ஒழிக்க வென்றே

ஆசைதனை பேராசையாக்கிக் கொண்டு

தொல்லைபடும் அன்பர்களே சுருங்க சொல்வேன்

சுய நிலையை அறிய கருதவமே போதும்”

ஆசையை ஒழிப்பேன் என்று பறைசாற்றிக் கொண்டு, ஆனால் ஆசைகளை பேராசையாக வளர்த்துக் கொண்டு துயருற்று வருந்தும் மனிதர்களுக்கு தம் சுய நிலையான சுயத்தை (இறைத்தன்மையை) உணர வேண்டும் என்றும்,

அவ்வாறு உணர்வதற்கு உயிர் மேல் மனம் வைத்து தியானம் செய்தால் அத்தன்மையை உணர்ந்து இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக மாற்ற முடியும் என்று உறுதிபட உரைக்கிறார்.

இப்படி இறைவன் வகுத்த நீதியை புரிந்து கொண்டு வாழும் மக்களுக்கு எல்லா நன்மையையும் உண்டாகும் என்று இருவரும் நமக்கு எடுத்து இயம்புகிறார்கள்!

“வரும் துன்பத்தில் இன்பம் பட்டாகும்”

துன்பம் வருவதா? போவதா? இருப்பது இன்பம் மட்டுமே, கழிவது (போவது) துன்பம்.

(உதாரணம்) இருள். இருள் நிரந்தரம். அந்த இருளில் வருவதும் போவதும் வெளிச்சம். வெளிச்சத்திற்கு சுவிட்சு உண்டு.

சூரியன் என்ற சுவிட்சு மட்டும். வீட்டில் பயன் படுத்தும் மின்சார உபயோகதிற்கு சுவிட்சு உள்ளது. இருளிற்கு சுவிட்சு உள்ளதா? இல்லையே!

ஏனெனில் அது இருப்பு - அதுவே ஆனந்தம் - அதுவே இன்பம் - அதுவே இறைநிலை.

இன்பத்தின் அளவுமுறை மீறும்போது பொருத்தமில்லாமல் துன்பம் வரும். அத்துன்பத்தை களைய வேண்டும் என்ற நிலையில் தான் நம்முடைய அறிவுத்திறன் செயல்பட ஆரம்பிக்கும்.

அது தான் பட்டறிவு என்று இங்கே கூற வருகிறார்கள் வேதாத்ரியும் கவிஞரும்.

ஏட்டால் கற்பது கற்றறிவு, அனுபவத்தால் பெறுவது பட்டறிவு. இவை இரெண்டையும் இணைத்து முரண்படாமல் செயல்படுவது முற்றறிவு.

அப்படி செயல்படும்போது வெளிப்படும் தன்மை பட்டுபோல மென்மையாகவும், உயர்ந்த தரம் வாய்ந்ததாகவும், இருக்கும் என்பதில் ஐயமில்லையே! கெட்டாலும் அது பட்டு என்பதும் இதுவேயன்றோ!

இந்த இரண்டு கட்டளையும் உணர்ந்து தெளிந்து வாழும் வாழ்க்கையில் எல்லா நன்மையையும் உண்டாகும் என்பதில் சிறிதளவேனும் சந்தேகம் இல்லைதானே!

“உண்மையை சொல்லி நன்மையை செய்தால் உலகம் உன்னிடம் மயங்கும்.”

## உண்மை என்றால் என்ன? எது உண்மை?

உண்மை அல்லது வாய்மை என்ற இரு சொல் உண்டு. உள்ளத்தில் இருந்து வருவதால் அது உண்மை என்றும், (உள்ளம் +மை) வாயில் இருந்து வருவதால் அது வாய்மை என்றும் கூறலாம்.

எது உண்மை? எந்த ஒன்று மனிதனால் உருவாக்கவும் அழிக்கவும் முடியாதோ அது உண்மை.

எந்த ஒன்று தன்னை எல்லாவற்றையும் இருப்பு வைத்துக் கொண்டு எப்போதும் அணைத்தும், அரவணைத்துக் கொண்டும் இருக்கிறதோ அது உண்மை.

அது தான் இறைத்தன்மை. உண்மை என்பது ஒன்றாக மட்டும் தான் இருக்க முடியும். இரண்டு உண்மைகள் உண்டு என்று சொல்வதற்கு இடமில்லை.

அதேபோல் இறைவன் என்ற உண்மையும் ஒன்று மட்டும் உண்டு. பலப்பல இறைவன் இல்லை.

என்ற உண்மையை எடுத்துக் கூறி மக்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் நடந்து கொண்டால் உலகில் உள்ள மக்கள் மனங்கள் அனைவரின் உள்ளங்களிலும் வாழும் களங்கரை விளக்காக வாழ முடியும்! அப்படிப்பட்டவர் தான் நவயுகத்தில் உதித்த நமது வேதாத்திரி.

மெய்பொருள் ஒன்றே என்ற உண்மையை விளக்க மெய்யுணர்ந்த இந்த மகான் இரண்டு கேள்விகளைக் கேட்கிறார். அந்த இரண்டு கேள்வி என்ன?

1. தெய்வம் என்பது ஒன்றா? பலவா?

2. மனித குலத்திற்கு தெய்வம் ஒன்று தான் என்றால் இன்று நாம் காணும் பிரபஞ்சத்தில் எந்த பேராற்றலை தெய்வம் என்று எடுத்துக் கொள்வது? என்று கேட்கிறார்.

இப்படி நம்மையே நாம் கேள்வி கேட்டு தெளிவு பெற வேண்டும் என்று கூறுகிறார்.

“மடல் விரிந்த பூவெனவே மலர்ந்த மதி கொண்டு

மண்ணுலகில் வாழ்வோர்கள் மயக்கம் நீங்கி வாழ்க”

என்ற பாடல் மூலம் விளக்குகிறார்.

- “நிலை உயரும்போது பணிவு கொண்டால் உலகம் உன்னிடம் மயங்கும்”

மனதின் நிலை உயர்ந்தால் மனிதனின் நிலை உயரும் என்பதே உண்மை. மனித மனம் எப்போது உயர் நிலை அடையும்?

நான் யார்? என்ற ஆத்ம விசாரம் செய்து புரிந்தும், உணர்ந்தும் கொண்டு ஒருவன் தெளிவடைந்தால் மனித மனம் உயரும். நான் யார்? என்ற கேள்விக்கு விடை _ “பிரம்மமே நான்”. அதாவது இறைநிலையே “நான்” என்பதாகும் என்று அழகாக கூறிகிறார் மகரிஷி.

மேலும் நான் என்ற விளக்கத்திற்கு

“உருவங்கள் அனைத்திற்கும் ஊடே உண்டு

ஒரு சக்தி என்ற உண்மை எவரும் ஏற்பார்

அருவமாய் உள்ள அதே கடவுள் என்றும்

அது இயங்கும் உருவமே ‘நான்” என்பான் பக்தன்

ஒருவனாய் உள்ள அந்த ரூபமே 'நான்'

உருவனைத்தும் என் தோற்றம் என்பான் ஞானி

இருவரும் சொல்லுகின்ற கருத்து ஒன்றே

எனினும் அவரிந்த அளவே பேதம்" என்று கூறுகிறார்.

நான் எப்படி இறையின் பின்னமோ அதேபோல் உலகில் வாழும் அத்தனை உயிர்களும் ஒவ்வொரு உயிர்களுக்கு உள்ளாக இயங்குவது இறையாட்சியே என்ற நிலையை உணரும் போது மனித மனம் உயர்வு பெறும்.

அப்படி உயர்வு பெறும் நிலையில் ஒருவன் தான் கடுவுள் ஆயிற்றே, என்று கர்வம் கொள்ளாமல் நாம் யாரை வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் ஆட்டி படைக்கலாம் என்ற எண்ணம் கொள்ளாமல் பணிவுடன் இருக்க வேண்டும் என்று தான் கவிஞர் எடுத்துரைக்கிறார்.

தன்னை உணர்ந்து தன்னை போல் பிறரையும் நேசிக்க வேண்டும் என்பதே இதன் உட்பொருள். அப்போது பணிவு கொண்டால் மட்டுமே உலகில் உள்ளோர் மதித்து வணங்கும் தன்மையை பெற முடியும்.

"உண்மை என்பது அன்பாகும்

எது மாறாததோ அது உண்மை என்று கண்டோம். அப்படிப் பட்டதே அன்பாகும்.

அன்பு என்றால் என்ன? எந்த ஒன்று உடலாலோ மனதாலோ தன்னோடு இணைத்து பிடித்துக் கொண்டு இருப்பதோ அதுவே அன்பு. - மகரிஷி.

அன்பு என்பது எந்த தடையும் இன்றி, கட்டுப்பாடுகள் இன்றி, எதிர்பார்ப்புகள் இன்றி, ஒப்பிடுதலின்றி அனைவரோடும் பகிரும் உணர்வே அன்பெனலாம். “Unconditional Love” என்று ஒரு கூற்று உண்டு.

அப்படிப்பட்ட அன்பு யாரிடம் உள்ளது என்று ஆராய்ந்து பார்த்தல் இறைத்தன்மையைத் தவிர யாரிடமும் இல்லையென்பதே மறுக்க முடியாத உண்மை.

தாயின் அன்பு கூட காலத்திற்கு ஏற்றார்போல மாறிவிடுகிறது. ஆனால் இறைவனின் அன்பு மட்டும் எப்போதும் மாறத் தன்மை கொண்டதாக இருக்கிறது என்பதில் எந்த ஐயப்பாடுகளும் இல்லை. இந்த உண்மை தான் அன்பாகும் என்று கவிஞர் கவி பாடுகிறார்.

“பெறும் பணிவு என்பது பண்பாகும்”

பணிவு என்றால் அடிபணித்து போவதில்லை. உயிரில் இருக்கும் இறைத்தன்மையை உணர்ந்து வணகுதல் ஆகும்.

அதுவே மனததனுக்கு பெருமையாகும். பண்பு என்பது பண்படுத்தப்பட்ட மனம் கொண்ட மனிதர்களின் குணத்தை தான் பண்பு என்று கூறலாம்.

இதனை பண்பாடு எனவும் குறிப்பிடலாம். சுருங்க சொன்னால் ஒரு மனிதனிடம் காணப்படும் மூன்று கூறுகளாகிய உடல், உள்ளம், ஆன்மா இவற்றுள் உடல் அழியக்கூடியது. அழியாத தன்மை உடைய உயிரின் பிரதிபலிப்பே உள்ளம்.

எனவே பண்பானது உயிரையும், உள்ளத்தையும், செம்மை படுத்தி அக வளர்சியை மையமாகக் கொண்டதே என்றும் கூறலாம் தானே.

“அன்பும் கருணையுமாய் அகன்ற நிலையில் உள்ளாய்

-----------------------------------------------------------------------------------------------------------

என் மனதை விரித்து இணைத்துக் கொண்டாய் உன்னுள்ளே

கன்ம வினைகள் எல்லாம் கழிந்தன உணர்கின்றேன்

உன்னை அறிந்து உய்ய உலகோர்க்கு தொண்டு செய்வேன்"

இது மகரிஷியின் பண்பாகும்.

"ஆசை கோபம் களவு கொள்பவன் பேசத் தெரிந்த மிருகம்"

ஆசைப் படுவது சரியா? ஒரு ஆய்வு செய்வோமா?

எது ஆசை? உயிரின் எழுச்சி நிலை தான் ஆசை. எந்த ஒரு எண்ணம் மீண்டும் மீண்டும் எழுந்து அழுத்தம் பெற்று அதை செயலாக்க முற்படுகிறதோ, அதுவே ஆசையாக மலர்கிறது.

ஆசைபடுவது சரியா? சரிதான். ஆசைப் படாமல் இருக்க முடியாதன்றோ! உயிர் வாழ வேண்டும் என்பதே ஆசை தானே!

அந்த ஆசை இருப்பதால் தான் உடலுக்குள் உயிரானது சிக்குண்டு இருக்கிறது. ஆசை இருக்கலாம், பேராசை கூடாது என்று அணைத்து பெரியோர்களும் எடுத்துரைக்கிறார்கள்.

"மண்மீது பெண் துணையால் பொன் கொண்டே வாழ்கின்றோம்

மாற்றுவதென் மூவாசை மதி கொண்டே பயன் கொள்வோம்."

இல்லற வாழ்வில் இருந்து துறவு வாழ்வை தேடிபோகும் துறவிக்கு மண் மீது தானே வாழ வேண்டும்.

தாரமாக இல்லாவிட்டாலும் தாயாகவும், சகோதரியாகவும், பெண் துணை இல்லாமல் வாழ முடியாது தானே! உணவுக்கும், உடைக்கும், ஏன் நீருக்கும் கூட பொருள் அவசியமாக தானே உள்ளது.

ஆகா ஆசைப்படுவது தவறில்லை. பேராசை என்னும் மாய வலைக்குள் சிக்கிக் கொள்ளாமல் இருக்க வேண்டும் என்கிறார் அறிஞர் பெருமக்கள்.

எது கோபம்? எழுந்த ஆசைக்கு தடை வரும்போது அதை வென்றுவிட வேண்டும் என்ற வேகம் உயிருக்கு பிறக்கும் சினம்.

"மரத்தை மறைத்தது மாமத யானை

மரத்தால் மறைந்தது மாமத யானை

பரத்தை மறைத்தது மாமத பார்முதல் பூதம்

பரத்தால் மறைந்தது பார் முதல் பூதமே!"

என்ற பாடலில் மாறி பொம்மையை பார்க்கும்போது என்ன மரத்தால் செய்யப்பட்டு உள்ளது என்று நோக்கினால் யானை உருவம் தெரிவதில்லை.

யானை உருவத்தைப் பார்த்தால் மரம் தெரிவதில்லை. அதுபோல கோபம் என்னும் உணர்ச்சி மேலோங்கும் போது அறிவு தன விழிப்பு நிலையில் இருந்து தவறி உணர்ச்சிவயப்பட்ட நிலைக்கு அளாகிவிடும் அவல நிலை ஏற்டுகிறது.

"பிளவு செய் சினம், குருதி அழுத்தம், மார்நோய், பித்து, புண், கண் நோய்கள், தாது, மூளை வளமலிவு செய்யும்". - மகரிஷி

சினம் வருபவருக்கு மேற்கூறிய அனைத்து நோய்களும் அழையா விருந்தாளியாக வந்தடையும் என்று அறிவுறுத்துகிறார் மகரிஷி.

களவு = மற்றவருக்கு தெரியாமல் மறைந்து இருந்து செய்யும் செயல்கள் அணைத்தும் களவு எனப்படும். அப்படி

களவு கொண்டவர் மனம் என்றுமே அமைதி கொள்வதில்லையே.

இந்த மூன்று குணங்களையும் மனிதன் தன்னகத்தே வைதுதிருப்பாநேயானால் அவன் மனிதன் அல்ல, பேசத் தெரிந்த அடித்துக் கூறுகிறார் கவியரசர்.

- “அன்புநெறி கருணை கொண்டவன் மனித வடிவில் தெய்வம்”

அன்பிருக்கும் இடத்தில் தானே கருணை பிறக்கும். கருணை எனபது தன்னிடம் இணைந்துள்ள மற்றொன்றுக்கு தனது ஆற்றலை தொடர்ந்து அளித்து அதனைக் காத்து வருவது அன்பு என்றால், அரவணைப்பது கருணை என்றால் ஊட்டிக் கொடுப்பது முட்டைக்குள் இருக்கும் கருவை அரவணைத்துப் பிடித்துக்கொண்டு இருப்பது அந்த ஓடு. அது அன்பு.

உள்ளிருக்கும் அந்த உயிருக்கு போதிய ரசாயனத்தை ஓடானது பாய்ச்சிக் கொண்டு இருப்பது கருணை.

குழந்தையை தாய் அரவணைப்பது அன்பு. அந்த குழந்தைக்கு உணவளிப்பது கருணை என்று எளிமையான விளக்கங்களை கூறி நம்மையும் அன்போடும், கருணையோடும் அரவணைத்து கூட்டி செல்கிறார் அருட்தந்தை அவர்கள்.

# 31. கடைசி வரை யாரோ?

**"வீடு வரை உறவு, வீதி வரை மனைவி,
காடு வரை பிள்ளை, கடைசிவரை யாரோ?"**

உறவு என்றால் தொடர்பு கொள்வது. அல்லது இணைத்திருப்பது எனப் பொருள்படும். எவ்வளவு நாட்கள் என்றால் பதில் தெரியாது. யூகித்து வேண்டுமானால் கூறலாம்.

அது உண்மையாக இருக்க வாய்ப்பில்லை. அது உண்மை இல்லை என்பதால் உறவுகள் போலியானவைகள் என்று ஒரு ஞானி கூறியிருக்கிறார்.

எந்த ஒன்றும் எல்லைக்கு உட்பட்டும், கால வரையறையோடு இயங்குவது அது அன்பு அல்ல.

உறவுக்குள் அன்பு இருந்தால் அது எப்பொதும் இருந்து கொண்டே இருந்தால் மட்டுமே அது உண்மை என்றும், அன்பு என்றும் கொள்ள முடியும் என்றறிந்த கவிஞர் ஒவ்வொரு உறவும் முடியும் இடத்தை சுட்டிக்காட்டி இருக்கிறார்.

வீடு வரையில் மட்டும் கொள்ளும் உறவுகளில் நிம்மதி எப்படி நிலையாக இருக்க முடியும்.

மனிதன் வாழும் இடத்திற்கு பெயர் வீடு. பறவைகளுக்கு கூடு. விலங்கினங்களுக்கு காடு.

இப்படி வீடே உயிர்களுக்கு ஏற்றார்போல மாற்றம் அடையும்போது அங்கு வாழும் உறவுகள் மட்டும் எப்படி மாறாமல் இருக்க முடியும்?

கணவனை மட்டுமே நம்பி வந்த மனைவியானவள் தன உயிரோடும், உறவோடும் ஒன்றி இருந்த காலத்தில் அன்பின் வடிவாக இருக்கிறாள்.

ஆனால், மரணம் என்னும் மாற்றம் அவளிடம் இருக்கும் உயிரை பிறிக்கும்போது அவளால் வீதி வரை மட்டுமே உறவாட முடியும்.

அதுவே, ஆண் பிள்ளையாக இருப்பின் காடு வரை உறவாட முடியும். ஆனால், கடைசிவரை துணையாக வருவது எந்த உறவும் இல்லை என்பதை வேதனையுடன் விவரிக்கிறார் கவிஞர்.

**வேதாத்ரியின் உறவுப் படலத்தில்;**

உறவோடு துறவு கொண்டாட வேண்டுமென்று புதுமையான கருத்தை முன் வைத்து நம்மை தெளிவடைய வைக்கிறார்.

எந்த உறவாக இருந்தாலும் ‘சொந்தம் உண்டு பந்தம் இல்லை’ என்ற நிலையில் வாழப் பழகிக் கொண்டால் உறவால் துன்பம் இல்லை.

உறவின் பிரிவால் வேதனை இல்லை என்று தெளிவுபட எடுத்துரைக்கிறார்.

கணவனோ, மனைவியோ யாரும் யாரையும் ‘உரிமை கொண்டாடுவதற்கு அதிகாரம் இல்லை, அதிகாரம் செலுத்துவதற்கும் உரிமை இல்லை’.

ஒவ்வொரு உயிருக்கும் சுதந்திரம் இருக்கிறது, அறிவு இருக்கிறது, ஆற்றலும் இருக்கிறது என்று எண்ணி வாழ்ந்தால் எந்த உறவினாலும் இன்னல்கள் எழுவதற்கு வாய்ப்பில்லையே!

எந்த உறவும் நம் இறுதி வரை வரப் போவதில்லை. நம்முடைய அறிவும், வாழும் காலத்தில் நாம் செய்த தர்மமும் மட்டுமே துணை இருக்கும்.

அதுவும் அதன் விளைவுகளை தம் சந்ததியினருக்கு பரிமாற்றப்படும் என்ற பேருண்மையை விளக்கிக் காட்டுகிறார் வேதாத்திரி மகரிஷி.

**"ஆடும் வரை ஆட்டம், ஆயிரத்தில் நாட்டம்,**
**கூடி வரும் கூட்டம், கொள்ளி வரை வருமோ?"**

இந்த உடல் இருக்கும் வரை தானே ஆடிப்பாட கொண்டாட முடியும். அப்படி ஆடிப்பாடி மகிழ்ந்திருக்கும் வேளையில் இன்னும் சில ஆசைகள் எழும்.

அவற்றை எல்லாம் நிறைவேற்ற மனம் நாட்டம் கொண்டாலும் அதற்குள் இயற்கையானது நமக்காக கூட்டம் கூட வைத்து விடுகின்றதே!

அதனால் உடலைக் கொண்டு வாழும்போது எது தேவை? எது அவசியம்? என்று ஆராய்ந்து பார்த்தல் மரணம் நம்மை விட்டு சற்று தள்ளி நின்றே தீரும் என்று எச்சரிக்கை விடுகிறார் கவிஞர்.

## வேதாத்ரியின் கண்ணோட்டத்தில்;

உடலின் ஆட்டமானது உயிர்த் துகள்களின் சுழற்ச்சியே தான். ஒவ்வொரு உயிர்த்துகளும் சுழன்றுகொண்டு உடல் முழுதும் ஓடிக்கொண்டே இருக்கிறது.

அப்போது புலன்களைக் பிற பொருள்களை உணரும்போது அதனோடு தொடர்பு கொள்வது நாட்டம் என்றும், அதனோடு இன்புற்ற உயிரானது எழுச்சி பெரும் நிலையை ஆட்டம் என்றும் கூறுகிறார்.

இப்படி எழிச்சி பெறும்போது தனித்து ஒரு உயிர்த்துகளாக வருவதில்லை. அது ஒரே இடத்தில் கூட்டமாகக் கூடி ஆற்றல் முழுவதும் இன்பத்திற்கே செலவழித்து, அதுவே நமக்கு பழக்கமாகி, பின் வழக்கமாகி இறுதி வரை தொடர்கிறது என்று கூறுகிறார்.

**“தொட்டிலுக்கு அன்னை, கட்டிலுக்கு கன்னி,**
**பட்டினிக்கு தீனி, கெட்ட பின்பு ஞானி”**

தொட்டிலுக்கு குழந்தையாக இருக்கும்போது நம்மை தாலாட்டி, சீராட்டி, உணவூட்டி வளர்ப்பவள் அன்னை.

அதே குழந்தை, பருவம் அடையும்போது தனக்கோ வயதாகி விட்டது, தன பிள்ளையை பாதுகாக்க இன்னொரு பெண் பிள்ளை தேவை.

மேலும் தன பிள்ளையின் பருவ வேகத்தை சமன் செய்ய மனைவி என்ற உறவு வேண்டும் என்று எண்ணி மருமகளைக் கொண்டு வருகிறாள் அன்னையானவள்.

பசியோடும், பட்டினியாக இருக்கும்போதும் இதுதான் வேண்டும் என்று பார்ப்பதில்லை. எது கிடைத்ததோ அதுவே அமிர்தமாகக் கொள்ளும் மனம் ருசிக்காக உண்ணும்போது அமிர்தமேயானாலும் குறை காணும் தந்திரம் மனதிற்கு உண்டு.

அனைத்தையும் உண்டு, அனுபவித்து, உடல் கெட்டு, மனம் கெட்டு, இனி எதுவும் கெடுவதற்கு இல்லை என்ற நிலையில்தான் தாம் செய்ததை எல்லாம் நினைத்துப் பார்க்கும்போது ஞானியாகிறான்.

ஆனால், இப்பொழுது ஞானம் அடைந்து என்ன பயன்? **‘கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்’** என்பதுபோல.

இதற்கெல்லாம் தீர்வாகத்தான் வாழும்போதே ஞானியாக வாழ முடியும் என்று தீர்க்கமாக கூறுகிறார் மகரிஷி.

தவமும், தற்சோதனையும் செய்து, ஐந்தில் [உணவு, உழைப்பு,உறக்கம், ஒழுக்கம், எண்ணம்] அளவுமுறை கடைபிடித்து வாழ்ந்தால் வாழும் காலத்திலேயே ஞானியாக வாழலாம் என்று அட்டவணை போட்டு நம்மை நல்வழி படுத்துகிறார்.

**“சென்றவனைக் கேட்டால் வந்துவிடு என்பான்,
வந்தவனைக் கேட்டால் சென்றுவிடு என்பான்”**

எங்கே சென்றவன்? உடலை விட்டு பரலோகத்திற்கு சென்றவனுக்கு தான் கடமைகள் இல்லை, உறவுகள் இல்லை, இன்னல்கள் இல்லை என்பதால் உலகில் வாழும் மக்களையும் அங்கே வந்து விடுமாறு அழைக்கிறான்.

யார் வந்தவன்? பிறப்பெடுத்து உலகில் வாழ வந்தவன் உலகில் உள்ள அத்தனை உறவுளோடும் பிணைக்கப்பட்டவான்.

எதனிலும் நிறைவு இல்லை என்று எண்ணி ஏன் பிறந்தோம்? என்று தன்னையே கேட்டு, சலிப்புற்று, துன்பப்படுகிறவர்களைப் பார்த்து சென்றுவிடு என்று கூறுகிறானோ?

யாரும் எங்கும் செல்லவும் முடியாது, வரவும் முடியாது. ஏனெனில் உயிராக இருப்பது ஆத்மாவாக மாறி, அறிவாக உருப்பெற்ற பின் நிலையாகத் தானே இருக்க மடியும்! வருவதும், போவதும் இல்லையப்பா என்று வழிமொழிகிறார் மகரிஷி.

**“விட்டுவிடும் ஆவி, பட்டுவிடும் மேனி
சுட்டுவிடும் நெருப்பு, சூன்யத்தில் நிலைப்பு”**

உடலை விட்டு உயிர் பிரிந்தப்பின் உடல் கெட்டுவிடும். கெட்ட உடலை வீட்டில் வைத்திருக்க முடியாது.

அதனை சுட்டு விடுவது நல்லது. அப்படி உடலை சுட்டுவிட்டால் ஆன்மாவானது ஒன்றுமில்லா ஒன்றான சூன்யத்தில் நிலை கொள்ளும்.

அதுவே அதன் இருப்பிடமாகும். அங்கே அதற்கு முழுமை கிடைக்கும் என்று வாழ்க்கைச் சக்கரத்தை உறவில் தொடங்கி சூன்யத்தில் முடிக்கிறார் கவியரசர்.

## வேதாத்திரியின் சூன்ய விளக்கம்;

சூன்யத்தில் இருந்து வந்த நாம் சூன்யத்தோடு இணைந்தால்தான் வாழ்க்கைப் பயணம் நிறைவுபெறும்.

பஞ்சபூதங்களால் ஆன உடல் அணுக்கள் ஒன்று சேர்ந்து கொதியக்கமாக இயங்குவது வாழ்க்கை.

அதே பஞ்சபூதங்கள் அதனதன் தன்மையோடு இணைந்து கொள்வது உடலுக்குத் தான் மரணமே தவிர அணுக்களுக்கு இல்லை.

அந்த அணுக்களும் இறுதியில் கரைந்து சூன்யத்தோடு கலந்துவிடும். இது மனித உடலுக்கு மட்டுமல்ல.

அணு முதல் அண்டங்கள் வரையில் அந்த அண்டத்தில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் இதே நிலைதான்.

எனவே சூன்யம் என்றால் ஒன்றுமே இல்லாதது என்ற அர்த்தம் இல்லை. அனைத்தையும் தன்னகத்தே அடக்கி வைத்திருக்கும் அளப்பரிய சக்தியாகும்.

நாம் ஊனக்கண் கொண்டு பார்த்தல் ஒன்றுமில்லாதது போலத்தான் தெரியும். ஆனால், ஞானக்கண் கொண்டு அகநோக்குப்

பார்வையில் நோக்கினால் அனைத்தும் சூன்யத்தில் அடங்கி இருப்பது தெரிய வரும்.

இவை உணர்வதற்குத் தான் தவம் என்னும் அரிய முறையை அருளியிருக்கிறார். தவம் செய்யும்போது மனமானது சுழல் விரைவு குறைந்து நுண்ணிய நிலையை அடையும்போது மிக மிக நுண்ணிய அலையாக நிலவும்.

பிரபஞ்ச ரகசியம் தெரியவரும். அதன் உச்ச நிலையே சூன்ய நிலை. சூன்ய நிலை என்பது அசைவற்ற தன்மை. 'நிற்சலன, நிற்குண, நிசப்த, பரபிரம்மம்'.

அதோனோடு லயிக்கும்போது ஜீவனே சிவமாகி நிற்கும் நிலை எய்தும். இதனாலேயே 'ஜீவ பிரம்ம ஐக்கிய முக்தி' என்று ஞானியர் கூறுகிறார்.

இதை வாழும்போது அனுபவிக்கத்தான் 'துரியாதீத தவம்' என்ற உயர்ந்த தவத்தைக் கொடுத்து நம்மை மேன்மை நிலைக்கு அழைத்துச் செல்கிறார் மகரிசி.

இதனைப் பழக்கப்படுத்தி **'நானே ஏகப் பரப் பிரம்மம்'** என்ற நிலையை உணர்வோம்!. அனைத்தையும் கைவல்யம் ஆக்கும் பக்குவத்தையும் பெறுவோம்!

# 32. பாமர மக்களின் தத்துவஞானிகள்.

**தத்துவம்** (*philosophy*) என்னும் அறிவுத்துறையானது எது உண்மை, எது சரி, எது அறிவு, எது கலை, எது அறம், எது அழகு, கடவுள் என்று ஏதும் உண்டா, என்பது போன்ற அடிப்படையான கேள்விகளைப் பற்றி ஆழ ஆராயும் துறை ஆகும்.

தத்துவம் என்றால் உண்மை, உள்ளதை உள்ளவாறே அறிவதைப் பற்றிய கொள்கை, இயல் என்று பொருள்.

மெய்யியல் துறையில் கருத்துக்கள் எவ்வாறு ஏற்கப்படுகின்றன என்பதும், காரணம், ஏரணம், விவாதம் (தருக்கம்) முதலியன யாவை என்றும் கூர்ந்து நோக்கி ஆராயப்படும்.

தத்துவ ஞானம் ஏன் வேண்டும். அது பாமர மக்களுக்கும் வேண்டும் என்று சிந்தித்தவர்கள் கண்ணதாசனும் வேதாத்திரியும்.

“தத்” என்றால் இயற்கை. இயற்கை பற்றிய உண்மை உணர்வே தத்துவ ஞானம் ஆகும்.

எந்த உண்மையையும் புலன் கடந்த நிலையில் யுத்தால் அறிந்தாலும் மிண்டும் அதை மற்ற இயக்கங்களுடன் பொருத்திப் பார்க்கும் பொழுது முரண்படாது இருக்குமானால் அது தான் தத்துவம்.

காலம், தூரம் , பருமன், வேகம் என்ற அளவைகளை உபயோகித்து புலன்களால் அறிவது அனைத்தும் விஞ்ஞானம்.

ஆனால் இந்த நான்கு அளவைகளும் தோன்றுவதற்கு முன்னதாக எது இருந்ததோ அதை அறிந்து கொள்வதுதான் “தத்துவ ஞானம்”.

அந்தஅறிவை அறியும்போதுதான் மனிதன் தன் மூலத்தையும் வழ்வின் நோகத்தையும் அறிந்து மனிதனாக வாழ முடியும்…

இந்த தத்துவங்களை கற்றறிந்தவர்களும் உயர்குடி வர்க்கத்தினருமே பேசிக் கொண்டிருந்தனர். புரிந்து கொண்டிருந்தனர்.

கால மாற்றத்தினால், தத்துவங்களை பாமரனுக்கும் கொண்டு செல்ல மகான்களும்- ஞானிகளும் -கவிஞர்களும் அவதரித்தனர்.

அந்த வரிசையில் கவிஞர் கண்ணதாசனும் வேதாத்திரி மகரிசியும் வருகின்றனர்.

மானுடத்தை உயர்த்த மேம்படுத்த தங்கள் சிந்தனைகளை எளிமையாக்கினார்கள். அதனை பாமரன் மனதில் பதிய வைத்தார்கள்.

இன்று பாமரனும் தத்துவத்தை உணர்ந்து அதன்வழி வாழ்ந்து வருகிறார்கள் என்றால் அந்த இந்த இரண்டு தத்துவஞானிகளின் பங்கு முக்கியமானதாகும்.

கண்ணதாசன் - காவியத் தாயின் இளைய மகன்,

அவன் நிரந்தரமானவன், அழிவதில்லை!

எந்த நிலையிலும் அவனுக்கு மரணமில்லை!

---

கண்ணதாசன் திரைப்படத் துறையில் கால் பதித்த காலத்தில்; திரைப் பாடல்களில் பக்திச் சுவையைப் புகுத்தி இருந்தார்,

பாபநாசம் சிவன். முத்து முத்தான கருத்துகளைச்

சினிமாப் பாடல்களில் பொருத்தி இருந்தார் . பட்டுக் கோட்டை கலியாண சுந்தரம்..

இந்தச் சூழலில் வெள்ளித் திரை வானிலே ஒளிவீச வந்த இக்கவிஞன், தான் படித்துச் சுவைத்திருந்த பைந்தமிழ் இலக்கியங்களை, வைரமாய் ஒளி வீசும் இலக்கிய வரிகளை, கருத்துக் கருவூலங்களைத் தன் பாடலில் இழுத்து வந்து இழைத்து வைத்தான்.

பாமர மக்களையும் அவற்றைச் சுவைக்க வைத்தான். பரந்த கடல் மேல் பரவும் மேகம் அதன் நீரை தனக்குள் இழுத்துக் கொள்கிறது. பிறகு நீராக உள் வாங்கியதை மழையாகப் பொழிகிறது.

அதைப் போலத்தான் கண்ணதாசன் என்னும் மேகம் தமிழாகிய கடலில் தான் உட்கொண்டவற்றைத் தன் பாடல் வரிகளில் எளிய மொழியில் மழையாகப் பொழிந்து தள்ளுகிறது.

எடுத்துக்காட்டாக, இப்பாடலைப் பாருங்களேன் , பாடிப் பாருங்களேன்

"அத்தமும் வாழ்வும் அகத்து மட்டே வழியம்பு ஒழுக

மெத்திய மாதரும் வீதி மட்டே விம்மிவிம்மி இரு

கைத்தல மேல் வைத்தழு மைந்தரும் சுடுகாடு மட்டே

பற்றித் தொடரும் இருவினை புண்ணிய பாவமுமே!"

பாட முடிகிறதா, பாடினாலும் பொருள் புரிகிறதா..

.புரிந்தாலும் உள்ளத்துக்குள் புககக்கின்றதா! படித்திருக்கும் உங்களுக்குப் புரிந்தாலும் ஏட்டையே தொட்டிராத ஏழைகளுக்கு இதில் ஓரெழுத்தாவது புரியுமா!பட்டினத்தார் பாடல்களுள் ஒன்று இது!

அவர் பாடல்களும் கடல்தான்!

அந்தக் கடல் மேல் பரந்து திரிந்து மனத்தைப் பறிகொடுத்த

கண்ணதாசன் என்னும் மேகம், இந்தப் பாடலைத் தனக்குள் ஈர்த்துக்கொள்கிறது.

மூலக்கருத்து சிதையாமல் பாலொடு தேன் கலந்தது போல் பொருத்தமான சொற்களால் மழையாகப் பொழிவதைக் கேளுங்கள்

வீடுவரை உறவு வீதி வரை மனைவி

காடுவரை பிள்ளை கடைசி வரை யாரோ!

கல்லாத நல்லவர்களின் கவனத்தையும் ஈர்க்கின்ற வரிகள்!

படியாத பாமரர்க்கும் புரிகின்ற மொழிகள்!

இதுதான் கண்ணதாசன்!

## கண்ணதாசனின் தத்துவங்களில் சில முத்துக்கள்.

- ஆசை கோபம் களவு கொள்பவன் பேசத்தெரிந்த மிருகம். அன்பு நன்றி கருணை கொண்டவன் மனித வடிவில் தெய்வம்.
- சித்தாந்தம் தோற்றுப்போன இடத்தில் வேதாந்தம் தானே கை கொடுக்கிறது.
- **தேவைப்பட்டாலொழியக் கோபம் கொள்ளாதே.**
- **நன்மை செய்தவனுக்கு நன்றி காட்டு.**

- **தீமை செய்தவனை மறந்து விடு.**

- **எதையும் சாதிக்க நிதானம், அற்புதமான ஆயுதம்.**
- **வென்றவனுக்கு மலையும் கடுகு. தோற்றவனுக்கு கடுகும் மலை.**
- **ஆணவமும், அழிவும் இரட்டைக் குழந்தைகள்.**
- **அற்ப ஆசைகள் பெரிய வெற்றியைத் தேடித் தருவதில்லை.**
- **சோம்பி நிற்கும் மனிதனிடம் துன்பங்கள் உற்பத்தியாகின்றன.**
- **தாய்ப்பால் கொடுக்காத குழந்தைகளுக்கு தாய்ப்பாசம் இருக்காது.**
- **இலக்கியங்கள் எல்லாம் மனிதர்களுடைய அனுபவத்தில் உதித்தவையே.**
- **நீயாகவே முடிவு செய். நீயாகவே செயல் படு.**
- **முடிந்தால் நன்மை செய். தீமை செய்யாதே.**

- **சிறு வயதில் வரவு வையுங்கள். பெரிய வயதில் செலவளிங்கள்.**
- **நம் மனதளவு எவ்வளவோ அவ்வளவு தான் உலகம்.**

- **வாழ்வில் நகைச் சுவை வேண்டும். சிரிக்காதவன் மிருகம்.**

- **வாழ்க்கையின் ஒவ்வொரு அணுவையும் அனுபவிக்க வேண்டும்.**
- காலம் போனால் திரும்புவதில்லை காசுகள் உயிரை காப்பதும் இல்லை !
- பெண்கள் பூ போன்றவர்கள் , மாமிசம் சாப்பிட்டு பழக்கப்பட்ட நாய்களுக்கு பூவை கையாள தெரியாது

- கட்டுக்காவல் எங்கே பலமாக இருக்கிறதோ , அங்கே தான் தாண்டி குதிக்கும் கால்களும் உறுதியாக இருக்கின்றன.
- ஒன்று தவிர்க்க முடியாது என்னும் போது. அதை எதிர்கொள்ளும் தைரியம் வந்துதானே தீர வேண்டும்.
- கோடையில் குளம் வற்றிவிட்டதேஎன்று கொக்கு கவலைப்படக் கூடாது:மீண்டும் மழை காலம் வருகிறது.மழைக்காலம் வந்துவிட்டதென்று நதிகுதிக்கக் கூடாது: அதோ, வெயில்காலம் வந்து கொண்டிருக்கிறது.
- எதை வெட்டிவிட்டால் அடுத்த கேள்வி இருக்காதோ, அதை வெட்டிவிடுபவனே அறிவாளி.
- உலகத்தில் தப்பு என்று சில விஷயங்களைக் கருதுகிறோம்.ஆனால், அவை நிதானமாகவும், முறையாகவும் நடக்கும்போது அவையே நியாயங்களாகி விடுகின்றன.

## வேதாத்திரிய தத்துவங்களில் சில.

தத்துவங்களை தமிழில் மிக எளிமையாகத் தந்தவர் வேதாத்திரி மகரிசியும். இந்திய தத்துவஞான வரலாற்றில் நமது தத்துவங்களை, திருவள்ளுவருக்குப் பிறகு எளிமையாக மானுடத்திற்குத் தந்தவர் வேதாத்திரி மகரிசியே.

1. மனம் இல்லாத மனிதனே இல்லை. மனதை அறிந்த மனிதனும் இல்லை.
2. அறிவை உணர்ச்சி வெல்லுவது இயல்பு. அறிவால் உணர்ச்சியை வெல்லுவது உயர்வு.
3. உழைப்பினால், உடலும் உள்ளமும் உலகமும் பயன் பெறும் உணர்வீர்!
4. அகத்தாய்வு என்பது தூண்மையை நாடிச் செல்லும் தெய்வீகப் பயணம்.
5. உடையில்- ஒழுக்கம் - உள்ளத்தில் – கருண -, நடையில -கண்ணியம், நல்லோர் பண்பு.
6. ஆக்கத் துறையில் அறிவைச் செலுத்து, ஊக்கமுடன் உழை, உயர்வு நிச்சயம்.

7. நல்லதையே செய்யச் செய்ய நல்ல எண்ணங்கள், நல்ல செயல்கள், நல்ல வாழ்க்கை வந்து விடும்.
8. உள்ளத்தில் எழும் ஒழுங்கற்ற எண்ணமே உண்மையில் ஒருவனுக்கு எதிரி.
9. எந்த சூழ்நிலையிலும் சினம் ஒருவனை அணுகவில்லையெனில் அவன் ஞானம் பெற்று விட்டான் என்று பொருள்.
10. மனதில் பகைமை வைத்துக் கொண்டு வாழ்த்த முடியாது. வாழ்த்தும் போது பகைமை நிற்காது.
11. பிறரின் அறியாமையை மன்னிப்பதும் தனது அறியாமையை அகற்றுவதும் அறிவுடைமை.
12. உணவு , உழைப்பு, உறக்கம், உடலுறவு, எண்ணம என்ற ஐந்திலும் அளவு முறை வேண்டும்.
13. மனம் என்ற நிலத்தில் எதைப்போட்டாலும் விளையும். ஆனால் எதைப் போட வேண்டும் என்று சிந்தித்து போட வேண்டும்..
14. உனக்கும் நல்லதாய் ஊருக்கும் நல்லதாய் நினைப்பதும் செய்வதும் நித்தியக் கடன்.
15. பணத்திற்கும் பண்புக்கும் நடக்கும் போட்டியில் மனிதர்கள் குணத்தில் குறைந்து விடுகின்றனர்.
16. எண்ணத்தில் உறுதியும் ஒழுங்கும் இருந்தால் எண்ணியவெல்லாம் எண்ணியபடியே அமையும்.
17. பிறரை வாழ்த்தும் பழக்கத்தால் அடிக்கடி சினம் வருவதைத் தவிர்க்கலாம். பகைமையைத் தவிர்க்கலாம்.
18. பிறரிடம் சினம் கொள்ளும் போது அந்தக் குறைக்கு உங்களிடம் தவறு உள்ளதா என முதலில் பாருங்கள்.
19. அவரவர் வாழ்க்கையை சீரமைக்கு அற்புத சிற்பி அவரவர் எண்ணமே.
20. அறிவு என்பது அறியப்படுவது, ஞானம் என்பது உணரப்படுவது.
21. கற்பு, அன்பு, பொறுமை, சகிப்புத்தன்மை, தியாகம், தூய்மை ஒற்றுமை ஆகிய குணங்களின் மொத்த உருவம் தான் பெண்.
22. ஒருவர் பெற்ற ஞானத்தைப் பரிசோதிக்க உதவும் கருவி அவரது குடும்பத்தின் அமைதி.
23. விட்டுக் கொடுத்து மற்றவர்களுக்காக வாழும் வாழ்க்கை தான் தன்னையும் வாழ வைக்கும், பிறரையும் வாழ வைக்கும்.
24. சிந்தனையுடன் செயலும் செயலுடன் சிந்தனையும் பணிந்து நிற்கப் பழகுதல் நற்பண்பு.

25. உலக சமாதானம் வேண்டுமானால் முதலில் ஒவ்வொரு தனிமனிதன் மனதில் அமைதி வரவேண்டும்.

மானுட மேம்பாடு பற்றிய பல்துறைச் சிந்தனைகளை எழுத்தில் பேச்சில், செயலில் வடித்துக் காட்டிக் காலங்கடந்தும் தம் படைப்புகளால் வாழ்ந்து வரும் இவர்கள், மனித இதயங்களில் “பாமர மக்களின் தத்துவஞானிகள்” என்ற சிறப்போடு நிலைத்து வாழ்கின்றனர்.

# 32. உலக அரசு

"உலக சமாதானம் வேண்டுமானால் முதலில் மனிதன் மனதில் அமைதி வந்தாக வேண்டும்" என்பார் வேதாத்திரி மகரிசி.

**தொல்லுக மக்களெல்லாம் ஒன்றே என்னும் தய உள்ளங் கொண்ட கவிஞர் கண்ணதாசனின் விரிந்த மனம், குறுகிய எல்லைகளைக் கடந்து பரந்து விரிந்து கிடக்கும் உலக மக்கள் அனவரையும் சகோதரனாக்கி, தோழனாக்கிக் கொள்ள ஆசைப்படுகிறது.**

**"இவ்வுலகம் மிகப்பெரிது**


**எவ்வளவோ மக்களினம்**

**அவ்வளவும் தோழமையாய்**

**ஆக்குவதே கவிதைமனம்"**

**என்பது கவிஞரின் தனது எண்ண வெளிப்பாட்டை வெளிப்படுத்துகிறார்.**

**நாட்டு எல்லைகளைக் கடந்து உலக அரசு அமைய வேண்டும் என்று உரக்கக் குரல் எழுப்பிய தத்துவமேதை பெட்ரண்ட்ரசலின் கருத்தை இங்கு ஒப்பு நோக்கலாம்.**





**வேதாத்திரி மகரிசியின் கனவும் இதுதான். ஓர் உலக ஆட்சி அமைய என்ன செய்ய வேண்டும் என்பதையும் மானுடத்திற்கு மகான் தந்துள்ளார்.**

- அறிவறிந்தோர் எண்ணிக்கை பெருகவேண்டும் அன்பு கடமை ஆட்சி அறம் தொண்டெல்லாம் அறிவறிந்தோர் விளக்கும் வாறுணர்ந்து போற்றி அருள் நெறியில் மக்களெல்லாம் வாழவேண்டும் அறிவறிந்தோர் விளக்கத்தால் பழக்கம் சீராம் அறக் கல்வி குழந்தைகட்குக் கிட்டவேண்டும் அறிவறிந்தோர் அகன்ற கருத்தில் உதிக்கும் ஆட்சிமுறை மலர்ந்துலகம் உய்யவேண்டும்.”

**“மனித குல மகிழ்ச்சியை வளர்க்கவும் வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமைச் சமுதாயத்தைப் படைக்கவும் ஓர் இயக்கம் என்று அரசியலை கவிஞர் கருதியிருக்கிறர்.**

**"ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு நாடு**

**உலகம் யாவும் மானிடர் வீடு**

**உரிமை காப்பபோம் உறவையுங் காப்போம்**

**ஒன்றாய் இணைந்து என்றும் வாழ்வோம்!"**

**என்று உலக சமாதானத்திற்கு விதையை விதைக்கிறார் கவிஞர்.**

**வேதாத்திரி மகரிசி நிறுவிய "உலக சமுதாய சேவா சங்கத்தின் " அடிப்படை நோக்கமே "உலக சமாதானம்." மகரிசி விரும்புவது ஓர் உலக ஆட்சி.**

## ஓர் உலக ஆட்சி - மகரிசி

அரசியல் தலைவர்களாலோ, மதத் தலைவர்களாலோ, பொருள் துறைத்தலைவர்களாலோ உலகில் அமைதி ஏற்படுத்திட முடியாது.

ஏனெனில் இவர்கள் தனித்தன்மையில் எவ்வளவு தான் உயர்நோக்கம் உடையவர்களாக இருந்த போதிலும், ஒரு குறிப்பிட்ட வகையில் வாழ்க்கை நலத்தில் எல்லை கட்டி குழுவினர்கள் அளித்துள்ள பதவி, பணம், இவற்றிற்குக் கட்டுப்பட்டவர்கள்.

ஆகவே ஆன்மீகத் துறையில் உலக மக்கள் அனைவரையும் பொறுப்புடன் இணைத்து நலம் காக்க ஆன்மீக நோக்குடைய ஒரு இயக்கம் தான் நேர்-நிறை உணர்வோடு உலக அமைதிக்கு வழிகாட்ட முடியும்.

நான் கொடுக்கும் திட்டமோ, மிகவும் எளிது; புரிந்து கொள்ளவும் செயல்படுத்தவும் இயல்பானது.

ஐக்கிய நாடுகள் சபைக்குப் போதிய அதிகாரமளித்து உலக நாடுகள் ஒன்றிணைந்து உலகிலுள்ள எல்லா ஆட்சி எல்லைகளையும் பாதுகாக்கும் பொறுப்பைக் கூட்டாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இப்போதுள்ள எல்லைத் தகராறுகளை ஐ.நா. சபை ஏற்படுத்தும் நீதிமன்றத்தின் மூலம் எல்லா நாடுகளும் எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளக்கூடிய திட்டமும் செயலும் நாம் கொடுக்கும் திட்டத்தின் சாரமாகும்.

எல்லைகளின் பாதுகாப்பு ஐ.நா.சபை மூலம் உலகம் ஏற்றுக் கொண்டால் தனித்தனியே எந்நாட்டுக்கும் ராணுவம் தேவைப்படாது.

இன்றுள்ள ராணுவ அமைப்புச் செலவையும், போர் வீரர்களின் சேவையையும், பின்தங்கிய நாடு, பின்தங்கிய மக்கள் இவர்கள் முன்னுக்கு வரவேண்டிய சேவைகளில் ஐ.நா. சபை மூலம் ஈடுபடுத்தி விடலாம்.

ராணுவத்தின் செலவும் ஆற்றலும் மக்கள் நல சேவைக்குத் திருப்பப்பட்டு விட்டால் 15 ஆண்டுக் காலத்திற்குள்ளாக உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் சமமான பொருளாதார வசதியோடும், அன்பு வளம் பெற்ற உள்ளங்களோடும் அமைதியாக வாழ முடியும்.

உலகெங்கும் ஊர் வாரியாக நகர் வாரியாக, நாடுகள் வாரியாக இந்தத் திட்டத்தைப் பற்றிச் சிந்திக்கவும். எந்த பிரிவினருக்கும் இழப்பில்லாத வகையில் உலக அமைதி எற்படத்தக்கவாறு முடிவெடுத்துப் பின்பற்றலாம்.

இந்த பெருநோக்கச் சேவையாற்ற வாக்கு, பொருள், ஆற்றல் என்ற எவ்வகையாலும் உலகுக்குத் தொண்டு செய்ய வாருங்கள். கூடுங்கள். நலம் செய்து நலம் கண்டு மகிழுங்கள் என்று அன்போடு அழைப்பு விடுக்கிறார் மகரிசி.

# உலக நல வேட்பு:

"உலகிலுள்ள பொறுப்புடைய தலைவரெல்லாம்
உயிரறிவை உள்ளுணர்வாய்ப் பெறுதல் வேண்டும்,
உலகனைத்து நாடுகளின் எல்லைகாக்க
ஒருலகக் கூட்டாட்சி வலுவாய் வேண்டும்;
உலகில் போர் பகை அச்சமின்றி மக்கள்
உழைத்துண்டு வளம்காத்து வாழவேண்டும்
உலகெங்கும் மனிதகுலம் அமைதியென்னும்
ஒரு வற்றாத நன்னிதி பெற்றுய்யவேண்டும்."

வேதாத்திரி மகரிஷி அவர்கள் உலகம் முழுவதும் எல்லா நாடுகளும் ஒன்றிணைந்த ஒரே ஆட்சியாக வர என்பதே அவருடைய விருப்பம் .

உலக சமாதான சங்கம் ஒன்றை நிறுவி அதன் கிளைகளை உலகில் எல்லா நாடுகளுக்கும் கிராமங்கள் வரை கொண்டு சென்று பரவச் செய்ய வேண்டும்.

உலக பொது நோக்குள்ள அறிஞர்களை அரசியல் மன்றங்களை தேர்ந்தெடுத்து அத்தகைய தலைவர்களைக் கொண்டு எல்லா நாடுகளும் ஒன்றிணைந்த "ஓர் உலகப் பொது ஆட்சி" நிறுவ வேண்டும் என்பதே வேதாத்திரி மகரிஷியின் நோக்கம்.

கவிஞரின் எண்ணத்தை நிறைவேற்ற மகரிசி 14 அம்ச திட்டத்தை மானுடத்திற்கு மட்டுமல்ல ஐ.நா. சபைக்கும் தந்துள்ளார்.

வேதாத்திரியம் (1) போரில்லா நல்லுலகம்:

உலகமென்ற மண்மீது அனைவரும் பிறந்தோம்,
உயிர்காக்கும் காற்று ஒன்றே மூச்சு விடுவதற்கு
உலகெங்கும் ஒளி வீசும் சூரியனும் ஒன்றே
உள்ள கடல் ஒன்றே நீர் ஆவியாகிப் பொழிய
உலகில் இன்று உள்ளோர் இதிலொன்றும் செய்ததில்லை
ஒவ்வொருவரும் பிறந்து வாழ்ந்து செத்துப் போவார்.
உலகில் ஒரு குழுவினர் மற்றவரைக் கொன்று
உயிர் வாழ்தல் நீதியெனில் கொலைஞர்களே மிச்சம்.

உலகில் பிறந்த நாம் யாரும் நாம் சுவாசிக்கும் காற்றையோ, உலகிற்கு ஒளிகொடுக்கும் சூரியனையோ, நம் வாழ்க்கைக்கு அவசியமான நீரையோ, இந்த நிலத்தையோ செய்யவில்லை.

ஆனால் அதற்கு உரிமையை மட்டும் அனைவரும் பெற முயற்சியை மேற்கொள்கிறோம். இதன் விளைவே உலகில் போர் உருவாகிறது.

போரினால் ஏற்படும் துன்பங்களை ஒரு நிமிடம் உலக மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எவ்வளவு இழப்பு ஏற்படுகிறது.

பொருள் இழப்பு, உயிர் இழப்பு, உறுப்புகள் இழப்பு, குடும்ப உறுப்பினர் இழப்பு, இப்படி என்னும் எவ்வளவோ. இவைகளில் எதையும் நம்மால் ஈடு செய்யமுடியுமா. யோசிக்கவேண்டும்.

உலக அறிஞர் பெருமக்கள் ஒன்றுகூடி ஒரு திட்டம் தயாரிக்கவேண்டும். இந்தப் போரை எப்படி தவிர்ப்பது என்று ஆராய வேண்டும்.

ஏற்கனவே நம்மிடம் இருக்கின்ற ஐக்கிய நாடுகள் சபையைக் கூட்டி, அச்சபையில் உள்ள பாதகாப்புச் சபையின் பொறுப்பில் எல்லா நாடுகளின் எல்லைப் பாதுகாப்பையும் கவனிக்கும் பொறுப்பையும் கண்காணிக்கும் பொறுப்பையும் அளிக்க வேண்டும்.

எல்லா நாடுகளும் அதன் அதிகாரத்திற்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும். போரைத் தவிர்க்க முடியும். போருக்காகும்

செலவுகளை நாட்டின் வளர்ச்சிப் பணிகளுக்கு செலவழிக்க வேண்டும். உலகம் அமைதி பெரும். வறுமை நீங்கும். ஒற்றுமை உருவாகும்.

## வேதாத்திரியம் (2) பொருள் துறையில் சமநீதி:

"வீடு தொழிற்சாலை விளைநிலம் வியாபாரம்
விஞ்ஞான இயந்திரங்கள் ஆட்சி பீடம்
பாடுபடும் மக்கட்குப் பொதுவாய் ஆக
பலபடியில் கூட்டுறவு முறை வகுத்து
நாடு வளம் பெற்றுலகத் திணைப்பைக் கொண்டு
நல் வாழ்வு கிட்டுவதற்கு ஏற்றவாறு
ஈடு இணையற்ற ஒரு திட்டம் வேண்டும்
இம் முறையே மக்களுக்கு நலம் பயக்கும்."

உலகில் வாழ் மக்கள் அனைவருக்கும் வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்வதற்கு ஏற்ற வகையில் அவர்களுக்கு பொருளாதார வளம் அமையவேண்டும்.

பணம் என்பது உழைப்பின் அடையாளம் (token of labour is money). உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

மேலும் ஒருவரின் ஊதியம் இன்னொரு குடும்ப உறுப்பினருக்கும் நிறைவு செய்யக்கூடிய அளவில் அமையவேண்டும். உழைக்கத் தெரியாத, உழைக்க முடியாத மக்களுக்கும் ஏற்றதொரு வாழ்வாதாரத்தை அரசு அமைக்கவேண்டும்.

மேலும் உலகில் ஒருவர் உழைப்பை இன்னொருவர் பறித்துண்ணும் போக்கு வெகு அதிகமாகவே உள்ளது.

இது மக்களிடம் மட்டுமல்ல, ஆட்சியாளரிடம் கூட அமைதுள்ளது. இந்த நிலை மாறவேண்டும். எல்லோருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

அனைவரும் உழைத்துண்டு வாழ வேண்டும். உழைப்பின் அவசியத்தை அனைவரும் அறியவேண்டும்.

இதற்கு ஏற்றவகையில் ஓர் உலக ஆட்சி அமைந்து எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க இறை அருளும் குரு அருளும் துணை புரியட்டும்.

## வேதாத்திரியம் (3) : நேர்மையான நீதிமுறை:

“கொலை செய்தான் ஒரு மூர்க்கன் அறிவிழந்து கொள்ளையுண்டான் நீதிபதி அளித்த தீர்ப்பால் கொலைக்கு கொலை நீதியென்றும் குற்றம் செய்த கொடுமைக்கே தண்டனைகள் என்றும் சொன்னால் கொலையுண்டோர் மனைவி மக்கள் பெற்றோர் செய்த குற்றமென்ன? குடும்பத்தின் தலைவன் ஆங்கே கொலையுண்ட நிகழ்ச்சி அன்னார் வாழ்வில் என்றும் கொடுந்துன்பம் தரவில்லையா? நீதி எங்கே?”

நீதி என்பது நேர்மையாக இருக்க வேண்டும். குற்றம் புரிந்த ஒருவன் தக்க சாட்சி இல்லாமல் தப்பிவிட்டாலும், அது பெரும் தவறு அல்ல.

ஆனால் ஒரு நிரபராதி எந்த சூழ்நிலையிலும் தண்டனைக்கு ஆளாக நேரிடக்கூடாது. பொதுவாக இந்த நீதி எல்லா நாடுகளிலும் உள்ளது.

ஆனால் ஒருவன் கொலை செய்தான் என்ற குற்றத்திற்காக அவனுக்கு நீதிமன்றம் தூக்கு போன்ற கொலை தண்டனை வழங்குகின்றது.

கொலை செய்தவனுக்கு தண்டனை என்பது சரி என்றாலும், அவனுக்கு மரண தண்டனை நிறைவேற்றிய பிறகு அவனின் மமைவி, மக்கள், பெற்றோர், உறவினர்கள் எவ்வளவு துன்பம் அடைகின்றார்கள். இவர்கள் என்ன குற்றம் செய்தார்கள்? இவர்களுக்கு எதற்கு தண்டனை? அறிவற்றவன் செய்த கொலைக்கு அறிவில் சிறந்த நீதிபதி அளித்த தண்டனையும் கொலைதானே? இது நீதி அல்லவே.

மேலும் ஒருவன் குற்றவளியாகிறான் என்றால் அவனுக்கு தேவையான வாழ்க்கை தேவைகள் நிறைவேற போதிய வேலை வாய்ப்பு போன்றவற்றை அளிக்காத சமுதாயமும் குற்றவாளிதானே?

மேலும் நீதி என்பது நேர்மையான முறையில் அமைய ஆன்றோர்கள் சிந்தித்து நல்ல சட்டங்களை இயற்றவேண்டும். அதை செயல்படுத்த சிறந்த அரசும் அமைய வேண்டும்.

## வேதாத்திரியம் (4): நிலவுலகுக்கோர் ஆட்சி:

ஓர் உலக ஆட்சி உயர் ஒழுக்கத்தோடு
உலகினிலே குழந்தைகளை வளர்க்கும் திட்டம்
பார் முழுதும் பொருள் துறையில் சமநேர் நீதி
பல நாடும் ஒன்றிணைந்த பொருளாதாரம்
சீர்திருத்தச் சிக்கனமாம் சிறந்த வாழ்வு
தெய்வநிலை யகத்துணரும் இறைவணக்கம்
நேர் வழியில் விஞ்ஞானம் பயனாய்க் கொள்ளும்
நெறிமுறைகள் இவையினைந்த வாழ்வு காண்போம்.

ஐக்கிய நாடுகள் சபைக்குப் போதிய அதிகாரம் அளித்து உலக நாடுகள் ஒன்றிணைந்து உலகிலுள்ள எல்லா ஆட்சி எல்லைகளையும் பாதுகாக்கும் பொறுப்பைக் கூட்டாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இப்போதுள்ள எல்லைத் தகராறுகளை ஐ.நா. சபை ஏற்படுத்தும் நீதிமன்றத்தின் மூலம் எல்லா நாடுகளும் எதிர்ப்பின்றி ஏற்றுக்

கொள்ளக்கூடிய திட்டமும் செயலும் நாம் கொடுக்கும் திட்டத்தின் சாரமாகும்.

எல்லைகளின் பாதுகாப்பு ஐ. நா. சபை மூலம் உலகம் ஏற்றுக்கொண்டால் தனித்தனியே எந்நாட்டுக்கும் ராணுவம் தேவைப்படாது.

இன்றுள்ள ராணுவ அமைப்புச் செலவையும், போர் வீரர்களின் சேவையையும், பின்தங்கிய நாடு, பின்தங்கிய மக்கள் இவர்கள் முன்னுக்கு வரவேண்டிய சேவைகளில் ஐ.நா. சபை மூலம் ஈடுபடுத்தி விடலாம்.

ராணுவத்தின் செலவும் ஆற்றலும் மக்கள் நல சேவைக்குத் திருப்பப்பட்டுவிட்டால் பதினைந்து ஆண்டுக் காலத்திற்குள்ளாக உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் சமமான பொருளாதார வசதியோடும், அன்பு வளம் பெற்ற உள்ளங்களோடும் அமைதியாக வாழ முடியும்.

உலகெங்கும் ஊர் வாரியாக, நகர் வாரியாக, நாடுகள் வாரியாக இந்த திட்டத்தைப் பற்றிச் சிந்திக்கவும், எந்த பிரிவினருக்கும் இழப்பில்லாத வகையில் உலக அமைதி ஏற்படத் தக்கவாறு முடிவெடுத்துப் பின்பற்றலாம்.

இந்த பெருநோக்கச் சேவையாற்ற வாக்கு, பொருள், ஆற்றல் என்ற எவ்வகையாலும் உலகுக்குத் தொண்டு செய்ய வாருங்கள். கூடுங்கள். நலம் செய்து நலம் கண்டு மகிழுங்கள் என்று அன்போடு அழைக்கின்றோம்.

## வேதாத்திரியம் (5): சீர்செய்த பண்பாடு:

"புதியதொரு பண்பாடு உலகுக்கு வேண்டும்
போதை, போர், பொய், புகை ஒழித்து அமுல்செய்வோம்
அதிகசுமை ஏதுமில்லை அவரவர் தம் அறிவின்
ஆற்றலினால் உடல் உழைப்பால் வாழ்வதென்ற முடிவும்;

மதி பிறழ்ந்து மற்றவர்கள் மனம் உடல் வருத்தா
மாநெறியும், உணவுக்குயிர் கொல்லாத நோன்பும்,
பொது விதியாய்ப் பிறர் பொருளை வாழ்க்கைச் சுதந்திரத்தை
போற்றிக்காத்தும், பிறர் துன்பம் போக்கும் அன்பும் வேண்டும்."

நமது முன்னோர்கள் நெறி தவறி வாழும் மக்களை நெறிப்படுத்த பல வழிகளில் முயற்சி செய்து பல பழக்க வழக்கங்களை உருவாக்கினர்.

இவைகளே பண்பாடு என்று வழங்கப்பட்டது. ஆனால் அவை அனைத்தும் எல்லா மக்களுக்கும், எல்லா நாட்டிற்கும், எல்லா காலத்த்திற்கும் ஏற்றதாக அமையவில்லை.

இன்றைய வாழ்க்கை முறைக்கு தேவையற்றவைகள் நிறையவே உள்ளன.

எனவே எல்லாகாலத்திற்கும், எல்லா நாட்டிற்கும், எல்லா மக்களுக்கும் பொருந்தும்வகையில் புதியதொரு பண்பாடு வேதாத்திரி மகரிஷி அவர்களால்நமக்கு அளிக்கப்பட்டுள்ளது.
எப்படி ஒரு வீட்டிற்கு நான்கு புறமும் சுற்றுச்சுவர் அவசியமோ அதைப்போன்று ஒரு மனிதனின் ஒழுக்கவாழ்க்கைக்கு போதை தரத்தக்க
பொருள்களை உபயோகிப்பது, போர்புரிவது, பொய் சொல்வது, புகையிலைப் பொருட்களை உபயோகிப்பது ஆகிய நான்கையும் தவிர்த்து வாழவேண்டும்.

மேலும் ஐந்து ஒழுக்கநெறிகளை வாழ்வில் கடைபிடிக்கவேண்டும்.

(1) அவரவர் அறிவாலும், உடல் உழைப்பாலும் வாழ்தல்;
(2) மற்றவர்கள் உடல், மனம் வருத்தாமல் வாழ்தல்;
(3) உணவுக்காக உயிர்கொலை புரிவதை தவிர்த்தல்;
(4) பிறர் பொருட்களை, வாழ்கை சுதந்திரத்தை போற்றிக்காத்தல்;
(5) பிறர் துன்பத்தை முடிந்த அளவு போக்கும் அன்பு ஆகியவை வேண்டும்.

இவை எக்காலத்திற்கும் எல்லோருக்கும், எல்லா மக்களுக்கும் பொருந்தக்கூடிய புதிய பண்பாடு ஆகும்.

## வேதாத்திரியம் (6): சிந்தனையோர் வழி வாழ்வு:

“வாழவேண்டும் என்றெண்ணி மனிதனாக
வந்ததில்லை, எனினும் நாம் பிறந்துவிட்டோம்.
வாழவேண்டும், உலகில் ஆயுள் மட்டும்,
வாழ்ந்தவர்கள் அனுபவங்கள் தொடர்ந்து பற்றி.”

இன்று உலகில் வாழ்கின்ற மக்கள் எப்படி வாழவேண்டும் என்று அறியாமல், தானும் துன்புற்று, பிறரையும் துன்புறுத்தி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அனைவருமே துன்பமற்ற இன்பமான வாழ்வைத்தான் விரும்புகிறோம். ஆனால் இன்பத்தைக் காட்டிலும் துன்பமே மிகுந்து காணப்படுகிறது.

காரணம் யாதெனில் நம் செயல்களே. அவற்றை சீரமைத்து ஒழுக்கமான வாழ்க்கை நாம் மேற்கொண்டால் உலகம் முழுவதிலும் இன்பமே நிலைத்திருக்கும்.

ஆன்றோர் பெருமக்கள் கூறும் சிறந்த சிந்தனைகளை பின்பற்றி, அவர்கள் வழிநின்று நமது எண்ணம், சொல், செயல்களை சீரமைத்து வாழ்ந்து, நாமும் இன்புற்று, சமுதாயத்திற்கும் இன்பத்தை அளிக்க முயற்சி செய்வோமாக. குருவருளும் திருவருளும் நமக்கு துணை புரியட்டும்.

## வேதாத்திரியம் 7 : சிறப்புணர்ந்த பெண் மதிப்பு:

“எல்லையற்ற ஆற்றலுள்ள இறைவன் திருவுள்ளமென்ன
எவ்வுயிரும் தோன்றுதற்கு ஏற்றதொரு திருவழியாய்
வல்லமையாய்ப் பெண்ணினத்தை வடிவமைத்தான் அற்புதமே
வாழுகின்ற மக்களில் இவ்வளம் அறிந்தோர் எத்தனை பேர்?

பெண்மையின் சிறப்பினை அன்றுதொட்டு இன்றுவரை பலர் எடுத்துரைத்தாலும், சிலர் பெண்மையினை இரண்டாம் தரமாகவே நடத்தி வருகின்றனர்.

இந்நிலையை மாற்றி பெண்மையை போற்றவும், சிறப்பிக்கவும் சில சிந்தனையாளர்கள் முயன்று வருகிறார்கள்.

அவர்களுள் நமது அருட்தந்தை மிக முக்கிய பங்கு வகிக்கிறார். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கு பின்னும் ஒரு பெண் இருக்கிறாள் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

ஒரு குடும்பத்தினை நடத்துவது, குழந்தைகளை வளர்த்து ஆளாக்குவது, முதியோர்களை பராமரிப்பது, இப்படி பெண்களின் பங்கு மிகவும் போற்றுதற்குரியது.

ஆனால் இவர்களின் சிறப்பு பெரும்பாலும் பலரால் அறிந்துகொள்ளப் படுவதில்லை. இவ்வுலகில் வாழுகிற ஜீவராசிகள் அனைத்திற்கும் பிறப்பிடம் பெண்மையே…

இத்தகைய பெண்ணினம் கல்வி, பொருளாதாரம், வாழ்க்கை வளம் அனைத்திலும் உயர்வு நிலை பெறுவதே சமுதாயத்திற்கும், குடும்பத்திற்கும் சாலச்சிறந்தது.

இன்று உலகில் 700 கோடி மக்கள் இருக்கிறார்கள். இவர்களில் பாதிபேர் ஆண்கள். இவர்களை பெற்றெடுத்தது பெண்களே. ஆண்கள் அனைவரும் பெண்களின் அன்பளிப்பு எனில் அது மிகை ஆகாது. பெண்மையை போற்றுவோம். வாழ்த்துவோம்.

“பெண்ணினத்தின் சிறப்பை உணர்ந்தே உள்ளேன்,
பேருலகில் வாழுகின்ற மக்கள் எல்லாம்
பெண்ணினத்தின் அன்பளிப்பே எனில் இதைவிட
பெருமை வேறென்ன எடுத்துச் சொல்வதற்கு.”

## வேதாத்திரியம் (8): தெய்வ நீதி வழி வாழ்தல்:

"இறைநிலை என்ற பேராற்றல்
எங்கும் உள்ளது நீக்கமற
மறைவாய் இருந்து அது ஆற்றும்
மாபெரும் செயலை நினைத்திடுவோம்
உணவை உண்போம் நாள்தோறும்
உடலாய் அதனை மாற்றுவது யார்
கணமும் நம்மைப் பிரியாமல்
கருத்தாய் இருந்து ஊக்குவது யார்
உலகம், நிலவு, சூரியன்கள்,
உயிர்களனைத்தும் படைத்தது யார்
பலவும் ஒழுங்காய் முறைபிறழா
பாங்கில் இயக்கி வருவது யார்
அவரே தெய்வம், பேராற்றல்
அறிவைக் கொண்டே வணங்கிடுவோம்."

தெய்வம் என்கிற இறைநிலை எங்கும் நிறைந்துள்ளது, அது தனக்குள்ளும் அறிவாக இருந்துகொண்டு, தான் செய்வதையெல்லாம் கண்காணித்துக்கொண்டிருக்கிறது என்பதை அறியாத மனிதன் உணர்ச்சிவயப்பட்டும், அலட்சியமாகவும் செயல்களை செய்து தானும் துன்புற்று, சமுதாயத்திற்கும் துன்பத்தைக் கொடுக்கின்றான்.

நமது செயல்களுக்கு விளைவாக இறைநிலையே வெளிப்படுகின்றது என்கிற உண்மையை உணர்ந்து, நமது எண்ணம், சொல், செயல்களை ஒழுங்குபடுத்தி வாழ்வதே தெய்வநீதி வழி வாழ்வதாகும்.

## வேதாத்திரியம் (9): தேர்த் திருவிழா தவிர்த்தல்:

"கடவுள்தான் அனைத்தையுமே படைத்தான் என்றேன்
கண்காது மூக்கு வைத்துக் கதைகள் சொன்னேன்
கடவுள் என்ற கற்சிலையை அறையில் வைத்துக்

கதவு அடைத்துப் பூட்டியும் வைத்தேன்; பின் அந்தக்
கடவுளுக்குப் பசிதீர்க்க பால், நெய், தேங்காய்
கனிவகைகள் கற்சிலைமுன் படித்தேன்; ஆனால்
கடவுள் நிலை அறிந்தபோதென் செய்கை யெல்லாம்
கண்டு விட்டேன் சிறுபிள்ளை விளையாட்டாக."

வேதாத்திரியத்தில் இன்று நாம் சிந்திக்கக் கூடியது மிக உயர்ந்த ஒரு கருத்தைப் பற்றியது. இறைவன் யார்? இறைவனுக்கு உருவம் உள்ளது என்று நினைத்து நாம் அவனுக்கு, நாம் என்னவெல்லாம் நமக்காக செய்துகொள்கிறோமோ அவையனைத்தையும் அவனுக்கு செய்கிறோம், ரசிக்கிறோம்.

மேலும் இறைவனிடம் நீ எனக்கு இது செய்தால், நான் உனக்கு அது செய்கிறேன் என்று வியாபாரம் செய்கிறோம்.

சற்றே சிந்தித்துப் பார்ப்போம். இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்து, கோடானுகோடி கோள்களையும், உயிர்களையும் படைத்து, அவை அனைத்தையும் இயக்கிக்கொண்டும், காத்துக் கொண்டும் இருப்பவன் இறைவன். அவனுக்கு தேவை என்பது இல்லை.

ஏனெனில் அவனுக்கு உடலும் இல்லை, குடலும் இல்லை. அப்படியெனில் இவ்வளவு நாட்களாக நாம் செய்துகொண்டிருக்கும் பூஜை, ஆராதனை, திருவிழாக்கள் இவையெல்லாம் எப்படி உருவாகி இருக்கும்?

ஒழுக்க நெறி தவறி வாழும் மக்களை நல்வழிப்படுத்தி அவர்களை திருத்துவதற்கும், சமுதாயத்திற்கு அவர்களால் ஏற்படும் துன்பங்களைத் தவிர்ப்பதற்கும் உண்மையான இறையுணர்வு பெற்றவர்களும், சிந்தனையாளர்களும் உருவாக்கியதே ஆகும்.

இந்த நன்னோக்கத்தைப் பயன்படுத்தி சில வியாபாரிகளாலும்,

சில சுயநலவதிகளாலும் உருவாகாப்பட்டவைகளே இத்தகைய தேர்த்திருவிழா போன்ற பல. இவைகளால் ஏற்படும் செலவுகளையும், இத்தகைய நேரங்களில் ஏற்படும் சண்டை, சச்சரவு போன்றவைகளை சிந்தித்து தவிர்ப்போம்.

## வேதாத்திரியம் (10): சிறுவர்கட்கே விளையாட்டு:

"சீறல், சினத்தல் ஒழித்து உடல் உரமாக்கும்
சிறுவர்க்காம் விளையாட்டு எண்வகையாம், அவை:
ஏறல், குதித்தல், வளைதல், நீந்தல், ஓடல், எறிதல்,
பளுதூக்கல், தாண்டல் என மொழிவோம்."

விளையாட்டு என்பது குழந்தைகளுக்கு அவசியமான ஒரு பயிற்சி ஆகும்.

ஏனெனில், வளரும் குழந்தைகளுக்கு உடலை வலிமைப் படுத்துவதற்கும், உடல் வளர்ச்சியடைவதற்கும், உறுப்புகள் நன்கு செயல்படுவதற்கும், உடலும் மனமும் புத்துணர்ச்சி பெறுவதற்கும் ஏற்றதொரு உடற்பயிற்சி விளையாட்டு ஆகும்.

ஆனால், இன்றைய குழந்தைகள் நிலை மிகவும் பரிதாபமாக உள்ளது. அவர்களுக்கு படிப்பதற்கே நேரம் போதவில்லை, இந்த நிலையில் அவர்கள் எங்கே விளையாடுவது.

அப்படியே வாய்ப்பு கிடைத்தாலும் பெற்றோர்கள் அவர்களை பெரும்பாலும் விளையாடுவதற்கு அனுமதிப்பதில்லை.

நிறைய குழந்தைகள், பெரியோர்களைப்போலவே மன உளைச்சல், மன அழுத்தம் போன்ற துன்பங்களுக்கு ஆளாகிறார்கள். அரசும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் இந்த கருத்தை உணர்ந்து, ஓரளவாவது குழந்தைகளுக்கு விளையாட அனுமதிப்பது, அவர்களுக்கு நன்மைப்பயக்கும்.

மேலும், விளையாட்டு என்பது இன்றைய நிலையில் பெரியவர்கள் செயலாக உள்ளது. ஒருகாலத்தில் இந்தநிலை இருந்தது.

அப்போது அண்டை நாடுகளுக்கிடையே அடிக்கடி சண்டை ஏற்படும். அல்லது வலிய விலங்குகளிடம் போராடவேண்டும்.

எனவே அவர்கள் உடலை வலிமைப்படுத்த பல விளையாட்டுக்களில் ஈடுபட்டார்கள். இன்று அந்த நிலை இல்லை.

மேலும் விளையாட்டுப் போட்டிகளினால் குழு குழுவாகவும், ஊர் ஊராகவும், நாடு நாடாகவும் சண்டையும், பகையும்தான் உருவாகிறது.

எனவே விளையாட்டு என்பதுசிறுவர்களுக்கு மட்டுமே என்ற நிலை வரவேண்டும். பெரியவர்கள் விளையாடுவது பற்றி ஒரு மேல்நாட்டு அறிஞர் கீழ் கண்டவாறு கருத்து தெரிவித்துள்ளார்,

“பதினோரு முட்டாள்கள் விளையாடுகிறார்கள், பதினோராயிரம் முட்டாள்கள் பார்க்கிறார்கள்” என்று. சிறுவர்கள் விளையாட வாய்ப்பு அளிப்போம்.

## வேதாத்திரியம் 11: செயல் விளைவு உணர் கல்வி:

கண், காது, மூக்கு வைத்துக் கதைகள் சொல்லிக்
கருத்துக்குக் கடவுள்தனை சிறுமையாக்கிப்
புண்பட்ட நெஞ்சங்கள் மேலும் புண்ணாய்ப்
போகும் வழி தெரியாமல் தவித்து, வாழ்வில்
கண்கலங்கி நிற்போர்க்கும் கடவுள் தன்மை
கர்மத்தின் விளைவாக எழுந்தியங்கும்
உண்மையினை விளக்குவதே இக்காலத்திற்கு
ஒத்த உயிர்த் தொண்டாகும்; உணர்வோம், செய்வோம். (1)

இறையுணர்வும் அறநெறியுமின்றி மனித வாழ்வு
ஏற்றபடி அமையாது என்ற உண்மை கண்டோர்
மறைமுகமாய் முக்காலத்தோர் அறிவிற்கேற்ப
மதித்திடவும் ஒழுகிடவும் கருணையுள்ளம் கொண்டோர்
குறையெனினும் வேறு வழியின்றி இறைநிலைக்குக்
கொடுத்தார்கள் உருவங்கள், பெயர்கள்.
நிறைவாழ்வுக்கு அறம்புரியும் சொர்க்க ஆசை காட்டி
நெறி பிறழ்வோர் அச்சமுற நரகமும் கற்பித்தார். (2)

செயலிலே விளைவாக தெய்வ ஒழுங்கமைப் பிருக்க
பயனென் தவறிழைத்துப் பரமனைப் பின் வேண்டுவதால்.(3)

அன்றும் இன்றும் என்றும் செயலுக்கேற்ற விளைவுகள் வருகின்றன. இதை அளிப்பவன் இறைவன். இதை மனிதன் அறிவதில்லை.

அல்லது அறிந்தாலும் அலட்சியம் செய்கிறான். தவறான செயல்களை செய்கிறான். விளைவாக துன்பம் வருகிறது. வேதனை அடைகிறான். வருத்தப் படுகிறான்.

கடவுளை குறை சொல்கிறான். கடவுள் என்பது சத்தியமானது. நீதி தவறாதது. அது செயலுக்கு ஏற்ற விளைவை மட்டுமே அளிக்கின்றது.

உனக்கு வரும் இன்பம், துன்பம் இரண்டுமே உன்னுடைய செயலைப் பொறுத்தே அமைகிறது. கடவுளைக் குறைகூறுவது அறியாமை.

தீதும் நன்றும் பிறர் தர வாரா – கணியன் பூங்குன்றனார்.

மனம் என்னும் கேப்டன் ஞானேந்திரியங்கள் (கண், காது, மூக்கு, நாக்கு, தோல்) மற்றும் கர்மேந்திரியங்கள் (கைகள், கால்கள், வாய், குதம், குய்யம்) எனும் பத்து உறுப்புகளோடு சேர்ந்து செயல்களை செய்வதற்கு முன் பலமுறை சிந்தித்து நல்லவைகளை மட்டுமே செயலாற்றினால் இன்பத்தை மட்டுமே பெறலாம்.

---

மாறாக செயல் புரிந்தால் துன்பமே மிஞ்சும். முக்காலத்தில் இதை உணராமல் தவறான செயல்களை செய்து தாமும் துன்புற்று, பிறருக்கும் துன்பத்தை அளித்த மக்களை திருத்துவதற்காகவே கோயில், கடவுள், சொர்க்கம், நரகம் போன்றவைகளை கற்பித்து, நல்லது செய்தால் இறைவன் சொர்கத்தை அளிப்பான் என்றும் தீயவற்றை செய்தால் இறைவன் நரகத்தை அளிப்பான் என்றும் மக்களை ஆசை வார்த்தைகளைக் கூறியும், அச்சுறுத்தியும் நல்வழிப்படுததினர் மக்கள் மீது அன்பும் கருணையும் கொண்ட சிந்தனையாளர்கள்.

## வேதாத்திரியம் 12: சீர் காந்த நிலை விளக்கம்:

“காந்தநிலை உணர்ந்திடில் கடவுள் மனம் அதனிலே
கண்டிடலாம்; அதன் மாயத் திருநடனக் காட்சியாய்
மாந்தருக்குள் ஊறு, ஓசை, மணம், ஒளி, சுவை, மனம்
மற்றும் இன்பம் துன்பம் யாவும் மாயகாந்த விளைவுகள்
சாந்தமான மன நிலையில் சலனமின்றி ஆய்ந்திட
சந்தேகம் சிக்கலின்றி சாட்சி கூறும் உன் உளம்
வேந்தருக்கும் வேதருக்கும் வணிகருக்கும் பொது இது
விரிந்தறிவில் இறையுணர விளக்கினேன் விளங்கியே.”

காந்தம் என்ற ஒன்று இல்லாத இடமோ,பொருளோ, சீவனோ பிரபஞ்சத்தில் இல்லை எனலாம்.

சுத்தவெளி எனப்படும் இறைநிலை தன்னைத்தானே விட்டுவிட்டு அழுத்துவதால் உருவாகும் இறைத்துகள்கள், அதே சுத்தவெளியின்

தொடர் அழுத்தத்தால் தற்சுழற்சி பெற்று, மேலும் அவைகள் இனைந்து விண்ணாகி, அந்த விண்ணும் தற்சுழற்சியோடு இயங்குகின்றது.

அவ்வாறு விண் சுழலும் போது அதன் சுழற்சிக்கு ஈடு கொடுக்க முடியாத இறைத்துகள்கள் அவ்விண்ணிலிருந்து வெளியேறுகிறது.

இவைகள் இறைநிலையோடு மோதும்போது தன்னிலை இழந்து காந்தம் என்ற நிலை அடைகிறது.

இக்கந்தமே பஞ்ச பூதங்களில் அழுத்தம், ஒளி, ஒலி, சுவை, மணம் என்றும் சீவன்களில் இவைகளை உணரும் மனமாகவும் செயல் புரிகிறது.

இக்காந்தமே பிரபஞ்சம் முழுவதும் ஆற்றலாகவும், அறிவாகவும் இருந்து அனைத்தையும் வழி நடத்துகின்றது.

**வேதாத்திரியம் 13: பார் முழுதும் உணவு, நீர் பொதுவாக்கல்:**

“உலகமென்ற மண்மீது அனைவரும் பிறந்தோம்,
உயிர்காக்கும் காற்று ஒன்றே மூச்சு விடுவதற்கு
உலகெங்கும் ஒளி வீசும் சூரியனும் ஒன்றே
உள்ள கடல் ஒன்றே நீர் ஆவியாகிப் பொழிய
உலகில் இன்று உள்ளோர் இதிலொன்றும் செய்ததில்லை
ஒவ்வொருவரும் பிறந்து வாழ்ந்து செத்துப் போவார்.
உலகில் ஒரு குழுவினர் மற்றவரைக் கொன்று
உயிர் வாழ்தல் நீதியெனில் கொலைஞர்களே மிச்சம்.”

இன்று உலகில் எழுநூறு கோடிக்கு மேல் மக்கள் தொகை பெருகி விட்டது. இதில் எத்தனை பேருக்கு போதிய அளவு உணவு, நீர், இருப்பிடம், போன்ற வாழ்க்கைத் தேவைகள் நிறைவு செய்யப் படுகிறது என்பது மிகப் பெரிய கேள்வி.

ஆனால் மனிதனாகப் பிறந்த அனைவருக்கும் வாழ்க்கை வளங்கள் அனைத்தையும் அனுபவிப்பதற்கு உரிமை உண்டு.

காற்றும், சூரிய ஒளியும் எப்படி தடையின்றி எல்லோருக்கும் கிடைக்கின்றதோ அதே போன்று உணவு, உடை, நீர், இருப்பிடம் இவை அனைத்தும் கிடைக்கவேண்டும்.

இதற்கு ஓர் உலக ஆட்சி என்ற அமைப்பு உருவானால் மட்டும்தான் முடியும். அவ்வாட்சியின் கீழ் எல்லா நாடுகளும் ஒன்றிணைக்கப்படவேண்டும்.

அவ்வாட்சியில் எல்லா நாட்டு வல்லுணர்களும் பங்கு வகிக்கவேண்டும். அவர்கள் விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டு உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான முறையில் அனைத்தும் கிடைக்க வழிவகைகள் செய்யவேண்டும்.

முதலில் உலகில் ஓடிக்கொண்டிருக்கும் அனைத்து நதிகளையும் இணைத்து, எல்லா பகுதிக்கும் நீர் விநியோகம் செய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

இதன் மூலம் எல்லா நாடுகளும் நீர்வளம்பெறும்போது அங்கு உணவு உற்பத்தி பெருகும், குடிநீர் தட்டுப்பாடு நீங்கும்.

## வேதாத்திரியம் 14 : பல மதங்கள் பல கடவுள் பழக்கம் ஒழித்து உண்மை ஒன்றைத் தேர்ந்திடுதல்:

"உலக மக்கள் பண்பாடு உருக்குலைந்து போச்சு
ஒவ்வொருவரும் பிறர்க்கு பகைவராகின்றார்கள்
பல மதத்து தலைவர்களும் கூடி ஓர் அரங்கில்
பற்றற்று தெய்வநிலை தேர்ந்தெடுக்க வேண்டும்."

இன்று உலகில் வாழ்கின்ற சீவன்களில் உடல் அமைப்பிலும், அறிவின் உயர்விலும், வாழ்க்கை முறையிலும் மிக உயர்ந்த நிலையில் இருப்பவன் மனிதன்.

ஆனால் வினைப் பதிவின் காரணமாக, விலங்கினங்களிலிருந்து வித்துத் தொடராக வந்ததனால் மனிதப் பண்புகளை அறியாமலும், அறிந்தும் அலட்சியம் செய்தும், உணர்ச்சி வயப்பட்டு செயல்கள் ஆற்றி துன்புற்றும், துன்புறுத்தியும் வாழ்கின்ற மக்களை நெறிப்படுத்தி பிறவியின் நோக்கமாகிய முழுமைப் பேறை அடைவதற்கு உதவி செய்ய நினைத்த சிந்தனையாளர்கள் ஆங்காங்கே உருவாக்கிய அமைப்புகளே இன்று மதங்கள் என்று அழைக்கப் படுகின்றன.

காலப்போக்கில் சுயநலம் எழுச்சி பெற்றதனால் மதங்களுக்குள்ளே சண்டைகளும் சச்சரவுகளும் உருவாகின.

இன்று அறிவில் வளர்ச்சி பெற்ற, உண்மைப் பொருளை உணர்ந்த மதத் தலைவர்கள் ஒன்றுகூடி கலந்தாய்வு செய்து இறைநிலை என்பது ஒன்றா? பலவா? என்ற கேள்விக்கு விடை காணவேண்டும்.

*இறைநிலை ஒன்று எனில் அது எது என்றறிந்து உலக மக்கள்* அனைவருக்கும் அதை தெரிவித்தல் அவசியமாகும்.

உலகிலுள்ளோர் அனைவரும் அந்த ஒரே கடவுளை வணங்குவதோடு, சண்டை சச்சரவுகளை ஒழித்து ஒத்தும் உதவியும் வாழ்வது இன்றைய காலகட்டத்தில் சமுதாய மேம்பாட்டிற்கு உதவி புரியும்.

“போரில்லா நல்லுலகம்;

பொருள் துறையில் சமநீதி;
நேர்மையான நீதிமுறை; நிலவுலகுக்கோர் ஆட்சி;
சீர்செய்த பண்பாடு; சிந்தனையோர் வழி வாழ்வு;
சிறப்புணர்ந்த பெண்மதிப்பு; தெய்வ நீதி வழி வாழ்தல்;
தேர்த்திருவிழா தவிர்த்தல்; சிறுவர்கட்கே விளையாட்டு;
செயல்விளைவு உணர்கல்வி; சீர்காந்த நிலை விளக்கம்;

பார்முழுதும் உணவு; நீர் பொதுவாக்கல்; பல மதங்கள்
பல கடவுள் பழக்கம் ஒழித்து உண்மை ஒன்றை தேர்ந்திடுதல்."

ஆசான் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் இந்த சமுதாய மக்களை மேம்படுத்துவதற்காக வேதாத்திரியம் என்ற தலைப்பில் நமக்கு அளித்துள்ள பதினான்கு தத்துவங்களின் தொகுப்பே இந்த கவிதை.

நோக்கம் உலக அமைதி. ஒவ்வொரு தலைப்பும் மக்களின் விழிப்புநிலையை உயர்த்துவதே ஆகும்.

இந்த நன்னாள் முதல் நாம் அனைவரும் தினமும் உலக அமைதி விரைவில் கிடைக்க இறை அருளையும், குரு அருளையும் பிரார்த்திப்போம்.

## 34. ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே!!!

மனிதப் பிறப்பின் நோக்கமே நிலையான நித்தியமான ஆனந்தத்தைப் பெறுவதுதான்.

"இடையாட வளையாட சலங்கைகள் ஆட
இலையோடு கொடி போல நடமாடினாள்

உலகாளும் உமையாளின் ராக பாவங்கள்
ஆனந்தம் குடி கொண்ட கோலமம்மா!"

படைத்த பிரம்மமே ஆனந்த சொரூபம் தான். இதைத்தான் கவிஞர், உலகாளும் உமையாளின் ராக பாவங்கள், ஆனந்தம் குடி கொண்ட கோலமம்மா!" என்று பாடுகிறார்.

பிரம்மத்திலிருந்து வந்த மனிதனும் ஆனந்தமாகதானே இருக்க வேண்டும்.

"இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா! - எங்கும்

இன்ப ஊற்றாய்ப பெருகும் இறைவா!

அன்பு ஊற்றாய்த் தோற்றங்கள் அனைத்துக் குள்ளும் அறிவாய்,

இன்ப ஊற்றாய்ப் பெருகும் இறைவா!"

இறைவனே இன்ப ஊற்றாய் இருப்பதை பாடி மகிழ்கிறார் மகரிசி.

ஆன்மீக - ஆனந்தம் - ஆனந்தமயமான வாழ்க்கைக்குப் பெயர்தான் ஆன்மீக வாழ்க்கை - ஆனந்தமயமாக வாழ முடியாமல் போனதற்கு மனிதன் கண்டுபிடித்த புதுப் பெயர்தான் சாதாரண வாழ்க்கை.

யாருக்குத்தான் ஆனந்தமாய் வாழ ஆசை இருக்காது? ஆனால் எப்படி ஆனந்தமாய் வாழ்வது என்பது தான் தெரிய வில்லை.

ஆனந்தம் ஆர்ப்பரிக்கும் நிமிடங்களை விட்டுவிட்டுக் கவலைகளின் சவலைப் பிள்ளைகளாய், வருத்தத்தின் நிறுத்தத்தில் சிற்றின்ப எல்லையில் நின்றுகொண்டிருக்கிறோமே ஏன்?

தங்கக்கடைகளிலும் குழந்தைகள் தேடுவது சாதாரண பலூன்களைத்தான்.

நிம்மதியான மனமே ஆனந்தத்தின் சந்நிதி; ஆனந்தமனம் இறைவன் உறையும் அரூபபீடம்

“செல்வம் என்பது சிந்தையின் நிறைவே” என்று குமரகுருபரசுவாமிகள் அழகாக ஆனந்திக்கச் சொன்னதை அறிவோமா?

யார்வாழ்வில் சோகங்கள் இல்லை? துன்பங்கள் இல்லை? சவால்கள் இல்லை? சங்கடங்கள் இல்லை?

முள்ளுக்கு மத்தியில்தான் ரோஜா, ராஜாவாகக் கொலுவீற்றிருக்கிறது.

கண்ணீரைச் சிந்தும் கண்களுக்கருகில்தான் சிரிப்பைச் சிந்தும் உதடுகள் உற்சாகத்தோடு உட்கார்ந்திருக்கின்றன.

எண்ணங்களை ஆராய்ந்த மனமே உற்சாகமாக இருக்கிறது. எண்ணங்களில் தான் இருக்கின்றன நம் வாழ்வின் நிறைவும் ,சந்தோஷமும், சோகத்தின் சரிவும்.

தன்னை அறிவதில்தான் ஆனந்தம். தன்னை அறியும் வழிகைகளைக் காட்டுகிறார் தாயுமானவர்.

நிறைவான மனம் வீடு நிறைக்கும் பொருட்களால் ஆனந்தம் வரப்போவதில்லை; பைநிறைக்கும் பணக்கட்டுகள் ஆனந்தம் தரப்போவதில்லை; கழுத்து நிறைய ஆபரணங்கள் ஆனந்தம் தரப்போவதில்லை. நிறைவான மனமே ஆனந்தத்தின் ஆபரணம்.

போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து. பணத்திற்காக ஓடியோடி பிணமாய் அடங்குவதைவிட உள்ளதைக் கொண்டு நல்லதைச் செய்வோமே!

ஆசையை சீரமைத்துக் கொண்ட மனமே ஆனந்தத்தை அடைகிறது. ஆனந்தத்தை அனுபவிக்கிறது.

செய்யும் வேலையை ஒழுங்குடனும் மகிழ்வாகவும் நிறைவாகவும் செய்வதும் தியானம் என்று உணருங்கள். கர்மயோகமே தியானம்.

சினச்சொற்கள் சிராய்ப்பை உண்டாக்கி, முகம்தெரியா மனிதர்களோடும் வீண் பகையை உண்டாக்கிவிடும். எனவே கந்தகச் சொற்களை விடுத்து கனிவுதரும் கனிச்சொற்களைப் பேசுங்கள்.

இதைத்தான் “பேசா இடும்பைகள் பேசித் திரிந்தேன்” என்று தாயுமானவர் நம்மை உஷார் படுத்துகிறார்.

ஆயுள் முழுக்க வயிற்றுக்கு உருண்டு உருண்டு உழைத்தாலும் தினமும் ஒருமணி நேரமாவது மனதிற்காகச் செலவிடுங்கள்.

வானொலி கேளுங்கள், புத்தகம் படியுங்கள், சொற்பொழிவு கேளுங்கள், சிற்பம் பாருங்கள், பாயிரம் பாடுங்கள், சிரிக்கப் பேசுங்கள், பறவை காணுங்கள், பறப்பதாய் உணருங்கள். மனம் விட்டுப் பேசும்போது ரணம் விட்டுப்போய்விடும்.

இதையும் தாண்டி சும்மா இருந்து பாருங்கள். மௌனமாக இருந்து பாருங்கள். நான் யார்? உங்களைக் கேட்டுப் பாருங்கள். உங்களுக்குள் இருக்கும் பிரம்மத்தை உணர்வீர்கள்.

தேடலோடு தெருவிறங்குங்கள், வியப்பைத் தேக்கிய விழிகளில்தான் விந்தைக் காட்சிகள் விரைவாய் தெரியும்.

அதைவிட புஜை அறையில் அமர்ந்து இறைசிந்தனையில் முழுகுங்கள். அங்கு குடும்ப உறுப்பினர்களுடன் சத்சங்கம் செய்யுங்கள். உங்கள் இல்லத்தில் ஆனந்தம் ஆனந்தமிடும்.

**“ஆனந்தம் ஆனந்தம் பாடும் -மனம்**

**ஆசையில் ஊஞ்சலில் ஆடும்**

**ஆனந்தம் ஆனந்தம் பாடும் -மனம்**

**ஆசையில் ஊஞ்சலில் ஆடும்**

**ஆயிரம் ஆயிரம் காலம் - இந்த**

**ஜாபகப் பூ மழை தூவும்**

**காற்றினில் சாரல் போல பாடுவேன்…”**

ஆனந்த ஆலயம் :இந்த உலகம் ஆனந்த ஆலயம்; அதில் வசிக்க வந்த நாம் அதை ஒருபோதும் ரசிப்பதில்லை. ஆனந்த அமுதத்தைப் புசித்ததில்லை.

பேரானந்தம் (இறையுணர்வு) - மகரிசி.

நிலையானது இறைநிலை. அலையானது மனம்.

எவ்வளவு சுழல் விரைவு மனத்திற்கு உண்டாகிறதோ அந்தச் சுழல் அளவுக்கு இறைநிலைக்கும் நமக்கும், நெருக்கமோ, விலக்கமோ ஏற்படுகிறது.

அந்த அளவு நாம் குறைந்த சுழலில் இருக்கிறோமோ அவ்வளவு இறைநிலையோடு நெருங்கி வருகிறோம்.

நெருங்க, நெருங்க இறையாற்றலினுடைய தன்மைகள் எல்லாம் இங்கு மன ஆற்ற்லாக, அறிவு ஆற்றலாக தானாகவே மாறுகிறது.

என்றைக்கோ, எங்கேயோ ஒரு செயலைச் செய்தோம். இப்போது நினைக்கிறோம்.

அதேபோல் இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள இறையாற்றல் நமக்கு முன்னால் பல கோடி வருடங்களாக இருந்து கொண்டிருக்கிறது.

அதில் எல்லாப் பொருட்களும் உற்பத்தி ஆயிற்று.

அவையெல்லாம் இந்த வான் காந்ததத்தில் பதிவாகத்தான் இருக்க வேண்டும்.

அப்படி நினைக்கிறபோது மனம் அந்த நிலைக்கு வரும்போது நடந்த நிகழ்ச்சிகளும் இறைநிலையும் அப்படியே காட்சியாகும்.

இறைநிலையிலிருந்து அணுவான ஒரு செயலும் காட்சியாகும். கூடி பஞ்ச புதங்களான காட்சியும் உண்டாகும்.

பஞ்ச பூதங்களிலிருந்து அண்டமாகி, பிண்டாகி ஓரறிவிலிருந்து ஆறறிவு வரை வந்த் எல்லாமே காட்சிக்கு வந்து விடும். அத்தகைய காட்சி வருகிறபோது ஒரே உருவமாகத் தான் இந்த பிரபஞ்சத்தைப் பார்க்கிறோம்.

இறைவனுடைய திருவுருவம், பிரபஞ்சம் எனப் பல தரப்பட்டதாக இருந்தாலும் ஒரே உருவாமாக, இறைவானாகப் பார்க்க வேண்டும். அத்தகைய காட்சி வந்து அதையே அடிக்கடி பழகிக் கொள்ளுங்கள்.

கண்ணை மூடிக்கொண்டு பிரபஞ்சம் முழுவதையும் பாருங்கள். அண்டங்கள் எல்லாம் மனதுக்குள் உண்டாகும்.

அது எல்லாமே அணுவினுடைய (விண்களுடைய) கூட்டுதான் என்று தெரியும்.

அதற்கு அப்பாலும் இருக்கிறது இறைவெளிதான். இறைவெளியும் அணுக்களின் கூட்டமும் தான் இந்தப் பிரபஞ்சம்.

அப்புறம் என்ன? ஆனந்தமாகப் பாடுங்கள். ஆனந்தமாக வாழுங்கள்.

“இறைவனைக் கண்டு கொண்டேன் - அறிவால்

இறைவனைக் காணுகிறேன்.” .

வேதத்தில் ஒரு கதை உண்டு. பத்து நண்பர்கள் ஒரு ஆற்றைக் கடந்து போகின்றனர். ஆற்றைக் கடந்ததும், அனைவரும் வந்து விட்டோமோ என்று ஒவ்வொரும் எண்ணிப் பார்க்கின்றன. ஒன்பது நபர்களே இருக்கின்றனர்.

ஒவ்வொருவரும் தன்னை விட்டுவிட்டு, மற்றவர்களை எண்ணுகின்றனர். பத்தாவது நபரைத் தேடி அலைகின்றனர்.

அதுபோலத்தான் நம்மிடம் இருக்கும் ஆனந்தத்தை அறியாமல், அதை வெளியில் தேடிக்கொண்டிருக்கிறோம்.

ஆனந்த நிமிடங்களை ஆராதிப்போம் அன்றன்றே. அட்டையை உரசியவுடன் இயந்திரத்திலிருந்து வருவதற்கு ஆனந்தம் ஒன்றும் புன்னகை பூதமல்ல.

அது நம் மனதில் உள்ளது, மலராய் உள்ளது, உள்ளத்தில் உள்ளது, உள்ளுக்குள் உள்ளது. இந்த நிமிடத்திலிருந்து நமக்காக வாழத்தொடங்குவோம் ஆனந்தமாக!

# துணைநின்ற நூல்கள்.


- கண்ணதாசன் கவிதைகள் ஆறு தொகுதிகள்
- அர்த்தமுள்ள இந்து மதம் பத்து பாகங்கள்.
- கண்ணதாசனின் சமுதாயச் சிந்தனைகள்
- சித்தர் பாடல்கள்.
- பாரதியார் பாடல்கள்
- கண்ணதாசன் ஆய்வு மாலை
- கண்ணதாசன் பாடல்களில் தத்துவம்.
- கண்ணதாசன் நூல்கள்
- ஆனந்த விகடன் வார இதழ்கள்
- அன்பொளி மாத இதழ்கள்
- வேதாத்திரி மகரிசி நூல்கள்

- ஞானக்களஞ்சியம்.
- வேதாத்திரியச் சிந்தனைகள்
- வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள்.
- தாயுமானவர் பாடல்கள்.
- இண்டர்நெட் தகவல்கள்.
- திருமந்திரம்

